சோலை சுந்தரபெருமாளின் படைப்புகளில் மண்ணும் மக்களும்

அழகப்பா பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்காக (Ph.D.,)
அளிக்கப்பெறும் ஆய்வின் பகுதியாக முடிக்கப்பெற்ற ஆய்வேடு

ஆய்வாளர்
க.இராஜலெட்சுமி
(பதிவு எண்.1350)

ALAGAPPA UNIVERSITY
CENTRAL LIBRARY
KARAIKUDI

நெறியாளர்
பேராசிரியர் முனைவர் மு.பாண்டி

ALAGAPPA UNIVERSITY
CENTRAL LIBRARY
P1323

தமிழ்த்துறை

அழகப்பா பல்கலைக்கழகம்

(தேசிய தர நிர்ணயக் குழுவால் 'A' மதிப்புப் பெற்றது)

காரைக்குடி - 630 003

மே - 2009

முனைவர் மு. பாண்டி,
பேராசிரியர் & துறைத்தலைவர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630 003.

நாள்: 28/5/09

நெறியாளர் சான்றிதழ்

“சோலை சுந்தரபெருமாளின் படைப்புகளில் மண்ணும் மக்களும்” என்னும் தலைப்பில் திருமதி **கூ.இராஜலெட்சுமி** அவர்கள் முனைவர் பட்டத்திற்காகச் செய்த இந்த ஆய்வு, அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் அவர் ஆய்வு செய்த காலத்தில் தன்னியலாகச் செய்யப் பெற்றது என்றும், இந்த ஆய்விற்காக வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்றளிக்கிறேன்.

28/5/09

துறைத்தலைவர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630 003.

28/5/09

(முனைவர்.மு.பாண்டி)
நெறியாளர்

கூ.இராஜலெட்சுமி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி - 630 003.

நாள்: 28.05.09

ஆய்வாளர் உறுதிமொழி

"சோலை சுந்தரபெருமாளின் படைப்புகளில் மண்ணும் மக்களும்" என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்காக எழுதப் பெற்ற இவ்வாய்வேடு என் சொந்த முயற்சியில் உருவானதாகும். இவ்வாய்வேடு இதற்கு முன் வேறு எந்த ஆராய்ச்சிப் பட்டத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்று உறுதியளிக்கிறேன்.

கூ. இராஜலெட்சுமி

கூ.இராஜலெட்சுமி
ஆய்வாளர்

உறுதிக் கையொப்பம்

நெறியாளர்
முனைவர் மு. பாண்டி,
பேராசிரியர் & துறைத்தலைவர்,
தமிழ்த்துறை,
அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி-630 003.

நன்றியுரை

ஆய்வுப்பணி மேற்கொள்வதற்கு வாய்ப்பு நல்கிய அழகப்பா பல்கலைக்கழகத்திற்கும், தமிழ்த்துறைத்தலைவர் **பேரா. முனைவர் மு.பாண்டி** அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்விற்கு உதவிய பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பேராசிரியர்கள் ***முனைவர் சு. இராசாராம், முனைவர் இரா.தாமோதரன், முனைவர் மு.சுதா, திரு.மு.நடேசன், முனைவர் செல்வமீனாள்*** அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.

எப்பொழுதும் எனக்குள்ளே இதயத்துடிப்பாய் இருக்கும் என் அருமைச் செல்வங்கள் ***கா. கலைச்செழியன், கா. பிருதிவிராஜ்*** அவர்களோடு என் மகிழ்வான நன்றிகளை பகிர்ந்து கொள்கிறேன்.

புவி உலகிற்கு என்னை அறிமுகப்படுத்திய கடவுளுக்கும் மேலான எனது பெற்றோர் ***கூத்தன்-வில்லா*** அவர்களுக்கும் எனது சகோதரிகளின் குடும்பத்திற்கும், சகோதரர்களின் குடும்பத்திற்கும், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் என் நன்றிகள் பல.

என் ஆய்விற்கு உதவிய பல்கலைக்கழக நூலகத்தாருக்கும், ஆய்வுத் தொடர்பாக எனக்கு நல்லுதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வினைச் செம்மையாகத் தட்டச்சு செய்துகொடுத்த *காரைக்குடி நிதிஷ்பிரபா கம்ப்யூட்டர்ஸ்* நிறுவனத்தாருக்கும் என் நன்றி உரியது.

கூ. இராஜலெட்சுமி

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

உ.ஆ.	-	உரை ஆசிரியர்
உவமை.	-	உவமையியல்
எச்சம்.	-	எச்சவியல்
குறள்.	-	திருக்குறள்
சிலம்பு.	-	சிலப்பதிகாரம்
செய்யு.	-	செய்யுளியல்
தண்டி.	-	தண்டிலங்காரம்
தொல்.	-	தொல்காப்பியம்
தொ. ஆ.	-	தொகுப்பாசிரியர்
நன்.	-	நன்னூல்
நூ. எ.	-	நூற்பா எண்
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
பா.	-	பாடல்
ப. ஆ.	-	பதிப்பாசிரியர்
பு. பெ.	-	புனைப் பெயர்
பொருள்.	-	பொருளதிகாரம்
ம. ப.	-	மறுபதிப்பு
மு. கூ. நூ.	-	முன்னர் கூறிய நூல்
மு. ப.	-	முதற்பதிப்பு
மேலது.	-	மேலே காட்டிய நூல்
மொ. ஆ.	-	மொழிபெயர்ப்பு ஆசிரியர்.

பொருளடக்கம்

வ.எண்	இயல்	தலைப்பு	பக்க எண்
1.		முன்னுரை	1 – 7
2.	ஒன்று	ஆசிரியர் அறிமுகமும் கதைச்சுருக்கமும்	8 - 28
3.	இரண்டு	சோலை சுந்தரபெருமாள் காட்டும் சமூகம்	29 - 117
4.	மூன்று	பாத்திரப்படைப்பு	118 – 240
5.	நான்கு	உத்தி முறைகள்	241 – 319
6.		முடிவுரை	320 – 328
7.		துணைநூற் பட்டியல்	329 - 340
8.		பின்னிணைப்பு நேர்க்காணல்	1 - 12

முன்னுரை

முன்னுரை

காலந்தோறும் சமூகத்தில் மக்களுக்குத் தோன்றும் பிரச்சினைகளும் அசாதாரண இயற்கை நிகழ்வுகளும் அவ்வவ் கால இலக்கியக் கருப்பொருள்களாகப் படைப்பாளர்களால் படைக்கப்படுகின்றன. விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலையும் ஆதிக்கச் சாதிகளின் அடக்குமுறைகளையும் வேளாண் தொழிலின் பிரச்சினைகளையும் தஞ்சை வட்டாரப் பின்புலத்தோடு வெளிக்காட்டும் சோலை சுந்தரபெருமாள் படைப்புகள் வழிச் சமூகத்தைக் கண்டறிவது தேவையாகிறது.

ஆய்வு நோக்கம்

சமுதாயத்தில் இருபாலருக்கும் வாழ்க்கையில் பல்வேறு விதமான பிரச்சினைகள் காலந்தோறும் உள்ளன. சோலை சுந்தரபெருமாள் தன்னுடைய படைப்புகளில் மேல்வர்க்கத்தார், கீழ்வர்க்கத்தினரை அடிமைப்படுத்தும் முறையையும், பண்ணை அடிமைகள் அதிலிருந்து விடுபடமுடியாமல் புழுங்குவதையும், இன்றைய தலைமுறையினர் அதிலிருந்து விடுபடத் துடிப்பதையும் குடும்பத்திற்குள் நிகழும் சிக்கல்களையும், பொதுவுடைமை இயக்கங்களின் கொள்கைகளையும், சமூகச் சிக்கல்களைத் திருத்தி விழிப்புணர்வு ஏற்படுவர்களையும் சொல்லிச் செல்கிறார்.

சிறந்த பாத்திரங்களைக் கொண்டும் சிக்கல்களைக் கதைகளின் வழி புலப்படுத்திக் காட்டுகிறார். கீழ்த்தட்டு மற்றும் ஒடுக்கப்பட்ட

மக்களின் சமுதாயப் பிரச்சினைகள் அவர்களது உரிமைகள் தஞ்சை வட்டார வேளாண்மை மற்றும் பிற தொழில்களில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவை இவரது படைப்புகளில் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்பதைக் காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வுத் தலைப்பு

சோலை சுந்தரபெருமாளின் படைப்புகளில் மண்ணும் மக்களும் என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

ஆய்வு எல்லை

சோலை சுந்தரபெருமாள் உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ஒரே ஒரு ஊர்ல, செந்நெல், தப்பாட்டம், பெருந்திணை, நஞ்சை மனிதர்கள், மரக்கால் ஆகிய புதினங்களைப் பல்வேறு காலக்கட்டங்களில் படைத்துள்ளார். இந்த ஏழு புதினங்களும் இவ்வாய்விற்கு எல்லையாக அமைகின்றன.

ஆய்வு முன்னோடிகள்

தமிழில் புதினங்கள் குறித்து மிகுதியான ஆய்வுகள் இதுகாறும் வெளிவந்துள்ளன. சு.வெங்கட்ராமனின் அகிலனின் பாத்திரப் படைப்பு, கரு.முத்தையாவின் ஜெயகாந்தன் புதினங்களில் பாத்திரப்படைப்பு, திருமதி மஞ்சுளவள்ளியின் சிவசங்கரியின் புதினங்கள் காட்டும் சமுதாயம், சிவசங்கரியின் வெட்கம் கெட்டவர்கள், துள்ள முடியாத புள்ளிமான்கள், லட்சுமியின் அவள்

தாயாகிறாள், உறவுகள் பிறப்பதில்லை, வெள்ளை நிறத்தில் ஒரு பூனை, வைர மூக்குத்தி, அனுராதா ரமணனின் சாதாரண மனிதர்கள் போன்ற ஆய்வுகள் இவ்வாய்வின் முன்னோடிகளாக அமைகின்றன.

சான்றாதாரங்கள்

சோலை சுந்தரபெருமாளின் உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ஒரே ஒரு ஊர்ல, செந்நெல், தப்பாட்டம், பெருந்திணை, நஞ்சை மனிதர்கள், மரக்கால் ஆகிய புதினங்களும், அவரின் நேர்க்காணலும் இவ்வாய்வுக்குரிய முதன்மைச் சான்றாதாரங்களாகும்.

ஆய்வு தொடர்புடைய திறனாய்வு நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள், அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் போன்றவை துணைமைச் சான்றாதாரங்களாகும்.

ஆய்வு அணுகுமுறைகள்

ஒடுக்கப்பட்ட, பாதுகாப்பற்ற விளிம்புநிலை மக்களின் உரிமைகள் புதினங்களில் இடம்பெற்றிருப்பதை விளக்கிக் காணும் நிலையில் விளக்கவியல் அணுகுமுறையும், மக்களின் மனப் போராட்டத்தைப் பாத்திரங்களின் வாயிலாக கண்டறியும் முகமாக உளவியல் அணுகுமுறையும், புதினங்கள் சுட்டும் சமுதாயச் சிக்கல்களைப் பகுத்தும், தொகுத்தும் காண, சமுதாய இயங்குநிலைகளைச் சுட்ட சமூகவியல் அணுகுமுறையும் இவ்வாய்வில் கையாளப்பட்டுள்ளன.

கருதுகோள்

இலக்கியங்கள் படைப்பாளன் மற்றும் அவன் சார்ந்த சமூகத்தின் வெளிப்பாடாக அமைபவை. தற்கால இலக்கியங்களில் வட்டார பின்புலத்தோடும் மண் சார்ந்த மரபுகளோடும் பண்டை திணை இலக்கியங்கள் போல சமூக இயங்கு நிலைகளைப் புலப்படுத்தும் போக்கைக் காணமுடிகின்றது. தஞ்சை வட்டார பின்புலத்தோடு தனது படைப்புகளை வெளிக்காட்டும் சோலை சுந்தரபெருமாள் அப்பகுதி குடும்பம், சாதிய நிலைகள், பழக்க வழக்கங்கள் மற்றும் கலாச்சார, மொழிநடை, பின்னணியோடு கருத்துகளைப் படைப்புகளில் பதிவு செய்திருக்க வேண்டும். சமூகத்தின் சீரான இயக்கத்திற்கான தனது கருத்தாடல்களை முன் வைத்திருக்க வேண்டும் என்பதாக இவ்வாய்வில் கருதுகோள் அமைகிறது.

ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக நான்கு இயல்களைக் கொண்டதாக அமைகின்றது. அவை,

1. ஆசிரியர் அறிமுகமும் கதைச் சுருக்கமும்
2. சோலை சுந்தரபெருமாள் காட்டும் சமுதாயம்
3. பாத்திரப் படைப்புகள்
4. உத்திமுறைகள்

என்பனவாகும்.

ஆய்வுத் தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வு முன்னோடிகள், சான்றாதாரங்கள், கருதுகோள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வேட்டின் அமைப்பு பற்றிய செய்திகள் முன்னுரையில் விளக்கப்படுகின்றன.

தனிப்பட்ட படைப்பாளர் ஒருவரின் படைப்புகளை ஆய்வு செய்யும்பொழுது அவரைப் பற்றிய புரிதலைத் தருவது ஆய்வின் முதல்நிலையாகும்.

ஆசிரியர் அறிமுகமும் கதைச் சுருக்கமும் என்னும் முதல் இயலில் ஆசிரியர் சோலை சுந்தரபெருமாள் அவர்களின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, பணி, அவரின் படைப்புகள், அவர் பெற்ற பரிசுகள், படைப்புகள் போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளன.

புதினங்கள் பற்றிக் காணும்போது ஆய்வுக்குரிய கதைகளின் கருவைப் புலப்படுத்துதல் தேவையான ஒன்றாகும். ஆய்விற்கு எடுத்துக் கொண்ட ஏழு புதினங்களின் மையக் கருத்துக்களின் சுருக்கமும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

சோலை சுந்தரபெருமாள் காட்டும் சமுதாயம் என்ற இரண்டாம் இயலில், புதினத்தின் இலக்கணம், அவற்றின் விளக்கம், சமுதாயம் பற்றிய பிற அறிஞர்களின் கருத்துக்கள், குடும்பம் பற்றிய விளக்கங்கள், படைப்பாசிரியரின் பார்வையில் சமுதாயத்தில் நிகழும் சிக்கல்கள், அவற்றிற்கான தீர்வுகள், மேல்தட்டு மக்கள் மற்றும் கீழ்த்தட்டு மக்களின் வாழ்க்கைமுறை, கணவன் மனைவி உறவு,

பெற்றோர் குழந்தைகள் உறவு, அண்ணன் தம்பி உறவு, அக்கா தம்பி உறவு, மாமியார் மருமகள் உறவு, ஆண்டான் அடிமை உறவு என உறவுகள், சாதியால் அவமானப்பட்டுக் கிடக்கும் மக்களின் மனக்குமுறல், உரிமைக்காகப் போராடும் முறை, அவர்களை வழிநடத்திச் செல்லும் சமூக ஆர்வலர்கள், மதம் மாறியவர்களின் நிலை, விழாக்களில் பெருந்தெய்வ வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, சடங்குமுறைகள், பொதுவுடைமை இயக்கங்களின் செயல்பாடுகள், வட்டார மக்களின் தொழில் போன்றவைகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

பாத்திரப்படைப்புகள் என்ற மூன்றாவது இயலில் புதினங்களில் இடம்பெற்றுள்ள பாத்திரங்களின் வகைகள், பண்பு நலன்கள் சுட்டப்பட்டுள்ளன. பாத்திரங்களின் தன்மைக்கேற்ப சாதிய கட்டுமானத்தைத் தகர்த்தெறிய நினைப்பவர்கள், மனைவியை இழந்தவர்களின் மனக்குமுறல், உயர்ந்த உள்ளத்தால் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துபவர்கள், அவல நிலையால் முடங்கிவிடாத பெண் போன்ற பாத்திரங்கள் உளவியல் நோக்கில் கண்டறியப்பட்டுள்ளது. கீழ்தட்டு மக்களின் வாழ்வில் அக்கறை கொண்டவர், கணவர்மார்களின் நேசத்திற்கேற்ற மனைவியர், அரசியல் மோகத்தால் இல்லறத்தை இழந்தவர்கள், பங்காளிச் சண்டையால் பகைமை கொண்டவர்கள், குடும்பப் பிரச்சினையால் இறந்தவர்கள், கல்வி கற்ற பெண்களின் நிலை, பெருந்தெய்வ வழிபாட்டால் பித்தானவர்கள், திருமணமானவுடன் பெற்றோரை

வெறுப்பவர்கள், ஆதரிப்பவர்கள, காதலில் ஏமாறும் பெண்கள், குடும்பப் பெண்கள், எதிர்மறையான பண்புகளை உடையவர்கள் எனப் பிரிக்கப்பட்டு அவர்களது பண்பு நலன்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

உத்திமுறைகள் என்ற நான்காம் இயலில் உத்தி முறைகளின் இலக்கணம், உத்தி முறைகள் பற்றிய பிற ஆசிரியர்களின் விளக்கங்கள், உத்திகளின் வளர்ச்சிகள், ஆய்வுப் புதினங்களில் அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி, ஒலிக்குறிப்புச் சொற்கள், பழமொழிகள், சொலவடைகள், நனவோடை உத்தி, பிறமொழிச் சொற்கள், பின்னோக்கு உத்தி, உவமைகள், உம்மைத்தொடர், கடித உத்தி, கனவு உத்தி, கதைக்குள் கதை, நோக்குநிலை, படர்க்கைக் கூற்று நோக்குநிலை, நாட்டுப்புற பாடல்கள், திரைப்படப் பாடல்கள் கூறும் உத்தி, சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் உத்தி, கோடு இடல் உத்தி, கதை முடிப்பு உத்தி ஆகியவை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இயலிலும் கண்டறிந்த உண்மைகளும் முடிவுகளும் அந்தந்த இயல்களின் இறுதியில் வழங்கப்பட்டு இருப்பினும். ஆய்வின் நிறைவினைக் கருத்தில் கொண்டு ஆய்வின் வழி கண்டறியப்பட்ட முடிவுகள் தொகுக்கப்பட்டு இறுதியில் முடிவுரையாக வழங்கப்பட்டுள்ளது.

ஆய்வேட்டின் இறுதியில் ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள், இதழ்கள், ஆய்வேடுகள் போன்றவை அகர வரிசைப்படுத்தப் பெற்றுத் துணைநூற்பட்டியலாகக் கொடுக்கப் பெற்றுள்ளன.

பின்னிணைப்பாக ஆசிரியரின் நேர்காணல் வினா விடை கொடுக்கப்பட்டுள்ளது.

இயல்-1

ஆசிரியர் அறிமுகமும் கதைச்சுருக்கமும்

இயல் - 1

ஆசிரியர் அறிமுகமும் கதைச் சுருக்கமும்

புதினம் படைப்பது என்பது கலை நுணுக்கத்துடன் கூடிய செயலாகும். சகமனிதர்களைப் பார்த்துப் புன்னகைப்பது கூட மறந்துபோன அவசர வாழ்க்கையில், தன்னைக் கடந்து போகும் மனிதர்களையும் நிகழ்வுகளையும் எழுத்தாளர்கள் கவனிக்கத் தவறுவதில்லை என்பதை தங்கள் கதைக்குள் புகுந்து பாத்திரங்களாக வெளிப்படுத்துவதில் இருந்து அறிந்து கொள்ளலாம். வேர்களின் முகவரி கேட்காமல் நீர் ஊற்றிப் போகும் மழையைப் போல எழுத்தாளர்கள் பன்முக மனிதர்களை அடையாளம் காட்டி இந்த சமூகத்தின் ஓர் அங்கம் என்பதை நிருபித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுள் இன்றையத் தமிழ் இலக்கியப் படைப்பாளர்களுள் சமூக உணர்வு மிக்கவர்களுள் ஒருவராக சோலை சுந்தர பெருமாள் காணப்படுகிறார். அவரைப் பற்றிய அறிமுகம் செய்வதுடன் ஆய்வுப் புதினங்களின் சுருக்கத்தையும் விளக்குவதாக இவ்வியல் அமைகின்றது.

படைப்பாசிரியர் அறிமுகம்

சோலை சுந்தர பெருமாள் தஞ்சைக்கு அருகிலுள்ள திருவாரூர் மாவட்டத்தில் காவனூர் என்ற சிற்றூரில் **09.05.1953** ஆம் ஆண்டு சுப்பிரமணியம் - கமலாம்பாள் என்பவர்களுக்கு மகனாகப் பிறந்தார். ஒரு அண்ணன், ஒரு தம்பி, இரண்டு சகோதரிகளுடன் பிறந்த அவருடைய இயற்பெயர் சுந்தர பெருமாள் என்பதாகும். அவர்தான்

பிறந்து, வளர்ந்த 'சோலை' என்ற ஊரை தன் பெயரின் முன்னால் அடைமொழியாக வைத்துக் கொண்டுள்ளார். அச்சோலையூர், 'காவனூர்' என்று இப்பொழுது பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

கல்வியும் பணியும்

சோலை சுந்தரபெருமாள் திருவாரூர் மாவட்டத்திலுள்ள அம்மையப்பன் அரசுப் பள்ளியில் **1971**இல் பள்ளி இறுதிப் படிப்பான பதினொன்றாம் வகுப்பை முடித்துள்ளார். பின்பு வேளாண்மையில் பட்டயச்சான்று படித்து விவசாய ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வியில் இளங்கலைத்தமிழ் (பி.ஏ.,), முதுகலைத் தமிழ் (எம்.ஏ.,), இளங்கலை ஆசிரியர் பயிற்சிப் படிப்பு (பி.லிட்.,) ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். அம்மையப்பன் அரசுப் பள்ளியில் தமிழ் ஆசிரியராக அவர் பணிபுரிந்து வருகின்றார்.

திருமணம்

18.02.1983 ஆம் ஆண்டு சோலை சுந்தர பெருமாள் ஜோதி என்ற பத்மாவதியைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்குக் கமலநாதன் என்ற மகனும், கீதாஞ்சலி என்ற மகளும் உள்ளனர்.

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

படைப்புப் பணி

சோலை சுந்தரபெருமாள் முதன் முதலில் கவிதைத் தொகுப்பு ஒன்றை நூலாக அச்சிட்டார். அத்தொகுப்பைக் கவிஞர் பாலா

படித்து விட்டு, கவிதையில் போலித்தன்மையும், புனைவும் அதிகமாக இருப்பதுடன் கவிதைக்குரிய உயிரோட்டமும் இல்லை என்றார். அவர் அக்கவிதைகளுள் 'தெற்கே ஓர் இமயம்' என்னும் கவிதையில் சிறுகதைக்கான பார்வை இருக்கிறது என்றும் கூறினார். அதைக் கேட்ட சோலைசுந்தர பெருமாள் அக்கவிதைப் படைப்புகளைத் தீயிட்டு அழித்தார். அதன் பிறகே சிறுகதை, புதினம், குறும்புதினம் போன்றவற்றைப் படைக்க வேண்டுமென்ற உந்துதல் ஏற்பட்டு அவற்றைப் படைக்கத் தொடங்கினார்.

கதைக்களம்

கீழ்த்தஞ்சை வட்டாரத்தில் காவிரி பாயும் வண்டல் மண்ணின் ஒரு பகுதியையும், அதைச் சுற்றியுள்ள வெண்மணி, ஆலங்குடி, நாவங்குடி, ரெட்டிப்பாளையம், குச்சிப் பாளையம், ஆதனூர் போன்ற சிற்றூர்ப் பகுதிகளையும், அங்குள்ள விவசாய வேளாண் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களையும் சோலை சுந்தரபெருமாள் தன்னுடைய படைப்புகளில் கதைக்களங்களாகக் கொண்டுள்ளார் எனலாம்.

கதைக்கரு

சோலை சுந்தரபெருமாள் அவருடைய சிறுகதை. புதினத்துக்கானக் கதைக் கருவாகப் பிற எழுத்தாளர்கள் சொல்லாத செய்திகளையும், சமுதாயச் சிக்கல்களையும் அமைத்துக் கொண்டார். அவ்வகையில் கா.சி. வேங்கடரமணி, தி. ஜானகிராமன், மௌனி

போன்ற தஞ்சை வட்டார எழுத்தாளர்களும், பிற படைப்பாளர்களும் தங்களின் படைப்புகளில் படைக்காமல் விட்டுச்சென்ற தஞ்சை வட்டார வேளாண் மக்களின் வாழ்க்கையும், அதிலுள்ள சிக்கல்களையும், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களையும் கதைக்கருவாகத் தேர்ந்தெடுத்துள்ளார். மேலும், ஆணாதிக்கச் சமூகத்தால் பாதிக்கப்படும் பெண்களின் நிலையையும், பாலியல் கொடுமைகளால் பெண்கள் படும் இன்னல்களையும், நிலவுடைமைச் சமூகத்தில் நில உடைமையாளர்களுக்கும் பண்ணை அடிமைகளுக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளையும், சாதி வேற்றுமைகளையும், அதனால் ஏற்படும் சமூக அவலங்களையும், தனிமனித உணர்வுகளையும், கதைக்கருவாகப் படைத்துள்ளார்.

சோலை சுந்தரபெருமாளின் படைப்புகள்

சோலை சுந்தரபெருமாளின் இலக்கிய விமர்சனங்கள், குறிப்புகள் போன்றவை தாமரை, செம்மலர், சுபமங்களா, புதியபார்வை போன்றவை இதழ்களில் வெளிவந்தன. அதன் பின்னரே சிறுகதை, புதினம், குறும்புதினம் ஆகிய இலக்கியப் படைப்புகளைப் படைத்து இலக்கிய உலகில் தடம் பதித்துள்ளார்.

முதல் படைப்பு

1987-ஆம் ஆண்டு அவர் எழுதிய ‘மனசு’ என்ற குறும் புதினத்தைக் கலைமகள் வெளியிட்டது. அக்குறும் புதினத்திற்குப் பல பரிசுகளும், பாராட்டுகளும் கிடைத்ததால் அதைத் தொடர்ந்து பல இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கினார்.

சிறந்த படைப்பு

சோலை சுந்தரபெருமாளை அடையாளம் காட்டியது அவருடைய 'செந்நெல்' என்னும் புதினமாகும். இப்புதினம் தமிழ் இலக்கிய உலகின் தலைசிறந்த பத்துப் புதினங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இப்புதினம் தமிழக அரசின் விருது, கலை இலக்கியப் பெருமன்றத்தின் விருது, முற்போக்கு எழுத்தாளர் சங்க விருது ஆகிய பரிசுகளையும், பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ளது. மேலும், இப்புதினம் பல பல்கலைக்கழகங்களில் பாடநூலாக இடம் பெற்றுள்ளது.

புதினங்கள்

1. நஞ்சை மனிதர்கள் (1998)
2. உறங்க மறந்த கும்பகர்ணர்கள் (2000)
3. செந்நெல் (2000)
4. ஒரே ஒரு ஊர்ல (2001)
5. தப்பாட்டம் (2002)
6. பெருந்திணை (2005)
7. மரக்கால் (2007)

குறும்புதினம்

1. மனசு (2000)

சிறுகதைகள்

1. *மண் உருவங்கள் (2000)*
2. *வண்டல் (2000)*
3. *ஓராண்காணி (2000)*
4. *ஒரு ஊரும் சில மனிதர்களும்(2000)*
5. *வட்டத்தை மீறி (2000)*

தொகுப்பு நூல்

தஞ்சை வட்டாரப் படைப்பாளர்களில் ஒவ்வொரு படைப்பாளர்க்கும் ஒரு கதை என்ற முறையில் தேர்வு செய்து தொகுப்பு நூலாக வெளியிட்டுள்ளார். ஆசிரியர் அவ்வாறு செய்ததற்குக் காரணம் அவர்களின் படைப்புகளிலிருந்துத் தன் படைப்புகளை வேறுபடுத்திக் காட்டுவதற்கு எனலாம். அவ்வாறு அவர் வெளியிட்டுள்ள தொகுப்பு நூல்கள்,

1. *தஞ்சைச் சிறுகதைகள் (1999)*
2. *தஞ்சைக் கதைக் களஞ்சியம் (2000)*
3. *நாட்டுப்புறக் கதைகள் (2008) ஆகியனவாகும்.*

திறனாய்வு நூல்கள்

1. *வெண்மணியும் 44 பிடி சாம்பலும் (2001)*
2. *தப்புச் சத்தம் (2002)*
3. *அகமும் புறமும் (2006) ஆகியனவாகும்.*

அவருடைய படைப்புகளுள் சில புதினங்களும், சிறுகதைகளும் புதுவைப் பல்கலைக்கழகத்திலும், பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலும் பாடநூல்களாக வைக்கப்பட்டுள்ளன. அனைத்துப் படைப்புகளையும் முதற்பதிப்பாகவும், மறு பதிப்பாகவும், நியூசெஞ்சுரி புத்தக நிறுவனமும், பாரதி புத்தகாலயமும், காவ்யா பதிப்பகமும் வெளியிட்டுள்ளன.

படைப்புகளின் கதைச்சுருக்கம்

நஞ்சை மனிதர்கள்

கதைச் சுருக்கம்

ஆலங்குடி என்னும் சிற்றூர் மக்களின் மூன்று தலைமுறை வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் படைப்பாசிரியர் இப்புதினத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆலங்குடி என்றும் சிற்றூரில் பண்ணையாராக வாழ்ந்து வரும் காத்தையாப்பிள்ளைக்கு, கோவிந்தசாமிப் பிள்ளை, சோமுப்பிள்ளை என்ற இரண்டு மகன்கள் இருக்கின்றனர். தந்தை இருக்கும் போதே எலியும் பூனையுமாக நடந்து கொள்ளும் இவர்கள், அவர் இறந்த பிறகு, சொத்துப் பிரிவினையின் காரணமாக பகைவரானார்கள்.

கோவிந்தசாமிப் பிள்ளைக்கு ஐந்து பெண்பிள்ளைகள். தனக்குக் கொள்ளி போட ஆண் வாரிசு இல்லை என்ற காரணத்தாலும், பெண்களுக்குச் சொத்துரிமை அக்காலத்தில் இல்லாததாலும் தன் தம்பி சோமுப்பிள்ளையின் மகன் வெள்ளைச் சாமிக்குச் சொத்துக்கள்

அனைத்தும் போய்விடும் என்ற காரணத்தாலும், இளம் வயதிலிருந்தே வளர்ந்து வரும் பகைமையை மறந்து தன் மகள் வயிற்றுப் பேத்தி அங்கம்மாவை வெள்ளைச்சாமிக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணினார். சோமுப்பிள்ளையின் மூத்த மகன் கோபாலுவையும் சிறு வயதிலேயே அவருக்குத் தெரியாமல் பர்மாவிற்கு அனுப்பிவிடுகிறார்.

அதிகாரத்தன்மையும், தீய பழக்கவழக்கமும், பிடிவாத குணமும் கொண்ட சோமுப்பிள்ளை, அங்கம்மாவைத் தன் மகனிற்குத் திருமணம் செய்து வைக்க எதிர்ப்புத் தெரிவிக்கின்றார். எப்படியாவது மகனிடம் எடுத்துக் கூறி அவனின் மனதை மாற்ற நினைக்கிறார். ஆனால் வெள்ளைச்சாமி அங்கம்மாவைத் தான் மணமுடிப்பேன் எனப் பிடிவாதம் செய்ததால் அவளையே திருமணம் செய்து வைக்கிறார் சோமுப்பிள்ளை. இவர்களுக்கு குப்புச்சாமி என்ற ஒரு மகன் பிறந்தவுடன் அங்கம்மா குடும்பப் பிரச்சினையால் மனம் வெதும்பி இறந்துவிடுகிறாள்.

நல்ல பழக்கங்களைக் கொண்ட வெள்ளைச்சாமிக்கு கெட்ட பழக்கவழக்கங்களையுடைய குப்புசாமி பிறந்து பல தீய வழிகளில் சென்றதால் பரம்பரைச் சொத்துக்களை அழிப்பதுடன், தந்தையையும், மனைவியையும், ஐந்து மகள்களையும், அடித்துத் துன்புறுத்துகிறான். ஒரு முறை மனைவியை அடித்துத் தள்ளி விடும் போது கீழே விழுந்ததால் நிறைமாத கர்ப்பிணியான அவள் இறந்துவிடுகிறாள். அதன் பின்பும் குடும்பத்தைக் கவனிக்காமல்

அரசியலில் ஈடுபடுகிறான். அவனின் மூத்த பெண் காயத்திரி அவனின் பெயரைத் தன் பெயருக்கு முன் சேர்க்காமல், தாயின் பெயரைச் சேர்ப்பதற்கான அரசாணையைப் பெறுகிறாள். மற்ற பெண் பிள்ளைகளும் அவன் வருகையை விரும்பாமல் வீட்டிற்கு அவன் வரும் போது கதவை அடைத்துக் கொண்டனர்.

இப்புதினம் மூன்று தலைமுறைகளில் நிலவிய ஆணாதிக்கத்தாலும், ஆண்களின் ஒழுக்கக் குறைபாட்டாலும் குடும்பங்கள் சீரழிந்ததையும் புலப்படுத்தியுள்ளது.

செந்நெல்

கதைச் சுருக்கம்

தஞ்சை வட்டாரத்திலுள்ள வெண்மணி என்ற சிற்றூரில் வாழும் வேளாண் மக்களின் வர்க்கப் போராட்டத்தைக் குறிப்பிடுவதாக இப்புதினம் அமைகின்றது.

வெண்மணிப் பகுதியில் நடைபெறும் பண்ணை விவசாயத்தில் முதலாளிகளாகப் பண்ணையார்களும், செல்வந்தர்களாக நாயுடு இனத்தவர்களும் நாட்டார் இனத்தவர்களும் உள்ளனர். அவர்களிடம் பண்ணை அடிமைகளாகப் பள்ளர், பறையர், சக்கிலியர், வண்ணார் போன்ற ஒடுக்கப்பட்ட வேளாண் மக்கள் பணிபுரிகின்றனர். பண்ணையார்களுக்குத் தலைவராகவும், நெல் உற்பத்தியாளர் சங்கத் தலைவராகவும் கோபாலகிருஷ்ண நாயுடுவும், அவருக்குத் துணையாக ரெங்கபாஷ்ய நாயுடுவும், வீரப்பனும்

செயல்படுகின்றனர். பண்ணைகளில் வேலை செய்யும் அடிமைப்பட்ட மக்கள் விடுதலை பெறவும், கூலி உயர்வு கேட்டும் போராட்டம் நடத்துகின்றனர். அப்போராட்டத்தை வடிவேலுவும், கண்ணுசாமியும் வேளாண் மக்களும் இணைந்து நடத்துகின்றனர்.

அவர்களுக்கு ஆதரவாக பொதுவுடமைக் கட்சி செயல்படுகிறது.

கோபாலகிருஷ்ண நாயுடுவும், அவருக்கு ஆதரவாகச் செயல்பட்ட பண்ணையார்களும் ஒன்று சேர்ந்து, அவர்களை எதிர்த்துப் போராடிய வேளாண் மக்களையும், அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டவர்களையும் அழிக்க நினைத்து, 44 பேரை உயிருடன் எரித்துக் கொன்று விடுகின்றனர். அத்தகைய கீழவெண்மணி மக்களின் அவல நிலையை இப்புதினம் விளக்குவதாக அமைந்துள்ளது. உண்மை நிகழ்வை கதையின் வாயிலாக மக்களுக்கு என்றென்றும் நினைவில் கொள்ளுமாறு செய்துள்ளார் என்பது பெறப்படுகிறது.

உறங்க மறந்த கும்பகர்ணர்கள்

கதைச் சுருக்கம்

சின்னச்சாமிக்கும் - தங்கத்திற்கும் சிவராமன், அப்புனு என்ற இரண்டு ஆண்பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்களில் இளையவனான அப்புனு, இருபத்தைந்து வயதாகவும் உடல் வளர்ச்சி பெற்று மூளை வளர்ச்சியடையாமல் இருக்கிறான். இவனின் மருத்துவச் செலவிற்காகச் சொத்தில் பெரும் பகுதியைச்

செலவிடுகிறார். மருத்துவர், அவனிடம் அன்பையும் பாசத்தையும் அரவணைப்பையும் செய்தால் மட்டுமே முழு வளர்ச்சி அடையச் செய்யலாம் என்று கூறுகிறார். ஆனால் அவனுடைய அண்ணன் சிவராமனும் அவளின் மனைவி ஜெயந்தியும் அவனையும் பெற்றோரையும் இழிவாகப் பேசியதோடு அப்புனுவை அடித்துத் துன்புறுத்துகின்றனர்.

பெற்றோரின் பாசத்தாலும், பண்ணை அடிமையான அய்யாவுவின் மகள் மருதாயியின் இரக்கத்தாலும், இராஜாமணி வாத்தியாரின் முயற்சியாலும் மூளை வளர்ச்சி பெறுகிறான் அப்புனு. பின்பு சூழ்நிலை காரணமாக, மருதாயியின் தோழி செவத்தியும் அவனும் களத்து மேட்டில் ஒன்று சேர்கின்றனர். இதை நேரில் கண்ட தலையாரி ஊர்ச்சபையைக் கூட்டுகிறான். இருவரும் தங்களின் உறவை ஒத்துக் கொண்டதால் அச்சபையே இருவரையும் திருமணத்தில் இணைத்து வைக்கிறது. சொத்தின் மீது பாசம் கொண்ட சிவராமன் அதைப் பிரித்துக் கொண்டு தனியே சென்றுவிடுகிறான். ஜெயந்தி போல் இல்லாமல் செவத்தி, மாமனையும், மாமியையும், கணவனையும் நன்றாகக் கவனித்துக் கொள்கிறாள்.

மருதாயி ஊருக்குப் புதிதாக வந்த இராஜாமணி வாத்தியாரை விரும்புகிறாள். அவள் மட்டுமே விரும்பினாளே தவிர, அவர் அவளை விரும்புகிறாரா என்பதை அவளால் அறியமுடியவில்லை.

இராஜாமணி அவ்வூரின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு நல்ல பெயர் எடுக்கிறார். அப்புனுவையும செவத்தியையும் தன் வீட்டிற்கு அழைக்கும் போது மருதாயியையும் அழைக்கிறார்.

பல கற்பனைக் கனவுகளுடன் சென்ற மருதாயிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு சென்றவுடன் இராஜாமணி திருமணம் ஆனவர் என்பது தெரியவருகிறது. இதைக் கேட்டதும் மருதாயியின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. அதைத் துடைத்துவிட்டு மனதைத் தேற்றிக் கொண்டுக் குழந்தைகளை அணைத்துக் கொள்கிறாள்.

இப்புதினம் மனவளர்ச்சி குன்றிய அப்புனு செவத்தியின் காமம் சார்ந்த அரவணைப்பால் முழுமன வளர்ச்சி அடைந்ததைச் சித்தரிப்பதுடன், சொத்தின் மீது கொண்ட பற்றினால் மூத்த மகனாக இருந்தும் தம்பியையும் பெற்றோரையும் கொடுமைப்படுத்தும் சிவராமனின் மனநிலையையும், மருதாயியின் காதல் ஏமாற்றத்தையும் விளக்குவதாக அமைகின்றது.

ஒரே ஒரு ஊர்ல

கதைச் சுருக்கம்

தஞ்சை மாவட்டத்திலுள்ள எட்டியலூர் என்ற சிற்றூரில் வாழ்ந்த ஒரு குடும்பத்தைப் பற்றி இப்புதினம் சித்தரிக்கின்றது.

ஆச்சியம்மாளுக்கும் - வெள்ளைச்சாமிக்கும் பிறந்தவள் கங்கை. பல தீய பழக்கமுடையவனான ஆச்சியம்மாளின் தம்பி வீரபத்திரன்

கங்கையைத் தனக்குத் திருமணம் முடித்துத் தருமாறு கேட்கிறான். ஆனால் வெள்ளைச்சாமி பெண் தர மறுத்து விடுகிறார். ஆனால் ஆச்சியம்மாள் தன் தம்பிக்காகப் பரிந்து பேசி, இருவருக்கும் திருமணம் செய்து வைக்கிறாள்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, வீரபத்திரன், கந்தபிள்ளையின் மகள் அஞ்சலையுடன் தவறான உறவு வைத்திருந்ததால் ஊர்ச்சபை கூடி அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைக்கிறது. அச்செய்தியறிந்த கங்கை தூக்கிலிட்டுத் தற்கொலை செய்துகொள்கிறாள். அவளின் மகள் வள்ளியை வளர்த்து ஆளாக்குகிறாள் ஆச்சியம்மாள். வள்ளியும் முறைமாமன் முறையான அஞ்சலையின் அண்ணன் மகன் சண்முகமும் விரும்புகிறனர். இதைப் பிடிக்காத கந்தபிள்ளை, இராப்பிள்ளை என்பவரின் மூலம் வள்ளியின் சாதகத்தை வாங்கி வரச்சொல்லி, அதைப் பார்க்கிறார். அதில் சண்முகத்திற்கு நாகதோசம் இருப்பதால் வள்ளியின் சாதகத்திற்குப் பொருந்தாது எனக்கூறித் திருமணத்தை நிறுத்திவிடுகிறார்.

சண்முகம் வள்ளியை நினைத்துக் கொண்டே காலத்தைக் கடத்தலாமென நினைக்கிறான். ஆனால் வள்ளி, அவன் வேறொருத்தியைத் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென நினைக்கிறாள். ஒரு நாள் பண்டிகையின் போது வள்ளியும் சண்முகமும் உடலளவில் கலக்கின்றனர். இவ்வாறாக ஒன்று சேர்ந்தும சாதகத்தில் கூறியது போல ஒன்றும் நடக்கவில்லை என்று கூறவும், ஆச்சியம்மாள் மகிழ்ச்சியடைகிறாள்.

இப்புதினத்தில் இருதார மணத்தால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகளும், உண்மையான காதலை சோதிடம் பார்த்தல் போன்ற மூடநம்பிக்கைகளால் தடுக்க இயலாது போன்றனவும் விளக்கப்பட்டுள்ளன.

தப்பாட்டம்

கதைச் சுருக்கம்

சாதி வேற்றுமை, தீண்டாமை இவற்றைக் கருவாகக் கொண்ட இப்புதினத்தில் அச்சமுதாயக் கொடுமையிலிருந்து விடுபடுவதற்கான விழிப்புணர்வும் கூறப்பட்டுள்ளது.

சக்கிலியச் சாதியைச் சேர்ந்தவரான மதுக்கன் பகடைக்கு இரண்டு மகன்கள். மூத்தவன் சின்னராசு. இளையவன் தோழப்பன். தோழப்பன் பறைச் சாதியைச் சேர்ந்த வள்ளியைத் திருமணம் செய்து கொண்டதால் ஒடுக்கப்பட்ட சாதியினரான அவர்களுக்குள்ளேயே சண்டை நடக்கிறது. பொதுவுடைமைக் கட்சி இதில் தலையிட்டுத் தீர்த்து வைக்கிறது.

தஞ்சாவூரில் செருப்புத் தைக்கும் தொழிலை முடித்துவிட்டு மதுக்கன் பகடையும், அவரின் மச்சினன் கோவிந்தராசுவும் ரெட்டிப்பாளையத்திற்குள் நுழைகின்றனர். அங்கு மேல்சாதியினர் வருவதைக் கண்டவுடன் காலில் மாட்டியிருந்த செருப்பைக் கையில் எடுத்துக் கொண்டும், தலையில் கட்டியிருந்த துண்டை இடுப்பில் கட்டியும், சட்டையைக் கழட்டிக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டும்,

வேட்டியை முழங்காலுக்குக் கீழே இறக்கி விட்டும் வருகின்றனர். வரும் வழியில் டீக்கடைக்குச் செல்கின்றனர். அங்கு மேல்சாதியினருக்கு ஒரு குவளையும், தாழ்ந்த சாதியினருக்கு ஒரு குவளையும், பெண்களுக்கென ஒரு தனிக்குவளையும் கொடுக்கின்றனர். அத்தகைய நிகழ்ச்சியைக் கண்ட அவர்கள், உயர்ந்த சாதியினரால் தாழ்ந்த சாதிப் பெண்கள் குளத்தில் குளிப்பதற்குத் தடை செய்திருப்பதையும், குருமூர்த்தி சாம்பான் தப்படிக்க மறுத்ததால் கட்டை விரல் துண்டிக்கப்பட்டதையும் நினைவு கூர்ந்தனர். இத்தீண்டாமைக் கொடுமை அடுத்தடுத்த தலைமுறைக்கும் நீடிக்குமோ என மனம் வெதும்புகின்றனர்.

தங்கசாமி மூப்பனாருக்குப் பதினாறு பிள்ளைகள். அவர் ஊரையே அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார். அவருடைய நான்காவது மகன் முனியாண்டி சாம்பானின் தங்கை மகள் வெள்ளையை, அவளின் திருமணத்திற்கு மூன்று நாட்களே இருந்த நிலையில் கற்பழித்துக் கொன்றுவிடுகிறான். இக்கொடுமையை நேரில் கண்ட முனயாண்டியையும் மிரட்டி வைக்கின்றனர். இதனால் அவர் வெளியில் சொல்ல முடியாமல் மனதிற்குள்ளேயே அழுகின்றார்.

ரெட்டிப்பாளையத்தில் தப்பு அடிக்கும் வேலையைச் செய்யும் தம்புரான் பகடை அத்தொழிலைச் செய்ய மறுக்கிறான். ஊர்ச் சபையைக் கூட்டிக் காரணம் கேட்கும் போது, பக்கத்து ஊரில் தப்பு அடித்தல், வெட்டியான் தொழில் போன்ற ஒவ்வொரு வேலைக்கும்

தனித்தனியாகக் கூலி கொடுப்பதாகவும், ஆனால் ரெட்டிப்பாளையத்திலோ எல்லா வேலைகளுக்கும் சேர்த்து மூன்று ரூபாய் கூலி மட்டுமே கொடுப்பதாகக் கூறியதுடன், வேறு ஊரிலிருந்து அங்கு வந்து தப்பு அடித்தவனுக்கு இருநூறு ரூபாய் கொடுப்பதையும் கூறி நீதி கேட்கிறான். அவனுடன் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் சேர்ந்து நியாயம் கேட்டதால் திருவிழா முடிந்த பின் கடைசி ஒரு நாள் மட்டும் சாமி கும்பிட அனுமதிக்கப்பட்டனர். அதற்கு அம்பலகாரர்கள் ஆதரவு கொடுத்ததால் மூப்பனார் சாதிக்கும் அவர்களுக்கும் சண்டை வர, பின்னர் பெரியவர்கள் கூடிப்பேசி அவர்களை ஒன்று சேர்க்கின்றனர்.

சுந்தரமூர்த்தி என்ற ஆசிரியர் மூப்பனார் சாதியில் பிறந்தாலும் கல்வி கற்றுக் கொடுப்பதோடு மட்டுமில்லாமல் தாழ்த்தப்பட்டவர்களை அடிமை நிலையிலிருந்து விடுபடவும் சொல்லிக் கொடுக்கிறார். பொதுவுடைமைக் கட்சியிலிருக்கும் அவர் தாழ்த்தப்பட்ட மக்களையும் அக்கட்சியில் சேர்க்கின்றார். அவர்களுக்குச் சுந்தரமூர்த்தியும், தோழப்பனும் தலைமை தாங்குகின்றனர். மேல் சாதியினர் தாழ்த்தப்பட்டவர்களைக் கொத்தடிமைகளாக வைத்துச் சரியான கூலி தராததுடன் சாதிப் பெயரைச் சொல்லித் திட்டித் தீண்டாமைக் கொடுமை செய்வதையும், தங்களுடைய தெருவுக்குப் போகும் வழியை அடைத்திருப்பதையும் எதிர்த்துப் போராடுகின்றனர். அதைப் பிடிக்காத மேல்சாதியினர் அடியாட்களைத் திரட்டிக் கொண்டு

போய் அவர்களை அடிக்கின்றனர். அதனால் ரெட்டிப்பாளையமே சாதிக்கலவரத்திற்கு ஆட்படுகிறது. அவர்களுக்கு ஆதரவாக அரசியல்வாதிகளும், காவல்துறையும் செயல்பட்டதால், பொதுவுடைமைக் கட்சியினர் அனைவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். சுந்தரமூர்த்தி ஆசிரியர் கீழ் சாதியினரைத் திட்டியதாகத் தீண்டாமைக் குற்றத்தில் கைது செய்யப்பட்டார். இறுதியில் சுந்தர மூர்த்தி ஆசிரியர் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, பொதுமக்கள் அவரை வரவேற்பதாக இக்கதை முடிவடைகிறது.

இப்புதினம் கிராமங்களில் நிகழ்ந்து வரும் சாதீயக் கொடுமையை விளக்குவதுடன், அச்சாதீயக் கொடுமையால் பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதையும் விளக்குவதாக அமைகின்றது.

பெருந்திணை

கதைச் சுருக்கம்

பறையரான ஆறுமுகம், புதரை வண்ணார் சாதியைச் சார்ந்த கிளியம்மாவை மணந்து, நான்கு பெண்பிள்ளைகளையும், ஐந்தாவதாக ஒரு பையனுக்கும் தந்தையாகிறார். ஆறாவதாக பெண் குழந்தை பிறந்த போது கிளியம்மா இறந்து விடுகிறாள். ஆறுமுகம் எல்லாப் பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கி திருமணம் செய்து கொடுக்கிறார். மகனை மட்டும் படிக்க வைத்து வேலைக்கு அனுப்புகிறார். மகனுக்கு தன் மகள் வயிற்றுப் பேத்தியைத்

திருமணம் செய்து கொடுக்கலாமென நினைத்துக் கொண்டிருக்கும் போது, அவன் வசதியான இடத்தில் திருமணம் செய்து கொண்டு, தந்தையையும், சகோதரிகளையும் வெறுக்கிறான்.

பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த ஆறுமுகம், சிவசங்கரன் பிள்ளையின் பண்ணையில் வேலை செய்கிறார். சிவசங்கரனுக்கு இரு மகள்களும், ஒரு மகனும் இருக்கின்றனர். மூத்த பெண் மதிவதனியை வசதியான இடத்தில் திருமணம் செய்து கொடுத்துவிட்டு, இளைய மகள் திலகாவை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படிக்க வைத்துவிட்டு, வேலைக்குப் பணம் கட்ட முடியாததால் அவளை வீட்டில் வைத்திருக்கிறார். விவசாயத்திற்குக் காவிரியில் நீர் வராததாலும் மழை இல்லாததாலும் ஆழ்குழாய் கிணறு தோண்டுவதற்காக வங்கியில் கடன் வாங்க, தன் மனைவியுடன் வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவரின் மகனிடம் பிணை கையெழுத்துக் கேட்கிறார். ஆனால் அவன் கையொப்பம் மறுத்துவிடுகிறான்.

வறட்சியின் காரணமாகப் பட்டினி சாவுகள் நிகழ்கின்றன. எலிக்கறியைச் சாப்பிட்டு வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பின்னர் பெய்த மழையால் மரங்கள் வேரோடு சாய்ந்து வீடுகளில் விழுவதால் இழப்பு ஏற்படுகிறது. சிவசங்கரன் பிள்ளையின் மூத்த மகளின் வீட்டில் பண நெருக்கடி அதிகரிக்கிறது. கடன் தொல்லையால் மதிவதனியின் கணவன் பழனிக்குமார் தற்கொலை செய்து கொள்கிறான். இப்புதினத்தில் வறட்சியாலும், புயலாலும் பாதிப்புக்கு உள்ளாகும் மக்களின் வாழ்க்கை நிலையும்,

பெற்றோர்களைக் கவனிக்காமலும் மதிக்காமலும் செயல்படும் மகன்களையும, கடன் தொல்லையால் மனம் வெறுத்து உயிரை மாய்த்துக் கொள்பவரையும் காணமுடிகிறது.

மரக்கால்

கதைச் சுருக்கம்

வளத்தி - செவலை என்ற தம்பதியினருக்குப் பிறந்த நந்தன், கச்சலை என்பவளை மணந்து வாழ்ந்து கொண்டிருக்கும் போது, திடீரென சிவநாமத்தைக் கூறிக் கொண்டும், உடம்பெல்லாம் திருநீறு அணிந்து கொண்டும், அந்த சைவனாகிப் போகிறான். இதனால் கச்சலை வேறு திருமணம் செய்து கொள்கிறாள். நந்தனின் பெற்றோர் 'குட்டா' என்ற தன் பேத்தியைத் திருமணம் செய்து வைக்கலாமென நினைக்கின்றனர்.

ஆனால் நந்தன் தன் கூட்டாளிகளாக சிலரை சேர்த்துக் கொண்டு 'அரோகரா' பாடுகிறான். இவனின் இச்செயல்பாடு ஆதனூர் பிரமதேய அதிபரான முத்துசாமி தீட்சிதருக்கு நெருக்கடியைக் கொடுக்கிறது. இவனை, பெரிய கடவுள் வழிபாடு செய்யக் கூடாதென இவனின் இனத்தைச் சேர்ந்தவர்களே கூட்டம் போட்டு கண்டிக்கின்றனர். ஆனால் அவன் கேட்கவில்லை.

பிரமதேயத்தில் நடைபெறும் தாசிகளின் செயல்பாடுகளையும் இப்புதினத்தில் காணமுடிகிறது. அழகும், இளமையும் இருக்கும் வரை இவர்கள் வசதியான அதிபர்களுக்கு அடிமைகளாக

இருந்துவிட்டு, பின்னர் பண்ணை அடிமையாக வாழக்கூடிய சூழலில் இருந்தனர். இதில் தர்மவர்த்தினி என்ற தாசி நந்தனை நினைத்து, அவனுக்கு ஒருநாள் அடிமையாகி, பின் அவன் நினைவாக வாழ்கிறாள்.

நந்தன் ஆதனூர் அதிபரின் கட்டளைகளை நிறைவேற்றிவிட்டு, அவரின் அனுமதியோடு, தன் கூட்டாளிகளுடன் சேர்ந்து சிதம்பரம் சென்று நடராசனைப் பார்க்கச் செல்கிறான். இடையில் மருதன், நாகன் என்ற இருவரைச் சந்திக்கின்றனர். அவர்களும் பறையர்கள் என்றும், சோழ தேசத்துக்கு கட்டுப்பட்ட செம்மங்குடி பிரமதேயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அங்கு நடந்த கொடுமைகளைத் தட்டிக் கேட்டதால், கப்பலேற்றி அடிமையாக விற்றுவிட்டதாகவும், அதிலிருந்து தப்பிவந்து ஒளிந்து வாழ்வதாகவும் கூறினர்.

பின்னர் எல்லோரும் சேர்ந்து தில்லை நகர் செல்ல, அங்கு இருக்கும் பிரமதேயம் நந்தனை எரித்து அவன் இனத்தையே இவ்வழிபாடு வேண்டாமென சொல்லவைக்க வேண்டுமென நினைக்கிறது. முறைப்படி தில்லைநாதரை வழிபடமுடியாது, தெரியாமல் சென்று வழிபடலாமென ஒரு உமணன் வழி சொல்ல, மருதன் யாருக்கும் தெரியாமல் நந்தனை கோவிலுக்குள் அழைத்துச் செல்கின்றான். ஆனால் எதிர்பாராத விதமாக இவர்கள் சென்றது தெரிந்துவிட மருதன் கட்டையால் அடிபட்டு இறந்து விடுகிறான். நந்தனை வேள்விக் குண்டத்தில் போட்டு எரித்துவிடுகின்றனர்.

அதைக் கண்ட தர்மவர்த்தினி மயக்கமடைகிறாள். இப்புதினத்தில் புராண வரலாற்றுக் கூறுகள், அக்காலத்தில் நடைமுறையில் இருந்த சிவிகை, அதைத் தூக்கிச் செல்பவர்கள் முதலானவை இடம்பெறுகிறது.

தொகுப்புரை

ஆசிரியரின் பிறப்பு, வளர்ப்பு, இளமைக்காலம், கல்வித்தகுதி, படைப்புகள், பெற்ற பட்டங்கள், அலுவலகப் பணி ஆகியவைகள் விளக்கப்பட்டுள்ளன.

சோலை சுந்தரபெருமாளின் படைப்புகளில் புதினங்கள், குறும்புதினம், சிறுகதைகள், திறனாய்வு நூல்கள் ஆகியவை கால வரிசை நிலையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஆய்வு எல்லைக் கருதி சோலை சுந்தரபெருமாளின் ஏழு புதினங்கள் மட்டும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

உறங்க மறந்த கும்பகர்ணர்கள், செந்நெல், தப்பாட்டம், நஞ்சை மனிதர்கள், பெருந்திணை, ஒரே ஒரு ஊர்ல, மரக்கால் ஆகிய ஏழு புதினங்களின் கதைகளையும் அவற்றின் சிறப்புக்களையும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

இயல் 2

சோலை சுந்தரபெருமாள் காட்டும் சமூகம்

இயல் - 2

சோலை சுந்தரபெருமாள் காட்டும் சமூகம்

நாடோடியாகத் திரிந்த மனிதர்கள் தன் வாழ்வின் தேவைக்காக உருவாக்கிய கட்டமைப்பே சமுதாயமாகும். மக்களிடையே ஏற்படும் சமூக உறவு முறைகள் தான் சமூகத்தை உருவாக்குகின்றன. மனிதனால் தனித்து இயங்க இயலாது. குடும்பம் சமூகம் என்று மற்றவர்களுடன் சேர்ந்து வாழும் இயல்புணர்ச்சி மனிதனிடத்தில் இயற்கையாகவே அமைந்துள்ளது. மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே உடன்பாடுகள், முரண்பாடுகள், தொடர்புகள் முதலான அனைத்து நிலைகளையும் அறியும் கல்வி சமூகவியல் எனப்படும்.

உணர்ந்தோர் உணர்த்தப்படுவது இலக்கியமாகும். சமுதாயத்தின் ஒரு துளியாகிய மனிதனைச் சமூக விலங்கு என்பார் பிளாட்டோ. இலக்கியம் மக்களின் வாழ்வியல் கூறுகளான பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம், தனிமனிதப் பிரச்சினைகள், உளவியல் சிந்தனைகள், ஆகியவற்றைக் காட்டும் கண்ணாடியாகும். சோலை சுந்தரபெருமாளின் புதினங்களில் காணலாகும் மேல்தட்டு மக்களின் அதிகாரப் போக்கு, விளிம்புநிலை மக்களின் போராட்டம், கீழ்த்தட்டு மக்களின் வறுமை, பெண்களின் நிலை, கலப்புமணம், குடும்ப உறவு நிலைகள், சாதியப் பிரச்சினைகள், மண்சார்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள், தொழில்கள், அரசியல் சார்புகள் ஆகியவை குறித்து விளக்கப்படுவது இவ்வியலின் நோக்கமாகும்.

சமுதாயம்

ஒரு நல்ல இலக்கியமென்பது சமுதாய மேம்பாட்டிற்காகவும் சிந்தனையைத் தட்டி எழுப்புவதாகவும் இருக்க வேண்டும். சமுதாயத்தில் வாழும் சாதாரண மக்களைப் போல் ஆதங்கப்படுபவர்களும், இரக்கப்படுபவர்களும் அவர்களது வெளிப்பாடாய் வெளிவருவன எல்லாம் சிறந்த படைப்பு இலக்கியங்களாகப் போற்றிப் பேசப்படுகின்றன. சொல்லிலும் செயலிலும் முழுமையான ஈடுபாடு கொண்டவர்களால் படைக்கப்படுகின்ற இலக்கியங்கள் சமுதாய மேம்பாட்டிற்காக என்றும் வேரூன்றி இருக்கும். "தனிமரம் தோப்பாகாது; மக்களின் கூட்டு வாழ்க்கையே சமுதாயமாகும். குடும்பம் உறவுகள், சாதி, தொழில், நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், அரசியல், கல்வி, பொருளாதாரம் இவை சார்ந்த அமைப்பு சமுதாயம் ஆகும். அதில் வாழும் மக்களின் வாழ்க்கையை நேரடியாகவோ, மறைமுகமாகவோ விளக்குவது இலக்கியமாகும். சமுதாயம் செம்மையும் முன்னேற்றமும் அடைய வேண்டும் என்றும், அதற்கு இலக்கியம் உதவ வல்லதென்றும் கருதும் இலக்கிய கர்த்தா சமுதாயத்திற்கு அவசியமும், அர்த்தமும் பொருந்தியதை ஏற்ற ஊடகத்தின் வாயிலாகவோ சொல்லமுனைவான்"(1) என்கிறார் தில்லைநாதன்.

சமுதாயம் என்ற சொல் ஆறறிவு படைத்த மக்களினத்தோடு தொடர்புடையது. "ஆறறிவு படைத்த மக்கள் இனத்துள்ளும்

உணர்வற்ற அடிப்படை உணர்வில்லாத மக்கள் கூட்டம் சமுதாயம் என்னும் சொல்லுக்கு இலக்கு ஆகாது"[2] என்பர் அ.மு. பரமசிவானந்தம்.

இலக்கியத்தில் சமூக வாழ்க்கையுடன் தொடர்புடையவை. மனிதனின் சுக துக்கங்களை அவை ஊடுருவிப் பார்க்கின்றன. "ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலம் ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம்"[3] என சி.இ.மறைமலை கூறுவர்.

மனிதனின் குறிக்கோளை அறிவுறுத்தாமல், வாழ்க்கை நடைமுறைகளையும் சிக்கல்களையும் எடுத்துக்கூறித் தீர்வுகளைக் கூறுகின்றன. "கூடிவாழும் இயல்புடைய மனித இனத்தின் பட்டறிவின் தன்மைக்குத் தக்கவாறு சமுதாய அமைப்பு உருவாகிறது. அது இடத்திற்கு இடமும் காலத்துக்குக காலமும் மாறும் தன்மையுடையதாகக் காணப்பெறுகிறது. அமைதிக்கும் அமைதி இழப்பிற்கும் சமுதாயமே பாசறையாக அமைகிறது"[4] என்பர்.

ஓர் இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளன் அடிப்படையில் சாதாரண மனிதனாக இருக்கிறான். அவனுக்குள்ளும் சிக்கல்களும் பிரச்சினைகளும் இருக்கின்றன. தனிமனிதன் பிரச்சினைகள் வரும் போது எதிர்கொள்ளவும், எதிர்கொள்ள முடியாமல் வீழவும், தவிக்கவும் செய்கிறான்.

இந்நிலையில் படைப்பாளன் பிரச்சினைகளை எதிர்கொண்டு அதனையே படைப்பாகக் கொண்டு தீர்வு காண முயல்கிறான். படைப்பாளனுக்கு ஏற்பட்ட சிக்கல்கள் எல்லோருடைய பொதுச் சிக்கலாகவும், தீர்வாகவும் அமைகின்றன. இது குறித்து, "மனிதனுக்கும் ஆத்மா ஒன்று இருப்பது போல் சமுதாயத்திற்கும் ஓர் ஆத்மா உண்டு. அந்த ஆத்மாவின் துடிப்பை அதன் இரசபேதம் மிக்க இராகங்களைக் கண்டறிந்து அவற்றை எழுத்தில் வடிப்பவன் உண்மைக் கலைஞன் ஆவான். தான் வாழும் சமுதாயத்தைப் புதியதொரு சிந்தனை ஒளியில் நின்று தான் கண்டதை எழுத்தில் பிரதிபலிக்கிறான். அது கலைப் படைப்பாக மாறுகிறது."[(5)] என மா.இராமலிங்கம் குறிப்பிடுவர்.

மனித இனத்தின் அனுபவங்களை கலை நயத்தோடு எடுத்துரைப்பதே இலக்கியம். இலக்கியத்தை வாழ்க்கையில் மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த அறிஞர் ந. சஞ்சீவி, "வாழ்க்கையின் தனிச்சிறப்புக் கூறுகளை வடித்துக் காட்டுவதே இலக்கியம் என்பது விளங்கும். ஆம், இலக்கியம் வாழ்க்கையின் வடிவம் அன்று! வார்ப்பே ஆகும்! ஒரு வகையில் ஒலிகளை வடிவங்கள் என்று உவமிக்கலாம். இலக்கியங்கள் என்பவை வாழ்க்கையின் ஒலியன்கள்(Phonemes) என்று போற்றலாம்"[(6)] என்பர்.

புதினாசிரியன் சமூகத்தின் அனைத்துக் கூறுபாடுகளையும் கூர்ந்து நோக்குபவனாக இருக்க வேண்டும். "சமூக ஆய்வு என்பது ஒரு விசாலமான சொல். சமுதாயத்தை மேம்போக்காகக்

காண்பதிலிருந்து அதை மிக ஆழமாக ஆய்வு செய்து காணும் எல்லா அம்சங்களும் இதனுள் அடங்கும். ஓர் எழுத்தாளர் அதிலும் குறிப்பாக ஒரு நாவலாசிரியர் மனித வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். ஒரு கலைஞனின் மிக முக்கியமான நோக்கம் மனித சமுதாயத்தை ஆராய்வது"[7] என்ற கருத்து ஒரு புதினாசிரியரின் கடமையையும் புதின இலக்கிய வகையின் சமூக வீச்சையும் உணர்த்தவல்லது.

சிறுகதையிலிருந்து வேறுபட்டு, பல நிகழ்ச்சிகளையும் செயல்களையும் தன்னகத்தே கொண்டு கதை மாந்தரின் பண்புகளுக்கேற்ப ஒரு கதையை வளர்த்துச் சென்று ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் உரைநடை இலக்கிய வகையே புதினமாகும். சமூக மாற்றங்கள் நிகழும் காலக்கட்டங்களில் வாழும் படைப்பாளிகளின் சமூகப் பொறுப்பு மேலும் அதிகமாகிறது. இதனால் "நாவல் ஆசிரியரின் யதார்த்தம் என்னும் இலக்கியப் பண்பினை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கையை எடுத்துக்காட்ட முனைகிறான். அந்த வாழ்க்கை விளக்கத்தை வாசகன் ஏதோ ஒரு வகையில் கிரகித்துக் கொள்கிறான். அக்கிரகிப்பு வாசகனது சொந்த வாழ்க்கை விளக்கத்திற்கு உதவுகின்றது; உதவுதல் வேண்டும்"[8] என்கிறார் கா. சிவத்தம்பி.

சமூக நிறுவனங்கள்

இலக்கியங்கள் சமுதாயச் சூழல் அடிப்படையில் தோன்றுகின்றன. "சமுதாயம் என்பது ஒரே மாதிரியான அல்லது சீரான அமைப்பு கொண்டதல்ல அது வேறுபாடுகளாலும் முரண்பாடுகளாலும் ஆனது. புறவயத்தாக்கங்கள் பெறுவது என்பர்"(9) தா.ஏ. ஞானமூர்த்தி. "நாவல் மறுமலர்ச்சியுகம் பெற்று எடுத்த ஒரு கலை வடிவம்"(10) என்று மா.இராமலிங்கம் குறிப்பிடுகிறார். "எழுத்தாளன் தனித்து வாழும் ஒருவர் அல்லர்; அவர் சமூகப் பிராணி"(11) என்பர் க.கைலாசபதி. அதனால் அவர்களது படைப்பிற்குச் சமுதாய நிலைகள் வெளிப்படுவது தவிர்க்க இயலாத ஒன்றாம்.

குடும்பம் பற்றிய வரையறை

சமூகத்தில் குழுவாக இணைந்து வெளிப்படும் அமைப்பு குடும்பமாகும். சிலர் குடும்பம் ஒரு நிறுவனம் எனறும், சிலர் அஃது ஒரு நிலையம் என்றும், ஒரு சிலர் அது ஒரு குழு என்றும் வழங்குகின்றனர். "குடும்பம் ஒரு நிலையம் அல்லது இயைபுக் குழு மட்டுமல்ல, அது ஒரு நிறுவனமும் கூட அதை நிறுவனங்களின் தொகுதி என்று சொல்வது கூடத் தவறாகாது"(12) என்பர்.

குடும்பம்

குடும்பம் தலைமுறை தலைமுறையாகப் பண்பாட்டு மரபுரிமையைக் கொண்டு செல்லும் ஒரு செயலி என்றும் இதனைப்

புலப்படுத்துவர். "நவீன கால குடும்பம் அடிமை முறையை மட்டுமின்றிப் பண்ணையடிமை முறையையும் கரு அளவில் தன்னுள் கொண்டிருக்கின்றது"[13] என வர்க்கக் கண்ணோட்டத்தோடு குடும்பத்தை வரையறுக்கின்றார்.

பழங்காலங்களில் நாடோடிகளாக அலைந்து திரிந்த மக்கள் பின்னர் இணைந்து குடும்பங்களாக வாழத் தொடங்கினார்கள். குடும்பத்திலுள்ள பழக்க வழக்கங்கள், சிக்கல்கள் அவற்றிற்கான தீர்வுகள் இவற்றை வெளிக்கொண்டு வருவதும் இலக்கியமாகும். குடும்பத்திற்குள் நிகழும் இன்ப, துன்பங்களையும் இலக்கியம் பிரதிபலிக்கிறது.

"அன்பும் அறமும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"[14]

என்ற வள்ளுவர் கூற்றிலிருந்து குடும்பம் என்பது ஒரு புனிதமான நிறுவனமாகக் கருதப்படுகிறது. "இனவாழ்வின் அடிப்படைக்கூறு குடும்பம்; குடும்பத்தின் கூட்டே சமுதாயம். குடும்பப் பண்பு சமுதாயப் பண்பாகப் பரவவில்லையானால் அது இன்பமாக வளர முடியாது."[15] இவ்வாறாகக் குடும்பம் பற்றிய விளக்கம் கூறப்பட்டுள்ளது.

மேல்தட்டு மக்கள்

மேல்தட்டு மக்கள் என்போர் உயர்சாதி வகுப்பினராகத் தங்களைக் கருதிக் கொண்டிருப்பவர்களாவார்கள். இவர்களில் ஒரு சிலர் பொருளாதார வளர்ச்சி பெற்று மேலும் மேலும் முன்னேறிக்

கொண்டிருப்பர்களாகவும், ஒரு சிலர் பொருளாதார வளர்ச்சி பெறாமல் கூலி வேலை செய்து வாழ்ந்து வருவபவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். பொருளாதாரத்தில் பின்தங்கி இருந்தாலும் சாதியப் போக்கில் மாற்றம் அடையாதவர்களாகக் காணப்படுகின்றனர். பண்ணை நிலங்களுக்கு உரிமை உடையவர்களாகவும், பண்ணை நிலங்களில் வேலை செய்பவர்களாகவும் காணப்படுகின்ற மேல்தட்டு மக்கள் சாதியில் ஒன்றுபட்டு நிற்கின்றனர்.

'நஞ்சை மனிதர்கள்' என்ற புதினத்தில் காத்தையாபிள்ளை, தன்னுடைய மகன்களுக்காகக் கட்டி வைத்திருந்த வீட்டின் மூலமாகவே அவர்களின் வசதியை அறியமுடிகிறது.

"எக்கண்டமா இருக்கிற தொறப்புல வெதை நெல்லுக்கு கோட்டைக்கட்டி மொத்தமா சேர்த்து சேர் கட்டி வைக்கிறது. வடவண்ட பக்கமா தாய் செவுத்த ஒட்டினாப்போல ரெண்டு பந்தி உக்காராப் போல உள்ள அகலத்துக்கு நாலு பக்கமும் தாவாரம் கட்டிருக்காரு. நாலு பக்க தாவார வாரிக்கும் கம்பி தடுப்புப் போட்டு வச்சிருந்தார். அது வீட்டுல நடக்கிற தேவை சங்கதிகளுக்கு ஆவனுன்னு கணக்குப் பேட்டு தான் கட்டி வச்சாரு. நாலஞ்சி தலைமுறைக்கும் எந்த நல்லது கெட்டதுக்கும் அடுத்த எடம் எடுத்தபடி வைக்க வேணாம். அப்புடியாப்பட்ட வீடு"(16) என்பதிலிருந்தே அவர்களின் வசதி வாய்ப்பை அறியமுடிகிறது.

'உறங்கமறந்த கும்பகர்ணர்கள்' என்ற புதினத்தில் மனவளர்ச்சி குன்றிய தன்னுடைய மகனின் மருத்துவச் செலவிற்காகச் சொத்தின் பெரும் பகுதியை விற்றுவிடுகிறர் சின்னசாமி. மீதி இருக்கும் நிலத்தையும் விற்று விட நினைத்த அவர் தன் மனைவியிடம், முதலியாரிடத்தில் விற்கலாம் என்கிறார். "....தங்கம் 'காணியாங் காய்ச்சிய' முதலியார் கிட்டயே வித்திடலாம்னு நெனக்கிறேன்...."(17) என்ற வரிகளின் மூலம் நிலவுடமையாளாகளாகக் குடியானவர்களே திகழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

விளிம்புநிலை மக்கள்

பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்து வருபவர்களை விளிம்பு நிலை மக்கள் என்கிறோம். மனித வாழ்வின் உள்ளார்ந்த இரகசியங்களைத் தேடுகிறவர்கள் ஒருவகை. இதன் மூலம் என்றும் அழியாத இலக்கியங்களைப் படைக்க முடியும் என இவர்கள் நம்புகிறார்கள். இன்னொரு வகையினர் மனிதர்களின் அன்றாட நடவடிக்கைகளைக் கண்டு, அவர்களைச் சுற்றி நடக்கும் அவலங்களைக் கண்டு மனம் வெதும்புகிறவர்கள். அவற்றையே கருப்பொருளாகக் கொள்கிறார்கள். இதன் மூலம் எதிர்கால தலைமுறையினருக்கு இலக்கியச் சேவை செய்ய முடிகிறதோ இல்லையோ, சமகால மனிதர்களின் இதயக் கதவுகளைத் தட்டிவிட வேண்டும் என்று துடிப்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

சோலைசுந்தரபெருமாள் படைப்புகளில் தலித்தியச் சிந்தனைகள் மிகுந்து காணப்படுகின்றன. தாழ்த்தப்பட்டோர் அல்லாத, ஆனால் தாழ்த்தப்பட்டோரின் மனநிலையோடும் அவ்வுணர்வோடும் ஒருவரால் எழுதப்படும் இலக்கியம் தலித் இலக்கியமாகும்.

ஒடுக்கப்பட்டவர்களான பள்ளன், பறையன், சக்கிலியன், புதரை வண்ணான் போன்ற சாதிகளைச் சார்ந்தவர்கள் அடிமைகளாகவே வாழ்கின்றனர். அவர்களின் குடிசைகள் ஊரின் புறத்தில் அமைந்திருக்கின்றன. சேரிகள் என அழைக்கப்படும் அவ்விடம் குண்டும் குழியுமாகக் காணப்படும். சேரிகள் என்றால் சேர்ந்து வாழும் இடமாக இருந்த நிலையில், இன்றைக்குச் சேரிகள் என்றால் ஒதுக்குப்புறங்களில் வசிக்கும் மக்களின் தொகுப்பு வீடுகளுக்குச் சேரி எனப் பெயரிடப்பட்டுள்ளது. "குடியானத் தெருகளோட மூலைக்கு மூலை வாழத்தண்டு லையிட்டு எரியிது. சேரிக்குள்ள எரியவிட்ட குண்டு பல்பு கூட ஒரு வாரமா எரியக் காணும். தெருவும் குண்டும் குழியுமா திட்டுத்திட்டா சகதி வேற, குறுகலான சந்துக்கு ரெண்டு பக்கமும் குடிசைகள், முன்னு பின்ன தள்ளி கோணக்க மாணக்கன்னு இருக்கும் குடிசைகள். அதுவும் அப்பைக்கு அப்ப இருக்கும் கையிருப்புக்கு ஏத்தாற்போல் நீட்டிக்கிறதும் குறுக்கிக்கிறதும் உண்டு. அதனால குடிசையில நீட்டியிருக்கும் கம்புகள். அசந்து அமர்ந்து வேக சாகமா நடந்து போயிட்டா மனுசள்ள பதம் பாத்துடும். எந்த ஒழுங்குக்கும்

கட்டுப்படாத குடுசைக. சில குடிசைக கீத்துமேல வைக்க போட்டுக்கிட்டு இருக்கு. சிலதுங்க ஈக்குகுச்சா நிக்கிது. அது மேல மழை வெயிலுக்காக கோணிசாக்குகளையும் கிழிந்துப்போன பாயிகளையும் போத்திக் கிடக்கும்"[18] என்று கீழ்த்தட்டு மக்களின் வாழ்விடங்களை ஆசிரியர் இடம் சுட்டிப் பொருள் விளக்குகிறார்.

சேரியின் தன்மை இவ்வாறு இருக்க, இங்கு வாழ்வோர் சாப்பிடும் போதும் அமர்ந்து மெதுவாகச் சாப்பிடக் கூட நேரமில்லாதவர்களாகக் காணப்படுகினறனர். வீட்டு வேலைகளை முடித்துவிட்டு வயல் வேலைக்குப் போக வேண்டுமென்கின்ற அவசரத்தில் உணவருந்தக் கூட நேரமில்லாத மக்களை உறங்க மறந்த கும்பகர்ணர்கள் என்ற புதினத்தில், "அரக்கப் பரக்கப் பாடுபட்டாலும் படுக்கப்பாய் இருக்காதாம். ஒக்காந்து சோறு திங்கதான் நேரம் இருக்கா..."[19] என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

அவர்களின் குடும்பங்களில் மூன்று வேளை உணவினை அன்றைய தினக்கூலியின் மூலம் நிறைவு செய்கின்றனர். ஒரு சிலர் தங்களுடைய முதலாளியின் வீட்டின் பின்புறம் சென்று அவர்கள் போடும் பழைய சோற்றை வாங்கிக் கொண்டு வந்து சாப்பிடும் தன்மையையும் காண முடிகிறது.

'தப்பாட்டம்' என்ற புதினத்தில் மதுக்கன் பகடை தன் மனைவி வேலாயிடம், "இந்தாபாரு வேலாயி மூணு நாளா புளிச்சச் சோறு கஞ்சி குடிச்சி குடிச்சி நாக்கு செத்துக் கிடக்கு, இன்னிக்கு வடமலையான் மொகம் பாத்தா அந்திக்கு கறி எடுத்திடலாம்.

வெள்ளன வந்து சேரு"[20] என்று கூறுவதிலிருந்து அவர்களின் பசியின் கொடுமையையும் வறுமையின் அவலத்தையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

வறுமைநிலை

'கொடிது கொடிது வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையில் வறுமை கொடிது' என்பர் ஔவையார். கீழ்ச்சாதியினருக்குச் சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாமல் வறுமையில் காலம் தள்ளுவதை ஆசிரியர் பெரும்பாலான தம் புதினங்களில் எழுதியுள்ளார். வறட்சியின் காரணமாகவும், பெரும் புயலுடன் கூடிய மழையின் காரணமாகவும் அதிக உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. தஞ்சை வட்டார மக்கள் எலிக்கறி சாப்பிட்டதையும், பட்டினியின் காரணமாக இறப்புகள் நிகழ்ந்ததையும் 'பெருந்திணை' புதினத்தில் காட்டியுள்ளார்.

இரண்டு வருடகாலமாக மழை இல்லாமலும், காவிரியில் நீர் வரத்து இல்லாமலும் வறண்டு போய்விட்டதால், விவசாயம் என்பது அறவே அற்றுப் போய்விடுகிறது. ஆறுமுகத்தின் மகள், சாப்பாட்டிற்கு வழியில்லாமல் எலியைப் பிடித்து வந்து சமைத்துக் கொடுத்தால் தன் பிள்ளைகளின் வயிறு நிறையும் என்கிறான்.இதனை "யப்பா வயவரப்புக்குப் போய் கெல்லி எலி புடுச்சாந்தா தான் சமாளிக்கலாம். இருக்குற காப்புடி அரப்படி குருணையைப் போட்டு கஞ்சி வச்சி அதோட இருக்குற மொளவா செலவ போட்டுக

கொதிக்க வச்சி கொடுத்தா புள்ளைங்க வயிறு ரொம்பும்..."[21] என்கிறார்.

வறட்சியின் காரணத்தால் பட்டினி கிடந்து குழந்தைகள் இறந்துவிடுகிறார்கள். இதனைப் பழனிக்குமாரின் பாட்டியிடம் சிவக்கண்ணு என்பவர், "ஆமாங்க பெரியாச்சி மனுசங்க மட்டுமில்லாம ஆடுமாடுங்களும் செத்துக்கிட்டுதான் இருக்கு. ஊரே வறண்டு போய்டுச்சி. செடிகொடிக சருகாக் கிடக்கு. மரங்க வாடி வதங்கி... எங்க ஊரு இன்னும் இரண்டு வருசம் இப்படியே இருந்துட்டா நாங்க பஞ்சம் பொழைக்க குடிசையைக் கிளப்பிக்கிட்டு போக வேண்டியது தாங்க....."[22] என்று கூறுகிறார்.

வறுமையால் பட்டினி சாவுகள் ஒருபுறம் நிகழ்ந்து கொண்டிருக்க; புயல்காற்றுடன் பெரும்மழையும் பெய்கிறது. இதனால் வீட்டின் மேல் புளியமரம் சாய்ந்து விழுந்து ஆறுமுகத்தின் பேத்திகள் இருவர் இறந்துவிடுகின்றனர். "பொசலு எங்க தெருவையே நாசம் பண்ணிட்டுதாங்க ஓஞ்சிருக்கு. பத்து பதினைஞ்சி வீடு வோத்தான் தப்பிச்சிருக்குங்க ஆறுமுவ மாமா மவ வீட்டு மேல புளியமரம் சாஞ்சி செவுரு உழுந்து ரெண்டு பேரப்பொண்ணுங்களும் நசுங்கி செத்துட்டுங்க....."[23]என்று கூறுவதிலிருந்து, வறட்சிக்கும், புயலுக்கும் அடிபட்டு அவலப்படுபவர்கள் கீழ்வர்க்கத்தைச் சேர்ந்த மக்களேயாவர் என்பதை அறியமுடிகிறது.

பெண்களின் நிலை

கரு முதல் கல்லறை வரையில் பெண் பிறரைச் சார்ந்து இயங்கும் நிலையில்தான் சமுதாயம் பெண்களை வைத்திருக்கின்றது. மிகவும் எச்சரிக்கையுடன் பின்னப்பட்ட இவ்வலையிலிருந்து பெண்களால் மீளவே முடியவில்லை.

பெண் இயல்பாகவே பல ஆற்றல்களைப் பெற்றவள். அறிந்தோ, அறியாமலோ முற்காலச் சமுதாயத்தில் அவளுடைய திறமைகள் வடிகட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்தன. 'மிக்கோனாயினும் கடிவரை இன்றே' என்று தான் தமிழன் பெண்ணைப் பார்த்துள்ளான். மனிதன் இனத்தைப் பெருக்குவதற்காகவும், குடும்பத்தைப் பேணுவதற்காகவும் மட்டுமே அவர்களுடைய ஆற்றல்கள் தேவைப்பட்டன. போதிய கல்வியறிவு இல்லாததால் வீட்டிற்குள்ளேயே முடங்கிக்கிடந்தனர். பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து எட்டுத்திசைக்கும் சென்று, எட்டும் அறிவினைப் பெற்றனர். தற்பொழுது எல்லாத்துறைகளிலும் அவர்களின் அரும்பணி ஆற்றலுடையனவாக மிளிர்கின்றன.

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்து சோர்விலாள் பெண்"(24)

என்பது வள்ளுவம். இத்தகைய அறநூல்களில் பெண்ணின் சிறப்புக் கூறப்பட்டிருந்தாலும், அவர்களும் வளர்ச்சி அடைந்திருந்தாலும் சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பதைச் சோலை சுந்தரபெருமாள் தன் புதினங்களில் குறிப்பிடுகிறார். பெண்

வாழ்க்கையில் பாதி மட்டுமல்ல; சமுதாயத்தில் பாதி. வாழ்க்கை முழுவதும் தாயாக, உடன் பிறந்தவளாக, மனைவியாக, தோழியாகத் தொடர்ந்து வருகிறாள். இன்று பாரதி கண்ட பெண்ணுரிமைச் சமூகம் மலர்ந்து விட்டது என்று பெருமை கொள்கிறோம். உண்மையில் முழுமையான பெண்ணுரிமை சமுதாயம் மலரவில்லை என்பதை இவரின் புதினங்களின் வழி அறியலாகிறது.

பெண்ணியம் என்பது உலகளாவியது. இது உலகிலுள்ள அனைத்து மனித குலத்துக்குள்ளும் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிக்க ஏற்பட்டது. "பெண்ணியம் என்ற இயக்கமானது; பெண்கள் தாமாக முடிவெடுத்து, அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஒரு சமூகத்தை உருவாக்குவதாகும். இஃது பெண்களிடையே பல மாற்றங்களை ஏற்படுத்தி அவர்களின் மேற்கூறிய இலக்கை அடைவிக்க உதவும் புரட்சிகரமான செயற்பாடு உடையதாகும்"[25] என்கிறார் இரா.பிரேமா.

ஒவ்வொரு காலகட்டத்திலும் பெண்களின் முன்னேற்றம் விமர்சிக்கப்பட்டு வருகின்றன. "அறிவு உழைப்பும், உடல் உழைப்பும் இணைந்து செயற்பட வேண்டும். உழைப்பவர் உலகத்தில் மகளிர் நிலை இரங்கத்தக்கதே. முற்போக்கு மகளிர் சங்கங்கள், அறிவு உழைப்பில் ஈடுபடும் பெண்மணிகளின் உரிமைகளில் காட்டுகின்ற அக்கறையை, உடல் உழைப்புச் செய்யும் மகளிரிடமும் காட்ட வேண்டும். மரநிழலே மகப்பேறு

மருத்துவமனையாக, மரக்கிளையே மழலைகளின் தொட்டிலாக, வாழ்க்கை நடத்தும் உழைக்கும் ஏழைப் பெண் விவசாயக் கூலிகளின் நிலை வருந்தத்தக்கது. இந்நிலை மாறிட அறிவுலக மகளிர் சிந்திக்க வேண்டும்"[26] என்பர்.

பெண்கள் குடும்பச் சூழலில் சிக்கித் தவிர்ப்பவர்களாகவும், ஆண்களுக்கு இணையாக நின்று வேலை செய்பவர்களாகவும், கணவன் தன் வற்புறுத்தலால் ஆண் வாரிசு கிடைக்கும் வரைத் தொடர்ந்து குழந்தையைப் பெறும் இயந்திரமாகவும் காணப்படுகிறாள். திருமணத்திற்குப்பின் கணவனை விட்டால் பெண்களுக்கு வேறு போக்கிடம் இல்லை என்ற நிலையில் தான் அன்று முதல் இன்று வரை சமுதாய நிகழ்வுகள் நிகழ்ந்து வருகின்றன. குடும்பத்தில் சரியான பாதுகாப்பு கணவனால் கிடைக்காத பெண்களுக்குத் திருமணம் பேராபத்தைத்தான் ஏற்படுத்துகின்றது. ஆணை உயர்த்திப் பேசும் போக்குத் தவறு எனக் கருதப்படாத வரையில் உளவியல் அடிப்படையில் வலிமை குன்றிய பெண்கள் தவறான போக்குடைய ஆண்களால் துயரப்பட வேண்டிய நிலைதான் நிலவும். இதில் கல்வி கற்ற பெண்கள், கற்காத பெண்கள் ஆகிய யாரும் தப்ப இயலாது.

பிறந்த வீட்டில் ஆண்களுக்குக் கொடுக்கப்படும் உரிமை பெண்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஆதலால் ஒரு குறுகிய வட்டத்திற்கு உட்பட்ட பட்டறிவே பெண்களுக்குக் கிடைக்கின்றது. அதற்கேற்ப அவர்களது மனப்பதிவும் அமைகின்றது.

பொது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்குரிய வாய்ப்போ ஆழமாகச் சிந்திப்பதற்குத் துணைபுரியக் கூடிய கல்வியோ பெண்கள் அடைய முடியாதவாறு மூட, சமய நம்பிக்கைகளும், சாதிப் பழக்க வழக்கங்களும் தடை செய்துவிட்டன. அண்மைக் காலத்தில் கல்வியறிவு பெறுவதற்குரிய வாய்ப்புகள் மிகுந்திருப்பினும் பெற்ற அறிவினை வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. கூடுதலாகப் பெறும் கல்வியும் அவர்களுக்குக் கூடுதலான சுமையைத்தான் தருகின்றது. ஒவ்வொரு கட்டத்திலும் பெண்கள் பெருஞ் சிக்கல்களையே நேர்கொள்கின்றனர். இவற்றையெல்லாம் சோலை சுந்தரபெருமாள் புதினங்கள் மனம் நெகிழும் வண்ணம் வெளிக் கொணர்கின்றன.

தனக்கு ஆண்குழந்தை வேண்டுமென்று அவளை பிள்ளை பெறும் இயந்திரம் போல் ஆக்குகிறான் கணவன். ஏற்கனவே ஐந்து பெண் குழந்தைகளுக்குத் தாயான அவனின் மனைவி சாவித்திரி கணவனின் கொடுமைக்கு ஆளாகிறாள். “பாவம் இந்த தடவயாச்சும் ஆம்பள புள்ளையாப் பொறக்கனும். இந்த தடவையும் பொண்ணாப் பொறந்துட்ட அந்த சின்னையா அந்த அம்மாவ உசுரோடவே வைக்கமாட்டாங்க”(27) என்று பேசிக் கொள்வதிலிருந்து, பெண்களின் அவலநிலையையானது காலங்காலமாகத் தொடர்ந்து வருவதைக் காணமுடிகிறது.

கீழ்ச்சாதிப் பெண்களின் நிலை

கீழ்சாதிப் பெண்களை மேல்சாதியினர் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்குகின்றனர். அவர்களும் தங்களின் இயலாமையினால் தங்களின் உடம்பு காயப்பட்டுப் போவதைத் தடுக்க முடியவில்லை. இக்கொடுமைகளைக் கண்டும் கேட்டுக் கொண்டும் கீழ்சாதி ஆண்கள் மனம் குமுறுவதோடு சரி, எதிர்த்து கேட்கமுடியாத நிலையில் இருக்கின்றனர்.

'தப்பாட்டத்தில்' முனியாண்டி சாம்பானின் தங்கச்சி மகள் வெள்ளைக்குத் திருமணம் ஆக மூன்றே நாட்கள் இருந்த நிலையில், காட்டிற்குச் சாப்பாடு கொண்டு போனவளைத் தங்கசாமி மூப்பனாரின் மகன் பாலியல் கொடுமை செய்து கொன்றுவிடுகிறான். இக்கொடுமையை முனியாண்டி நேரில் பார்த்தும் வெளியில் சொல்லமுடியவில்லை.

'பெருந்திணை' என்ற புதினத்தில் பறையரான ஆறுமுகம், வண்ணாத்தியான கிளியம்மாவை விரும்புகிறார். அவர்கள் பழகுவதை விரும்பாத குடியானவரான கார்வாரி ஆறுமுகத்தின் தாத்தா 'உத்தண்டியிடம்' பண்ணை மாட்டுக் கொட்டிலுக்குக் கூட வர விட முடியாம வச்சிருக்கிற வண்ணாத்தியைத் திருமணம் செய்து சாதிக்கலப்பு பண்ணிக்கொண்டால் எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும் என்கிறார். கார்வாரி சொன்னதை மனதிற்குள் நினைத்துக் கொண்ட உத்தண்டி. அவர்களைப் பாலியல் இச்சைக்கு உட்படுத்தும் போது மட்டும் எதையும் பார்ப்பதில்லையே என மனதிற்குள்ளே

குமுறுகிறார். "....ஏட்டியே வண்ணாத்தி! வீட்டுஅம்மா பெத்துக்கப் போயிருக்கா. அந்தியில கூலிப்படி போட்டதும் வாங்கிக்கிட்டு குளிச்சி முழுவி சனங்க அடங்கினதும் பண்ணைக்கட்டு பின்னாடி வக்கணையா வந்துட்டு போடீ... என்று அவளை வரச்சொல்லி அவளோட ஒடம்பையும் மனசையும் ரணப்படுத்தி அனுப்பி வைக்கும் போது மட்டும் தித்திப்பா இருக்கு..."(28) என்று உத்தண்டடியால் வாய்விட்டு கேட்க முடியாமல் தவிக்கிறார்.

கீழ்சாதிப் பெண்கள் தான் பெரும்பாலும் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாகின்றனர். உடலுறவில் மட்டும் சாதிகள் பார்ப்பதில்லை. சில நேரங்களில் பாலியல் கொடுமைக்கு இணங்காதப் பெண்களைக் கொன்றும் விடுகின்றனர். சில நேரங்களில் திருட்டுப் பட்டம் கட்டி பொய் தண்டனையைக் கொடுக்கின்றனர்.

தன் கணவன் தீயவழியில் சென்று பிற பெண்களிடம் தொடர்பு வைத்திருந்தாலும் அதையும் ஏற்றுக் கொண்டு ஊமைக் கண்ணகிகளாக வலம் வரக்கூடிய பெண்களையும் காணமுடிகிறது. இவரின் புதினங்களில் பெரும்பான்மையான ஆண்கள் பிற பெண்களிடம் தொடர்பு வைத்துள்ளனர்.

கணவனைப் பெண்கள் கண்கண்ட தெய்வமாகக் கருதினர். அவள் தனக்குத் தலைவனாகக் கொண்டவனைத் தெய்வமாகக் கொள்ளுதல் முறைமை. "கணவனையே தெய்வமாகக் கருதி நாள்தோறும் முதற்கண் வணங்கி அடங்கி அன்புடன் வாழ்க்கையை

நடாத்துதல் தமிழ் மகளிரின் தன் மாண்பாகும்"[29] என்கிறார் புலவர் செந்துறைமுத்து.

ஒரு ஆண் பல பெண்களை மணக்கும் பழக்கம் ஆணாதிக்கச் சமூகத்தில் இருக்கிறது. ஒரு பெண் தனது வாழ்வை நிலைநிறுத்திக் கொள்ள ஒரு குழந்தையாவது பெற்றுக் கொள்ளவேண்டும். ஆண்களில் மலட்டுத் தன்மையிருந்தாலும் பெண்களே அதற்குப் பொறுப்பாவார்கள். அதனால் அவன் வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முற்படுகிறான். ஒரு ஆண் பல பெண்களை மணமுடிப்பதும், பல பெண்களுடன் தொடர்பு கொள்வதும் பெருமைக்குரிய செயலாகக் கருதப்படுகிறது.

'நஞ்சை மனிதர்கள்' என்ற புதினத்தில் சோமுப்பிள்ளை தன் மனைவியிடம் ஈடுபாடு கொள்ளாமல், நாடகம் பார்க்கப் போன இடத்திலிருந்து லலிதா என்ற சாத்தனூரை அழைத்து வந்துவிடுகிறான். எதையும் எதிர்த்துக் கேட்காத நீலாயதாட்சி, தனக்குப் போட்டியாக இன்னொருத்தி வந்துவிட்டாளே என்ற நினைப்பே இல்லாமல், தன் கணவரிடத்தில் பயம் கலந்த மரியாதையுடன் இருப்பதையும் அறியமுடிகிறது.

இங்கு இருவேறு பெண்களின் தன்மையினைக் காணலாம்."சோமுப் புள்ளைக்கு முந்தானை விரிச்ச காலத்திலிருந்து தன்னோட புருஷன் மொகத்தத்தான் முழுசா பாத்திருக்குமோ இந்த நீலாயதாட்சி? புருஷன் பேச்ச எதிர்த்து ஒரு வார்த்த பேசத்தான் நெஞ்சில் ஈரம் ஏது? ஆனா சாத்தானூரு....

மேயப்போர மாடு கொம்புல புல்லக் கட்டுக்கிட்டுப் போறதில்லஙகிற சாதுர்யம் தெரிஞ்சது. எங்க எத எப்ப போட்டுக் காட்டணும் எத எத எங்க வைக்கினுங்கிற சூத்தரத்த பொறப்பிலேயே அத்துபடியாயி வந்ததாச்சே"[30] என்ற வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

கலப்பு மணம்

சாதிக்கலப்பு என்பது அநேக புதினங்களில் உள்ளது. பெரும்பாலும் கீழ்வர்க்கததைச் சேர்ந்தவர்களே கலப்புமணம் செய்து கொள்கின்றனர். செந்நெல் என்ற புதினத்தில் ரெங்கபாஷ்ய நாயுடுவின் தங்கை மகளான வேம்பு, தன் வீட்டில் வேலைக்காரனாக இருந்த சிங்காரம் என்பவனை விரும்பி, இருவரும் தங்களின் சமுதாயத்திற்கும் பயந்துகொண்டு ஊரைவிட்டே ஓடி விடுகின்றனர். ஆய்வுப் புதினங்களில் கலப்பு மணம் புரிந்தோர் கீழ்வருமாறு:

கணவனின் பெயர்	மனைவியின் பெயர்	இடம்பெற்ற நாவல்
ஆறுமுகம்(பறையன்)	கிளியம்மா(வண்ணான்)	பெருந்திணை
அப்புனு(மேல்சாதி)	செவத்தி(கீழ்சாதி)	உறங்க மறந்த கும்பகர்ணர்கள்
சிங்காரம்(கீழ்சாதி)	வேம்பு(நாயுடு)	செந்நெல்
தோழப்பன்(சக்கிலியர்)	வள்ளி(பறையன்)	தப்பாட்டம்
கண்ணுசாமி(பறையன்)	செல்வி(பள்ளன்)	செந்நெல்
குப்புசாமிபிள்ளை(பிள்ளை)	ராசாத்தியம்மா (வள்ளுவப் பண்டாரம்)	பெருந்திணை

இந்த கலப்பு மணத்தால் சாதிய பாகுபாட்டைத் தீர்க்கலாம். இம்மணத்தைச் சிலர் ஏற்றுக் கொண்டு அவர்களை எவ்வித பாகுபாடுமின்றி வழிநடத்துகிறார்கள்.

'உறங்க மறந்த கும்பகர்ணர்கள்' என்ற நாவலில் ஒடுக்கப்பட்ட பெண்ணான செவத்தி தன் மகனைத் திருமணம் செய்து கொண்டு வந்த பின்பும் சின்னச்சாமியை 'ஐயா' என்றும் தன்னை 'ஆச்சி' என்றும் அழைப்பதைத் தவிர்க்குமாறு அவளின் மாமியார் கூறுகிறார். அதனை மறுத்த செவத்தி, முன்பு இருந்த மாதிரியே கூப்பிடுகிறாள். "இந்தா பாரும்மா! இப்ப நீ எங்க வீட்டு மருமவ... முன்ன மாதிரி 'ஐயா ஆச்சின்னு' கூப்பிட வேண்டாம்....."(31)என்று மாமியாவான தங்கம் கூற, செவத்தி "ஆச்சி.... அத மட்டும் தடுத்துப் பேடாதீங்க என் ஆத்த... ஒங்க பண்ணையில என்னசேத்து விட்டப்ப நான் என்ன சொல்லிக் கூப்பிட்டேனோ.... அப்படியே தான் கூப்பிடுவேன்.... மாத்தச் சொல்லிபுடாதீங்க...."(32) என்பதிலிருந்து, மேல் சாதியினரோடு வாழ்ந்து வந்தாலும், தங்களுடைய பழக்க வழக்கங்களை மாற்ற முடியாத நிலையில் ஒடுக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதை அறியமுடிகிறது.

ஒரு தலைக் காதலால் ஏமாறும் பெண்கள்

காதலுக்கு எதிர்ப்பு இருந்த போதிலும் ஏதாவது ஒரு குடும்பத்தைச் சார்ந்த பெற்றோர் அவர்களை ஆதரித்து ஏற்றுக் கொண்டு வாழச் செய்கின்றனர். 'நஞ்சை மனிதர்கள்' என்ற

புதினத்தில் வெள்ளைச்சாமி அங்கம்மாவைத் தான் திருமணம் செய்வேன் என உறுதியாக இருந்து மணமுடிக்கிறான். ஒரே ஒரு ஊர்ல என்ற புதினத்தில் சண்முகம் பல எதிர்ப்புகளுக்கிடையே வள்ளியை மணக்க நினைக்கின்றான்.

இவ்வாறாகக் காதல் மணங்களுக்கிடையே ஒரு தலைக்காதலையும் காணமுடிகிறது. தொல்காப்பியர் காலத்திலிருந்தே இக்காதல் வழக்கத்திலுள்ளது. ‘கைக்கிளை’ என குறிப்பிட்ட இக்காதலை இவ்வாசிரியரின் ‘உறங்க மறந்த கும்பகர்ணர்கள்’ என்ற புதினத்தில் மருதாயி என்ற பாத்திரம் மூலம் அறியமுடிகிறது.

ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மருதாயி, தன்னை மணக்க வேண்டுமென்று நினைக்கும் தாய்மாமனை வெறுத்துவிட்டு, மேல்சாதியினைச் சேர்ந்தவரும், பள்ளிக்கூட ஆசிரியருமான ராஜாமணியை விரும்புகிறாள். அவ்வாறாக நினைப்பதை அவரிடம் ஒருபோதும் சொல்லவில்லை. அவர் நடந்து கொள்ளும் நடத்தைகளை வைத்துத் தானே கற்பனைக் கோட்டை கட்டி வைத்திருக்கிறாள். ஆனால் ஒருமுறை அவரின் வீட்டிற்குச் செல்லும் போது, அவருக்கு ஏற்கனவே திருமணமாகி இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை என்பதை அறிந்து ஏமாற்றமடைகிறாள்.

இன்றைய சமுதாய சூழலில் ஏராளமான பெண்கள் இந்த கதையில் வரும் ‘மருதாயி’ போன்று ஏமாற்றததை அடைந்தவர்கள் என்பதை அறிய முடிகிறது.

திருமணத்திற்கு முன்பே உடலுறவு கொள்ளும் பெண்களால் ஏற்படும் சமுதாயச் சீர்கேடுகளை (சீரழிவு) இவரின் புதினங்களில் காணமுடிகிறது. “கல்வி நிறுவனங்களில் பயலும் பழக்கம் ஏற்பட்ட அளவுக்கு நூல்களையும், ஏடுகளையும் வாசிக்கும் பழக்கம் பெண்களிடையே பெருகி உள்ளதா? நகை, துணிமணி, புதிய புதிய பாத்திர பண்டங்கள் ஆகியவற்றின் மேல் பெண்களுக்குள்ள மோகம் குறைந்திருக்கிறதா? ஆண்களை ஈர்க்க உடை அணிவதிலும் பெண்களை ஈர்க்க நகை அணிவதிலும் நம் பெண்களுக்கு உள்ள தாகம் தணிந்திருக்கிறதா? தொலைக்காட்சி மிதப்பிலேயே காலத்தை அழிப்பது தொடரவில்லையா? ஆண் குழந்தையையும் பெண் குழந்தையையும் சின்ன வயதிலேயே பால் வேறுபாடு காட்டி, நீ பெண் பிள்ளை தானே என்று ஒதுக்க, குறுக்கி வளர்க்கும் பழக்கம் தாய்மார்களிடையே மாறி இருக்கிறதா? பிறர் ஒருத்தியின் கணவரை நேசிப்பது, அவர்கள் வாழ்க்கையைக் கெடுப்பது, உடலமைப்பில் தனக்குள்ள வாய்ப்பைப் பயன்படுத்திப் பரத்தையாகச் செயல்படுவது, கருத்தடையைச் சாதகமாகக் கொண்டு நெறிகெட்டு வாழுவது, மேற்புறத்தையும், பின்புறத்தையும் துருத்திக் காட்டுவதான உடையை வேண்டுமென்றே அணிவது முதலாய வேண்டாப் பழக்கங்கள் பெண்களைத் தீண்டி மண்டிக்

கிடக்கவில்லையா"[33] என்கிறார் தாயம்மாள் அறவாணன். இத்தகையப் பெண்களும் பாரம்பரிய கலாச்சாரத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது என்பதனைத் தம் புதினங்களின் வழி ஆசிரியர் காட்டுகிறார்.

'உறங்க மறந்த கும்பகர்ணர்கள்' என்ற புதினத்தில் 'செவத்தி' என்ற பத்திரத்தின் மூலமும், ஏற்கனவே திருமணமாகி மனைவி, மற்றும் குழந்தையுடன் இருப்பவனிடம் தவறான முறையில் பழகி அவனையே திருமணம் செய்து கொண்டதால் அக்குடும்பம் அழிவுக்குள்ளாகிறது என்பதை 'ஒரே ஒரு ஊர்ல' என்ற புதினத்தில் 'அஞ்சலை' என்ற பாத்திரம் மூலமும் அறியலாகிறது.

உறவுகள்

சமூகக் கட்டுக்கோப்பிற்குக் குடும்பம் என்னும் அலகு மிகவும் செம்மையாக அமைதல் வேண்டும். குடும்பத்தில் ஒருவர் பெறும் பயிற்சியும் பட்டறிவும் அவருடைய சமூகப் பார்வையை வடிவமைக்கக் கூடிய அடிப்படைகள் என்று கூறலாம். குடும்ப உறவுகளில் செழுமை கண்டவர் சமூக வாழ்வில் வெற்றியடையும் வாய்ப்பினை மிகுதியாகப் பெறுவர். குடும்ப வாழ்வுக் குலைவு ஒருவரை வழிதவறச் செய்துவிடும் என்பது உண்மை.

சோலை சுந்தரபெருமாள் தான் வாழ்ந்து அனுபவித்து வரும் சூழலை இயற்கையோடு கலந்து படைத்துள்ளார். அவரின் படைப்புகள் அனைத்தும் குடும்பப் பின்னணியில்

பிணைக்கப்பட்டுள்ளன. உறவுகள் மூலமே படைப்புகளுக்கு உயிர்களைக் கொடுக்க முடியும். அவரின் புதினங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர், பிள்ளைகள் அவர்களின் வாழ்க்கைச் சிக்கல், அவற்றிற்கான தீர்வுகள் ஆகியவற்றையும், இன்றைய பொருளாதாரச் சூழ்நிலை எவ்வாறு குடும்ப உறவுகளைச் சிதைத்துச் சீரழிவு செய்கினறன எனபதையும் காணமுடிகிறது. அதில்,

2.1 கணவன் - மனைவி உறவு

2.2 பெற்றோர் - பிள்ளைகள் உறவு

2.3 அண்ணன் -தம்பி உறவு

2.4 அக்கா - தம்பி உறவு

2.5 மாமியார் - மருமகள் உறவு

2.6 ஆண்டான் - அடிமை உறவு

ஆகிய உறவுகளைப் பற்றிய கருத்துக்களைக் காணலாம்.

கணவன் - மனைவி உறவு

ஆணும் பெண்ணும் பல்லோர் அறியத் திருமணம் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்துவது இல்லறமாகும். இதனைத் தொல்காப்பியர்,

"மறைவெளிப்படுதலும் தமரிற் பெறுதலும்
இவை முதலாகிய இயல்நெறி திரியாது"(34)

என்று கூறுகிறார். பிற்காலத்தில் அகப்பொருள் விளக்கத்தில் நாற்கவிராச நம்பி இல்வாழ்க்கை முறையினை,

"கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி
பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியெனக்
நீங்கு நால்வகைத் தில்வாழ்க்கையே"(35)

என விளக்குகிறார். அன்பை இல்வாழ்க்கையின் பண்பாகவும் அறத்தை அதன் பயனாகவும் கூறும் வள்ளுவரின் வாய்மொழி கொண்டும் இதனை உணரலாம். அன்பு வற்றிப் போகும் இடத்தில் மனித வாழ்வு வெறுமையாகின்றது. அது இருக்குமிடத்தில் துன்பமோ, வறுமையோ இருப்பதில்லை.

"ஒன்றன் கூறாடை உடுப்பவரேயாயினும்
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை"(36)

என்று கூறும் மகிழ்ச்சி உடையதாய் அன்பு நெறியில் வாழ்ந்த வாழ்க்கைப் புலப்படுகிறது.

கணவன் மனைவி உறவின் புனிதத் தன்மையைப் பெரும்பான்மையான புதினத்தில் காணமுடிகிறது. கணவன் தீய பழக்கமுடையவனாக இருந்தாலும் அவனை அனுசரித்துப் போகக் கூடிய மனைவியரையும், மனைவி இறந்த பின்பும் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி, அவர்களின் நலனுக்காகவே வாழக்கூடிய கணவன்மார்களையும் காணமுடிகிறது.

விவசாய வேலை செய்யும் ஆண்களுக்கு இணையாக பெண்கள் உதவிக்கரமாக உள்ளனர். 'ஒரே ஒரு ஊர்லே' என்ற புதினத்தில் பெரிய கூட்டுக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு வந்து,

அக்குடும்பத்தை அரவணைத்துச் செல்லும் செல்லம்மாளைப் பற்றி அவனின் மாமனார், தன் மகனிடம், "..... சிங்காரம்! உன் பொண்டாட்டி குணம் தங்கம் தாண்டா... நான் ரொம்ப பெருமைப்படுகிறேன். யாரு மனசும் கோணாம பெரிய குடும்பத்த அரவணச்சுக் கொண்டு போறதே பெரிசு. இது போலவே நம்ம குடும்பம் இருந்து துடணும்பா..."(37) என்று முன்பு கூறியதை நினைவு கூர்ந்து பார்க்கும் சிங்காரம், தன் மனைவிக்காக மனத்திற்குள் புழுங்குகிறார். "..... பெரிய குடும்பந்தான். இத்தனை பேருக்கும் இவ ஒருத்தியே எப்படி நல்லது கெட்டது செய்வா? தங்கச்சி அஞ்சல கொஞ்சம் கூட பொறுப்பு இல்லாம நாட்டாம பண்ணிக்கிட்டு சாப்பிடுது. அவளும் பொம்பள தானே.... அவ மனசு எப்படி ஏத்துக்கும்?"(38) என மனைவியின் பக்கம் இருக்கக்கூடிய நியாயத்தையும் நினைத்துப் பார்த்து, அவளின் மனம் நோகாதவாறு நடந்து கொள்ள வேண்டும். அதே நேரம் பெற்றோர், சகோதரியையும் வெறுக்காமல் அவர்களின் தன்மைக்கேற்பவும் நடந்து கொள்ள வேண்டுமென இருதலைக் கொள்ளி எறும்பாய் தவிக்கிறான். இதில் கணவனுக்குப் பெருமை தேடித்தரும் மனைவியையும், மனைவிக்காக மனக்குழப்பம் அடையும் கணவனையும் காணமுடிகிறது.

இப்புதினத்தில் சிங்காரத்தின் தங்கை அஞ்சலை, வீரபத்தீரன் என்பவனிடம் தவறாகப் பழகியதால் ஊர் கூட்டத்தில் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். ஆனால் வீரபத்திரன் ஏற்கனவே

தன் அக்கா மகளான 'கங்கை'யை மணந்து, ஒரு பெண் குழந்தைக்குத் தந்தை. இதையறிந்த கங்கை தற்கொலை செய்துவிடுகிறாள். மனைவியின் இறப்பிற்குக் காரணமாக இந்த கணவன் போல, 'நஞ்சை மனிதர்கள்' என்ற புதினத்திலும், எல்லா வகையான கெட்டபழக்கங்களும் கொண்ட குப்புசாமி பிள்ளை நிறைமாத கர்ப்பிணியான தன் மனைவியை அடித்துத் தள்ளிவிட அவள் இறந்துவிடுகிறாள். பொறுப்பில்லாத கணவனால் அக்குடும்பம் தத்தளிக்கிறது.

சாவித்திரியுடைய கணவனின் செய்கைக் கண்ட அம்மாக்கண்ணு என்பவள். "..... இத்தனப் பொம்பளப் புள்ளைங்க வச்சி எப்படி கரையேத்தி விடுறதுன்னு றெனைச்சிக் கூடப் பாக்காம. இப்படி குடியும் வப்பாட்டியுமா நிக்கிறதோட இல்லாம கட்சி கட்சின்னும் காச அழிச்சிக்கிட்டு இருக்காரே...."(39) என்று கூறுகிறார். இவ்வாறான முரண்பாடான கணவன் மனைவிகளையும் காணமுடிகிறது.

'பெருந்திணை' என்ற புதினத்தில் ஆறுமுகம்-கிளியம்மா இவர்கள் கலப்பு மணத்தால் இணைந்தவர்கள். ஆறாவது குழந்தை பிறந்த சில நாட்களிலேயே மனைவி இறந்துவிட, ஆறுமுகம் ஆறுபிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்குவதற்குள் பெரும்பாடுபட்டு விடுகிறார். அத்தனை இடர்பாடுகளையும் தகர்த்தெரிந்து விட்டு, பெண்பிள்ளைகள் அனைவரையும் திருமணம் செய்து

கொடுத்துவிட்டு, தன் மனைவியின் ஆசைப்படி மகனைப் படிக்க வைத்துப் பணிக்கு அனுப்புகிறார்.

'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்ற வரிக்கேற்ப, அவனுக்குப் பணி வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கிறான். இறந்த தன் மனைவியின் ஆசைகளை நிறைவேற்றிய பொறுப்பான குடும்பத் தலைவனைக் காணமுடிகிறது.

இதே போன்று 'நஞ்சை மனிதர்கள்' என்ற புதினத்தில் வெள்ளைச்சாமி, தன் மனைவி அங்காளம்மா இறந்தவுடன், உறவினர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் மறுமணம் செய்யாமல் தன் ஒரே மகனை வளர்த்து ஆளாக்க வேண்டுமென நினைக்கிறார். செல்வக்குடியில் பிறந்த வெள்ளைச்சாமியின் மகன் குப்புசாமி செல்லமாக வளர்க்கப்பட்டதால் தீய பழக்கமுடையவனாகத் திகழ்கின்றான்.

'பெருந்திணை' புதினத்தில் சிவசங்கரன் பிள்ளை பெரிய நிலவுடைமையாளர். ஆனால் பெரும் வறட்சி ஏற்பட்டுவிட்டதால் எங்கும் பூமியில் நீர் இல்லாமற் போய்விடவே, விளைச்சலில் பெரும் இழப்பு ஏற்பட்டு விட்டது. இதனால் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். செலவுக்குப் பணம் இல்லாமல் தவிக்கும் போது அவரின் மனைவி, அடகு வைப்பதற்குத் தன் தாலிச்சரடையும் கழற்றித் தர முன் வருகிறாள். "என்னங்க! ஏன் இப்படி சாரம் புகுச்சி

இருக்கீங்க. என்னோட தாலிச்சரட்டைக் கழட்டித்தாறேன். மஞ்சள் கயித்தைப் போட்டுக்கிட்டா எந்த குறையும் எனக்கு வந்துடாது. அடவு வச்சிட்டு வெள்ளாமை வேலையைப் பாருங்க. இந்த வருசம் அங்காளம்மை முகம் பாத்துட்டா மீட்டுக்கிறது.....”(40) என்பதிலிருந்து ஓர் இல்லத் தலைவியின் கடமையுணர்வினை உணர்ந்து கொள்ள முடிகிறது.

பெற்றோர் - குழந்தைகளின் உறவு

பெற்றோர் தங்களது பிளளைகள் மீது மிகுந்த பாசமும் அக்கறையும் கொண்டுள்ளனர். தங்களின் பிள்ளைகளின் அரவணைப்பிலேயே இறுதிவரை வாழவேண்டுமென நினைக்கின்றனர். பெண்பிள்ளைகளை வசதியான இடத்தில் மணம் செய்து கொடுக்க வேண்டுமென மேல்வர்க்கப் பெற்றோர் நினைப்பதும், கீழ்வர்க்கத்தின் திருமணம் நடந்தால் போதும் என்று நினைப்பதும் சமுதாயத்தில் நிலவுகின்றன. ஆண்பிள்ளைகளைப் படிக்க வைத்துச் சமுதாயத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், தன் மகனுக்கு மகள் வழிப் பேத்தியைத் தான் திருமணம் செய்து வைக்க வேண்டுமென நினைப்பதும், பிள்ளைகள் தவறு செய்தாலும் அதனை மறந்துவிடும் சமுதாய சிந்தனைகளை இவரின் புதினங்கள் காட்டுகின்றன.

தன் மகள் வழிப் பேத்தியையே தன் மகனுக்குத் திருமணம் செய்து வைத்தால், சொந்தம் விட்டுப் போகாது எனக் கருதுகிறார்கள். இவ்வாறான முறையில் திருமணம் முடிந்த தம்பதிகள்:

மாமன் - கணவன்	மருமகள் - மனைவி	இடம்பெற்ற நாவல்
1. வெள்ளைச்சாமி	அங்கம்மா	நஞ்சை மனிதர்கள்
2. வீரபத்திரன்	கங்கை	ஒரே ஒரு ஊர்ல

இவர்களில் அங்காளம்மா ஒரு பையன் பிறந்தவுடனும், கங்கை ஒரு பெண்பிள்ளை பிறந்தவுடனும் சிறுவயதிலேயே குடும்பச் சூழலின் காரணமாக இறந்துவிடுகின்றனர்.

வ.எண்	மாமன் முறை	மருமகள் முறை	இடம்பெற்ற நாவல்
1.	சாமியப்பன்	மருதாயி	உறங்க மறந்த கும்பகர்ணர்கள்
2.	சாமிக்கண்ணு	நீலா	பெருந்திணை
3.	வடிவேலு	ராசாத்தி	ஒரே ஒரு ஊர்ல
4.	நந்தா	குட்டா	மரக்கால்

இவர்கள் மாமன்-மருமகள் உறவு முறை உள்ளவர்கள். இவர்களைத் திருமணத்தில் இணைக்க வேண்டுமென்று பெற்றோர் நினைக்கின்றனர். ஆனால் ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு ஆணும் வேறு விதத்தில் தங்களின் மனத்தைச் செலுத்துகின்றனர். ராசாத்தி மட்டும் ஒத்த கருத்துடையவர்களாக மணம் முடிக்கும் நிலையில் உள்ளனர்.

ஐந்து தலைமுறைகளை எடுத்துச் சொல்லும் புதினமான 'நஞ்சை மனிதர்'களில், குப்புசாமி பிறந்த சில நாட்களிலேயே அவனின் தாய் இறந்துவிட, அவனின் தந்தையான வெள்ளைச்சாமியை மறுமணம் செய்யச் சொல்லி சொந்தபந்தங்களெல்லாம் பெண் கொடுக்க முன் வரும் போது, அவர் ஒரேயடியாக மறுத்துவிட்டு, தன் மகனுக்காகவே இனி வாழப் போவதாகக் கூறுவது, குழந்தையின் மீது கொண்ட அக்கறையைக் காட்டுகிறது."....இன்னுமே குப்புசாமிய கைபத்தா வளத்து ஆளாக்கி விட்டாப் போதும்...."(41)தன் மகனுக்காகவே வாழ்ந்த தந்தையை காணமுடிகிறது.

தனக்கு ஆண் குழந்தை இல்லாததற்குத் தானே காரணம் என்பதை அறியாது, மனைவியை அடித்துத் துன்புறுத்துகிறான். இந்த கொடுமைகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் அவனின் மகள் காயத்திரி, குடும்பத்தையே சீரழிக்கும் தந்தையையும், அவனின் போக்கை மாற்ற முடியாத தாயின் இயலாமையையும் தன் பேச்சில் காட்டுகிறான். "....அவரு தேடின சொத்தில்லே. என்னோட தாத்தா தேடின சொத்து நான் கேக்காம யாரு கேக்க முடியும்? அவரோட நீயும் வேணும்ன்னா போ. உன்னோட சக்களத்திக்குத் துணி தொவச்சிப் பேட்டுக்கிட்டுறேன்...."(42) என்று கூறி, தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றாள்.

தன் தாய் இறந்தவுடன், தன் பெயருடன் தந்தை பெயரைச் சேர்க்க விரும்பாமல், தாயின் பெயரைச் சேர்ப்பதற்கான அரசு ஆணையைப் பெறுகிறாள். "....உங்கள் விண்ணப்பம்

பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நீங்கள் விரும்பிய பெயரை இனி சட்ட ரீதியாக அனைத்து ஆவணங்களலும் நடைமுறைப்படுத்த ஆணை வழங்கலாகிறது. குப்புசாமி காயத்திரிங்கிற பெயரை மாற்றி சாவித்திரி காயத்திரிங்கிற பெயர் அங்கிகரிக்கப்பட்டு 18.1.71 நாளிட்ட அரசிதழில் வெளிவந்துள்ளது"[43] என்று வந்துள்ள தகவலையறிந்து குப்புசாமி நிலை தடுமாறுகிறான். அவனுக்குச் சரியன தண்டனை கொடுத்து விட்டதாக காயத்திரி நினைக்கிறாள். தாய் செய்ய முடியாததை மகள் அந்த உறவே வேண்டாமென நினைக்கும் முற்போக்குச் சிந்தனையை இப்புதினம் சுட்டுகிறது.

செல்வங்களில் சிறந்தது குழந்தைச் செல்வம். அக்குழந்தையைப் பேணிக் காப்பது பெற்றோரின் கடமையாகும்.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் "[44]

என்ற குறளுக்கேற்ப 'பெருந்திணை'யில் ஆறுமுகம் தன் மகளைப் படிக்க வைத்து இந்த சமுதாயமே போற்றும் அளவிற்கு உயர்த்த நினைக்கிறார். "....இந்தப் பெருமை உங்களை மட்டுமில்ல, ஒடுக்கப்பட்டுக் கிடக்கிற சமூகத்திற்கே கிடைச்சாப்போல, இது போலவே ஒடுக்கப்பட்டு கிடக்கிறவங்கள்ல ஒவ்வொருத்தரும் முழிச்சிக் கிட்டாப் போதும். இவங்க மூலமா மொத்த சனங்களும் ஒடுக்கு முறையிலிருந்து விடுபட முடியும். இந்த ஊர்ல அந்தப் பெருமை உங்க மூலியமா உங்களோட தலைக்கட்டுல இருந்து

ஆரம்பமாயிருக்கு. அதுக்காவ நான் ரொம்ப பெருமை அடையிறேன்....”[45] என்பதன் மூலம் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்க நினைக்கும் தந்தையின் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

உயர்ந்த நிலைக்கு வந்தவுடன், அதிகாரியின் மகளைத் திருமணம் கொண்ட அவரின் மகன் தந்தையையும், உடன் பிறந்தவர்களையும் அவமரியாதை செய்கிறான். “...இந்தாப் பாரு உன்னோட பழைய கந்தராயத்தை பேசிக்கிட்டு ஒன்னோட பொண்ணுங்களையும் பேரப் புள்ளைங்களையும் அழைச்சிக்கிட்டு எதுக்கும் என் கிட்டக்க வற்து நிக்காதே. நீ மட்டும் நாங்க வேணும்னா வா உன்னோட வயிறு காயாம இருக்கணும்ன்னா என் பொண்டாட்டி புள்ளைங்களை நத்திக்கிட்டு இருந்தீன்னா, நல்லது பொல்லாதது பெத்துக்கலாம். இல்ல வெளியே நிப்பாட்டிப் புடுவேன்....”[46] என்று மகன் பேசியது ஆறுமுகத்திற்கு முகத்தில் நெருப்ப கொட்டியது போது இருந்தது. இனிமேல் அவனின் முகத்தில் முழிக்கவே கூடாதென நினைத்து கடைசி வரை பண்ணை அடிமையாகவே வாழ்ந்துவந்தார்.

சமுதாயத்தில் நல்ல வளர்ந்த நிலை அடைந்து, பொருளாதார மேம்பாட்டால் தன் சமூகத்தையும், குடும்பத்தையும் மறந்து பகட்டு வாழ்க்கையை மட்டும் அனுபவிக்க நினைக்கும் இளைய சமூகத்தின் வாழ்க்கை நிலையை அறியமுடிகிறது.

இதே புதினத்தில், சிவசங்கரன் பிள்ளை வறட்சியின் காரணமாக, ஆழ்குழாய் கிணறு போடுவதற்காக வங்கியில் கடன் கேட்கிறார். வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களின் கையெழுத்து கேட்க தன் மகனிடம் பிணை கையெழுத்து கேட்கிறார். ஆனால் அவன் தன் மனைவி, மாமனாருக்குப் பயந்து கொண்டு கையெழுத்துப் போட மறுத்துவிடுகிறான்.

இவ்வாறாகக் குடும்பங்களில் பெற்றோர்களை மதிக்கும் பிள்ளைகளையும், அவமரியாதை செய்யக் கூடிய பிள்ளைகளையும் காணமுடிகிறது. இவர்களின் உறவு சிறுவயதில் ஒரு விதமாகவும், திருமண ஆன பிறகு வேறு விதமாகவும் அமைந்துவிடுகிறது.

2.3 அண்ணன் - தம்பி உறவு

ஐந்து வயதில் அண்ணன் தம்பி, பத்து வயதில் பங்காளி என்பார்கள். இன்றைய சமுதாயத்தில் அது பெரிய அளவில் உருவாகிறது. ‘பங்காளி சண்டை’ என்றே வழக்கத்திலுள்ளது.

‘நஞ்சை மனிதர்கள்’ என்ற புதினத்தில் காத்தையாபிள்ளையின் மகன்களான கோவிந்தசாமி பிள்ளையும், சோமுப்பிள்ளையும் எலியும் பூனையும் மாதிரி பகைமை கொண்டு வாழ்கின்றனர். அதில் கோவிந்தசாமிக்கு ஐந்தும் பெண்பிள்ளைகள். தன் மகள் வயிற்றுப் பேத்தியான அங்கம்மாவை, தம்பியின் மகனான வெள்ளைச் சாமிக்கு மணம் முடித்துக் கொடுக்கலாமென நினைக்கிறார். ஆனால் சோமு அதைத் தடுக்க நினைத்து, தன் மகனிடம் அண்ணன் செய்த

தீங்குகளைக் கூறுகிறார். "ஏண்டா தம்பி உன்னோட புத்தி ஏண்டா இப்படி மழுங்கிப்போயிட்டு. அந்த பங்காளி மனுசன் ஒன்னை மருந்து போட்டு மயக்கிபுட்டாரா? ஒப்பார அந்த மனுசன் என்னா பாடு படுத்தி வச்சிருக்காருன்னு எனக்கில்லத் தெரியும். கூடப் பொறந்த உன்னோட அப்பாரே அண்ணன்காரர் சங்காத்தியமே வேண்டாம்ன்னு ஒதுக்கி வச்சி இருவத்தி அஞ்சி வருஷமாச்சி. இப்ப என்னாடா நீ போய் புது உறவு கொணடாடப போறே? ஓம் பாட்டியா சேத்து வச்சிருந்த ஒரு வீசை தேறும். அதோட ஒரு அறை நெறையா இருந்த செம்பும் பித்தளையும் பீரோ கொள்ளாம இருக்க வெள்ளி சாமான்களையும் தானே ஒப்படைச்சிகிட்டார். அப்படி செஞ்சிக்கிட்ட தோடயில்லாம கொண்டான் கொடுத்தான் எல்லாத்தியும் கூட்டி வச்சி அவமானப்படுத்திவிட்ட அந்த மனுசனோட பேத்தியக் கட்டுக்குவேன்று நிக்கிறீயே....."[(47)]என்று கூறி அழுது ஒப்பாரி வைத்தாவது மகனின் மனத்தை மாற்ற நினைக்கிறார்.

இதையெல்லாம் மீறி திருமணமும் நடந்து முடிந்தவுடன், அண்ணன் மீது உள்ள வெறுப்பை அங்கம்மாவிடம் காட்ட அவள் எதையும் வெளியில் சொல்ல முடியாமல் மனதிற்குள்ளேயே புதைத்து வைத்து, நெஞ்சுவலி வந்து இறந்துவிடுகிறாள். அண்ணன்-தம்பி பகையால் அக்குடும்பமே சீர்கெடுகிறது.

சொந்தம், உறவு இவற்றையெல்லாம்விட மேலானது பணமும், சொத்தும் என்பதை வலியுறுத்தும் மற்றொரு புதினம் 'உறங்க மறந்த கும்பகர்ணர்கள்'. அதில் சிவராமன் என்பவன், மூளை வளர்ச்சி குன்றிய தன் தம்பியின் மருத்துவச் செலவிற்காகப் பெற்றோர் நிலத்தை விற்பதைத் தடுத்து விட்டு, தன் பங்கைப் பிரித்துக் கேட்கிறான். தம்பியையும், தாயையும் அடித்துத் துன்புறுத்துகிறான்.

அக்கா - தம்பி உறவு

அக்கா மளைத் திருமணம் செய்து கொள்வது போல, அத்தை மகளையும் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் இருக்கிறது. அவர்கள் பெண் எடுத்துக் கொள்வதும் கொடுத்துக் கொள்வதும் அவர்களின் உறவுக்குள்ளேயே நடக்கிறது. அப்பனும், மகனும் அக்கா தங்கச்சியைக் கட்டிக் கொண்டவர்கள் என நையாண்டியாகப் பேசுவதும் காணப்படுகிறது.

அக்கா - தம்பி உறவில் சில புதினங்களில் தம்பி தீய பழக்கமுடையவனாக இருந்து, திருமணம் செய்து கொள்ள வேண்டிய நேரத்தில் எப்படியாவது அக்கா தன் மகளைத் தந்துவிடுவாள் என நினைத்துப் பெண் கேட்பதும், அக்காவும் தட்டமுடியாமல் தன் கணவனிடம் பக்குவமாகப் பேசி சம்மதம் வாங்குவதும் பிறகு திருமணம் முடிவதுமாக உள்ளது.

'ஒரே ஒரு ஊர்ல' என்ற புதினத்தில் பல பெண்களிடம் தொடர்பு வைத்திருந்த வீரபத்திரன், தன் அக்காவிடம் வந்து பெண்

கேட்கும் போது, “அக்கா! அக்கா! ஒன்னவிட்டா எனக்கு வேற யாருக்கா பொண்ணு கெடுப்பா? இல்லேன்னு நீயே சொல்லக்கா!”(48) என்று கூறி காலில் விழுந்து கேட்க, தம்பிக்காக மனமிறங்கும் அக்காவின் மனத்தை அறியமுடிகிறது.

‘உறங்க மறந்த கும்பகர்ணர்கள்’ என்ற புதினத்தில் பொண்ணுக் கண்ணுவின் தம்பி சாமியப்பன், ஊரில் காளியப்பன் மகள் முனியம்மாவிடம் தகாத முறையில் நடந்ததற்காக ஊர்சபையில் அவனுடன் பொண்ணுக்கண்ணுவின் கணவன் அய்யாவும் கைகட்டித் தலைகுனிந்து நிற்க வேண்டிய சூழல் வருகிறது. இதனால் அய்யாவு சாமியப்பனை வெறுக்கிறார்.

இந்த சூழ்நிலையில் அய்யாவு தன் மகளுக்குச் சடங்கு வைக்க ஏற்பாடு செய்கிறார். மாமனான தன் தம்பியை விட்டுக் கொடுக்காமல் அவனின் சீர்வரிசைகளை ஏற்றுக் கொள்ளுமாறு தன் கணவனிடம் வற்புறுத்துகிறாள். “.... நல்லதோ கெட்டதோ.... நான் அநாதையாப் பொறந்துடல... என்னோட உடன் பொறந்த பொறப்பு ஒண்ணு இருக்கு.... என் பொண்ணுக்கு மாமன் வரிசை இல்லாம நான் ஏத்துக்க மாட்டேன். நீ என்னாதான் மனசுல நெனச்சுகிட்டு இருக்கே?”(49) என்று கூறி தன் தம்பியின் உறவுமுறைக்காகப் போராடி அவனைத் தன் வீட்டிற்கு முறையோடு வரவைக்கிறாள். இதிலும் சாமியப்பன் மருமகளான மருதாயியை மணக்க நினைக்கிறான்.

சாமியப்பன், முதலில் இருந்த தவறான மனநிலையிலிருந்து மாறிவிட்டான். உத்யோகமும் வசதியும் அவனை நல்வழிப்படுத்தியது. அய்யாவு கூட தன் பிடிவாதத்திலிருந்து தளர்ந்துவிட்டார். சாமியப்பனும், மருதாயி ஆசிரியரை விரும்புகிறாள் எனத் தெரிந்து அவளிடமிருந்து விலக நினைக்கிறாள்.

தன் அக்காவிடம் தாய் மாமன் என்ற முறையோடு வருவதாகக் கூறி, தான் செய்ய வேண்டிய கடமைகளாகத் துணிமணிகளைக் கொண்டுவந்து கொடுக்கிறான். "அக்கா! அத்தான் அவமானப்படுத்திட்டு தான் நான் ஓடிப் போனேன். கெட்டுப்போன எனக்கு நல்ல வேல கெடச்சுது. கை நிறையச் சம்பாதிக்கிறேன்... ஒனக்கு நான் எவ்வளவு செய்தாலும் தகும்....."(50) எனக் கூறும் சாமியப்பன் தன் அக்காவின் மீது கொண்ட பாச உறவைக் காணமுடிகிறது.

மாமியார் - மருமகள் உறவு

இவர்கள் இயற்கைப் பகைவர்கள். மாமியார் மெச்சிய மருமகள் இல்லை எனபது வழக்கு. மாமியார் மருமகள் உறவு என்றாலே சண்டை என்று தான் கூறுவர். அவர்களின் உறவு ஒவ்வொரு குடும்பங்களிலும் வேறுபடுகிறது.

'உறங்க மறந்த கும்பகர்ணர்கள்' என்ற புதினத்தில் 'ஜெயந்தி' தன் புகுந்த வீட்டில் தன் கணவன் சம்பாதித்துப் போடுவதை எதிர்க்கிறாள். கணவனைத் தூண்டிவிட்டு மாமன் மாமியாரைத் திட்ட வைக்கிறாள்.

கொழுந்தனின் சிகிச்சையைப் பற்றி விமர்சனம் செய்கிறாள். "பைத்தியம் புடிச்ச புள்ளய பெத்து வச்சுக்கிட்டு வைத்தியம் பண்ணுவாங்களாம் வைத்தியம். உக்காரக் கூட நேரமில்லாம எவ புருஷனாவது உழைச்சுக் கொண்டு வந்து கொட்டுனா.... எல்லாம் பண்ணலாம். புள்ளக்கு வைத்தியம் பண்ற சாக்குல டவுன்ல தங்கி கும்மாளம் போடலாம்...."[51] என்று பெரியவர்கள் என்றும் பராமல் மரியாதை குறைவாகப் பேசக்கூடிய மருமகளைக் காணமுடிகிறது.

இளையவனான அப்புனுவிற்குத் திருமணம் முடித்து வந்த செவத்தி, ஜெயந்தி போல் இல்லாமல் மரியாதையுடன் நடந்துகொள்கிறாள். சின்னசாமி தன் இருமருமகள்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். ".....காப்பியிருக்கு..... 'டம்ளரை ணங்' கென்று வைத்து விட்டுப் போகும் ஜெயந்தியையும் செவத்தியையும் ஒப்பிடும் போது செவத்தி கொஞ்சம் உயரத்தில் தானிருந்தாள்....."[52] இவ்வாறு ஒரு குடும்பத்திற்கு வந்த பெண்களே வெவ்வேறு விதமாக நடந்து கெள்கின்றனர். எல்லா செயல்களுக்கும் மருமகளே காரணமாகின்றனர். இவர்கள் நல்ல குணமுடையவர்களாக இருந்தால், அக்குடும்பமே முன்னேற்றப் பாதையில் செல்லும் என்பதை அறியமுடிகிறது.

கலப்புமணத்தால் இணைந்து கணவன் வீட்டில் வாழும் மருமகள், அவர்களை அரவணைத்துக் கொண்டு எல்லோருடைய மனமும் மகிழும்படி நடந்து கொள்கிறாள்.

‘தப்பாட்டம்’ என்ற புதினத்தில் பறையரான வள்ளி, சக்கிலியரான தோழப்பனை மணந்து கொண்டு கணவனின் வீட்டிற்கு வரும் போது அவளின் மாமியார் ஏற்றுக் கொள்கிறாள். “....பறைசாதிப் பொண்ணா இருந்தாலும் நம்ம புள்ளையோட கலந்துட்டு. அங்கபாரமா தாலியக்கட்டிக்கிட்டு சுமங்கலிப் பொண்ணா வீட்டுக்குள்ள வந்ததை விட்டுட முடியாது.... ன்னு நம்ம சாதிசனங்க ஒத்துமையா சொன்னதும் சரிதான்னு நானும் முடிவுக்கு வந்துட்டேன்.....”(53) என்று ஊரிலிருந்து வந்திருக்கும் தன் ஒன்றுவிட்ட தம்பியிடம் கூறுகிறாள். வள்ளியும் மாமியார் மெச்சும் மருமகளாக நடந்து கொள்கிறாள்.

ஆண்டான் - அடிமை முறை

நிலவுரிமையாளர்களுக்கு அடிமைகளாகக் கீழ்சாதியினர் வாழ்கின்றனர். எல்லா வேலைகளையும் செய்யும் பண்ணையாட்கள் மேல்சாதியினரின் வீட்டிற்குள் செல்ல அனுமதியில்லை. ஒரு சில மேல் சாதியினரும் கூலி வேலை செய்பவர்களாக இருப்பார்கள். அவர்கள் மட்டும் வீட்டிற்குள் செல்லலாம். ஒவ்வொரு மேல்சாதியினருக்கும் ஒவ்வொரு கீழ்சாதியினர் பண்ணை அடிமைகளாக உள்ளனர். சிறுவயதிலே, அதாவது ஏழு அல்லது எட்டு வயதிலிருந்தே பண்ணை வீட்டில் அடிமையாக மாடு கன்றுகளை மேய்க்க, வெளி வேலைகள் அனைத்தையும் செய்ய தலைமுறையாக ஒரே வீட்டில் இருப்பதைக் காணமுடிகிறது.

அவ்வாறாக இருக்கும் அவர்கள செய்யும் தவறுகளை மறைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. வெளியில் சொன்னால் பெரிய தண்டனை கிடைப்பதோடு, வீட்டிற்குத் தேவையான மானியமும் கிடைக்காது போய்விடும். எனவே மனதிற்குள்ளேயே புழுங்கும் அடிமைகளைக் காணமுடிகிறது.

'உறங்க மறந்த குமபகர்ணர்கள்' என்ற புதினத்தில் பண்ணை அடிமையான அய்யாவுவின் மகளின் சடங்கிற்குப் போய்வருகிறார் சின்னச்சாமி. இதனால் அவரின் மூத்த மகன் கோபம் கொள்கிறார். "....சம்பந்திகளும் கொஞ்சம் முன்னே பின்னே யோசித்து தான் நடந்திருக்கணும்... பண்ணக்காரன் வீட்டுத் தேவைக்குப் போக வேண்டாம்னு சொன்ன பிறகு நீங்களும் போனோம் வந்தோம்னு 'நாசுக்கா' நடந்திருக்கலாம்.... நீங்க என்னடான்னா..... தங்கச்சி, புள்ளயோட போயி பந்தியிலே ஒக்காந்து சம்பிரதாயமா இருந்து வந்திருக்கீங்க...."(54) என்று ஜெயந்தியின் தந்தை தன் சம்மந்தியிடம் கூறுவதிலிருந்து மேல் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் கீழ்சாதியினருடன் பழகுவதை மேல்சாதி சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை என அறியமுடிகிறது.

'பெருந்திணை' என்ற புதினத்தில் சிவசங்கரன் பிள்ளையிடம் பண்ணை அடிமையாக இருக்கும் ஆறுமுகம், அவர்களின் நம்பிக்கைக்கு உரியவனாகவும் நன்றியுடையவனாகவும் காணப்படுகிறான். "ஆறுமுகம்! நீ தான் பொறுப்பா நின்னு ஊருக்குள்ள சேதியைச் சொல்ல வேண்டியவங்களுக்கு சொல்லிட்டு

அங்க வரணும்....?"[55] என்று கூறுவதிலிருந்து ஒரு வேலையைப் பொறுப்பாகச் செய்யக்கூடிய அளவிற்கு முதலாளியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குகிறார். பள்ளுப்பாடல்கள் ஆண்டான் அடிமை என்பதற்குச் சான்றாக உள்ளது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

'செந்நெல்' புதினத்தில் குடியானவர்களுக்கும், கீழ்சாதியனருக்குமிடையே கூலி உயர்வு போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது கூட 'பெரியான்' தான் பண்ணை அடிமையாக வேலை செய்யும் நிலத்திற்குத் தினந்தோறும் சென்று வருவதிலிருந்து அவரின் நன்றிக்கடனை அறியமுடிகிறது.

சாதி

பல பிரச்சினைகளில் தலையானது சாதிக்கொடுமை. மக்களின் பிறப்பு நிலையை வைத்து அவர்களைப் பாகுபாடு செய்தது இடைக்காலத்தில் தான். "சாதிகள் இல்லையடி பாப்பா என்று ஏட்டளவிலுள்ள சாதிய உணர்வுகள் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் எழுதப்பட வேண்டும். இரண்டு மனிதர்கள் சந்தித்துக் கொண்டால் அவர்கள் பேசும் மூன்று வார்த்தைகளில் ஒன்று சாதி. சாதியை ஒழிப்பதற்கு எத்தனைத் தலைவர்கள் வந்தாலும், அவர்கள் சாதியத் தலைவர்களாகப் பரிணமிக்கின்றனர். நீருபூத்த நெருப்பாகவே இன்று சாதிகள் உள்ளன. எப்பொழுது அதன் கனலைக் கக்கும் என்று தெரியாதளவிற்கு, எல்லா நிலைகளிலும் அது தயாராகவே உள்ளது.

உரச வேண்டாம்; ஊதினாலே போதும் பற்றி எரியும் பாட்டாளியின் குடிசைகள். தீண்டாமை இல்லாத ஊர்கள் உண்டா? தாழ்த்தப்பட்டவர்கள் வடம் பிடிக்கக் கூடாது என்று அடம் பிடிக்கும் கூட்டம் ஒரு பக்கம். ஓட்டுப் பெட்டிகள் நிறைய வேண்டும் என்று ஆதரிக்கும் அர்ப்பர்கள் கூட்டம் மறு பக்கம். ஒதுக்குப்புறங்களாக வைத்துள்ளவர்களை ஓட்டுப்புறங்களாக மாற்றுவதற்குத் தேர்தல் திருவிழாக்கள். வர்ணாசரமக் கொள்கையிலிருந்து விடுவிப்பதற்கு யாருக்கும் விருப்பமில்லை. சாராயத்தை ஊற்றியும் தீபம் ஏற்றலாம் என்பது அவர்களின் கொள்கை போலும். விடுதலை என்பது மனிதர்கள் தம் தேவையுணர்ந்து அதைப் பெறுதலாகும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றாரே திருமந்திரச் சித்தர் திருமூலர்.

> 'இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி
> இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே'

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் குறிப்பிடுகிறார்"[56] என்பர்.

சங்க இலக்கியங்களில் சில சாதியினர் 'இழிசினர்' என்று கூறப்படுகின்றனர். ஊசியில் வாரைக் கோர்த்து கட்டில் பிணிக்கும் புலைமகன், துடியை அறைந்து செய்தியை அறிவிக்கும் துடியன், சுடுகாட்டில் பிணங்களை விலங்குகளுக்கு இரையாகத் தூக்கி எறியும் வெட்டியான், பாசறைக்கண் தண்ணுமை என்னும் போர்ப்பறையை அறைபவன் ஆகியோர் 'இழிசினர்' என்றும் 'இழி பிறப்பாளன்' என்றும் கூறப்படுகின்றனர்.

"துடியன் பாணன் பறையன கடம்பன் என்று
இந்நான கல்லது குடியுமில்லை"(57)

என்று புறநானூற்றுப் பாடலடிகள் மூலம் மாங்குடிக் கிழார் நான்கு வகைக் குடிகளைப் பற்றிப் பாடியுள்ளார். தொழிலின் அடிப்படையில் பிரிவுகளால் பிரிந்த இந்த பாகுபாடு. பின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளினால் விதைக்கப்பட்டு இன்று ஆணிவேர்களாக சாதிகள் மண்ணில் அடித்தட்டு வரை பரவிக்கிடக்கின்றன.

வேர்களை வளர விட்டுவிட்டு அதன் கிளைகளை மட்டும் வெட்டுகின்ற வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது தரம் பிரித்து வைக்கப்பட்டதைப் போல் தோன்றினாலும், முன்னர் இவைகள் ஒழுங்கான வடிவத்துடன் அவரவருக்குரிய பணிகளைச் செய்வதற்காகப் பிரிக்கப்பட்டாலும், சமுதாயம் வளர வளர அதனுள்ளே ஆழமான பிரிவினைகள், வேற்றுமைகள், ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டுவிட்டன. கிரீடம் செய்கிறவன் மதிப்புடையவனாகவும், காலணி செய்பவன் அவ மதிப்புடையவனாகவும் காணப்படுகிறான். நாய்கள் கூட தெருக்களில் நுழையலாம். தீண்டத்தகாதவர்கள் தெருக்களில் கூட நடமாட முடியவில்லை. கடும் வெயிலில் செருப்பணிந்து செல்வதும் தடை செய்யப்பட்டது. தாங்கள் உயர்ந்த சாதியினர் என்று சொல்லிக் கொள்பவர்களைக் கண்டால் தோளின் துண்டை

இடுப்பில் கட்டிக் கொண்டு கூனிக் குறுகி நடக்க வேண்டும் என்ற எழுதப்படாத சட்டங்கள் இருந்த நிலை. சாதிகள் வளர்வதற்குச் சமய நம்பிக்கைகளும் யாகம் வளர்த்தன"[58] என்பர்.

தமிழிலக்கியத்தில் நவயுகத்தின் தேவைகளுக்கு முதல் குரல் கொடுத்த பாரதியார்,

"ஏழையெனறும் அடிமையென்றும்
எவருமில்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரெனபர்
இந்தியாவில் இல்லையே"[59]

என்று கூறியிருப்பதனால் சாதியில் இழிவான அடிமைகள் இந்தியாவில் வாழ்ந்தனர் என்பதையும், அவர்களும் விடுதலை பெறவேண்டுமென்ற வேட்கையை,

"பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை"[60]

என்ற 'சுதந்திரப்பள்ளு' பாடல் வரிகளிலும் அறியமுடிகிறது. பாரதிதாசனும்,

"தாழ்ந்தவன் என்றொரு சாதி உரைப்பவன் தீயன். அவன் தன்னுடலைப் பிறர் சொத்தில் வளர்த்திடும் பேயன்"[61] என்று 'சுயமரியாதை' என்றும் கவிதையில் பாடியுள்ளார்.

சோலை சுந்தரபெருமாள், தான் கண்டு, கேட்டு அனுபவித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கையை இயற்கைச் சூழலோடு சேர்த்து

எதார்த்த நடையில் படைத்துள்ளார். கீழ்ச்சாதியினர் கொத்தடிமைகளாக வாழ்ந்த வாழ்க்கையையும், தலைமுறை தலைமுறையாக ஒரே பண்ணையில் அடிமையாக இருந்ததையும் எடுத்துக் காட்டி, பின்னர் இம்மக்கள் சமுதாய விழிப்புணர்வு பெற்று தங்களின் உரிமைகளைக் கேட்டதையும், அதற்காக இன்னலுற்ற அவல நிலையையும் புதினங்களில் காணமுடிகிறது.

'பெருந்திணை' என்ற புதினத்தில் பண்ணை அடிமைகளாக வாழ்ந்து வரும் கீழ்சாதியினர் தங்களின் அடுத்த தலைமுறையாவது படித்து, முன்னேறி வசதியோடு இருக்க வேண்டுமென்று நினைத்தாலும், நிலவுடமையாளர்கள் தங்களின் பண்ணைகளில் தான் வேலை செய்ய வேண்டுமென்றும், மீறினால் அவர்கள் மீது வீண்பழி சுமத்திக் கடும் தண்டனைக்கு உள்ளாக்கி விடுவதையும் காணமுடிகிறது.

தந்தை பெற்ற கடனுக்குப் படித்த மகனைப் பண்ணை வேலை செய்யச் சொல்லும் பண்ணையாளர்கள், வரமறுப்பவர்களின் மேல் பொய் குற்றம் சுமத்தி தண்டனைப் பெற வைக்கிறார்கள். "பக்கதில் இருக்கிற செம்மங்குடி அய்யருங்க பண்ணையில் வேலை பாக்கிற எல்லாருமே இன்னிக்கும் பண்ணை அடிமையாகத்தான் இருக்கிறாங்க. அவங்களுக்குக் கொடுக்கிற பணம் காசு எல்லாத்துக்கும் சத்திய பிரமாணம் வாங்கிட்டுதான். அந்த அய்யருங்க கிழிக்கிற கோட்ட உங்க ஆளுங்க தாண்ட முடியாது. போன மாசம் அம்மாசி பேரன் நல்ல மார்க் வாங்கிக்கிட்டு

காலேஜில படிக்கன்னு முரண்டு பிடிச்சத அந்தப் பண்ணைக்கிட்ட அவன் அப்பன் சொல்ல, படிச்சிட்டு வந்ததும் வேலையா காத்துக்கிட்டு இருக்கு? பேசாம நம்ம பால் பண்ணைக்கு அவனை அனுப்பிவிடு. ஆயிரம் ரூவா சம்பளம் போட்டுத் தாரேன் என்று அய்யருங்க சொன்னத கேக்காம காலேஜிக்கு அனுப்பிட்டான்னு அவர் மனசில ஏறின வஞ்சத்த தீத்துக்க பால் பண்ணையில் உள்ள பணத்த திருடிட்டான்னு திருட்டு வேஷம் கட்டி போலீஸ்ல கேஷ் கொடுத்து சிக்க வச்சிட்டார்"[62] என்று கூறுவதிலிருந்து பண்ணை அடிமைகளின் முன்னேற்றத்திற்கான தடைகளை அறியமுடிகிறது.

கீழவெண்மணியின் கொடூரம் குறித்த செய்திகளைக் காட்டும் 'செந்நெல்' என்ற புதினத்தில், பொருளாதாரத்தில் கீழாக உள்ள மேட்டுக்குடி விவசாயக் கூலிகள், கீழ்சாதியினருடன் சேர்ந்து கூலி உயர்வுக்காகப் போராட்டம் செய்வதைப் பண்ணை முதலாளிகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சாதியின் பெயரால் அவர்களைத் தம் பக்கம் இழுக்க முயல்வதையும் புதினத்தில் காணமுடிகிறது.

நிலத்தில் ஒரே வர்க்கமாக நின்று வேலை பார்க்கிற மனிதர்கள் வேலை பார்க்கிற மனிதர்கள் ஊருக்குள் வரும் போது 'உயர்ந்த சாதி', 'தாழ்ந்த சாதி' என்று பிளவுபட்டு நிற்கிற கொடுமை காணப்படுகிறது. "..... வேங்கடபதி நீங்கயெல்லாம் கூலிக்குப்போய் தான் ஜீவனம் வளக்கிறீங்க. அதில என்னப்பா தப்பு. உங்கள நாங்க வேத்துக் கலப்பாவா வச்சிருக்கோம். எங்க வீட்டு அடுப்பாங்கரை வரைக்கும் வந்து பந்தாயத்தில் நெல்லு கொட்டுறது நீங்க தானே.

அந்த கொட்டசாதிக்காரப் பயலுங்களாவா செய்ய சொல்லுறோம்? எங்க வீட்ல ஒரு நல்லதுனா உக்கார வைக்கிலயா? அவனுங்க கொல்லையில தின்னுட்டு தானே வாங்கிக்கிட்டு போறானுங்க. இப்படி இருக்கும் போது நீங்க எல்லாம் இன்னும் அந்த கெட்ட சாதிக்காரப் பயலுங்களோடப் போவப் போறோம்ன்று சொல்லுறது நல்லாருக்காப்பா?"[63] ஒரே வேலை செய்யும் விவசாயக் கூலிகள் சாதியின் பெயரால் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் இயற்றிய பெரியபுராணத்தில் நத்தனார், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் நாயகராக வருகிறார். கீழான வகுப்பைச் சேர்ந்த அவருக்கு அவரின் குலத்தாருக்கும் கோவிலுக்குள் நுழையும் உரிமை இல்லாததால் திருப்புன்கூரில் வெளிவாயிலிருந்தே அவர் சாமி தரிசனம் செய்ய முயன்றதால், நந்தி விலகி நின்று சிவனாரைப் பார்க்கவிட்டதெனக் கூறப்பட்டுள்ளது.

அதன்பிறகும் நந்தனார் உயர்குலத்தோரின் உயர் தெய்வமாய்க் கருதப்பட்ட சிதம்பர நடராசரைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆசையை வளர்த்து, நாளை போகலாம் நாளை போகலாம் என ஒத்திப் போட்டுக் கொண்டே சென்று, எப்படியாவது கோவிலுக்குள் சென்று ‘இன்னல் தரும் இழி பிறவி இது தடையென்றே துயில்வார்' இந்த இழிபிறவி போக வேண்டுமென்று நினைத்த நந்தனாருக்குச் சிவனார் கனவில் தோன்றி அருள்கொடுக்கிறாள்.

“இப்பிறவி போய் நீங்க எரியினிடை நீ மூழ்கி மூப்புரி நூன் மார்பருடன் முன்னணை வாய் என மொழிந்தப்பரிசே தில்லை வாழ் அந்தணர்க்கும் எரியமைக்க மெய்ப்பொருளானார் அருளி அம்பலத்தே மேவினர்”(64)

தாழ்த்தப்பட்ட மக்களின பிறவியை இழி பிறவி என்று குறிப்பிட்டு, அந்த இழி பிறவியால் உடம்பும் தூய்மையில்லாது போனதால் தீயினில் மூழ்கி புதுப்பிறவி எடுத்து வரும் படி சிவனார் சொன்னகதையான இந்த பெரிய புராணக் கதையை மையமாக வைத்து ‘மரக்கால்’ என்ற நாவலில் ‘நந்தன்’ பறையர் குலத்தில் பிறந்து சிவபெருமானின் நாமத்தை உச்சரித்தும், உடம்பெல்லாம் திருநீற்றுப்பட்டையைப் போட்டுக் கொண்டும் நடமாடுவதை ஆதனூர் பிரமதேயம் அனுமதிக்கவில்லை.

நந்தனும் அவனின் கூட்டாளிகளும் சிவநாமத்தை உச்சரிப்தைப் பொறுக்கமாட்டாத ராமுமழயவராயன் என்பவர், “நீசப் பறைப்புலையனுங்களா பிரமதேய அதிபர் சாமி, நீசப் புலையன்களா பொறந்திருக்கும் உங்களை வைக்க வேண்டிய இடத்தில் தான் வைச்சிருக்காங்கடா. நீசனுங்க இடம் மாறிப்போக நினைச்சா முடியுமாடா? செத்தமாடு தின்னு, புளிச்சக் கள்ளுக் குடிச்சி ஆண்டைகளுக்கு அடங்கி ஒடுங்கி இழுத்த இழுப்புக்கு நின்னு வேலைபாத்து படிக்கூலி வாங்கிப்போற உங்களுக்குன்னு காத்தன்,மூக்கன், பாவாடை, மாரி இருக்கேடா அதைக் கும்பிடப் போங்கடா....அதை விட்டு விட்டுச் சிவ மந்திரங்களை சொல்லிச்

சொல்லிச் சிவலோகநாதனை அணுகி தரிச்சிக்க நினைச்சா முடியுமாடா? எல்லாத்தையும் மீறி நீங்க நீறு தரிச்சி சிவசிவன்னு சொல்ல, பிரமதேயம் விட்டுட்டு விரலசப்பிக்கிட்டு நிக்கும்ன்னு, நீசனுங்க கனவிலக்கூட நினைச்சிப் பார்க்கலாமாடா.... "[65] என ஆவேசமாகக் கத்துகிறார்.

இவை எல்லாவற்றையும் மீற தில்லை செல்கிறான் நந்தன். செல்லும் வழியில் மருதன் என்ற பறையனைச் சந்திக்கிறான். வழியில் உப்பு உமணன் ஒருவன் தில்லையில் கீழ்சாதியினரை நடத்தும் முறைபற்றிக் கூறுகிறான். "இவர் தைபூச நாள்ல உங்க சாதிசனத்தை கேணக்கரைக்கு அனுப்பி வைச்சிடுவாங்க. இந்த நேரத்தில் அவங்க யாரும் குறுக்க நெடுக்க தலையைக் கூட காட்டக் கூடாதுன்னு செஞ்சிடுவாங்க..."[66] என்பதிலிருந்து அவர்களைக் கண்டாலே திட்டு என்று நினைக்கும் தில்லை வாழ் அந்தணர் பகுதிக்குச் சென்று யாருக்கும் தெரியாமல் மருதன் நந்தனைக் கூட்டிச் சென்று சிவனை வழிபடச் செய்யலாம் என நினைத்துப் போக கோயிலுக்குள் அவர்கள் சென்றது தெரியவர, மருதன் ஓடும் போது கட்டையால் தாக்கியதால் இறந்து விடுகிறான். நந்தனைத் தீயில் எரித்து சாம்பலாக்கி விடுகின்றனர். நந்தனை எரித்த தீயின் மிச்சம் இன்னும் உள்ளதை இவரின் புதினங்கள் பதிவு செய்துள்ளன.

'தப்பாட்டம்' என்ற புதினத்தில் சேரி தெருவைச் சேர்ந்தவர்கள், ஊருக்குள் சட்டை போட்டுக் கொண்டோ, தோளில் துண்டைப் போட்டுக் கொண்டோ வரக்கூடாது. மேலும் தெருவில்

பீடியைப் பிடித்துக் கொண்டு வருவதைப் பார்த்துவிட்டால், கையில் கிடைப்பதை எடுத்து அடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதை மதுக்கன் பகடை தன் மச்சினரிடம் சேர்ந்துவரும் போது, அவரின் மச்சினர், "பாவா! இந்த ஊருல நம்ம சாதிசனத்துக்கு மூப்பனாருகளிடம இருந்தும் அம்பலக்காரவங்கக்களிடம் இருந்தும் அடுத்த தலைமுறைக்குகூட விமோசனம் கெடைக்காது போலிருக்கு"[67] என்று கூறுவதன் மூலம் அறியமுடிகிறது.

காமாட்சி அம்மன் கோயில் வாசல் பக்கமே போவதற்கு அனுமதி இல்லாத சக்கிலியர்கள் பல போராட்டங்கள் நடத்தி கோயிலுக்குள் போவதற்கான உரிமையைப் பெறுகின்றனர்.

கீழ்சாதியினரை நீசப் பயலுகள் என்றும், சாதி பெயரைச் சொல்லி திட்டும் பழக்கத்தையும் காணமுடிகிறது."....அட பறை ஒக்காலி ஓழிகளா! பறையனுங்களுக்கும் சக்கிலியப் பயலுங்களும் பாளைவச்சி அலையுதாடா!"[68] என்று மூப்பனார் சமூகத்தைச் சேர்ந்தவர் கூறுகிறார். எத்தனை பெரியார் வந்தாலும் சாதியை ஒழிக்க முடியாது என்பதனையே இது காட்டுகிறது.

சாவு சொல்லிப் போகவும், தப்பு அடிக்கவும் கூலியை உயர்த்திக் கேட்டு, தப்பு அடிக்க மறுத்த குருமூர்த்தி சாம்பானை, கள்ளர் இனத்தைச் சேர்ந்த சிவகுருமன் கொண்டார் இரு கட்டை விரல்களையும் துண்டித்து விடுகிறார். இதே போன்று இரட்டைக் குவளை முறையும், முடி வெட்டும் இடத்தில் கீழ்ச்சாதியினரை

உட்கார விடாமல் அவமதிப்பதும் பறையர், பள்ளர், சக்கிலியரை வெள்ளாடு வளர்க்கக் கூடாது எனப் பல கொடுமைகளையும் 'தப்பாட்டம்' எடுத்துக் கூறுகிறது.

பள்ளன் - பறையன், சக்கிலியன் - பறையன், பறையன் - வண்ணான் எனச் சாதிக் கலப்பு ஏற்படும் போது அவர்களின் இனத்திற்குள் முரண்பட்ட கருத்துக்கள் வெளிவருகின்றன. சாதிக்கலப்பு ஏற்பட்டுவிட்டால் அந்த குடும்பத்தில் இருக்கும் மற்ற பிள்ளைக்குத் திருமணம் தடைபடும் என்றும் ஏற்கனவே மற்றவர்களுக்குத் திருமணம் ஆகியிருந்தாலும் இச்செயலால் அவர்களுக்குக் கௌரவ குறைச்சலாகவும் கருதும் வழக்கமும் உள்ளன.

'செந்நெல்' என்ற புதினத்தில், பள்ளர் இனத்தைச் சேர்ந்த செல்வி, பறையரான கண்ணுச்சாமியை விரும்புகிறாள். செல்வியின் பெற்றோர் இதை எதிர்க்காமல் ஆதரவு கொடுக்கின்றனர். ஆனால் செல்வியின் அக்காவின் கணவர் தன் மனைவியைக் கொண்டுவந்து அவளின் பிறந்த வீட்டில் விட்டு விட்டு இத்திருமணத்தை நடத்தினால் அவமானம் வந்து சேர்ந்துவிடும் என்று கூறி பிரச்சினையை ஏற்படுத்துகிறான். "....இந்தா பாருடி! ஒப்பனும், ஓயும் உன் தங்கச்சிய மாடு உரிக்கிற பறைப்பயப் பின்னால அனுப்பி வச்சிட்டு ஒண்ணும் தெரியாதது போல உக்காந்திருக்காவல எப்படி? ஒண்ணும் தெரியாத பாப்பா போட்டுக்கிட்டாளம் தாப்பாங்கிற கதையாயில்ல இருக்கு? அந்தப் பயதான் இந்த வூட்டுக்கு மாப்பிளையா வரப்போறான்னா உனக்கும் சேத்தே மாப்புள்ளையப்

பாத்துக் கட்டி வைக்கச் சொல்லுடீ. என் குடும்பம், சாதிக்கலப்பு இல்லாம கௌரமா கஞ்சிக்குடிச்சிக்கிட்டு இருக்கு. இப்புடின்னா நாளைக்கு என் பொண்ணு புள்ளைக்கு எவன் கூசாம பொண்ணுபுள்ளக் கொடுப்பான்? ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சிக்கிட்டு வாடி, சேத்துக்கிறேன்..."(69) சாதிக்கலப்பால் இன்றும், இனி வரும் காலமும் பிரச்சினையாகும் என்பதை அறியமுடிகிறது.

தப்பாட்டத்தில் பறையர் சாதியைச் சேர்ந்த வள்ளி, சக்கிலியனானத் தோழப்பனை மணந்த பின்பும், வள்ளியின் மாமா, எப்படியாவது அவனிடமிருந்து தன் அக்கா மகளைப் பிரித்து அழைத்து வந்துவிட வேண்டுமென பண்ணை உரிமையாளரான தங்கசாமி மூப்பனாரின் காலில் விழுந்து உதவிக்கு அழைக்கிறான். "…. பழைய செருப்புத் தைக்கிற கரூர் சக்கிலியப் பயமவன் என்னோட அக்கா மவளை கட்டிக்க விட்டுட்டு நிக்க நான் என்னா சிமபத்தடியனா?"(70) என்று கேட்பதிலிருந்து தாழ்ந்தப்பட்ட வர்க்கத்திற்குள்ளேயே உள்ள பிரிவுகளுக்குள் தான் கொடுப்பதும், எடுப்பதும் இருக்க வேண்டும். மீறி ஏதாவது ஒரு கலப்புமணம் நடந்தால் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை இவரின் புதினத்தில் காணமுடிகிறது.

சாதிப் பெயரைச் சொல்லி அழைத்தல்

தங்களைக் காட்டிலும் கீழ்ச்சாதியைச் சேர்ந்தவர்களைப் (முதியவர்களாக இருந்தாலும்) சாதிப் பெயரைச் சொல்லி

அழைக்கும் போது அவர்கள்படும் மன உளைச்சலைத் 'தப்பாட்டம்' புதினம் காட்டுகிறது.

வண்ணான் இனத்தைச் சேர்ந்த வீரவாகு, மதுக்கன் பகடையிடம் தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகிறார். "பெரியய்யா! நாலு எடத்தில் போவ வர இருக்கிற நீங்களே சொல்லுங்களேன். இந்தத் தெருவில உள்ள தலைகட்டுகள்ல உள்ள பாதிக்கு மேல உள்ளவங்கள எம்பொண்டாட்டி பேறுபாத்து பீத்துணி கசக்கிப் போட்டு வளந்ததுங்கைய்யா. இப்ப தலையெடுத்து வர்ற விடுத்தானுங்கக்கூட ஏ! வண்ணாத்தி இங்க வாடி! போடி.... தலையில அடிச்சாப்போல கூப்புட்டுக்கிட்டு இருக்கிறப்ப தாங்கிக்க முடியிலங்க...."(71) அவர்களின் பரம்பரைத் தொழிலை விடமுடியாமல் அவமானப்பட்டுக் கொண்டும் அதைச் செய்யும் வீரவாகு போன்ற வண்ணார் சாதியின் மனக்குமுறலை உணரவைக்கிறது.

சமுதாய விழிப்புணர்வு

இன்றைய தலித் இலக்கியங்களில் அம்மக்கள் பெற்றுவரும் மாற்றத்தைக் காணமுடிகிறது. அம்மக்களின் விழிப்புணர்வை 17-ஆம் நூற்றாண்டில் எழுந்த 'முக்கூடற் பள்ளு' என்ற படைப்பு வெளிக்காட்டுகிறது. அது தீண்டாமை எதிர்ப்பு இலக்கியமாக, அந்த மக்களின் வாழ்வை மையமாகக் கொண்டதாக, அவர்களையே முக்கியப் பாத்திரங்களாக மையப்படுத்தி அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் ஒடுக்கப்பட்டோர் இலக்கியத்தின் கூறுகள் ஆரம்பகால திராவிடர் இயக்கப் பிரசுரங்கள், சொற்பொழிவுகளில் இடம் பெற்றன. இப்பொழுது புத்துருவம் பெற்று புதினங்களாகவும், சிறுகதைகளாகவும், நாட்டுப்புறப்பாடல்களாகவும், புதுக் கவிதைகளாகவும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

செருப்புப் போட்டாலோ, சட்டைப் போட்டுக் கொண்டுவந்தாலோ, துண்டு அணிந்து வந்தாலோ, சைக்கிளில் ஏறி ஓட்டிக் கொண்டு வந்தாலோ, பீடி பற்ற வைத்து தெருவில் குடித்துக் கொண்டு வந்தாலோ பெரிய குற்றமான செயல் என்று தண்டனை கொடுக்கும் காலம் மாறிவிட்டது. பண்ணை அடிமையாக வேலை செய்பவனின் குழந்தைகள் பண்ணை அடிமையாகவே தலைமுறைக்கும் வரவேண்டியதில்லை. பல சமூகக் கொடுமைகளிலிருந்து அம்மக்கள் விடுதலை பெற்று வசதியாக வாழவேண்டுமெனில், கல்வி கற்று உயர் பதவிகளில் இருந்து பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்பதைப் பெருந்திணை என்ற புதினத்தில் ஆறுமுகத்தின் மகன் சாமிக்கண்ணு என்ற பாத்திரத்தின் மூலம் காட்டியுள்ளார்.

‘நஞ்சை மனிதர்கள்’ என்ற புதினத்தில் பண்ணை அடிமைகளாக வாழ்ந்துவரும் ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களான குண்டுகண்ணு, அம்மாக்கண்ணு தம்பதியினர், தங்களின் அயராத உழைப்பால் நிலத்தை வாங்கும் அளவிற்கு முன்னேறி சமூக மதிப்புப் பெறுகின்றனர்.

பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாகி வரும் தலித் பெண்களின் நிலையை 'செந்நெல்' புதினம் எடுத்துக்காட்டுகிறது. 'செல்வி' என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணை வழிமறித்து ரெங்கபாஷ்ய நாயுடு தகராறு செய்து கையைப் பிடித்து இழுக்க, அவள் உதறி விட்டு 'அய்யா மாருங்கலாச் சேன்று மட்டுமரியாதையா விட்டுட்டுப் போறேன்' என்று சொல்ல அதற்கு நாயுடு, "என்னாடி பெரிசா பத்தினிக் கொட்டு கொட்டுறா சட்டமா சாணி அள்ளி போடன்னு வரச்சொல்லி நாங்க ருசி பாத்தி அனுப்பி வச்ச காலம் மாறிப் போச்சடி?"(72) என்று கேட்டு வம்பிக்கிழுத்தவனிடம், "....நாய்க்கப்பயலே போடா ஒன்னோட பொண்ண அழைச்சிட்கிட்டு வந்து என் மாமன்கிட்டக்க விட்டுட்டு வாடா நான் உன் கிட்ட படுத்துக்கிறேன்...."(73) என்று சொல்லிய செல்வியின் மனஎழுச்சியைக் காணமுடிகிறது. குட்டக் குட்டக் குனிந்த காலம் போச்சு என்பதற்கேற்ப சாதிப் பெயரைப் சொல்லி ஒரு தாழ்த்தப்பட்ட பெண் உயர்சாதியினரைத் திட்டுவதைக் கொண்டு முற்போக்கான சிந்தனையில் சமூக மாற்றத்தைக் காணமுடிகிறது.

கீழவெண்மணியில் தாழ்த்தப்பட்ட விவசாய கூலிகள், தங்களின் கூலியை உயர்த்தி கேட்பதற்குப் பொதுவுடைமை கட்சி துணையாக நிற்கிறது. ஆனால் நெல் உற்பத்தியாளர் சங்கம், அவர்களின் உரிமையைக் கொடுக்க மறுப்பதோடு பல வழிகளிலும் கொடுமை இழைக்கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் குடியானத் தெருவைச் சேர்ந்த வடிவேலு என்பவன் பக்க பாலமாக

இருந்து அவர்களை வழிநடத்துவதை விரும்பாத வீரப்பன், வடிவேலுவிற்கு எச்சரிக்கை விடுக்கிறான்.

"ஏய்! வடிவேலு நீயும் நானும் ஒரு சாதியில பொறந்தவங்க தாண்டா. நம்ம ஆயி அப்பனும் நமக்குன்னு எந்த அய்வேஸ்ஸையும் சேத்து வைக்கில. இருந்தாலும் நமக்குன்னு மரியாதை இருக்கு. நீ என்னாடான்னா சேப்புக் கெடியத் தூக்கிக்கிட்டு கொள்கை பேசுற. கண்டா கண்டா எடத்தில படுத்துக்கிட்டு கம்புன்னும் குஸ்தின்னு இந்தப் பறைபள்ளுகளுக்கு சொல்லிக் கொடுத்துக்கிட்டு ஒண்ணாடி முன்னாடி கெடக்கிற. ஒனக்கு என்னா தலையெழுத்தா? நீ இப்ப சொல்லு கீவளூர் பஜார்ல ஒரு சாப்பாட்டுக் கடையே வைச்சிக் கொடுக்கச் சொல்லுறேன்... இவ்வளவு நான் சொல்லியும் நீ திரும்ப பள்ளுப்பறை பதினெட்டு சாதிக்கும் தொணையா நிப்பேன்னா, நான் என்னா செய்யப் போறேன்? நான், உன்னக் காவுந்து பண்ணிக்கிட்டு இருக்கவாப் போறேன். எங்கையா உன்னை பரம எதிரியா வச்சிருக்காரு. இப்படித்தான் கேக்கரை ராமச்சந்திரன் கிட்ட படிச்சிப்படிச்சி சொன்னேன். கேட்டானா? வெட்டிப் பொலிக் கொடுத்தாங்க......"[74] என்று கூறுவதிலிருந்து குடியானவர்கள் கீழ்சாதியினருக்குத் துணையாக நின்றாலும் அவர்களை மிரட்டி தன் பக்கம் இழுத்துக் கொள்வதும், அவர்கள் சொல்வதைக் கேட்கவில்லையென்றால் வெட்டிக் கொலை செய்துவிடுகின்றனர்.

இவ்வாறாக அம்மக்களின் விழிப்புணர்வு பெற்ற வாழ்க்கையை எடுத்துக் கூறும் இப்புதினத்தில், கூலி உயர்வு கேட்டதற்காக 44

பேரை (பெண்கள் குழந்தைகள்) உயிரோடு வைத்து இராமையா என்பவரின் வீட்டிற்குள் எரித்துச் சாம்பலாக்கி விட்ட உண்மைக் கதையையும் அறியமுடிகிறது.

விழிப்புணர்வு பெற்ற மக்கள் தங்களின் உரிமையைக் கேட்கும் போது முதலில் பல இன்னல்களுக்கு ஆட்பட்டார்கள் என்பதை 'தப்பாட்டம்' புதினமும் உணர்த்துகிறது. 'செந்நெல்' லில் வடிவேலுவைப் போல இந்நாவலில் மூப்பனார் சாதியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி வாத்தியார் பொதுவுடைமை கட்சி மூலம் கீழ்ச்சாதியினரை விழிப்படையச் செய்கிறார். "....தோழர்களே! ஒரு நாள் ஒரு வாரம் ஒரு மாசம் போராட்டம் நடத்தி நாம எதையும் வென்று எடுத்திட முடியாது. காலகாலமா ஆதிக்கம் பண்ணிக்கிட்டு இருக்கிறவங்க நம்மவங்களுக்குள்ள முரண்பாடுகளை முன்னவச்சு திசை திருப்பி விடுறாங்க. தொடர்ந்தும் அப்படித்தான் செய்வாங்க. அது எல்லாத்தையும் மீறித்தான் நாமும் தொடர்ந்து போராடத் தயாரா இருக்கணும். நம்மல்ல இருக்கிறவங்க சில பேரு ஒதுங்கறதுக்கோ ஆதிக்கம் பண்ணுரவங்களோட சேந்துக்கிறாங்கன்னு நெனைச்சு நாம சோந்துட்டா எப்படி?...."(75) என்று சுந்தரமூர்த்தி வாத்தியார் அவர்களின் வாழ்க்கைக்காகப் போராடி மன எழுச்சியைத் தூண்டுகின்றனர்.

இவ்வாறாகத் தாழ்த்தப்பட்டவர்களின சிக்கல்களையும் அதற்கானத் தீர்வுகளையும் ஆசிரியர் புதினங்களில் பதிவு செய்துள்ளமைப் பெறப்படுகிறது.

நம்பிக்கைகள்

நாட்டுப்புற மக்களிடையே பல நம்பிக்கைகள் மலிந்து காணப்படுகின்றன. விஞ்ஞான வளர்ச்சியடைந்த காலத்திலும் மக்களின் நம்பிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதைப் பல புதினங்கள் காட்டுகின்றன.

'நஞ்சை மனிதர்கள்' என்ற நாவலில் தன் குலதெய்வ கோயிலின் மதில் சுவரின் உயரத்தைத் தாண்டி, வீட்டுக் கட்டிடத்தை எழுப்பிய காத்தையாப்பிள்ளையிடம், அவரின் சம்பந்தி துரைசாமி பிள்ளை அப்படிக் கட்டினால் குடும்பத்திற்கு ஆகாது என எச்சரிக்க, அடுத்த வருடமே குல தெய்வத்தின் மதில் சுவரை உயர்த்தி எழுப்பினார் காத்தையாப்பிள்ளை. இதில் அம்மக்களின் குல தெய்வ மரியாதையுடன் கூடிய நம்பிக்கைத் தெரிகின்றது.

".... என்னா இப்படி கட்டிட்டீங்க? உங்க குல தெய்வ கோவிலோட மதிலுக்கு மேல உசரமாப் போயிட்டே.... அப்படி ஆயிட்டா குத்தப்பாடு வந்துடும் ன்னு சொன்னதும் மறு மக சூல்லயே ஓடம் போக்கி ஆத்துக் கரையில காளவாய் போட்டு கொண்டாந்து குல தெய்வமான அங்காளம்மன் கோயில் மதில் சுவர உசரப்பட்டுதிக்கிட்டு இருக்கும் போது பெரிய காய்ச்ச வந்து படுத்துட்டாரு. திடுதிப்புன்னு இப்படி படுத்துட்டோமேங்கிற பயம் வந்துட்டு. வேண்டுதலை பண்ணிக்கிட்டு கோயிலுக்குள்ளேயே

ALAGAPPA UNIVERSITY CENTRAL LIBRARY KARAIKUDI

வீரப்பத்திரசாமிக்கும், பெரியாச்சிக்கும் சன்னதி கட்டி விச்சாராம் அதுக்குப் பொறவு காத்தையாப்பிள்ளையோட தொன்னூத்தி ரெண்டாம் வயசுலத் தான்....''[76]

கோயிலுக்கு நேத்திக்கடனை நிறைவேற்றி பக்தியுடன் வாழ்ந்தால் நீண்ட காலம் வாழலாம் என்ற நம்பிக்கையைக் காணமுடிகிறது.

குப்புசாமிபிள்ளை தன் வீட்டு வாசலில் நின்ற தென்னைமரத்தை வெட்டச் சொல்கிறார். அது குடும்பத்திற்கு ஆகாது என்று கூறி அதை வெட்ட மறுக்கிறான் குண்டுக்கண்ணு, "அய்யா... இப்புடி மதாளிச்சி நிக்கற தென்னைமரத்த வெட்டுனா குடும்பத்துக்கு ஆவாதுங்க''[77] என்று கூறுகிறான். அதையும் மீறி மரம் வெட்டப்பட்டதால் தான் அவன் மனைவி இறந்து, வறுமை நிலையை அடைந்ததாக நம்புகிறார்.

ஒரே ஒரு ஊர்ல என்ற புதினத்தில், "சம்முவத்துக்கு நாகதோசம் உச்சத்துல இருக்கு, வள்ளி ஜாதகத்தோட சேர்க்கக் கூடாதாம்''[78] என்று கூறுவதிலிருந்து திருமணத்திற்குச் சோதிடம் பார்க்கும் முறை காட்டப்பட்டுள்ளது. இது அவ்வட்டரா மக்களின் நம்பிக்கையாக இருந்தபோதிலும் அது மூடநம்பிக்கையாகக் காணப்படுகிறது.

வீட்டின் முன்பு காகம் கரைந்தால் விருந்தினர் வருவார்கள்[79] என்ற நம்பிக்கையும், பெண்களுக்கு வலதுபக்க மார்பில் கருப்பு மச்சம் இருந்தால் அவளின் கணவர் அவளைச் சுற்றியே வருவார் என்ற

நம்பிக்கையும்,[80] குழந்தைகளுக்குப் பல் முளைக்காவிடில் ஈரை நெல்மணியால் கீறிவிடும் பழக்கமும்,[81] திருமணமானப் பெண்கள் வெளியில் செல்லும் போது தீயவை அணுகாமல் இருப்பதற்காக வேப்பிலையைக் கொண்டு செல்லும் பழக்கமும்,[82] மனிதர்கள் மட்டுமல்லாது கால்நடைகளுக்கும் கருப்பு, வெள்ளை மச்சம் இருந்தால் நல்லது கெட்டது என வகைப்பிரித்துப் பார்க்கும்[83] பழக்கமும், காலரா நோய் வந்தால் அது காளி தெய்வத்தின் கோபத்தினால்தான் வருகிறது[84] என்கிற மூடப்பழக்கமும் இவ்வட்டாரப் பகுதிகளில் காணப்படுகிறது என புதினங்களில் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

விழாக்களும் வழிபாடுகளும்

இலக்கியங்கள் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் கொண்டவையாகும். மண்ணின் மணம் மாறாமல் நாட்டுப்புறச் சூழலை விளக்கும் வகையில் சோலை சுந்தரபெருமாளின் புதினங்கள் இருப்பதினால், அவைகளில் சிறுதெய்வ வழிபாட்டின் கூறுகள் அதிகம் காணப்படுகின்றன.

பெருந்தெய்வ வழிபாடும், சிறுதெய்வ வழிபாடும் மேல்சாதி, கீழ்சாதி என்ற வகையில் தோன்றியதாகும். புராணச் செய்தியைக் கதைவடிவில் சொல்லவந்த ஆசிரியர் ‘மரக்கால்’ என்ற ஒரு புதினத்தில் மட்டும் சிவனைப்பற்றிக் கூறுகிறார். மற்றப் புதினங்களில் காளியம்மன், மாரியம்மன், காமாட்சியம்மன், கருப்பசாமி,

காத்தான், மூக்கன், பாவாடை, அங்காளம்மன், துரோபதையம்மன், காத்தவராயன், அய்யனார் போன்ற சிறுதெய்வ வழிபாட்டினைத் தொட்டுச் செல்கிறார்.

காமன் பண்டிகை

சிவன் சின்முத்திரை என்ற ஞானத்தை அறிவுறுத்துவதற்காகக் கல்லால மரத்தின்கீழ் தவம் மேற்கொள்ள, உலகில் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலும் நடைபெறாமல் போய்விடுகின்றன. இதனால் இந்திரன் சிவனின் தவத்தைக் கலைப்பதற்கா மன்மதனை அனுப்புகிறார். மன்மதன் சிவனின் தவத்தைக் கலைப்பதற்காகக் காமபானம் தொடுக்கிறார். இதனால் கோபமடைந்த சிவன் மன்மதனை எரித்துவிடுகிறார். பின் ரதியின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் மன்மதனை உயிர்ப்பிக்கிறார். இப்புராணக்கதையை மையமிட்டு வருடந்தோறும் மக்கள் காமன் பண்டிகையாகக் கொண்டாடி வருகின்றனர். இதனை 'ஒரே ஒரு ஊர்ல' என்ற புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

விழாக்காலங்களில் ஊரிலுள்ளோர் தெய்வப் பாத்திரங்கள் போல் வேடமிட்டு ஊர் மையப்பகுதியில் ஆட்டம் ஆடி கொண்டாடி வருவதையும் காணமுடிகிறது.

கோயில் திருவிழாக்கள் மண்டகப்படி என்ற பெயரில் சாதியினைப் பறைசாற்றுகின்றன. "எந்தச் சமயமும் எந்தக் கடவுளரும் மனிதனைப் பிரித்துப் பார்ப்பதில்லை. காற்றும் நீரும்

வானும் நெருப்பும் கூட பொதுவில் கிடக்கிறது. மனிதன் காலில் பட்ட பூமி மட்டும் பிரிந்து கிடக்கிறது என்ற ஒரு கவிஞனின் கூற்றாகும். ஆன்மீகத் திறவுகோலைக் கொண்டு நம் அறிவு பெட்டகத்தைத் திறக்கவேண்டும்....

உலகமே ஒரு கிராமமாக மாறிவிட்ட நிலையில் முடைநாற்றம் வீசுகின்ற சாதியக் கொடுமைகளை அப்பர் பெருமான் முதல் வள்ளற்பெருமான் வரை எதிர்த்துப் போராடியும் வெற்றி பெறமுடியவில்லை...

நீ எதைக் கொண்டு வந்தாய்; அதை இழப்பதற்கு என்ற கீதையின் வழியில், பிறப்பவர் எல்லோரும் ஒருநாள் இறந்துவிட வேண்டும் என்பது இயற்கையின் நியதி. சாதியை ஏற்படுத்தியது இறைவனின் புதிய ஏற்பாடா? கடவுளின் பெயரால் சாதியைச் சமயம் தோற்றுவிக்கவில்லை. தாயுமாகி, தந்தையுமானவன் தம் குழந்தைகளைப் பிரித்து வைத்துப் பார்ப்பானா? கோயில்களில் சமபந்தி விருந்து நடந்து கொண்டிருக்கிறது. இது எதைக் காட்டுகிறதென்றால் இன்னும் மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகள் இருப்பதையே காட்டுகிறது.

ஆன்மீகவாதிகள் சாதியைக் காட்டவில்லை. நிலப்பிரபுத்துவ சமூகம் சாதியைப் பெற்றெடுத்ததாய்! வளர்த்தெடுத்த தாய் புரோகித சமயம். சமயம் இயக்கமாகப் பண்பட்ட நிலையில் இருந்தவரை, மனிதத்தை நேசித்தது. சமயம் நிறுவனமாக மாறிய பிறகு,

வேறுபாடுகளைப் பெரிதுபடுத்தி முரண்பாடுகளை உருவாக்கி மனிதத்தைப் பேதப்படுத்தியது. இன்றோ பணமதிப்பீட்டுச் சமூகம் முற்றிலுமாக மனிதத்தை மறந்துவிட்டது"[85] என்கிறார்.

கீழ்ச்சாதியினர் வசிக்கும் தெருக்களில்கூட உற்சவ மூர்த்தி உலாவர மறுக்கிறார். "உங்க தெருவுக்குள்ள அம்மன் தேரு போறதில எங்களுக்கு சந்தோஷம்தான். உங்கத்தெரு குறுகலா இருக்கிறதோட சகதியா கிடக்கும். அலங்காரத்தோட போற அம்மன் சகதியில சிக்கி அழுக்காயிடுவா. அதனாலதான் உங்க தெரு முனையில கொண்டாந்து நிப்பாட்டிப்புறோம்"[86] என்று 'பெருந்திணை'ப் புதினத்தில் சாமி ஊர்வலம் சேரிக்குள் செல்லாததற்கு மேல்சாதியினரால் காரணம் கற்பிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் விழா நடக்கிறது. மேல்சாதிக்காரர்களைக் கண்டால் குனிந்து குறுகிச் செல்லும் இம்மக்களிடம் அம்மன் ஊர்வலம் வருகிறது; தெருக்களைச் சுத்தமாக வைத்திருங்கள் என்று சொன்னால் செய்யமாட்டார்களா? இல்லை குளித்துச் சுத்தமாக இருங்கள் என்று சொன்னால் சுத்தமாக இருக்கமாட்டார்களா? வகுப்புவாத துரோகிகள் இன்னும் ஏமாற்று வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

மேல்சாதிக்காரர்கள் வணங்கும் தெய்வங்கள் கோயிலின் உள்ளே இருப்பதையும், கீழ்ச்சாதிக்காரர்கள் வணங்கும் தெய்வங்கள் காத்தன், காத்தவராயன், முனியாண்டி, அய்யனார் போன்ற

தெய்வங்கள் கோயில் வாசலில் இருப்பதை இன்றும் காணமுடிகிறது. கடவுளர்களுக்கே இந்த நிலை என்றால், சாதாரண குடிகளுக்குச் சொல்லவும் வேண்டுமோ என்ற ஆதங்கத்தை ஏற்படுத்துகிறார்.

பெருந்திணை என்ற புதினத்தில் கீழ்ச்சாதியினர் காத்தவராயனுக்கு இட்டப் படையலைச் சாப்பிட்டால், மாரியம்மன் ஊருக்குள்ள காலராவை கொண்டு வந்து விட்டுவிடும் என்று கூறி அவர்களின் படையலைப் புறக்கணிப்பதும் தெரியவருகிறது.

கார்த்திகைத் தீபம்

இறைவனுக்குத் தீபம் ஏற்றுவதும்; இசைக்கருவிகள் இசைப்பதும் இறைவன் சோதி வடிவானவன் என்றும்; நாத வடிவமானவன் என்றும் உணர்வதற்காகவே எழுந்த சடங்குகளாகும். தமிழ்க்கடவுளாகிய முருகனுக்காக நடத்தப்பெறும் விழா கார்த்திகை விழாவாகும். சோலை சுந்தரபெருமாள் புதினங்களில் காணலாகும் வட்டார மக்கள் கார்த்திகை விழாவினைப் பொழுபோக்கு நிகழ்ச்சிகளோடு கொண்டாடுகின்றனர். மாரியம்மனுக்குப் பால் குடம் எடுப்பதையும் ஆசிரியர் தம் புதினங்களில் குறிப்பிடுகிறார்.

பழக்க வழக்கங்கள்

பழக்கம் என்பது தனிமனிதச் செயலையும், வழக்கம் என்பது சமுதாயம் மேற்கொள்ளும் செயலையும் குறிப்பதாக அமைகின்றன.

நடைமுறையில் இவை இரண்டும் ஒன்றோடு ஒன்றாகி ஒரே தொடராக வழங்கப்படுகின்ற நிலை காணப்படுகிறது.

பழக்க வழக்கங்கள் என்ற முறையில் சில நடைமுறைகளை புதினங்களில் காணப்பெறுகிறது. கணவன் மனைவி இருக்கும் படுக்கையறையில் கண்ணாடி மாட்டப்பட்டிருக்கும். காலையில் தூங்கி எழுந்தவுடன் கண்ணாடியைப் பார்த்தால் தந்தை-தாய் போல குழந்தை பிறக்கும் என்ற பழக்கத்தால் அது நடைமுறையில் இருப்பதாகக் காட்டியுள்ளார்(87) ஆசிரியர்.

முதல் குழந்தையின் வளைகாப்பு அணிந்து கொண்ட பெண் அன்றைய இரவில் கணவன் வீட்டில் தங்கக்கூடாது என்ற வழக்கத்தையும்(88) காட்டுகிறார்.

குழந்தை பிறந்தவுடன் சோதிடம் பார்ப்பதும், பத்தாம் நாளிலிருந்து குழந்தையை உறவினர்கள் பார்க்க வருவதும், முப்பது நாட்கள் கழிந்தவுடன் தாய்க்குத் தலைக்குத் தண்ணீர் ஊற்றுவதும்,(89) பூப்பெய்திய பெண்ணிற்குச் சடங்கு செய்வதும்,(90) மாமன் சீர் கொண்டு வந்து மருமகளுக்குக் கொடுப்பதும்,(91) நினைத்த காரியம் நடக்க வேண்டும் என்பதற்காகக் கோயிலில் பூக்கட்டிப் பார்க்கும் நிகழ்வும்(92) வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். தாம்பூலம் என்று கூறப்படும் வெற்றிலைப்பாக்குப் போடும் பழக்கத்தினையும், செறிமாணம் ஆவதற்காக சீரகத்தண்ணீர் குடிப்பதையும் அவ்வட்டார மக்கள் கடைப்பிடிக்கிறார்கள்(93) என்பதையும்,

திருமணத்தின் போது முலைப்பால் பணம் என்று இரண்டு வெள்ளிப் பணத்தை வெற்றிலைப் பாக்குடன் மடக்கி வைத்துக் கொடுப்பதும்,[94] நிறைமாத கர்ப்பிணி ஆசைபட்டதை வாங்கிக் கொடுக்கவில்லை என்றால் பிறக்கும் குழந்தைக்குக் காதில் சீழ்வடியும்[95] என்ற நம்பிக்கையும் அவர்களின் பழக்க வழக்கங்களாக அறிய முடிகிறது.

அரசியல்

இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில், தமிழ்நாட்டில் தீண்டாமை எதிர்ப்பு, தாழ்த்தப்பட்டோர் கோயில் நுழைவுப் போராட்டம், பெண்ணடிமைப் போராட்டம், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு போன்றவற்றைத் திராவிட இயக்கங்கள் நடத்திக் கொண்டிருந்தன. சமுதாய மறுமலர்ச்சிக்காகப் போராட்டங்கள் தீவிரமடைந்த நேரத்தில், பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் விவசாய கூலித் தொழிலாளர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் போராடினர்.

1940களில் தஞ்சை மாவட்டத்தின் சமூக உள் கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க மாறுதலைச் செய்த இந்த மக்கள் இயக்கம், வரலாற்று ரீதியான சமூகக் குமுறலை உள்ளடக்கியிருந்தது. அதன் தாக்கம் தமிழகம் எங்கும் பரவியது. இத்தகையப் போராட்டங்களை படைப்பாளர்கள் தங்கள் படைப்புக் களமாக மாற்றிக் கொண்டனர்.

குறிப்பாக கே.முத்தையாவின் ‘உலைக்களம்’, கு.சின்னப்பாரதியின் ‘தாகம்’ போன்ற புதினங்கள் குறிப்பிடத்தக்கன.

சோலை சுந்தரபெருமாள் ‘பெருந்திணை’ என்ற புதினத்தில் வறுமையால் வாடும் மக்களுக்கு இந்த ஆட்சியாளர்கள் எந்தப் பயனையும் செய்யவில்லை என்று உரைக்கிறார். “...பஞ்சமும் பட்டினியும் சனங்களின் குரல்வளையை நெரித்துக் கொண்டிருப்பதைப் பத்தி எந்தக் கவலையும் பட்டதாக ஆட்சியாளர்களிடம் தெரியவில்லை. நாட்டில் ஒரு உட் கிராமத்தில் இப்படி வதைப்படும் சனங்களின் குரல் அவர்களின் காதுகளில் எட்டாமல் இல்லை என்று வேதனைப்படுகிறார்.”(96)

அப்பகுதி மக்களைப் பஞ்சம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் போது, மக்கள் பசிப்பிணியைப் போக்குவதற்காக எலிக்கறி சாப்பிடுகின்றனர். எலிக்கறி சாப்பிட்ட குழந்தைகள் இறந்து விடுகின்றன. இந்தச் செய்தி ஊடகங்களில் வெளிவந்த பிறகே அரசாங்கம் விவசாயக் கூலித்தொழிலாளர்களுக்கு நூறு ரூபாயும், இருபது கிலோ அரிசியும் கொடுக்கிறது. தங்கள் கடமை முடிந்ததாக அரசு ஒதுங்கிக் கொள்ள, மக்கள் துன்பத்திற்கு ஆளாகின்றனர்.

பொதுவுடைமை இயக்கம்

புதினங்களில் காணப்படும் வட்டார மக்கள் தங்களைப் பொதுவுடைமை இயக்கத்தில் இணைத்துக் கொண்டுள்ளனர். இவ்வியக்கம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வீதிகளில் வந்து

போராடும் இயல்பினராகக் காணப்படுகின்றனர். எங்க கட்சிதாங்க எந்தக் காலத்திலேயும் அதுக்குள்ள பலத்தைப் பயன்படுத்தி மக்கள் பிரச்சினையை முன்னெடுத்து அதுக்கான போராட்டம் பண்ணிக்கிட்டு இருக்கு. வேற எந்த கட்சியாச்சும் எங்க கட்சி செய்யிறது சரின்னு அவங்களா வந்து முட்டுக் கொடுக்கிறாங்களா? அப்படி வந்தாலும் அவங்களுக்கு என்னா ஆதாயம்ன்னு பார்த்து அதை சாதகமாச் செஞ்சிக்கிட்டு எங்களை அம்போன்னு விட்டுட்டுத்தான் போறாங்க. இப்பைக்கும் போராட்டம் மறியல்ன்னு செஞ்சிக்கிட்டு இருக்கோம்"(97) என்று கூறுவதிலிருந்து அவர்களின் உண்மையான நோக்கம் உணரமுடிகிறது.

திருமணம் செய்து கொள்ளாமல் பொதுவாழ்க்கைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறார் சுந்தரமூர்த்தி ஆசிரியர். தீண்டாமைக்கு எதிராகப் போராடும் இவர், தன் சொல்லில் மட்டும் காட்டாமல், செயலிலும் காட்டுகிறார். வாழ்க்கையை இழந்து வாடிக்கொண்டிருக்கும் கீழ்ச்சாதிப் பெண்ணான விசாலாட்சிக்கு மறுவாழ்வு கொடுக்கிறார்.

திருமணமாகாதப் பெண்களுக்கும் சிக்கல், திருமணமானப் பெண்களுக்கும் சிக்கல் என்பது ஒருபுறம் இருக்க, திருமணத்திற்குப் பின் கணவனை இழந்த பெண்களின் நிலை மேலும் தவிப்பிற்குரியதாக அமைந்து விடுகின்றன. அவர்களை உயிரிகளாகக் கருதுவதற்கே சமூகம் இசைவாக இல்லையோ என்று எண்ணும் நிலை உள்ளது. ஆண்களின் ஏளனப் பொருளாகவும் ஏலப் பொருளாகவும்

அவர்கள் நடமாட வேண்டியுள்ளது. பெரிய துன்பங்களை அவர்கள் விலைகொடுத்தாவது வாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது; பாதுகாப்பிற்கென அவர்களுக்கு ஆண் துணை தேவைப்படுகின்றது.

தாழ்த்தப்பட்டோருக்காகத் தாழ்த்தப்பட்டவர்கள் போராடுவதைவிட மேல்வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் போராட முன்வரவேண்டும். அப்பொழுதுதான் ஏற்றத்தாழ்வுகள் குறையும். மேல்சாதியினராக இருக்கும் வடிவேலு, பொதுவுடைமை இயக்கத்தில் சேர்ந்து ஏழை விவசாயக் கூலித்தொழிலாளர்களுக்காகக் கூலி உயர்வு வேண்டிப் போராடுகிறார். அதற்காகத் தான் நடத்தி வந்த தேனீர் கடையையும் இழக்க வேண்டியதாகிறது.

இன்றைய சூழலில் பெரும்பாலோர் பகட்டிற்காகவும் விளம்பரத்திற்காகவும் தன்னலத்திற்காகவும் பொது வாழ்வை மேற்கொள்கின்றனர். அவ்வாறு இல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உரிமைக்குரல் கொடுப்பது, அம்மக்களை விழிப்புணர்வு அடையச் செய்து போராட வைப்பது போன்றவற்றைப் பொதுவுடைமை இயக்கங்கள் நடத்தி வருவதையும், ஐம்பது காசு கூலி உயர்வுக்காக தங்கள் இன்னுயிரையும் ஈந்த மக்களின் வாழ்க்கையையும் ‘செந்நெல்’ என்ற புதினம் வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

மதம்

'மதம்' என்றால் 'வெறி' என்றும் பொருள் உண்டு. 'அரிய சமயம் ஒரு கோடி' என்பர் அருணகிரிநாதர். "சமயம் ஒரு வாழ்வியல் கலை. அது வாழ்வாங்கு வாழக் கற்றுத்தருகிறது. சமயம் நம்பிக்கையின் பாற்பட்டது. நல்லறிவின் பாற்பட்டது. சமயம் உயிரியல், அறிவியல், நம்முடைய சமயநெறி அச்சத்தின் பாற்பட்டது அன்று! அன்பு வழிப்பட்டது. அறிவு வழிப்பட்டது. வழிபடுதல் என்ற சொல் வழிப்படுதல் என்று பொருள்படும். அதாவது கடவுள் நெறி நிற்றல் என்பதாகும். கடவுள் வழிபாட்டில் இறைவனை எண்ணுதல், சிந்தித்தல் என்பதே முக்கியமானது"[98] என்பர்.

சோலை சுந்தரபெருமாள் புதினங்களில், அப்பகுதி மக்கள் இந்து மதத்திலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறுகிறார்கள். மதம் மாறினலும் சாதி ஒழியவில்லை என்பதையும் கோடிட்டுச் செல்கிறார்.

தொழில்

ஆய்வுப் புதினங்கள் தஞ்சை வட்டார மக்கள் உழவுத் தொழிலை முக்கியமாகக் கொண்டுள்ளனர் என்பதைக் காட்டுகின்றன. நிலம் வைத்திருப்பவர்கள் பண்ணை முதலாளிகளாகவும், நிலம் அற்ற விவசாயிகள் கூலிகளாகவும் காணப்படுகின்றனர். அரசாங்க வேலைகளில் சிலர் உள்ளனர். இழவு சொல்லிச் செல்வது, இழவு வீட்டில் (இழவு என்பது இறப்பு

நிகழ்ச்சியாகும்) தப்படித்தல், கோயில்களில் தப்படித்தல், வெட்யான் வேலை, செருப்புத் தைத்தல், சலவைத் தொழில், வண்டியடிக்கும் தொழில் போன்ற தொழில்களும் அவ்வட்டார தாழ்த்தப்பட்ட மக்களால் மேற்கொள்ளப்படுவதைப் புதினங்களின் மூலம் அறியப்பெறுகிறது.

பொழுபோக்கு

வயல்களில் வேலை செய்யும் கூலி விவசாயிகள் தங்கள் களைப்புத் தீர்வதற்காகப் பாட்டுப்பாடி வேலை செய்கின்றனர்.

'ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது - அதில்
ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது!'

என்பதற்கேற்ப நாற்று நடவு நடக்கும் போது,

"நண்ணே நானே நன்னே - ஆ
நன்னே நன்னே
சம்பா விதைபோட்டு
சரியன நாத்து விட்டேன்டீ
தளுக்குப் பேசும்
பம்பாய்ச் சேலைக்காரி
பக்குவமாய் நட்டுவாடி..."(99)

என்று பாடி வேலை செய்கிறார்கள். இதைப்போல ஏற்றம் இறைக்கும் போது,

"ஆத்தோரம் ஊத்து வெட்டி

ஆடுகாலு மர ஏத்தம் வச்சு - ஒம்

புருஷன் எறைக்கும் தண்ணீ - ஏ புள்ள

செல்லம்மா!

மாம்பழமே சக்கரையே

ஏ புள்ள! செல்லம்மா!

புருஷன்கிட்ட மல்லுக்கு தான்

நிண்ணு பாரேண்டி!"(100)

என்று பாடுகிறார்கள்.

"ஏ! நாவப்பழமே - அடி

நான் பூசும் சந்தனமே

ஏலம் கிராம்பே - உன்ன

என்ன சொல்லிக் கூப்பிடுவேன் - எனக்கு

காமத்தலை வலியடி - புள்ளே

கண்சிவந்த மண்டை இடி

மாயத் தலைவலியடி - புள்ள

மருந்திட்டும் நிக்கலியே"(101)

என்று வண்டியோட்டி பாடும் பாட்டும் அவ்வட்டார மக்களிடையே உள்ளது. தொழிற்பாடல்களாக இருந்தாலும், பாடுபவர்களின் மனநிலையை அப்பாடல்களின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

தொகுப்புரை

ஆய்வுக்குள்ளாகும் புதினங்களில் ஆசிரியர் குடும்பத்தளம், சமூகத்தளம் என்னும் நிலைகளிலிருந்து சிக்கல்களை அடையாளம் கண்டு தீர்வுகள் கூறுகின்றார்.

சமூகக் கட்டுக்கோப்பிற்குக் குடும்பம் என்னும் அலகு மிகவும் செம்மையாக அமைதல் வேண்டும். குடும்ப வாழ்வுக் குலைவு ஒருவரை வழிதவறச் செய்துவிடும் என்ற உண்மை சோலை சுந்தரபெருமாள் படைப்புகளின் வழி அறியலாகிறது.

உயர்சாதி வகுப்பினராகத் தங்களைக் கருதிக் கொண்டிருப்பவர்களில் சிலர் பொருளாதார வளர்ச்சி பெற்று முன்னேறிக் கொண்டிருப்பர்களாகவும், ஒரு சிலர் பொருளாதார வளர்ச்சி பெறாமல் கூலி வேலை செய்து வாழ்ந்து வருவபவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். பொருளாதாரத்தில் பின்தங்கி இருந்தாலும் சாதியப் போக்கில் மாற்றம் அடையாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

ஒடுக்கப்பட்டவர்களின் குடிசைகள் ஊரின் ஒதுக்குப்புறத்தில் அமைந்திருக்கின்றன. சேரிகள் என அழைக்கப்படும் அவ்விடம் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. அடிப்படை வசதிகள் ஏதுமின்றி கீழ்த்தட்டு மக்களின் வாழ்விடங்கள் இருப்பதை ஆசிரியர் இடம் சுட்டி விளக்கியுள்ளார்.

பாதுகாப்பற்ற சூழலில் வாழும் மக்களை விளிம்பு நிலை மக்கள் என்றழைக்கின்றனர். அவர்களின் குடும்பங்களில் மூன்று வேளை உணவினை அன்றைய தினக்கூலியின் மூலம் நிறைவு செய்கின்றனர். ஒரு சிலர் தங்களுடைய முதலாளியின் வீட்டின் பின்புறம் சென்று அவர்கள் போடும் பழைய சோற்றை வாங்கிக் கொண்டு வந்து சாப்பிடும் தன்மையையும் காண முடிகிறது.

‘கொடிது கொடிது வறுமை கொடிது என்பது போல, காவிரியில் தண்ணீர் வரத்து இல்லாததால், வேளாண்மை பொய்த்துச் சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாமல் வறுமையில் காலம் தள்ளும் இவ்வட்டார மக்கள் எலிக்கறிச் சாப்பிடுவதையும் ஆசிரியர் தம் புதினத்தில் பதிவு செய்துள்ளார்.

பெண்கள் குடும்பச் சூழலில் சிக்கித் தவிர்ப்பவர்களாகவும், ஆண்களுக்கு இணையாக நின்று வேலை செய்பவர்களாகவும், கணவன் தன் வற்புறுத்தலால் ஆண் வாரிசு கிடைக்கும் வரைத் தொடர்ந்து குழந்தையைப் பெறும் இயந்திரமாகவும் காணப்படுகிறார்கள். பிறந்த வீட்டில் ஆண்களுக்குக் கொடுக்கப்படும் உரிமை பெண்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யாதலால் ஒரு குறுகிய வட்டத்திற்கு உட்பட்ட பட்டறிவே பெண்களுக்குக் கிடைக்கின்றது. அதற்கேற்ப அவர்களது மனப்பதிவும் அமைகின்றது.

கல்வியறிவு பெறுவதற்குரிய வாய்ப்புகள் மிகுந்திருப்பினும் பெற்ற அறிவினை வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமை பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. கூடுதலாகப் பெறும் கல்வியும் அவர்களுக்குக் கூடுதலான சுமையைத்தான் தருகின்றது. ஒவ்வொரு கட்டத்திலும் பெண்கள் பெருஞ் சிக்கல்களையே நேர்கொள்கின்றனர். இவற்றையெல்லாம் சோலை சுந்தரபெருமாள் புதினங்கள் மனம் நெகிழும் வண்ணம் வெளிக் கொணர்கின்றன.

கீழ்சாதிப் பெண்களை மேல்சாதியினர் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்குகின்றனர். உடலுறவில் மட்டும் சாதிகள் பார்ப்பதில்லை. பாலியல் கொடுமைக்கு இணங்காதப் பெண்களைக் கொன்றும் விடுகின்றனர். சில நேரங்களில் திருட்டுப் பட்டம் கட்டி பொய் தண்டனையைக் கொடுக்கின்றனர் என்பதும் அறியப்பெறுகிறது.

தன் கணவன் தீயவழியில் சென்று பிற பெண்களிடம் தொடர்பு வைத்திருந்தாலும் அதையும் ஏற்றுக் கொண்டு ஊமைக் கண்ணகிகளாக வலம் வரக்கூடிய பெண்களையும் காணமுடிகிறது.

ஒரு ஆண் பல பெண்களை மணமுடிப்பதும், பல பெண்களுடன் தொடர்பு கொள்வதும் பெருமைக்குரிய செயலாகக் கருதப்படுவதைப் புதினங்களின் வழி அறியப்பெறுகிறது.

திருமணத்திற்குப் பின் கணவனை இழந்த பெண்களின் நிலை மேலும் தவிப்பிற்குரியதாக அமைந்து விடுகின்றன. அவர்களை

உயிரிகளாகக் கருதுவதற்கே சமூகம் இசைவாக இல்லை என்பதும், ஆண்களின் ஏளனப் பொருளாகவும் ஏலப் பொருளாகவும் அவர்கள் நடமாட வேண்டியுள்ளது. பாதுகாப்பிற்கென அவர்களுக்கு ஆண் துணை தேவைப்படுவதை விசாலாட்சி என்ற பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் நிறைவு செய்துள்ளார்.

சாதிக்கலப்பு என்பது அனைத்துச் சாதியிலும் உள்ளது. பெரும்பாலும் கீழ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே கலப்புமணம் செய்து கொள்கின்றனர். கீழ்த்தட்டு மக்களுக்குள்ளே கலப்பு மணம் நடந்தாலும், அத்தகைய திருமணங்களை அவர்களால் ஒப்புக் கொள்ளமுடியாத நிலையையும் விவரித்துள்ளார்.

திருமணத்திற்கு முன்பு பாதுகாப்பான முறையில் உடலுறவு வைத்துக் கொள்வதில் தவறொன்றும் இல்லை என்று கூறுபவர்களும் உள்ளனர். திருமணத்திற்கு முன்பே உடலுறவு கொள்ளும் பெண்களால் ஏற்படும் சமுதாய சீர்கேடுகளை (சீரழிவு) இவரின் புதினங்களில் காணமுடிகிறது.

பிறர் ஒருத்தியின் கணவரை நேசிப்பது, அவர்கள் வாழ்க்கையைக் கெடுப்பது, உடலமைப்பில் தனக்குள்ள வாய்ப்பைப் பயன்படுத்திப் பரத்தையாகச் செயல்படுவது போன்ற நிகழ்வுகளும் இப்புதினங்களில் காணப்படுகின்றன.

அவரின் புதினங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் பெற்றோர், பிள்ளைகள் அவர்களின் வாழ்க்கைச் சிக்கல், அவற்றிற்கான தீர்வுகள்

ஆகியவற்றையும், இன்றைய பொருளாதாரச் சூழ்நிலை எவ்வாறு குடும்ப உறவுகளைச் சிதைத்துச் சீரழிவு செய்கின்றன எனபதையும் காணமுடிகிறது.

பிரச்சினைகளில் தலையானது சாதிக்கொடுமை. இரண்டு மனிதர்கள் சந்தித்துக் கொண்டால் அவர்கள் பேசும் மூன்று வார்த்தைகளில் ஒன்று சாதி. ஒதுக்குப்புறங்களாக வைத்துள்ளவர்களை ஓட்டுப்புறங்களாக மாற்றுவதற்குத் தேர்தல் திருவிழாக்கள். வர்ணாசரமக் கொள்கையிலிருந்து விடுவிப்பதற்கு யாருக்கும் விருப்பமில்லை. வேர்களை வளர விட்டுவிட்டு அதன் கிளைகளை மட்டும் வெட்டுகின்ற வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

தீண்டத்தகாதவர்கள் தெருக்களில் கூட நடமாட முடியவில்லை. கடும் வெயிலில் செருப்பணிந்து செல்வதும் தடை செய்யப்பட்டது. தாங்கள் உயர்ந்த சாதியினர் என்று சொல்லிக் கொள்பவர்களைக் கண்டால் தோளின் துண்டை இடுப்பில் கட்டிக் கொண்டு கூனிக் குறுகி நடக்க வேண்டும் என்ற எழுதப்படாத சட்டங்கள் இவரின் புதினங்களில் காணப்பெறுகிறது.

கீழ்சாதியினர் கொத்தடிமைகளாக வாழ்ந்த வாழ்க்கையையும், தலைமுறை தலைமுறையாக ஒரே பண்ணையில் அடிமையாக இருந்ததையும் எடுத்துக் காட்டி, பின்னர் இம்மக்கள் சமுதாய விழிப்புணர்வு பெற்று தங்களின் உரிமைகளைக் கேட்டதையும்,

அதற்காக இன்னலுற்ற அவல நிலையையும் புதினங்களில் காணமுடிகிறது.

தந்தை பெற்ற கடனுக்குப் படித்த மகனைப் பண்ணை வேலை செய்யச் சொல்லும் பண்ணையாளர்கள், வரமறுப்பவர்களின் மேல் பொய் குற்றம் சுமத்தி தண்டனைப் பெற வைக்கிறார்கள்.

கீழ்வெண்மணியின் கொடூரம் குறித்த செய்திகளைக் காட்டும் 'செந்நெல்' என்ற புதினத்தில், கூலி உயர்வுக்காகத் தங்கள் இன்னுயிரையும் இழந்ததையும் குறிப்பிடுகிறார்.

நந்தனார் சரித்திரத்தைக் கதையின் வாயிலாகக் காட்டியுள்ளார். நந்தனை எரித்த தீயின் மிச்சம் இன்னும் உள்ளதை இவரின் புதினங்கள் பதிவு செய்துள்ளன.

கீழ்ச்சாதியினர் வசிக்கும் தெருக்களில்கூட உற்சவ மூர்த்தி உலாவர மறுக்கிறார். ஆண்டுதோறும் விழா நடக்கிறது. மேல்சாதிக்காரர்களைக் கண்டால் குனிந்து குறுகிச் செல்லும் இம்மக்களிடம் அம்மன் ஊர்வலம் வருகிறது; தெருக்களைச் சுத்தமாக வைத்திருங்கள் என்று சொன்னால் செய்யமாட்டார்களா? இல்லை குளித்துச் சுத்தமாக இருங்கள் என்று சொன்னால் சுத்தமாக இருக்கமாட்டார்களா? வகுப்புவாத துரோகிகள் இன்னும் ஏமாற்று வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். சாமி ஊர்வலம் சேரிக்குள் செல்லாததற்கு மேல்சாதியினரால் போலியான காரணம் கற்பிக்கப்படுவதை அறியமுடிகிறது.

மேல்சாதிக்காரர்கள் வணங்கும் தெய்வங்கள் கோயிலின் உள்ளே இருப்பதையும், கீழ்ச்சாதிக்காரர்கள் வணங்கும் தெய்வங்கள் காத்தன், காத்தவராயன், முனியாண்டி, அய்யனார் போன்ற தெய்வங்கள் கோயில் வாசலில் இருப்பதை இன்றும் காணமுடிகிறது.

தங்களைக் காட்டிலும் கீழ்ச்சாதியைச் சேர்ந்தவர்களைச் (முதியவர்களாக இருந்தாலும்) சாதிப் பெயரைச் சொல்லி அழைக்கும் போது அவர்கள்படும் மன உளைச்சலைத் 'தப்பாட்டம்' புதினம் காட்டுகிறது.

பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாகி வரும் தாழ்த்தப்பட்ட பெண்களின் நிலையை 'செந்நெல்' புதினம் எடுத்துக்காட்டுகிறது. 'செல்வி' என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணை வழிமறித்து ரெங்கபாஷ்ய நாயுடு தகராறு செய்து கையைப் பிடித்து இழுக்க, அவள் உதறி விட்டு 'உன் வீட்டுப் பெண்ணை என் வீட்டு ஆணுக்குக் கூட்டிக் கொடுத்தால் நான் உன்னிடம் வருகிறேன்' என்று சாடும் புரட்சிகரமானப் பெண்ணைப் படைத்து, குட்டக் குட்டக் குனிந்த காலம் போச்சு என்பதை முற்போக்கான சிந்தனையில் சமூக மாற்றத்தின் தீர்வினைத் தருகிறார்.

பழக்க வழக்கங்கள் என்ற முறையில் சில நடைமுறைகளைப் புதினங்களில் காணப்பெறுகிறது. காலையில் தூங்கி எழுந்தவுடன் கண்ணாடியைப் பார்த்தால் தந்தை-தாய் போல குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கை, சோதிடம் பார்ப்பது, முப்பது நாட்கள்

கழிந்தவுடன் குழந்தை பெற்றத் தாய்க்குத் தலைக்குத் தண்ணீர் ஊற்றுவது, பூப்பெய்திய பெண்ணிற்குச் சடங்கு செய்வதும், மாமன் சீர் கொண்டு வருவதும், நினைத்த காரியம் நடக்க வேண்டும் என்பதற்காகக் கோயிலில் பூக்கட்டிப் பார்த்தல், நிறைமாத கர்ப்பிணி ஆசைபட்டதை வாங்கிக் கொடுக்கவில்லை என்றால் பிறக்கும் குழந்தைக்கு காதில் சீழ்வடியும் என்ற நம்பிக்கையும் அவர்களின் பழக்க வழக்கங்களாக இருப்பதை அறிய முடிகிறது.

புதினங்களில் காணப்படும் வட்டார மக்கள் தங்களைப் பொதுவுடைமை இயக்கத்தில் இணைத்துக் கொண்டுள்ளனர். இவ்வியக்கம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வீதிகளில் வந்து போராடும் இயல்பினராகக் காணப்படுகின்றனர்.

தாழ்த்தப்பட்டோருக்காகத் தாழ்த்தப்பட்டவர்கள் போராடுவதைவிட மேல்வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் போராட முன்வருவதையும் அறிய முடிகிறது.

இன்றைய சூழலில் பெரும்பாலோர் பகட்டிற்காகவும் விளம்பரத்திற்காகவும் தன்னலத்திற்காகவும் பொது வாழ்வை மேற்கொள்கின்றனர். அவ்வாறு இல்லாமல், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக உரிமைக்குரல் கொடுப்பது, அம்மக்களை விழிப்புணர்வு அடையச் செய்து போராட வைப்பது போன்றவற்றைப் பொதுவுடைமை இயக்கங்கள் நடத்தி வருவதையும், ஐம்பது காசு கூலி உயர்வுக்காக தங்கள் இன்னுயிரையும் ஈந்த மக்களின்

வாழ்க்கையையும் ‘செந்நெல்’ என்ற புதினம் வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

சோலை சுந்தரபெருமாள் புதினங்களில், அப்பகுதி மக்கள் இந்து மதத்திலிருந்து கிறித்துவ மதத்திற்கு மாறுகிறார்கள். மதம் மாறினலும் சாதி ஒழியவில்லை என்பதும் உணர்த்தப் பெறுகிறது.

ஆய்வுப் புதினங்களில் தஞ்சை வட்டார மக்கள் உழவுத் தொழிலை முக்கியமாகக் கொண்டுள்ளனர். இழவு சொல்லிச் செல்வது, தப்படித்தல், வெட்டியான் வேலை, செருப்புத் தைத்தல், சலவைத் தொழில், வண்டியடிக்கும் தொழில் போன்ற தொழில்களும் அவ்வட்டார கீழ்நிலை மக்களால் மேற்கொள்ளப்படுவதைப் புதினங்களின் மூலம் அறியப்பெறுகிறது.

வயல்களில் வேலை செய்யும் கூலி விவசாயிகள் தங்கள் களைப்புத் தீர்வதற்காகப் பாட்டுப்பாடி வேலை செய்வதையும் ஆசிரியர் புதினங்களில் பதிவு செய்துள்ளார் என்பதும் பெறப்படுகிறது.

சான்றெண் விளக்கம்

1. சி. தில்லைநாதன், இலக்கியமும் சமுதாயமும், ப.20.
2. அ.மு. பரமசிவானந்தம், சமுதாயமும் பண்பாடும், ப.24.
3. சி.இ. மறைமலை, இலக்கியமும் சமூகவியலும், ப.36.
4. வெ. கனகசுந்தரம், ஜெகசிற்பியனின் சமூகப்புதினங்கள், ப.126.
5. மா. இராமலிங்கம், இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம், பக்.28-30.
6. ந. சஞ்சீவி, இலக்கிய இயல், பக்.50-51
7. எஸ். தோதாத்ரி, தமிழ் நாவல்கள் சில ஆய்வுகள், ப.36.
8. கா. சிவத்தம்பி, நாவலும் வாழ்க்கையும், ப.61
9. தா. ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ப.76.
10. மா. இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப.103.
11. க. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும், ப. 25.
12. பாஸ்கல் கிஸ்பர்ட், சமூகவியல் அடிப்படைக் கோட்பாடுகள், ப.96.
13. மார்க்ஸ் ஏங்கெல்ஸ், தேர்வு நூல்கள் தொகுதி 2, ப. 956.
14. திருக்குறள் 45.
15. கா. அப்பாத்துரை, இன்பத்துள் இன்பம், ப.18.
16. நஞ்சை மனிதர்கள், ப.6.
17. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.15.
18. தப்பாட்டம், ப.24.
19. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.41.

20. தப்பாட்டம், ப.6.

21. பெருந்திணை, ப.29.

22. மேலது, ப.136.

23. மேலது, பக்.161-162.

24. திருக்குறள், 56

25. இரா. பிரேமா, பெண்ணியம், ப.2.

26. பொன்னம்பல அடிகளார், சமயவாழ்வு, பக்.154-155.

27. நஞ்சை மனிதர்கள், ப.200.

28. பெருந்திணை, ப.75.

29. புலவர் செந்துறை முத்து, தமிழர் வாழ்வியல், ப.29.

30. நஞ்சை மனிதர்கள், ப.20.

31. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.142.

32. மேலது, பக்.142-143.

33. தாயம்மாள் அறவாணன், பெண் இன்று நேற்று அன்று, ப.23.

34. தொல். பொருள். செய். நூ. எ. 179.

35. நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், நூ. எ. 202.

36. கலித்தொகை, பா.95.

37. ஒரே ஒரு ஊர்ல, ப.43.

38. மேலது, ப.43.

39. நஞ்சை மனிதர்கள, ப.203.

40. பெருந்திணை, ப.153.

41. நஞ்சை மனிதர்கள், ப.187.

42. மேலது, ப.196.

43. மேலது, ப.233.

44. திருக்குறள், 67

45. பெருந்திணை, ப.8.

46. மேலது, ப.19.

47. நஞ்சை மனிதர்கள், பக்.10-11.

48. ஒரே ஒரு ஊர்ல, ப.24.

49. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.31-32.

50. மேலது, ப.156.

51. மேலது, ப. 16.

52. மேலது, ப.143.

53. தப்பாட்டம், ப.14.

54. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.93.

55. பெருந்திணை, ப.174.

56. க. மோகன், பொன்னான அடிகளார், ப.30.

57. புறநானூறு, பா. எண் 35, பா. வரி 7, ப.510.

58. க. மோகன், பொன்னான அடிகளார், பக்.30-31.

59. பாரதியார் கவிதைகள், சுயமரியாதை, ப.468.

60. மேலது, சுதந்திரப்பள்ளு, ப.168.

61. பாரதிதாசன் கவிதைகள், சுயமரியாதை, ப.468.

62. பெருந்திணை, பக்.9-10.

63. செந்நெல், ப.69.

64. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், பா.வரி.14.

65. மரக்கால், ப.53.

66. மேலது, ப.269.

67. தப்பாட்டம், ப.21.

68. மேலது, ப.194.

69. செந்நெல், ப.94.

70. தப்பாட்டம், ப.14.

71. மேலது, ப.112.

72. செந்நெல், ப.99.

73. மேலது, ப.100.

74. மேலது, ப. 179-180.

75. தப்பாட்டம், ப.268.

76. நஞ்சை மனிதர்கள், ப.5.

77. மேலது, ப.206.

78. ஒரே ஒரு ஊர்ல, ப.75.

79. மேலது, ப.115.

80. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.166.

81. மேலது, ப.158.

82. மேலது, ப.171.

83. மரக்கால், ப.188.

84. செந்நெல், ப.116.

85. க. மோகன், பொன்னான அடிகளார், பக்.32-33.

86. பெருந்திணை, ப.28.

87. நஞ்சை மனிதர்கள், ப.37.

88. மேலது, ப.134.

89. மேலது, ப.141.

90. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.28.

91. மேலது, ப.77.

92. மேலது, ப.151.

93. தப்பாட்டம், ப.33.

94. பெருந்திணை, ப.114.

95. செந்நெல், ப.176.

96. பெருந்திணை, ப.33.

97. மேலது, ப.61.

98. பொன்னம்பல அடிகளார், சமய வாழ்வு, ப.167.

99. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.65.

100. ஒரே ஒரு ஊர்ல, ப.44.

101. மேலது, ப.52.

இயல்-3

பாத்திரப்படைப்பு

இயல் - 3

பாத்திரப்படைப்பு

ஒரு புதினத்தின் வெற்றிக்குப் பல சிறப்பம்சங்கள் இருந்தாலும், குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றுத்திகழ்வது பாத்திரப் படைப்பேயாகும். கதை நிகழ்ச்சியைப் படைக்கும் படைப்பாசிரியர் அக்கதைக்கேற்ற பாத்திரங்களை உருவாக்குகிறார். கதையின் வளர்ச்சிக்கு அப்பாத்திரங்கள் உற்ற துணையாகின்றன. சங்ககால இலக்கியங்களில் 'சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார்' என்ற நிலையில் மாந்தர்களின் பொதுப்பெயராகவே இருந்தது. அந்நிலையிலிருந்து மாறி ஒவ்வொரு காலகட்டத்திலும் வளர்ச்சி பெற்ற இலக்கியங்களில் பெயர்களைக் காணமுடிகிறது. அக்கதையின் பொருளுக்கு உருவம் கொடுப்பதும் உயிரோட்டம் தருவதும் பாத்திரங்களாகும். இத்தகைய பாத்திரப் படைப்பு சோலை சுந்தரபெருமாளின் புதினங்களில் இடம் பெறுமாற்றைக் காண்பது இவ்வியலின் நோக்கமாகும்.

பாத்திரப்படைப்பு - விளக்கம்

புதினத்தில் அதிகமான பாத்திரங்கள் இடம்பெறும். கதைப்பொருளை மறந்தாலும் அக்கதையில் இடம் பெறும் பாத்திரங்கள் என்றும் மனதில் நிலைத்து நிற்கும். அப்பாத்திரப்படைப்பு குறித்துப் பல்வேறு அறிஞர்களின் கருத்து நோக்கத்தக்கதாகும்.

"பாத்திரங்கள் நம்பவைப்பவையாக அமைய வேண்டும். அப்பாத்திரங்கள் உண்மை மாந்தர்கள் பெற்றிருப்பது போலவே கோபம், பொறாமை, பிற மனித உணர்ச்சிகள் ஆகியவற்றைப்

பெற்றவைகளாகப் படைக்கப்பட்டால் தான் நம்பக்கூடியவைகளாக அமையும்"[1] எனக் கூறுவர். இக்கருத்துக்கள் புதினத்தின் பாத்திரப் படைப்பினை விளக்குவனவாக அமைகின்றன.

> "கதைக்குப் பொருளையும், சிறப்பையும், உயிரோட்டத்தையும் கொடுக்கிற ஒன்றுதான் பாத்திரம் என்று மேரன் எல்வுடு விளக்கம் தருகிறார்"[2]

எனச்சுட்டுவார்.

"நாவல் என்பது நவலாசிரியனின் தனிப்பட்ட அனுபவத்தின் வெளிப்பாடாகும். ஒவ்வொரு நாவலாசிரியனும நாவல் என்ற மாளிகையின் ஒரு ஜன்னலின் வழியே உலகைக் காண்கிறான். அவன் காணும் கோணத்தின் பாத்திரங்கள் படைக்கப்படுகின்றன"[3]என்கிறார் ஹென்றி ஜேம்ஸ். புதின ஆசிரியர்கள் தங்களின் அனுபவத்தின் மூலமாக உண்மைக் கதையை இலக்கியமாக்குகின்றனர் என்பதும் புலனாகிறது.

> "ஒரு முன் மாதிரியின்றித் தன்னால் பாத்திரங்களை முழுக் கற்பனையாகப் படைக்க இயலாது"[4]

என்கிறார் துர்க்கனேவ். இவ்வறிஞர்களின் கருத்து மூலம் முழுமையான கற்பனைப் பாத்திரத்தைப் படைக்க முடியாது. நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் அனுபவப்பட்டும் தான் படைக்க முடியும் என்பதை அறிய முடிகிறது.

பாத்திரங்கள் பல வகைகளாகப் பிரித்துப் படைக்கப்படுகின்றன என்பதை ஜோனதன்ராபின் என்பவர் "பாத்திரப் படைப்பு ஒரே மாதிரி அமைவதில்லை. சில பாத்திரங்களைத் தம் அனுபவத்தினால் உணர்ந்து கொள்கிறோம். சில பாத்திரங்களில் நாம் ஐக்கியமாகிறோம். சில அண்டை வீட்டுக்காரர்களாகத் தோற்றமளிக்கின்றனர்"[5] என்று கூறுகிறார்.

> "மனிதனைவிடவும் சிறந்த கருத்துக்கள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மனிதனே எல்லாவற்றையும் உருவாக்குபவனாக எனக்குத் தோன்றுகிறான். புனிதம் வாய்ந்த ஒன்று உள்ளதென்றால் தன்னைப் பற்றிய நிறைவின்மையான மனிதப் பண்பு என்பேன். மனிதன் தற்போதைய நிலையினின்றும் மேல்நோக்கி உயரவேண்டும் என்று கருதுவதையே புனிதமானதென்பேன்"[6]

என்ற மாக்ஸிம் கார்க்கியின் கூற்று இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

> தாக்கரே என்பார் "நான் பாத்திரங்களைக் கட்டுப் படுத்துவதில்லை. நான் அவர்களுக்குக் கட்டுப்பட்டு விடுகிறேன். அவர்கள் விரும்பிய வண்ணம் என்னை அழைத்துச் செல்கின்றனர்"[7]

என்று பாத்திரத்தின் இன்றியமையாமையைச் சுட்டிக் காட்டுகின்றார்.

"பாத்திரங்களின் இயக்கத்தில் கதைப்பின்னல் உருவாகிறது. கதைப் பின்னலினால் பாத்திரங்கள் உருவாகின்றன"[8]

இவை இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தவையாக அமைகின்றன எனறார் அல்போன்சா.

> "கதை நிகழ்ச்சிகளின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், முடிவிற்கும் இன்றியமையாது அமைந்தது மாந்தர் மட்டுமே. புதினத்தில் கதை மாந்தராக இடம்பெறுதல் வேண்டும். கதை மாந்தரின் எண்ணிக்கை எண்ணிலாது அமையின் புதினம் மட்டுமே புரியும்"[9]

என்கிறார் பிரபாகரி.

> "மனித மனத்தில் ஆழத்தில் புதைந்து கிடக்கும் பண்பாடுகளை எடுத்து விளக்கும் பாத்திரங்களாக இருத்தல் வேண்டும்"[10]

என்கிறார் ஞானசம்பந்தன்.

> "நாவல் கூறுகளுள் முதன்மையனதும் சிறப்புமிக்கதும், நெஞ்சைக் கொள்ளை கொள்ளுவதும் பாத்திரப்படைப்பே (Characterzation) ஆகும். ஒரு நாவலுக்கு கரு (Plot) இன்றியமையாததே ஆயின் அது கதையின் எலும்பே (Skeleton) ஆகும். கருவினும் சிறப்பு வாய்ந்ததும் ஒன்று உயிரையும் தரவல்ல ஒன்று உண்டு; அது பாத்திரம் ஆகும்."[11]

எனப் புதினத்தின் உயிரோட்டம் பாத்திரத்திலேயே அடங்கியுள்ளது என்கிறார் மோகன். புதினத்தின் வெற்றிக்கும், சிறப்பிற்கும் பாத்திரப் படைப்பு முக்கியமானதாக அமையும் என்பதை,

"ஒரு நாவல் கதைப் பகுதியினால் எந்த அளவிற்குச் சிறக்கிறதோ, அதே அளவிற்குப் பாத்திரப் படைப்பினாலும் சிறக்க முடியும்"[12]

என்ற கருத்தால் அறியலாம்.

பாத்திரப்படைப்புக் குறித்துத் திறனாய்வாளர் ந.பிச்சமுத்து அவர்கள்,

"கதைத்திட்டத்தை எலும்புக்கூடு என்றால் அக்கூட்டுக்கு உயிரையும் பொருளையும் பொலிவையும் தருவது பாத்திரமே ஆகும்"[13]

என்கிறார். ஜகநாதன் என்பவர்,

"அசாதரணம் என்பது நிகழ்ச்சிகளில் இருக்க வேண்டுமேயன்றி பாத்திரங்களில் இருக்கக்கூடாது"[14]

என்கிறார்.

முதன்மைப் பாத்திரம்

புதினத்தில் முதன்மைப்பாத்திரம் என்பது மையக்கருத்தை விளக்குவனவாகவும் கதை முழுவதும் பங்குபெறுவனவாகவும் திகழ்கின்றது. அப்பாத்திரங்கள் நல்ல பண்புகளைக் கொணடர்களாகத் திகழ்வர். ஆண், பெண் என இருபாலரும் முதன்மைப் பாத்திரத்தில் இடம்பெறலாம். இப்பாத்திரத்தைச் சுற்றியே கதையானது பின்னப்பட்டிருக்கும்.

> "தலைமைப் பாத்திரம் என்பது ஒரு குறிப்பிட்ட நாவலில் பெரும் செயல்களைச் செய்பவராகவும் இருப்பர்"[15] என்றும்,

> "தலைமை மாந்தர்கள் குறிக்கோள் மாந்தர்களாகவும் படைக்கப்படலாம் நடப்பியல் மாந்தர்களாகவும் அமையலாம்"[16] என்றும்,

> நாவல் சாதாரண மனிதனின் வாழ்க்கையை உள்ளது உள்ளவாறே காட்டுவது. எனவே வாழ்க்கையில் ஒருவர் சந்திக்கும் மனிதர்களைப் போன்றே நன்மை, தீமை, அழகு, அழகின்மை, குறை நிறைகளோடு தலைமைப் பாத்திரங்கள் படைக்கப்படலாம்"[17]

என்றும் கோ.வே.கீதா குறிப்பிடுகின்றார்.தலைமை மாந்தர் குறித்து டபிள்யு.ஜெ.ஹார்வி என்பவர்,

> "தலைமை மாந்தர்கள் ஒரு வகையில் நாவலின் விளைபயன் - முடிவுப் பொருள் எனலாம். அவர்களுக்காகவே நாவல் எழுதப்படுகிறது. அவர்களை, அவர்களின் குணாதிசயங்களை வெளிப்படுத்துவதே நாவல்"[18] என்கிறார்.

நடமாடும் பாத்திரங்களைப் படைப்பதில் ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்கள்

> "பாத்திரப்படைப்பு என்பது வெறும்பெயர் சூட்டி விடுவதாலோ, அங்கவருணனை நடத்திவிடுவதாலோ அமைவது அல்ல. மனம், அறிவு, சிந்தனை, குண

இயல்பும், சூழ்நிலைகளின் போது வெளிப்படும் உணர்ச்சிகள் இவற்றையெல்லாம் கூர்ந்து அறிந்து அனுபவமாக வெளியிடுவதைக் காட்டுவதாகும்"[19]

என்று கூறுகிறார். எனவே பாத்திரமானது நடைமுறை மாந்தர்களைப்போல் உயிரோட்டமான ஒன்றாகும். முதன்மைப் பாத்திரத்தைப்பற்றி மா.இராமலிங்கம் அவர்கள்,

"தான் வாழும் சமூகத்துடன் ஏதோ ஒரு வகையில் முரண்படுகிறவன் எவனோ அவனே நாவல் நாயகனாக இருக்க வேண்டும் என்பவர் சிலர்"[20]

என்று கூறுகிறார்.

இவ்வாறாகத் தலைமைப் பாத்திரங்கள் குறித்துப் பலவிதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன. தலைமைப் பாத்திரங்கள் செயல்படக்கூடிய தன்மையை வைத்தும், அவர்களின் பண்பு நலன்கள் இலட்சியம் கொள்கைகளை வைத்தும், உணர்வுகளை வைத்தும் வாசகர்களின் மனதில் இடம் பிடிக்க வைத்துவிடுகின்றனர் படைப்பாளர்கள்.

முதன்மைக் கதாபாத்திரங்கள் அவர்களின் பண்பு நலனுக்கேற்றவாறு கீழ்வருமாறு பிரித்தறியலாம்:

1.1 சாதிய கட்டுமானத்தைத் தகர்த்தெறிய நினைப்பவர்கள்

சின்னச்சாமி - (உறங்கமறந்த கும்பகர்ணர்கள்)

பெரியான் - (செந்நெல்)

மதுக்கன்பகடை - (தப்பாட்டம்)

1.2 மனைவியை இழந்தவர்களின் மனக்குமுறல்

ஆறுமுகம் - (பெருந்திணை)

வெள்ளைச்சாமி - (நஞ்சை மனிதர்கள்)

1.3 உயர்ந்த உள்ளத்தால் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்கள்

இராஜாமணி - (உறங்க மறந்த கும்பகர்ணர்கள்)

வடிவேலு - (செந்நெல்)

சுந்தரமூர்த்தி வாத்தியார்- (தப்பாட்டம்)

கண்ணுச்சாமி - (செந்நெல்)

தோழப்பன் - (தப்பாட்டம்)

1.4 அவலநிலையால் மூலையில் முடங்கிவிடாத பெண்

விசாலாட்சி - (தப்பாட்டம்)

1.5 அடித்தட்டு மக்களின் வாழ்வில் அக்கறை கொண்டவர்

சிவசங்கரன் பிள்ளை - (பெருந்திணை)

1.6 கணவன்மார்களின் நேசத்திற்கேற்ற மனைவியர்

தங்கம் - (உறங்க மறந்த கும்பகர்ணர்கள்)

ஆராயி - (செந்நெல்)

வேலாயி - (தப்பாட்டம்)

நீலாயதாட்சி - (நஞ்சைமனிதர்கள்)

ஆச்சியம்மாள் - (ஒரே ஒரு ஊர்ல)

செல்லம்மாள் - (ஒரே ஒரு ஊர்ல)

1.7 அரசியல் மோகத்தால் இல்லறத்தை இழந்தவன்

குப்புச்சாமி - (நஞ்சை மனிதர்கள்)

1.8 பங்காளிச் சண்டையால் பகைமை கொண்டவர்கள்

கோவிந்தசாமி பிள்ளை,

சோமுப்பிள்ளை - (நஞ்சை மனிதர்கள்)

1.9 குடும்பப் பிரச்சினையால் இறந்தவர்கள்

சாவித்திரி, அங்கம்மாள் - (நஞ்சை மனிதர்கள்)

1.10 கல்விகற்ற பெண்களின் நிலை

திலகா - (பெருந்திணை)

காயத்திரி - (நஞ்சை மனிதர்கள்)

1.11 பெருந்தெய்வ வழிபாட்டில் பித்தானவர்கள்

நந்தன் , மருதன்

மேற்கூறியவாறு பிரித்து அவர்களின் குணநலன்களை ஆராயலாம்.

1.12 சாதியக் கட்டுமானத்தைத் தகர்த்தெறிய நினைப்பவர்கள்

> "சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
> நீதிவழுவா நெறிமுறையின் - மேதினியில்
> இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
> பட்டாங்கில் உள்ளபடி"[21]

என்ற நீதிநூற்கேற்பவும்,

> "சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
> தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"[22]

என்ற பாரதியார் வரிகளுக்கேற்பவும், சாதிய கலப்பு மூலமாகச் சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளை மாற்றி அகற்ற நினைப்பவர் உறங்க மறந்த கும்பகர்ணர்களில் வரும் சின்னச்சாமி, அடித்தட்டு மக்களிடமே அதிகமாகப் பழக்கம் வைத்திருக்கிறார்.

தன்னுடைய பண்ணை அடிமையான அய்யாவு வீட்டிற்கு மூளைவளர்ச்சி குன்றிய மகனை அனுப்புகிறார். இவ்வாறு அனுப்புவதற்கு மூத்த மகனிடமிருந்து எதிர்ப்பு வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் கீழ்ச்சாதிப் பெண்களிடம் பேசுவதையும், பழகுவதையும் தடுக்கவில்லை. மாறாக அவனுக்கு அங்குதான் அன்பான அரவணைப்பு கிடைப்பதாக நம்புகிறார். அய்யாவுவின் மகள் மருதாயியின் சடங்கிற்குத் தன் மனைவி மற்றும் மகனுடன் செல்கிறார். அவ்வாறு செல்வதே இழுக்கு என அவருடைய இனத்தார் கருதக்கூடிய சூழலில் அவர் விருந்திலும் கலந்துகொண்டு வருகிறார். இதனால் ஆத்திரம் கொண்ட மூத்தமகன் தம்பியையும், தாயையும் அடித்து துன்புறுத்துகிறான். மூத்தமகனின் போக்கைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டதாகவும், அச்சக்தியை இழந்து விட்டதாகவும் நினைத்த சின்னச்சாமி மருமகளின் பெற்றோரை வரவழைத்துச் சமாதானம் செய்ய வைக்கிறார்.

தன்னுடைய சொத்தில் மகன் இருக்கிறான். அவனையும், அவனின் மனைவியையும் எதுவேனும் செய்யலாம் என்று எண்ணாமலும் குடும்பத்திலுள்ள பிரச்சினைகளைப் வழக்குமுறை செய்து முடிவுக்குக் கொண்டுவராமலும் தங்களுடைய சிக்கலைத் தாங்களே சரி செய்வதற்காகச் சம்பந்தி வீட்டாரை அழைத்துவந்து பேசிய விதம் அவரின் பண்பை உச்சகட்டத்திற்கு இட்டுச் செல்கிறது. திருமணம் முடித்தவுடனேயே கொடுக்கல் வாங்கலில் சிக்கலாகி இரு குடும்பமே பேச்சு வார்த்தைகளில் சந்திக்காத இக்காலத்தில் சம்மந்தியின் அறிவுரையைக் கேட்டு பிள்ளைகள் நடக்க வேண்டும் என நினைப்பது அவரின் நல்ல பண்பை விளக்குகிறது.

அப்படி சம்மந்தியைக் கூப்பிடவேண்டும் என நினைத்தாலும் மனப் புழுக்கமும் அடைகிறார்.

> "என்னதான் உறவு என்றாலும் மகனுக்குப் பெண் கொடுத்தவர்களை அழைத்து வந்து சமாதானம் பேச வேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டோமே என்று சின்னச்சாமியின் மனம் குமுறிப்போனது"[23]

என்பதன் மூலம் இவர் சமாதானத்தையே விரும்புபவர் என்பது புலனாகிறது.

மேல்சாதியினரான இவரின் மகன் அப்புனுவும், கீழ்ச்சாதியினரான செவத்தியும் உடலளவில் கலந்து கொண்டதை ஊரைக் கூட்டி தலையாரி சொன்னதும், இரு பக்கத்திலிருந்து எதிர்ப்பு கிளம்புகிறது. சின்னச்சாமி எந்த பழிபாவத்திற்கும் ஆளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற முடிவோடு இருக்கிறார். வழக்கு மன்றத்தில் இராஜாமணி வாத்தியார் அவருடைய முடிவைப்பற்றி கேட்டதற்கு அவர்,

> "சார் நான் எதையும் மறைச்சி வல்லடி வளர்த்து செய்யப் போறதில்லை. அது பிராயச்சித்தம் செஞ்சிக்கத் தான் ரெடியா இருக்கேன்... என்னோடபுள்ள செஞ்சது தப்புதான். பைத்தியமா நின்ன என்னோட மகன மனுசனா மாத்தினதுல செவத்தி பொண்ணுக்கு பங்கிருக்கு. அந்த நெருக்கத்திலதான் நடந்து போயிட்டு. பஞ்சாயத்தாரு நீங்க பாத்து என்னா சொன்னாலும் நான் ஒத்துக்கறேன்."[24]

என்று கூறி பஞ்சாயத்தில் எடுக்கப்பட்ட முடிவுப்படி செவத்தியைத் தன்னுடைய மருமகளாக ஏற்றுக் கொள்கிறார். மற்ற வழக்கு மன்றத்துக் கூட்டங்களில் இதுபோன்ற வழக்குகளுக்குப் பணம் கட்டித் தீர்வாக்கியதுமுண்டு. ஆனால் சின்னச்சாமி அத்தீர்ப்பிற்கு மறுப்புச் சொல்லாமல் தாழ்ந்தகுலப் பெண்ணை ஏற்றுக் கொண்டு தங்களுடனேயே வாழ்வதற்கும் சம்மதிக்கிறார். அவர் சாதிய கட்டுமானத்தைத் தாண்டி சமாதானத்தையே விரும்பும் சிறந்த குணநலன்களைக் கொண்டவர் என்பது புலனாகிறது.

"செந்நெல்" என்ற புதினத்தில் பெரியான் என்பவர், உடல் உழைப்பில் சிறந்தவராகவும், சிறந்தக் குடும்பத் தலைவராகவும், சாதிக் கலப்பை ஏற்றுக் கொள்பவராகவும் திகழ்கிறார். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த அவர் பறையர் குலத்தவர். தன்னுடைய குடும்பமே வேலு நாடார் பண்ணைக்கு அடிமையாக இருக்கும் போது மூத்தமகன் ரெங்குவை நாடாரின் விருப்பப்படி இளம் வயதிலேயே பண்ணையில் விட்டு மாடு மேய்க்கச் சொல்கிறார். அவரின் பாதையிலேயே ரெங்கு செல்ல இளையவனான கண்ணுச்சாமி படிக்கப் போவதாகக் கூறவும், பெரியான் வேலு நாடாரிடம் அதைச் சொல்ல குன்னி வளைந்து தலையைச் சொறிந்து கொண்டு அனுமதி கேட்கிறார்.

> "...அவனை விட்டுவிடுங்கப் பெரியாண்டே, குடியானத்தெரு பிள்ளைகளைப் போல பள்ளிக்கூடம் போய் படிக்கப் போறேனு நிக்கிறான். நானும் தேவூர் பள்ளிக்கூடத்திற்கு போய் வாத்தியாரய்யாகிட்ட கேட்டுட்டு வந்தேன். அவரும் அனுப்பச்

சொன்னாங்க. பத்துநாளா போய்க்கிட்டும் இருக்காங்க. இப்ப அவனைப் பார்த்துவிட்டு தெருப்பசங்க ரெண்டு மூணு பள்ளிக்கூடம் போக ஆரம்பிச்சிருக்குங்க"[25]

தன் சாதி அடிமைப்பட்டுக் கிடப்பதிலிருந்து விடுதலைபெற வேண்டுமென நினைக்கிறார். பொதுவுடைமைக் கட்சியிலிருக்கும் கண்ணுச்சாமிக்கு எவ்வித நெருக்கடியும் கொடுக்காமல் அவனை விரும்பும் பெண்ணான செல்வியையே மணம் முடிப்பதற்குச் சம்மதிக்கிறார். செல்வி பள்ளர் சாதியைச் சேர்ந்தாலும், தங்களின் இனத்தவரின் எதிர்ப்பை மீறி கலப்பு மணத்திற்கே ஆதரவு கொடுக்கிறார். பெரியான் குடும்பத்தைப் பற்றி செல்வியின் தந்தை நல்ல அபிப்பிராயத்தை ஊர் சபையில் கூறுகிறார்.

"...அந்த புள்ள மேலேயோ, அந்தக் குடும்பத்து மேலேயோ நான் எந்தக் குத்தம் குறைபாடும் சொல்லமாட்டேன். இநத கண்ணாலத்துக்கு யாரு வந்தாலும், வராட்டாலும் பரவாயில்ல. என் கையில கெடக்கிற காசு பணத்தக் கொடுத்துடுறேன்"[26]

என்று கூறுவதன் மூலம் பெரியானின் சமாதானப் பண்பு புலனாகிறது. சுமுகமான முறையில் எதையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உடையவர் என்பதை அறியமுடிகிறது.

"தப்பாட்டம்" என்ற புதினத்தில் மதுக்கண் பகடை நல்ல பண்பு கொண்டவராகத் திகழ்கிறார். செருப்புத் தைத்து அதன் மூலம் வரக்கூடிய வருவாயில் குடும்பம் நடத்தக்கூடிய இவரின் மூலமாகத்

தீண்டாமைக் கொடுமைகள் பற்றிய செய்திகளை அறிந்து கொள்ள முடிகிறது. தன் ஒன்றுபட்ட மச்சினன் கோவிந்தராசுவிடம் குடியானவர்களால் தாங்கள் அடிமைப்பட்டுக் கிடப்பதையும் தெருவில் பீடி பற்றவைத்துக் குடித்தாலோ, சைக்கிளில் ஏறி ஓட்டிக் கொண்டு வந்தாலோ தண்டனை கிடைக்கும் என்பதையும், தேனீர்கடையில் தனிக் குவளை முறை நடைமுறையில் இருப்பதையும் எடுத்துக் கூறுகிறார்.

சக்கிலியராக இருந்தாலும், மற்ற கீழ்ச்சாதியின் மீது மதிப்புக் கொண்டவர். பள்ளிக் கூடத்தில் படித்துவிட்டு வந்த செல்வராசனின் (மதுக்கன் பகடையின் மருமகள் வள்ளியின் மாமா) அம்மாவுடைய பேரனும், ஒரு அம்பலக்காரர் வீட்டுப் பையனும், மூப்பனாருடைய இடத்தில் கால் கழுவியதால் பிரச்சனை ஏற்பட்டு அம்பலக்காரப் பிள்ளையை விரட்டிவிட்டு பறைச்சாதிப் பையனை மட்டும் தண்டிக்க நினைக்கும் போது மதுக்கன் பகடை தான் சின்னப் பிள்ளைகள் செய்வதற்கெல்லாம் தண்டனை கொடுக்கக்கூடாது என எதிர்ப்புக் குரல் கொடுக்கிறார்.

வள்ளியைத் தன் மகன் தோழப்பன் கலப்புமணம் செய்து வந்த பிறகு செல்வராசுவின் தாய் சாடையாகப் பேசும்போது கூட எதிர்த்து வம்புக்குச் செல்லாதவர். இதைத் தன் மச்சினரிடம் அவரே கூறுவதன் மூலம் அறியமுடிகிறது.

> "...இந்தப் பொம்பள செல்வராசுவோட ஆயா, பொண்ணு பிரச்சனை வந்ததிலருந்து இந்தத் தெரு காரவங்களுக்கும், நம்ம உறவுமொறைக்கும் பேச்சு வார்த்தை இல்ல. இந்தப் பொம்பள மட்டும்

துடுக்குத்தனமா நொறைநாட்டியம் பேசும். நாம திருப்பி வாய கொடுத்தா நாறிக்கிட்டு நிக்கனும்... அதனால தான் அவ அப்படி பேசினதுக்கு நான் வாய் தொறக்கில..."[27]

என்று கூறுவதிலிருந்து பிறர் பேசும் போது எதிர்த்துப்பேசப் பேச வார்த்தைகள் தடித்துப் பிரச்சினை பெரிதாகிவிடும் என்பதால் பொறுத்துப் போகக்கூடியவர் இவர். வண்ணான் இனத்தைச் சேர்ந்த வீரவாகு என்பவர் மதுக்கனைவிட மூத்தவர். அவரையும் அவரின் மனைவியையும் மற்ற கீழ்ச்சாதியினரும் பெயர் சொல்லி அழைப்பதையும், வாடி, போடி என தலையில் அடித்தாற்போல் சொல்வதையும், மன வேதனையோடு வீரவாகு மதுக்கனிடம் கூறும்போது,

வீரவாகு பெரியய்யா! என்னைவிட நீங்க ரொம்ப மூத்த நீங்க. என்னை அய்யா அய்யான்னு சொல்லும்போதும் எனக்கு உயிரு போவதுங்க என்னை நீங்க மொதல்ல பேரு சொல்லியே கூப்பிடுங்கைய்யா காலம் இப்புடியே போயிடாதுங்க. அப்ப எல்லாத்தையும் சரி பண்ணப் பார்ப்போங்க..."[28]

என்பதிலிருந்து மற்ற சாதியனருக்கு மரியாதை கொடுக்கக் கூடிவர் என்பதும், பிறர்மனம் நோகாதவாறு செயல்படக்கூடியவர் என்பதும் புலனாகிறது.

மனைவியை இழந்தவர்களின் மனக்குமுறல்

> "மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
>
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" - குறள்-51

என்ற பொருளுக்கேற்ப மாட்சிமையுடைய மனைவியுடன் வாழ்ந்து வந்த ஆறுமுகம் மனைவியை இழந்து வாடினாலும், பொறுப்பான முறையில் இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்து வருகிறார். ஆறுமுகம் தன்னுடைய கடந்த கால வாழ்க்கையில் கிளியம்மாவுடன் ஏற்பட்ட காதலை நினைவு கூர்ந்து பார்த்திட இளம் பருவத்தில் வண்ணார் சாதியைச் சேர்ந்த இனிய கிளியம்மாவை விரும்பும் போது மைனாக்குட்டி என்பவள் எப்படியாவது ஆறுமுகத்தைத் தன் வலையில் சிக்க வைக்க நினைக்கிறாள். ஆனால் ஆறுமுகம் கிளியம்மாவைத் தவிர மற்ற எவரையும் நினைக்கவில்லை.

திருமணம் முடிந்து வாழ்க்கைச் சீராக சென்று கொண்டிருக்கும் போதும் தன் மனைவி மீது கொண்ட அன்பு மாறவில்லை. குழந்தைகளை விட்டுவிட்டு மனைவி இறந்தவுடன், அவளின் நினைவாகவே இருந்து அவள் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் செய்கிறான்.

தாயில்லாத பிள்ளைகளைக் கல்யாணம் செய்து கொள்ளத் தயங்கும் போது தானே தாயாக இருந்து அவர்களின் வாழ்க்கைக்குத் துணையாகிறார்.

> "ஆறுமுகம் ஆறையும் வளத்து, ஒண்ணு ஒண்ணா கரையேத்திவிட அப்பப்பா எண்ணா பாடுபட வேண்டியிருந்துச்சி. என்னாத்தான் நம்பிக்கையா ஆம்பள நின்னாலும் பொண்ண கட்டிக்க வர்ரதுங்க

பொம்பள நின்னு நல்லது கெட்டது பாக்க வாகுவழி இல்லாத வீட்டுல பொண்ணு கட்ட பயந்து போனதுக. வந்ததுகளுக்கு பொண்ண கட்டிக் கொடுக்க நல்லது கெட்டது பாத்து முடிக்கிற பாத்த சம்மந்திங்க கிச்சிக்குமானுன்னு சொல்லிட முடியல"[29]

ஆறுமுகத்திற்கு குடும்பப் பொறுப்பு அதிகமாகவே இருந்தது. தன் மனைவியின் விருப்பப்படி மகனை வளர்த்துப் படிக்கவைத்து எஞ்சினியராக்குகிறார். ஒவ்வொரு நிகழ்ச்சி நடக்கும் போதும் மனைவியை நினைத்து வருந்துகிறார். மகளின் குடும்பம் வறுமையால் பட்டினி பசியோடு கிடக்கும் போது தன்னுடைய முதலாளியின் பிள்ளை வீட்டிலிருந்து குருணை அரிசிகளைக் கொண்டு வந்து கொடுக்கிறார். இவ்வாறு பெண் பிள்ளைகள் பட்டினியால் துடித்துக் கொண்டிருக்கும் போது பல இன்னல்களுக்கிடையேயும் தன் ஒரே மகனைப் படிக்க வைத்து ஆளாக்கிய பின் அவன் வசதியான இடத்தில் திருமணம் செய்து கொண்டு தரக்குறைவாகப் பேசியதால் அவனிடம் எவ்வித எதிர்பார்ப்பையும் நினைக்காமல் தன்மானத்துடன் வாழ்கிறார்.

குடும்பத்தில் மட்டுமல்லாது தன் பண்ணை நிலத்திலும் நம்பிக்கையாக நின்று வேலை செய்கிறார். முதலாளியான சிவசங்கரன் பிள்ளையிடம் வாங்கும் கடன்களுக்கு வேலை செய்து கழித்துக் கொள்கிறார். நிலத்தில் எப்படி கடமையுணர்வோடு செயல்படுகிறாரோ, அதே போன்று வீட்டிலும் வேலை செய்கிறார். சிவசங்கரனின் கறவை மாடு இரை எடுக்காமலும், தண்ணீர் குடிக்காமலும் நிற்பதைப் பார்த்த அவர் தன்னுடைய அனுமானத்தால் அம்மாட்டிற்கு உண்டான சிக்கலைத் தீர்க்கிறார்.

"...நுரை தள்ளிக்கிட்டு இருக்கேனு கடவாயைப் பார்த்தேன் கட்டைச் சிலாம்பு குத்தி இருந்துச்சிம்மா. எடுத்து விட்டதும் வைக்களைக் கடிக்குது"[30]

பண்ணைக் கொட்டிலிலும், பண்ணை நிலத்திலும், நம்பிக்கையாகத் திகழும் ஆறுமுகத்தை நம்பி சிவசங்கரன் பிள்ளை எந்த வேலையாக இருந்தாலும் கொடுப்பார். தன் மூத்த மகள் வீட்டிலிருந்து டிராக்டரும், வைக்கோலும் எடுத்துவர இங்கிருந்து நெல்லிக்காய் மூட்டைகளோடு சித்தாடிக்குப் புறப்பட்டுப் போய்வருவதிலிருந்து, மூத்த மகளின் கணவர் இறந்த செய்தியை ஊர்க்காரர்களுக்குத் தெரியப்படுத்துவதிலிருந்து ஆறுமுகத்தின் பொறுப்பு நம்பிக்கைக்குரியதாகிறது.

இவ்வாறு குடும்பம், பண்ணை அடிமையாகத் திகழும் இவர் பொதுவுடமைக் கட்சியில் பொறுப்பாகச் செயல்படுகிறார். அக்கட்சியில் இருந்து கொண்டு மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கிறார். "நாளானைக்கு எதிர்க்கட்சிக எல்லாம் அடுகிடையா சேர்ந்து ஆர்ப்பாட்டமும், மறியலும் வச்சிருக்காங்க. நம்ம ஊர்ல உள்ள எல்லாரையும் தெரட்டிக்கிட்டுப் போற கூட்டுத் தலைமை எங்க கட்சிக்கு கொடுத்திருக்குங்க. எங்க கட்சியோட தாலுக்கா கமிட்டி என்கிட்ட ஒப்படைச்சிருக்கு..."[3]என்று சிவசங்கரன் பிள்ளையிடம் கூறுவதன் மூலம் ஆறுமுகம் பொதுவாழ்விலும் நாட்டம் கொண்டார் என்பது புலனாகிறது.

மனைவியை அதிகாக நேசிப்பவர்கள் அவர்கள் இறந்த பின்னரும் அவர்களின் நினைவாகவே வாழ்வார்கள் என்பதைச் சுட்டும் மற்றொரு பாத்திரம் நஞ்சை மனிதர்களில் வெள்ளைச்சாமி.

வெள்ளைசாமி குடும்பத்திற்கும் அங்கம்மா குடும்பத்திற்கும் முட்ட பகை. ஆனாலும் வெள்ளைச்சாமி அங்கம்மாவைத் தான் மணமுடிப்பேன் என மணந்தவர்.

> "கட்டிக்கிட்டா அங்கம்மாவத்தான் கட்டிக்கிவேன். இல்லாட்டா நான் சின்ன மாமவோட ரங்கூன் போவப் போறேன்னு..."[32]

பிடிவாதமாக நின்று கட்டிய அங்கம்மா குடும்பச் சண்டையின் காரணமாக மனமுடைந்து படுத்த படுக்கையாகி இறந்துவிடுகிறாள். அதன் பிறகு உற்றார் உறவினர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் மறுமணம் செய்யாமல் தன் ஒரே மகன் குப்புச்சாமியைச் செல்வமாக வளர்க்கிறார். செல்லமாகவும் செல்வச் செழிப்புடனும் வாழ்ந்த குப்புச்சாமி தவறான வழியில் சென்று சொத்துக்கள் அனைத்தையும் இழக்கிறான். தன் மனைவியையும் அடித்துத் துன்புறுத்துகிறான். மகனின் போக்கைக் கண்டிக்கத் தவறவிட்ட அவர் அங்கம்மாவையே நினைத்துக் கொண்டு வாழ்கிறார்.

> "அவரப் பொறுத்த அளவில் பக தூக்கம்ங்கிற கணக்கெல்லாம் இல்ல. எப்ப தூக்கம் வந்து கண்ண மூடுதோ அப்ப தூங்கிறது. மத்த நேரமெல்லாம் இப்புடியே அங்கம்மாவ நெனைச்சிக்கிட்டு கெடப்பாரு."[33]

இப்படி இருக்கக்கூடிய இவரின் மகன் குப்புச்சாமி நிறைமாதக் கர்ப்பிணியான தன் மனைவியைத் தள்ளிவிட்டு அவளின் இறப்பிற்குக் காரணமாகிறான். மனைவி இறந்தும் குடும்பத்தின் மீது

நினைவின்றி கட்சி அரசியலெனத் திரியும் மகனின் மீது வெறுப்புக் கொண்ட அவர், இருக்கக்கூடிய கொஞ்ச நிலத்தையும் பேத்திகளின் பெயரில் எழுதி வைத்துவிட்டு, அந்நிலத்தில் இறங்கி தானும் தன்னுடைய பேத்திகளுமாக விவசாயம் செய்யத் துணிகின்றனர்.

வெள்ளைச்சாமி மூலமாகப் பேத்திகளுக்கு ஒளிமயமான வாழ்க்கைக் கிடைக்கும் என்பது ஆசிரியரின் கருத்தாக உள்ளதை அறிய முடிகிறது.

இவ்வாறாக மனைவி மீது அதிகப் பாசமும், அப்பாசத்தால் குடும்பத்தைக் கவனிப்பதும் ஒருசில ஆண்கள் இருந்தாலும், இவருடைய புதினங்களில் இவர்களுடைய மாறான குணங்களையுடைய ஆண்களையும் காணமுடிகிறது. அவர்களிடம் ஆணாதிக்கம் மிகுந்து காணப்படுகிறது. சொத்துக்களும் அவர்களின் பெயர்களிளேயே பெரும்பாலும் உள்ளன என்பதும் புலனாகிறது.

உயர்ந்த உள்ளத்தால் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துபவர்கள்

சமூகத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென பாடுபடும் போது பல எதிர்ப்புகள் கிளம்பும். அவற்றை எல்லாம் மீறித்தான் பொதுவாழ்வில் ஈடுபட வேண்டும். உயிரிழப்புகள் கூட நிகழலாம். பல விதங்களிலும் சிக்கல்களை உருவாக்கலாம். இதிலிருந்தெல்லாம் மீறி சமுதாயத்தில் நல்ல செயல்கள் நடைபெறக் காரணமானவர்களை அச்சமூகமே போற்றும். அந்த வகையில் அநேக புதினங்களில் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பாத்திரங்களைக் காணமுடிகிறது.

“உறங்கமறந்த கும்பகர்ணர்கள்” என்ற புதினத்தில் மேல்சாதியைச் சேர்ந்த இராஜாமணி என்பவர் நாவங்குடிக்கு

ஆசிரியராக வருகிறார். அவர் வருவதற்கு முன்பு இருபத்தைந்து வருடங்களாக ஒரே ஆசிரியராக பிச்சமுத்து ஆசிரியர் அக்கிராம மக்களுக்கு எழுத்தறிவைக் கற்பிக்கிறார். எழுத்தறிவை மட்டும் கற்றுக் கொடுக்க முடிந்த தன்னால் சமூக மாற்றத்தைக் கொண்டுவர முடியவில்லையே என்று கூறி ஆற்றாமையை இராஜாமணி வாத்தியாரிடம் வெளிப்படுத்தும் போது, அவர் அக்கிராமத்தைத் திருத்தவே இவ்வூருக்கு வந்திருப்பதாகத் தெரிவிப்பதால் அவரின் நல்லெண்ணத்தை அறியமுடிகிறது.

"ஸார்... என் முன்னோர்கள் வாழ்ந்த இம்மண்ணுக்கு சேவை செய்யணுங்கற ஆத்ம வெறியிலேதான் எந்த வசதியும் இல்லாத இந்தக் கிராமத்திற்கு வந்திருக்கிறேன்... நீங்க நடந்த பாதையலே உங்க அறிவுரையை கைவிளக்காய் ஏந்திப் பயணம் தொடர்வேன்"[34]

அரசாங்க வேலை கிடைத்தவுடன் வசதிகள் நிரம்பிய நகர்புறத்திற்குக் குடிபெயரக்கூடிய காலத்திற்கு கிராம மக்களுக்கு வழிகாட்டுவதற்காக அங்கு வந்திருப்பதாக இராஜாமணி கூறுகிறார்.

> "சொல்லுதல் யாருக்கும் எளிய அரியவாம்
> சொல்லிய வண்ணம் செயல்."[35]

என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்க, சொல்லுவதோடு விட்டுவிடாமல் அதைச் செயல்படுத்த விழைகிறார். நாவலங்குடியை நகருடன் இணைக்கும் சாலை, நடமாடும் மருத்துவமனை, உயர் அழுத்தத் தண்ணீர்த் தொட்டி, அடிப்படை வசதிகளுடன் கூடிய பள்ளிக்கூடம் இவை அனைத்தும் தேவையென லெட்டர் டு எடிட்டர் என்ற பகுதியில் பலமுறை எழுதிவிடுகிறார். ஒருமுறை அந்த இதழின்

ஆசிரியர் இராஜாமணியின் கடிதத்தைச் சுட்டிக்காட்டி ஒரு பெட்டிக் கட்டுரையை எழுதி அரசாங்க கவனத்திற்குக் கொண்டு செல்கிறார். இவ்வாறான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென நினைக்கும் போதே, வாஞ்சூரான் போன்ற இளவட்டங்களால் அச்ச உணர்வும், பதற்றமும் ஏற்படுகிறது. அவர்கள் எந்த நல்ல காரியத்திற்கும் மறுப்புத் தெரிவிப்பதால் அவர் பயப்படுகிறார். இராஜாமணி தன் திட்டத்தைப் பற்றிக் கிராமக் கூட்டத்தில் கூறியவுடன் நாட்டாண்மை பெரியகுப்பான் ஆதரவாகப் பேசுகிறார்.

> "வாதியாரய்யா நீங்க பெரிய மனசோட எங்க ஊர் பிள்ளைகளும், ஊரும முன்னுக்கு வரனும்னு பாடுபடுறீங்க. ஊருக்குள்ள காரும் ஆஸ்பத்திரியும் வந்துட்டா... உங்களுக்கு கோடிப்புண்ணியம்யா... காசு பணத்தைப் பார்க்காம இந்தக் கிராமமே ஒங்க பின்னாலே நிற்கும். எப்படியோ இந்த ஊர்லேயும் மனுசங்க இருக்காங்கன்னு உலகம் தெரிஞ்சுகிட்டா போதும்..."[36]

ஊரின் அக்கறை கொண்ட இவர், மனவளர்ச்சி குன்றிய அப்புனுவை முழு மனிதனாக்க முயற்சிக்கிறார். பள்ளிக்கூடம் முடிந்த பிறகு தனியாகப் பொறுமையாக அப்புனுவின் மனத்திற்கு இதமாகப் பாசம் காட்டி பழக்கத்தைச் சொல்லிக் கொடுக்கிறார். அப்புனுவின் மூளை வளர்ச்சிக்கு இவரும் காரணமாகிறார். முழு மனிதனான அப்புனு செவந்தியிடம் தவறாக நடந்து கொண்டு இருதரப்பிலிருந்தும் ஊர்சபைக் கூட்டும் போது, இராஜாமணி தான் நடுநாயகமாக நின்று தீர்ப்புக் கூறுகிறார். தாழ்த்தப்பட்ட

பெண்ணான செவத்தியைத் தன் தம்பிக்குத் திட்டமிட்டு கட்டிவைத்து, சொத்துக்களை ஏமாற்ற நினைக்கின்றனர் என்று சொத்தின்மீது மட்டும் பாசம் கொண்ட அப்புனுவி அண்ணன் சிவராமன் இராஜாமணியின் முகத்தில் முஷ்டியால் தாக்கும்போது கூட்டத்தார் சிவராமனைத் தாக்கத் தொடங்குவதற்கு முன்பே அவர்களிடமிருந்து அனுப்பி வைக்கிறார். இவ்வாறான எதிர்ப்புகளைத் தாண்டியும் சமூக சேவை செய்யும் அவரை மருதாயி என்ற கீழ்சாதிப்பெண் விரும்புகிறாள். அவளின் நடை, உடை, பாவணையில் மாற்றத்தைத் தெரிந்து கொண்ட ஆசிரியர், மருதாயி நடந்து கொள்ளும் வெகுளித்தனங்களைக் கண்டிக்க முடியவில்லை.

> "...வாலிப வயசுப் பொண்ணு மனசுல வரிச்சுக்கிட்டு இருக்கும்போல இருக்கு. நாம கணடும் காணாததுமா இருப்போம்... இல்லாட்டி வாலிபம் எங்காவது தடுமாறி"[37]

என்று அவள் தன்னை மறந்து நின்று பார்ப்பது, சிரிப்பது, வெட்கப்படுவது எல்லாம் நம்மீது உள்ள மரியாதையாலா? குருபக்தியாலா? அல்லது அப்புனுமீது அன்பு செலுத்தச் சொல்லியபோது... அவள் முகத்தில் ஏற்படும் மாற்றங்கள்"[38] எனச் சிந்தனைகள் பல விதத்தில் சுழன்ற அவர் எதைப் பற்றியும் கூறாமல், அப்புனு செவத்தியை விருந்துக்கு அழைக்கும் சாக்கில் மருதாயியையும், தன் வீட்டிற்கு அழைத்துத் தான் இரு குழந்தைகளின தந்தை என்பதை நாசுக்காகத் தெரியப்படுத்துவதால், இவர் யாருடைய மனதையும் நோகடிக்க வேண்டுமென்ற எண்ணமில்லாதவர் என்பது புலனாகிறது.

செந்நெல் என்ற புதினத்தில் டீக்கடை நடத்திக் கொண்டும், விருப்பப்பட்டு வருபவர்களுக்குக் கம்பு சுத்தக் கற்றுக் கொடுத்துக் கொண்டும் இருக்கும் வடிவேலு உயர்ந்த குடியைச் சேர்ந்தவர். சாதியில் உயர்ந்தவரென்றாலும் சமூகப் பொறுப்புடன் செயல்பட்டு அடித்தட்டு மக்களுக்காகக் குரல் கொடுக்கிறார். அவர்களின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் பெறுமளவிற்கு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார். பொதுவுடைமைக் கட்சி கொள்கையில் நின்று கண்ணுச்சாமி போன்றோர்களையும் சேர்த்துக் கொண்டு செங்கொடியைப் பிடிக்க வைக்கிறார்.

வடிவேலு தான் கத்துக் கொண்ட சிலம்பத்தை எல்லாச் சாதியினருக்கும் கற்றுக் கொடுக்க நினைக்கிறான். ஆனால் அவனின் பாட்டன், "... ஏய் வடிவேலு வித்தைய கண்டா கண்ட சாதிக்காரப் பயலுக்கெல்லாம் கத்துக் கொடுத்திடாதே. அதுக்குன்னு ஒரு யோக்கியாம்சம் இருக்கிறவனுக்குத் தான் வித்தையக் கத்துக் ø ïV| ÂïÐ D ..."[39] என்பதற்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில்,

> "தாத்தா நீ எனக்கு குத்து வாத்தியாரு. அதுக்காவ உனக்கு மரியாதை கொடுக்க கத்துக்கிட்டு இருக்கேன். ஆனா இந்த வித்தை நான் யாருக்கு கத்துக் கொடுக்கனுன்னு நெனைச்சேனோ அவங்களுக்குக் கத்துக் கொடுக்கிறதுக்கு நீங்க கட்டுமானம் போடுறத நான் ஏத்துக்கமாட்டேன். ஒவ்வொரு மனுசாளுக்கும் உள்ள தற்காப்பு வித்தை இது."[40]

என்று எதிர்த்து எதிர்த்துப் பேசியதால் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்ட வடிவேலு டீக்கடை நடத்திக் கொண்டும்

பொதுவுடைமைக் கட்சி கற்றுக் கொடுக்கும் பாடத்தைப் பிடித்துக் கொண்டும் திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்கிறார். பொதுவுடைமைக் கட்சியின் மூலம் விவசாயக் கூலியாட்களைத் திரட்டி நெல் உற்பத்தியாளர் சங்கத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட வைக்கிறார்.

வடிவேலு சொல்லக்கூடிய அறிவுரைகளை அம்மக்கள் கேட்கின்றனர். பறையரான கண்ணுச்சாமியைப் பள்ளர் சாதியைச் சேர்ந்த செல்வி விரும்பும் போது செல்வியின் வீட்டில் பெற்றோர்கள் ஆதரவு கொடுத்தாலும், அவளின் அக்கா வீட்டுக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கும் போது வடிவேலு பேசி சமாதானம் செய்து அவர்களை அமைதிப்படுத்துகிறார். மேலும் கண்ணுச்சாமியையும் செல்வியையும் கண்டித்து வைக்கிறார்.

> "கண்ணுச்சாமி இப்படிவா... உனக்கும் செல்விக்கும் ஊரே முன்னுக்கு நின்னு கல்யாணத்த செஞ்சி வைக்க வருது உனக்கு மாமனாவா ஆவப்போறவரும் ஒத்துக்கிட்டு இருக்காரு. இப்ப திடுதிப்புனு அவரால ஒண்ணும் செய்ய முடியாது. வர்ற சித்திரை, வைகாசியில் முடிச்சி வைக்கிறோம். இது வரைக்கு நீங்க ரெண்டு பேரும் பொறுப்பாத்தான் நடந்துக்கினுன்னு."[41]

என்று பேசி கண்டிச்சிருந்தான் வடிவேலு. இவ்வாறாகச் சமூகத்திற்காகப் பாடுபடும் வடிவேலுவிற்குப் பல நெருக்கடிகளைக் கொடுத்து ஒருமுகமாக நிற்கின்ற மக்களைக் களைச்சிட்டு, கீழத்தெரு மக்களைத் தங்களுக்குக்கீழ் கொண்டு வந்துவிடலாம் என

நினைக்கிறார் ரெங்கபாஷ்ய நாயுடு. அவருக்குத் துணையாக இருக்கும் வீரப்பணைக் கொலை செய்ததால் காவல்துறையினர் வடிவேலுவையும் கண்ணுச்சாமியையும் தேட, நாயுடு ஆட்கள் கீழவெண்மணி மக்கள் 44 பேரை எரித்துவிடுகின்றனர்.

வடிவேலுவிற்குப் பக்கபலமாகத் திகழ்பவன் கண்ணுச்சாமி. இவனை வைத்தே கீழ்த்தட்டு மக்களைப் போராடவும் விழிப்புணர்வு அடையவும் வைக்கிறார் வடிவேலு. கட்சியில் இருந்து கொண்டு தன்னுடைய இனத்தைச் சேர்ந்தவர்களும் மற்ற சாதியினருக்குச் சமமாக மதிப்புப்பெற வேண்டும் என முனைப்புடன் செயல்படுகிறான் கண்ணுச்சாமி. தன்னுடைய மகனைப் பற்றி கவலைப்படும் பெரியானிடம் வடிவேலு கண்ணுச்சாமியைப் பற்றிக் கூறுவதிலிருந்து அவனின் பண்பு நலன்களை அறிந்து கொள்ள முடிகிறது.

> "பெரியான்! ஒன்னோட சின்ன மவன் பள்ளிக்கூடம் போய் பெரிசா படிச்சிட்டு வராட்டாலும் இப்ப வெதரணையா இருக்கான்ப்பா. கட்சி தலைவருங்க எல்லாம் மெச்சிக்கிட்டத நீ பாக்கனுமே... தன்னோட சனங்களுக்கு விடிவுகாலம் வரனுன்னு உழைச்சி அவங்கள முன்னேத்தி கொண்டாந்து மத்த சாதி சனங்களுக்கு சமதையா கொண்டாந்துடனுன்னுங்கிற வெறிய அவன் மனசில வச்சிக்கிட்டு இருக்கான்"[42]

என்று சாதி வழிப்புணர்வுக்குப் பாடுபடும் கண்ணுச்சாமி கலப்பு மணத்தால் சாதிப்பகுபாடு மறையும் என்பதால் கலப்புமணம் செய்ய நினைக்கிறான். தான் விரும்பிய பெண்ணான செல்வியை வீரப்பன்

கடத்திக் கொண்டுபோன செய்தியை அறிந்து உடனே சென்று அவளை மீட்டு கொண்டு வருகிறான்.

தப்பாட்டத்தில் சுந்தரமூர்த்தி வாத்தியார் அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களைத் தலை தூக்கி விடுகிறார். மூப்பனார் சாதியைச் சேர்ந்த அவர் பொதுவுடைமைக் கட்சி மூலமாக மக்களை விழிப்படைய வைத்துத் தங்களின் உரிமைகளைக் கேட்க வைக்கிறார். பள்ளிக்கூடம் முடிந்த பின்பு மந்தப் புத்தியுள்ள பிள்ளைகளுக்கு அவர்கள் புரியுமளவிற்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். தானே சமையல் செய்துகொள்கிறார். திருமணம் செய்து கொண்டால் அது பொது வாழ்க்கைக்கு இடையூறாகும் என்ற எண்ணத்தோட திருமணமே ஆகாமல் இருக்கிறார்.

இவர் கற்றுக் கொடுத்த பாடத்தினால் கீழ்ச்சாதி மக்கள் குடியானவர்களிடம் பேசும்போது குனிந்து வளையாமலும், இடுப்பைச் சுற்றியிருக்கும் துண்டைத் தோளில் போட்டுப் பேசுவதும், கையைக் கட்டிக் கொண்டு நிற்காமல் எதார்த்தமாகப் பேசுவதுமாகிய செயல்களைச் செய்கின்றனர். குடியானவர்களின் பிள்ளைகள் மட்டுமே படிக்க வேண்டும். கீழ்ச்சாதியினருக்குப் பாடம் சொல்லித்தரக்கூடாது. அவர்களுக்காகப் பரிந்து பேசக்கூடாது என்று மூப்பனார் சாதிக்குள் இருந்து பல எதிர்க்குரல்கள் வருகின்றன. சிவசாமி மூப்பனார் என்பவர் கெட்ட சாதிக்காரனங்களுக்கு வக்காளத்து வாங்கிக்கிட்டு வர்றது தான் சுந்தரமூர்த்தி வாத்தியாரிடம் கொண்ட பிரச்சினை என்று கூறும்போது வாத்தியார்,

"அந்தக் கெட்டச்சாதிக்காரவங்களும், இவங்களும் எனக்கு ஒன்று தான். இவங்க புள்ளைக படிக்கும் போது இங்க ஒடுக்கப்படுற சாதிக்காரவங்க புள்ளைக ஏன் படிக்கலன்னு யோசிக்கும் போதுதான் அதுகளுக்குள்ள பிரச்சனை புரிஞ்சது. அதைக் களைய என்னால ஆனதைச் செய்ய வரும்போது தான் நான் அவங்களுக்கு வழிகாட்ட வேண்டிருக்கு. அதுக்கு ஊருக்குள்ள பல வகையாளும் தொல்லை கொடுத்ததும் என்னோட வாத்தியாரு வேலைக்கு சம்பளமில்லாத லீவு கொடுத்திட்டு... இப்பவும் என்கிட்ட தனிப்பட படிக்கவர்ற புள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்துக்கிட்டு தான் சார் இருக்கேன்."[43]

என்று கூறுவதிலிருந்தே பல இன்னல்களுக்கிடையேயும் சமுதாயம் முன்னேற்றமடைய வேண்டுமென்ற கொள்கையுடன் திகழ்கிறார் என்பதை அறிய முடிகிறது. அடிமட்ட மக்களின் வாழ்க்கைக்குப் பாடுபட்ட இவரிடம் செய்தி கேட்கப்போகும் விசாலாட்சியையும், இவரையும் தொடர்புபடுத்தி ஊரார் பேசுகின்றனர். கடைசியில் அவரை தீண்டாமைக் கொடுமைச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்து கைது செய்கின்றனர். விடுதலையாகி வரும் வாத்தியாரை ஆட்டம், பாட்டத்தோடு தோழப்பனும், தோழர்களும் தோளில் தூக்கிக் கொண்டு வருகின்ற இக்காட்சியும் கைதட்டும், ஆரவாரமும் குடியானத் தெருவை மட்டுமின்றி சுற்றியுள்ள ஊர்களையும் அதிரவைக்கிறது. பெண்களின் விடுதலைக்கு மேல் சாதியினரின் சிலர் குரல் கொடுத்திருப்பதைக் காணமுடிகிறது.

இப்புதினத்தில் தோழப்பன் என்பவனும் சுந்தரமூர்த்தியின் கட்டளைகளை மக்களிடம் எடுத்துச் செல்கிறான். இவனும் கலப்புமணம் புரிந்து கொள்கிறான். பெரும்பாலும் சமூகம் மாற்றம் பெற வேண்டுமென நினைப்பவர்கள் கலப்பு மணத்திற்கு ஆதரவு கொடுப்பவர்களாக திகழ்கின்றனர். சுந்தரமூர்த்தி வாத்தியார் நினைத்தால் அவரின் அரசு வேலைக்கே பெண் கொடுப்பவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். ஆனால் அவர் தன் வாழ்க்கையை இழந்து வந்திருக்கும் கீழ்ச்சாதியைச் சேர்ந்த விசாலாட்சியை மணக்க நினைப்பது ஒரு புரட்சிகரமாகவே அமைந்துள்ளது. இருவரும் ஒத்த கொள்கை உடையவர்களாகத் திகழ்வதால் வாழ்க்கை சீராகச் செல்லும் என்பது சுந்தரமூர்த்தி வாத்தியாரின் எண்ணம்.

> "விசாலம்! இவ்வளவு நாளா நான் கல்யாணத்தை தவிர்த்ததுக்கு காரணம் இருக்கு. கல்யாணம் பண்ணிக்கிட்டேனு வச்சிக்க எனக்குன்னு வர்றவங்க என்னோட மனசப் புரிஞ்சக்கட்டு பொது வாழ்க்கையில் நான் ஈடுபட அனுமதிக்கிற பக்குவம் இருக்க வாய்ப்பு இருக்காது. அதான் நான் தவிர்த்தது... இப்ப நாம ரெண்டு பேருமே பொது வாழ்க்கையில் ஒண்ணுகூடி நிக்கிறோம். பல நேரங்கள்ல அகாலத்தில போவ வர வேண்டியிருக்கு. நமக்கு வெளியில இருக்கிறவங்க நாம இணங்கி பொது வாழ்க்கையில ஈடுபடறதுக்கு களங்கம் பேசறத தவிர்க்கவும் தான். நீ... நல்லவே யோசிச்சு பதில் சொல்லு..."[44]

வாழ்க்கையில் அவலப்பட்டு சிதைந்து போய் வந்திருக்கும் விசாலத்திற்கு வாழ்க்கைக் கொடுக்க முன்வரும் சுந்தரமூர்த்தியின் கொள்கை தோழப்பனுக்குப் பிடிப்போக, அவர் சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்கிறான். அவனின் தலைமையில் சிவப்புக் கொடியைப் பறக்க விடுகின்றனர். கடைசியாக சுந்தரமூர்த்தி வாத்தியார் சிறையிலிருந்து விடுதலையாகி வரும்போது தோழப்பனின் தோழர்கள் உணர்ச்சிப் பெருக்கில் ஆட்டம் போட்டு ஆரவாரத்துடன் அழைத்து வருகின்றனர். இவ்வாறாக சுந்தரமூர்த்தி வாத்தியாரின் உணர்ச்சிக்கு உரம் ஊட்டுபவனாக தோழப்பன் திகழ்கிறான்.

அவல நிலையால் மூலையில் முடங்கிவிடாத பெண்

விசாலாட்சி

> "பெண்ணென்று பூமிதனில் பிறந்துவிட்டால் மிகப்
> பீழையிருக்குதடி தங்கமே தங்கம்"[45]

என்று கூறும் பாரதியின் பாடல் வரிகளுக்கேற்பப் பெண்கள் பல பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். தப்பாட்டம் என்ற புதினத்தில் விசாலாட்சி பிரச்சினையில் சிக்கிக்கொண்டு, அதே காரணத்தை வைத்து வீட்டிற்குள்ளேயே முடங்கிவிடாமல் சமுதாயம் பேசுவதையெல்லாம் காதில் வாங்காமல் மாதர் சங்கத்தில்சேர்ந்து கீழ்ச்சாதி மக்களின் விடுதலைக்காகப் பாடுபடுகிறாள். கட்டிய கணவனே மதமாற்றம் செய்ய வேண்டுமென அழைத்துப்போய் தன பண்ணையாளரின் காமவெறிக்குத் தன்னை ஆளாக்கிவிட்டதால் வாழ்க்கையை வெறுத்துப்போய் திருக்கானுப்பாட்டியிலிருந்து தன் வீட்டிற்கு

வந்தவளுக்குச் சோகம் இருந்தாலும் மனதிற்குள் வைராக்கியத்தோடு வாழ்கிறாள்.

> "...மனசுக்கு புடிச்சவனோட ஓடிப்போய் ஒருநாள் தங்கிட்டு வந்திருந்தாக்கூட மனசு ஆறிப்போயிருக்கும். கட்டிக்கிட்டவனே கூட்டிக்கிட்டுப் போயி... அதுக்கு சாக்கு போக்கு சொல்லி... கேடுகெட்ட ஞானஸ்நானம் வேற..."[46]

அவளின் நிலையைப் பார்த்த குடும்பமே கதிகலங்கிக் காணப்படுகிறது. நன்றாகச் சாப்பிடவும் பிடிக்காமல் பேசவும் பிடிக்காமல் வாழ்கிறது. திருமணமான பெண் வாழாவெட்டியாக வீட்டிற்கு வந்துவிட்டால் அக்குடும்பத்தின் நிலையை விசாலாட்சி பாத்திரம் மூலம் ஆசிரியர் காட்டியுள்ளார்.

வாழ்க்கையில் சீரழிந்த விசாலாட்சி மாதர்சங்கத்தில் சேர்ந்து பெண்களுக்காக கட்சியைத் துவங்கி முன்னுக்கு நின்றுபேசி அவர்களை விழிப்படையச் செய்கிறாள். அவர்களுக்கிடையே நல்ல மாற்றத்தைக் கொண்டுவர அல்லும் பகலும் பாடுபடுவதால் சுந்தரமூர்த்தி வாத்தியாரே விசாலாட்சியைத் திருமணம் செய்துகொள்ள முன்வருகிறார். வாழ்க்கையைத் தொலைத்த அபலைப் பெண்கள் அதை ஒரு விபத்து என எண்ணி அதிலிருந்து மீண்டு மறுவிவாகத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தை ஆசிரியர் விசாலாட்சி பாத்திரம் மூலமாக வெளிக்காட்டியுள்ளார்.

அடித்தட்டு மக்களின் வாழ்வில் அக்கறை கொண்டவர்

சிவசங்கரன் பிள்ளை

சிவசங்கரன் பிள்ளை மற்ற பண்ணையாளர்கள் போல், பண்ணையாட்களை அடிமைப்படுத்த நினைக்காதவர். ஆறுமுகத்தின் மகன் சாமிக்கண்ணுவின் படிப்பிற்கு உதவி செய்கிறார். அவரின் பெண்களின் திருமணத்திற்கும் நல்லது கெட்டது என எல்லாவற்றிற்கும் உறுதுணையாக நிற்கிறார். ஆறுமுகத்தின் பரம்பரைத் தங்களின் வீட்டில் அடிமையா நின்று வேலை செய்தாலும், அவரின் மகன் படிக்க வேண்டும் என்று சொன்னவுடன் படித்து வேலைக்குப் போய்விட்டால் தன் அப்பா, குடும்பம் என்று எதையும் கவனிப்பதில்லை என்று ஆறுமுகத்திற்கு முன்பே அறிவுரை கூறுகிறார்.

> "இந்தக் காலத்துப் புள்ளைங்க நன்றி விசுவாசமா இருக்கும்ன்னு நானோ நீயோ எதிர்பார்க்க முடியாது. என் அனுபவத்தில் நான் பாக்கிற புள்ளைங்க யாரும் சம்பாத்தியம் பண்ணாப் போதும் அப்பாரையும் குடும்பத்தையும் நெனைச்சிப் பார்க்கிறதில்ல. புள்ளைய பெத்தவங்க தங்களோட கடமையா நெனைச்சி செய்யணுமேன்னி யான்னா உன்னோட நெனப்புல நான் குறுக்கே வரமாட்டேன்"[47]

என்று ஆறுமுகத்தின் மீது கொண்ட அக்கறையால் கூறுகிறார். அதையெல்லாம் மீறி தன் மகனைப் படிக்க வைத்த ஆறுமுகத்திற்குச் சிவசங்கரன் பிள்ளை சொன்னமாதிரி மகன் மரியாதை கொடுக்கவில்லை. தான் விரும்பியது போல வசதியான இடத்தில்

திருமணம் செய்து தந்தையையும், சகோதரிகளையும் வெறுக்கின்றான்.

சிவசங்கரன் பிள்ளை தன் குடும்பத்தின் மீதும் மிகுந்த அக்கறை கொண்டவர். ஒரு பெண்ணை வசதியான இடத்தில் மணமுடித்துக் கொடுத்துவிட்டு மற்றொரு பெண்ணை ஆசிரியர் தொழிலுக்காக படிக்க வைத்துள்ளார். ஒரே மகனை அவனின் விருப்பப்படி அவனின் மனைவி வீட்டில் இருக்க அனுமதித்துள்ளார். இவரின் மனைவி பண்ணை வரவு செலவு கணக்குகளைப் பற்றிக் கேட்பதில்லை. அந்த அளவிற்குக் கணவனின் மீது நம்பிக்கைக் கொண்டவர்.

> "சிவசங்கரன் பிள்ளை அக்கம் பக்கம் உள்ள ஆம்பளைங்களைப் போல் அடுத்த பொம்பளைங்கக்கிட்ட நின்னோ அப்புடி இப்புடி நின்னு பார்த்தோன்னோ யாரும் சொல்லிக் கேட்டதில்ல. அது ஒண்ணே அவர்மீது அவளுக்கு மதிப்பும் மரியாதையும் கூட்டி வச்சிருந்தது. அவரும் கையில காசுபணம் வரும் போதெல்லாம் அவளிடம் தான் கொடுத்து வைக்கச் சொல்லுவார். தேவைப்படும் போது செலவைச் சொல்லிட்டு வாங்கிக் கொள்வார்."[48]

என்பதிலிருந்து அவர் குடும்பப் பொறுப்பானவர் என்பதும் புலனாகிறது. மழை வெள்ளத்தில் சிக்கித் தவித்த மக்களைக் காணவும், ஆறுமுகத்தின் பேத்திகள் இறந்த இறப்புச் செய்தி கேள்விப்பட்டவுடன் இருப்புக் கொள்ளாமல் வெள்ளைக்காடாகக்

காட்சியளித்த குடிசைப்பகுதிக்கு உடனே செல்கிறார். ஆறுமுகத்தின் மகன் இப்புடி நெஞ்சமுத்தமா இருக்கானே என்று நினைத்துக் கொள்கிறார். மழை மறுபடியும் வந்துவிடும் என நினைத்த அவர்

> "ஆறுமுகம் மழை திரும்பப் புடிக்கத்தான் போவுது. நடக்கிறது நடக்கட்டும். அடக்கம் பண்ணிட்டு இங்க எங்க தங்குவீங்க? பள்ளிக் கூடத்துல தங்கின சனங்க போவ பாக்கி இருக்கிற உங்க வகையறாக்களோட நம்ம சேர் கொட்டிலுக்கு வந்து தங்கிடுங்க..."[49]

கீழ்ச்சாதி மக்களின் மீது இரக்கம் காட்டும் அவரின் நல்லெண்ணத்தைக் காணமுடிகிறது. கம்யூனிஸ்ட் கட்சியிலிருக்கும் ஆறுமுகத்திடம் காவிரி நீர் பிரச்சினை பற்றிப் பேசும்போது, பொதுவுடைமைக் கட்சிக்கும் மற்ற கட்சிகளுக்கும் இடையேயான முரண்பாடுகளை எடுத்துரைக்கிறார். இவ்வாறாகப் பொதுப் பிரச்சினைகளையும் அலசி ஆராய்வதிலும் வல்லவராகத் திகழ்கிறார் என்பது புலனாகிறது.

கணவன்மார்களின் நேசத்திற்கேற்ற மனைவியர்

தங்கம்

> "மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
> மாதவம் செய்திட வேண்டுமம்மா"[50]

என்ற கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையின் வரிகளுக்கேற்ப மங்கையராகப் பிறந்து பெண்மை, தாய்மை போன்ற தன்மைகளுடன் திகழ்கின்றனர். ஒவ்வொரு ஆண்களுக்குப் பின்னும் பெண்கள் இருப்பதால் வெற்றி கிடைக்கும் என்பது உண்மை போல

இவருடைய புதினங்களில் வரும் பெண்கள் காணப்படுகிறார்கள். இவர்கள் ஆண்களுக்குப் பக்கபலமாக இருந்து வாழ்க்கையை நடத்திச் செல்கின்றனர்.

உறங்க மறந்த கும்பகர்ணர்கள் என்ற புதினத்தில் தங்கம் தனது இருபத்தைந்து வயதான மகன் அப்புனுவின் மூளை வளர்ச்சிக்காகக் கணவனுடன் சேர்ந்து மருத்துவமனைக்கு அலைகிறாள். அவனின் அருகிலேயே இருந்து பணிவிடை செய்கிறாள். மூத்தமகன் அவனை அடிக்கும் போதெல்லாம் தடுத்து தானும் அடிவாங்கிச் கொள்கிறாள்.

நடவுவேலை பணமில்லாமல் தடைபடும்போது கணவன் சொல்லி தங்கத்தின் மருமகள் செயினை கழற்றி அடகு வைக்கத் தரும்போது அதை மறுத்து நீ எங்காவது கல்யாணம் காச்சிணு போறதாயிருந்தா? என்று வாங்க மறுக்கிறாள். அதையும் மீறிக் கொடுக்கும் போது தன் கணவனைத் திரும்பிப் பார்க்க அவன் அதை ஆமோதிப்பது போல எழுந்து செல்லவும் அதை வாங்கிக் கொள்கிறாள். கணவனின் குறிப்பறிந்து செயல்படக்கூடியவள் என்பதை அறியமுடிகிறது.

தாழ்த்தப்பட்ட பெண்ணைத் தன்னுடைய மருமகளாக ஏற்றுக் கொள்வதும், அவளிடம் தன்னை ஆச்சி என்றும் கணவனை ஐயா என்றும் கூப்பிடாதே என்று கூறுவதிலிருந்தும், தன் வீட்டிற்குச் செவத்தி மருமகளாக வந்தபின் அவளை வயல்காட்டிற்கு அனுப்பாமல் தானே சென்று அதனைக் கவனிப்பதிலிருந்தும் அவளின் நல்ல பண்பைக் காணமுடிகிறது.

"சின்னசிறுசுங்க இந்த வெயில்லேயும் சுணையிலேயும் போய் நிக்க வேண்டாம் என்ற எண்ணத்துடன் தங்கமும் சின்னச்சாமியுமே வயலுக்குப் போய் வேலையைக் கவனித்தார்கள்"[51]

என்ற ஆசிரியர் கூற்றின் வாயிலாகத் தங்கத்தின் குணநலன்களை அறிந்து கொள்ள முடிகிறது.

ஆராயி

'செந்நெல்'லில் ஆராயி தன் குடும்பத்தை நல்ல வழியில் நடத்திச் செல்கிறாள். மூத்தமகன் மருமகள் எல்லாம் ஒரே வீட்டில் இருந்தாலும் எவ்விதமான பிணக்கையும் காண முடியவில்லை. இளையமகன் கட்சியில் போய் பாடம் படிக்கிறதையும், வடிவேலுவிடம் சிலம்பு கற்றுக் கொள்வதையும், குத்து கற்றுக் கொள்வதையும் பெரியான் விரும்பவில்லை. தன் கணவனான பெரியான் விரும்பாததை செய்ய வேண்டாமென்றும், ஆண்டமாருங்க எவ்வித குறையும் வைக்காமல் தினந்தோறும் கூலி தருவதாகவும் கூறி அவர்களுக்கு எதிராகக் கொடி பிடிக்கக்கூடாது என்கிறாள். மகன் இடைவிடாமல், அவர்கள் நம்மை நிமிரவிடாமல் நாய்க்கு எலும்புத்துண்டு போடுவது போல போட்டு தடுக்கிறார்கள். அதனால் பண்ணை அடிமையை விட்டுவிட்டு வந்துவிடச் சொல்லும் போது அவள் மனம் குளிர்கிறாள்.

"...எங்க காலம் இப்படியே போயிட்டு. உன்னோட காலம் உருப்புடியா நடந்தா சரிதாம்பா. நீ ஒப்பாருக்கிட்ட கோணைக்கா மாணைக்கான்னு

பேசாதே. நீ ஒப்பாரு மனசு கோணாம அத்தக்கூலிக்கே வேலையைப் பாருப்பா"[52]

மகன் அத்தக்கூலிக்குப் பண்ணை அடிமையாக நின்று வேலை பார்த்தால் தான் கணவன் மகிழ்வார் என்று கணவனுக்காகப் பரிந்து பேசும் ஆராயியின் குடும்பப்பாங்கை அறியமுடிகிறது.

கணவனின் மனசு கோணாமல் நடந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கும் ஆராயி மகனின் மனசும் கோணக்கூடாது என எண்ணுகிறாள். அவன் சாதிவிட்டு சாதி பொண்ணு எடுக்க நினைப்பதை அறிந்த அவள்,

"...தான் மவனுக்கு சாதிவுட்டு சாதியில பொண்ணு எடுக்க ஆராயிக்கும் புடிக்கலத்தான். இருந்தாலும் சின்ன மவன் மனசு கோணவேணாம். பொண்ணும் கண்ணுக்கு லட்சணமா இருக்கா எந்த வேலையப் பாத்தாலும் அருறுப்பா இருக்குங்குற ஆசையிலத்தான் அவ மனசில இருக்கிற எதிர்ப்பக் காட்டிக்கல"[53]

என்ற வரிகளின் மூலம் பண்புநலன்களை அறிய முடிகிறது.

கோபாலகிருஷ்ண நாயுடு கீழ்வெண்மணியையே அழிக்க வரும்போது தன் மருமகளை கருவக் காட்டிற்குள் கொண்டுபோய் போட்டுவிட்டு, அவளும் கிளியம்மாவும் இராமையா வீட்டிற்குள் புக, அவ்வீட்டையும் வளைத்துத் தீயிட்டு எரித்து அதற்குள் அடைக்கலமாக வந்தவர்கள் அனைவரையும் கரிக் கட்டையாக்குகின்றனர். அதில் ஆராயியும் எரிந்து விடுகிறாள்.

வேலாயி

தப்பாட்டத்தில் வேலாயி என்ற பாத்திரம் குடும்பத்தைப் பொறுப்பாகக் கொண்டு செல்லும் பண்பு நிறைந்தவளாகக் காட்டப்பட்டுள்ளது. தன்னுடைய கணவனான மதுக்கண்பகடை மூன்று நாட்களாகப் புளிச்ச கஞ்சியைத் தான் குடித்துள்ளோம். இன்றாவது கறி எடுத்துச் சாப்பிட வேண்டும் என்றதும், வேலாயி வேலை செய்யும் இடத்திற்குச் சென்று பணம் பெற்றுக்கொண்டு கறி எடுத்து வந்து மருமகளிடம் கொடுத்துச் சமைக்கச் சொல்கிறாள்.

மருமகள் பறைச்சாதியாக இருந்தாலும் மகனை நம்பி வந்தவள் என்று அவளை ஏற்றுக்கொண்டு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கிறாள். தங்களுடைய உறவினர்கள் வந்தால் மருமகளும் உறவு வைத்துக் கூப்பிடும் அளவிற்கு அவளின் மீது அன்பு செலுத்துகிறாள். இவர்கள் செருப்புத் தைத்து அதன் மூலம் வரும் பணத்தில் தான் குடும்பம் நடத்துவது. மதுக்கண்பகடை வெளியில் செல்லும் போது தேனீர் குடிப்பதற்குச் சில்லரை இருக்கோ இல்லையோ என்ற யோசனையில் சில சில்லரைக் காசுகளைக் கொண்டு வந்து கொடுப்பதிலிருந்தும், தன் கணவன் சாராயத்தைக் குடித்ததால் குடல் வெந்து ஒரு மாதம் மருத்துவமனையில் வைத்து அரும்பாடுபட்டுக் காப்பாற்றியதிலிருந்தும் கணவன் மீது கொண்ட அவளின் பாசத்தை அறியமுடிகிறது.

நீலாயதாட்சி

நஞ்சை மனிதர்கள் என்ற புதினத்தில் நீலாயதாட்சி கணவனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் பத்திரமாகத் திகழ்கிறாள். அவளின் கணவர் சோமுப்பிள்ளை அவளும் சேர்ந்து வந்தால்

பௌர்ணமியும் அம்மாவாசையும் சேர்ந்து வருவதுபோல இருக்கும் என்று கூறும் ஆசிரியர்.

> "சோமுப்புள்ளையோட சம்சாரம் நீலாயதாட்சி ஒரு வாயில்லா பூச்சி. அப்ப அதுக்கு ஒரு சக்காளத்தி வந்துட்டாளேங்கிற சொரணையே இல்லாமத்தான்... பொம்பளைக்கு சொரணை வந்தது போலவா ஆம்பள ஆளுங்களும், ஊரும் உறவும் உட்டா வச்சிருக்கு? ஆம்பள அம்பது பேருக்கிட்ட போயிட்டு வரலாம். அதுக்கு கேப்பாங்கேள்வி இருக்காது. அதுவும் ஆம்பளைக்கு பொம்பள கொஞ்சம் எளப்பமா இருந்துட்டா போதும் அப்பறம் மூச்சிவிடத்தான் வழியேது?"[54]

கூறுவதிலிருந்து சோமுப்பிள்ளையிடத்தில் அவரின் மனைவி அடிமைப்பட்டுக் கிடப்பதை அறியமுடிகிறது. சோமுப்பிள்ளை ஒவ்வொரு நாடகக்காரிகளின் பின்னால் திரிவதை அறிந்த குடும்பத்தினர் அக்கா மகளான நீலாயதாட்சியைக் கட்டிவைக்க முன்வரும் போது, நிறம் தான் கருப்பு. மற்ற எல்லாவற்றிற்கும் இழுத்த இழுப்பிற்கெல்லாம் ஒத்து வருவாளென்று சம்மதித்தார். நீலாயதாட்சியின் குடும்பமே சைவம். ஆனால் சோமுப்பிள்ளை மட்டும் அசைவம் சாப்பிடுவார். அசைவ சாப்பாட்டைச் சக்காளத்தியான சாத்தனூர் லலிதாம்பா சாப்பாடு போடுவாள். மற்ற சைவச் சாப்பாடு சாப்பிடும் போதெல்லாம் சாப்பாட்டை எடுத்த வைத்துவிட்டு எது தேவையோ என கதவு மறைவிலிருந்து நீலாயதாட்சி பார்ப்பாள். படுக்கையறையில் கூட அவரின்

தேவைக்கு மட்டும் சில நிமிடங்கள் உடனிருப்பாள். மற்றபடி இவளுக்கெனத் தனியாக எவ்வித விருப்பு வெறுப்பு என்பதெல்லாம் இல்லை என்பதிலிருந்து அவளின் பண்பை அறிய முடிகிறது.

ஆச்சியம்மாள்

ஒரேஒரு ஊர்ல என்ற புதினத்தில் ஆச்சியம்மாளின் பாத்திரம் குறிப்பிடத் தகுந்தவையாகும். கதையின் தொடக்கமும் முடிவும் இவரின் பெயரிலேயே அமைந்துள்ளது. தன் உடன்பிறந்த தம்பியான வீரபத்திரன் கெட்டவனாக இருந்தாலும் திருமணத்திற்குப் பிறகு திருந்திவிடுவான் என்ற எண்ணத்தில் தன் கணவனிடம் சம்மதம் கேட்டு அவரிடத்தில் பலவாறு எடுத்துச்சொல்லி தன் மகள் கங்கையை முடித்துவைக்கிறாள். இவளின் கணவனான வெள்ளைச்சாமி எதைச் செய்யனும்னு நினைக்கின்றாயோ அதைச் செய். நீதானே அனுபவிக்கப்போற என்று சொன்னதுமாதிரி திருமணமான பிறகு வெள்ளைச்சாமி இறந்துவிட தம்பிக்காரன் வேறொரு பெண்ணை நாடிச் செல்கிறான். ஊர்சபையில் அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்கின்றனர். இதைக் கேள்விப்பட்ட கங்கை தற்கொலை செய்து கொள்கிறாள். ஆதலால் அவளின் மகளான வள்ளியை வளர்க்கும் பொறுப்பிற்கு ஆளாக்கப்படுகிறாள் ஆச்சியம்மாள். வள்ளி பருவம் வந்தவுடன் வீரப்பத்திரனின் இரண்டாவது மனைவி அஞ்சலையின் அண்ணன் மகனை விரும்புகிறாள். ஆச்சியம்மாள் தம்பிகாரன் இருக்குமிடத்தில் எப்படி பேத்தியைக் கட்டிக் கொடுப்பது என மனக்குழப்பம் அடைகிறாள். சம்பவம் நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகும் தம்பியின் மீது கொண்ட கோபம் தீராத அளவிற்கு அவள் நடந்து கொள்கிறாள்.

“...அந்தப்புள்ள சம்முவமும் வள்ளியும் ஒருத்தருக்கு ஒருத்தர் உயிரா இருக்குங்க. வள்ளிய இந்தப் படுபாவி வீரபத்திரன் இருக்கிற இடத்தில் வைச்சுக்கிட்டு நாம போய் எப்படி நல்லது கெட்டது செஞ்சுட்டு வரமுடியும்?”[55]

என்ற அவளின் மனசில் ஏற்பட்ட பகையை மறக்கமுடியாமல் தன் தம்பிக்கு வள்ளி மகள் தானே என்று எண்ணாமல் அவனிடம் விடக்கூடாது என எண்ணுகிறாள். வீரபத்திரனும் மகளின் மீது பாசத்தைக் காட்டுவதற்குப் பதிலாக மாணிக்கராஜ் என்ற முரடனுடன் சேர்ந்து கொண்டு அவளுக்குப் பலவிதத்தில் துன்பத்தைக் கொடுக்கிறான். இவர்கள் எல்லோரிடமும் இருந்து வள்ளியைக் காப்பாற்றி வரும் ஆச்சியம்மாளுக்கு, வள்ளியின் சாதகம் சண்முகத்திற்கு பொருந்தாது என்றவுடன் அதிர்ச்சியடைகிறாள். ஜாதகத்தை மீறி எதுவும் செய்ய முடியாது. ஆனால் இரண்டு பிள்ளைகளும் பிடிவாதமாக இருக்கிறார்களே என கவலையடைகிறாள்.

“...இந்த ரெண்டு பிள்ளைங்களும் புடிவாதமா ஒருத்தரை யொருத்தர் பார்த்துக்கிட்டே இருந்துடறேங்குதுங்களே அது எப்படி முடியும்? ஒரு நா இல்லே ஒரு நா எக்கு தப்பா எதுவும் நடந்துட்டா?”[56]

என்று பயந்து கொண்டிருந்தது போலவே காமன் பண்டிகையன்று வள்ளியும் சண்முகமும் ஒன்று சேர்க்கின்றனர். அவ்வாறு நடந்தும் ஜாதகப்படி சண்முகம் இறந்துவிடவில்லை என்பதை அறிந்த

ஆச்சியம்மாள் சந்தோசமடைகிறாள். இவ்வாறாக ஒரு குடும்பத்தின் கதையில் ஆச்சியம்மாள் முக்கியமான பாத்தியமாகத் திகழ்கிறாள்.

செல்லம்மாள்

இதே புதினத்தில் செல்லம்மாள் என்ற பாத்திரம் கூட்டுக் குடும்பத்தைத் தாங்கிச் செல்பவளாகத் திகழ்கிறாள். இருபத்தைந்து ஆண்டுகளாக பெரிய குடும்பத்தோடு வாழ்வதால்அவர்களுக்கு உழைத்துக் கொடுத்துத் தங்களுக்கென எதுவும் சேர்த்து வைக்காத நிலையைக் கணவனிடம் சொல்லி ஆதங்கப்படுகிறாள். தன் கணவனோடு வீட்டிலிருந்து கிளம்பி வயலில் எல்லா வேலைகளிலும் சரிசமமாக நின்று மாலை நேரமானால் வீட்டிற்கு அடுப்பெரிப்பதற்கும் விறகு என எதையாவது சுமந்து கொண்டு செல்லும் அவளின் ஏச்சும் பேச்சும் அவளின் கணவனான சிங்காரத்தைக் கோபம் கொள்ளச் செய்யவில்லை. ஏனெனில் அவள் சொல்வது போலவே மகன் சண்முகம் வண்டிமாடு ஓட்டி சம்பாதித்து வரும் பணமும் இவர்கள் விவசாயத்தில் சம்பாதித்து வரும் பணமும் வீட்டுச் செலவிற்கே ஆகிவிடுகிறது. மாமனாரையும், மாமியாரையும் கவனிக்கலாம். ஆனால் அஞ்சலை வீரபத்திரனை மணந்து கொண்டு வந்து வீட்டிலேயே அழுத்தமாக இருந்து கொண்டு சாப்பிடுவது அவளுக்குப் பிடிக்கவில்லை.

> "இருபத்தைஞ்சு வருஷமா இப்படியே முந்தானை விரிச்சிட்டேன்... ஒரு பொட்டுத் தங்கத்துக்கு வழியுண்டா?... நான் விதியத்தவ... இப்படியே இருந்திட்டேன். நீ பெத்த பொண்ணு ஆளாயி கண்ணாலத்துக்கு நிக்கிறாளே, அவ காதுல

மூக்குலயாவது கருகத்தனை நகை நட்டுப் போட்டுப் பார்க்க வேண்டாமா?..."[57]

தனக்கில்லாவிட்டாலும் தன் பிள்ளையாவது நகை நட்டுடன் வாழ வேண்டுமென நினைக்கிறாள். குடும்பச் சண்டை முற்றி தன் மாமனார் நாத்தனாருக்கு மாட்டுக் கொட்டகையின் முன் பகுதியை தனி வீடாக ஆக்கிக் கொடுத்த பிறகு தன் கணவன், நாத்தனார் அஞ்சலையிடம் கருணை காட்டி ஐந்து மூட்டை நெல்லும், மேலும் வேண்டிய தட்டுமுட்டு சாமான்களைக் கொடுத்த போதும் செல்லம்மாள் தடுக்கவில்லை. அவர்களுக்கும் குடும்பத்தின் வரவு செலவு தெரியவேண்டுமென நினைத்தவள், சாப்பாட்டிற்காகக் காய்கறி இல்லாமல் சுட்ட பச்சமிளகாயைத் தான் வைக்க வேண்டும் என அஞ்சலை செல்லும் போது செல்லம்மா தன் மகளிடம் அதற்குண்டான காய்கறிகளைக் கொடுத்தனுப்புகிறாள்.

"ராஜாத்தி! இந்தக கருவாட்டையும் முருங்கக்காயையும் கொடுத்துட்டுவாடி... உங்க அத்தக்காரிக்கி நாக்கு செத்து பேயிடும்டி..."[58]

மற்றவர்கள் துன்பப்படுவதைக் கண்டு தான் மட்டும் மகிழ்ச்சியாக இருக்கப் புடிக்க செல்லம்மாளின் நல்லெண்ணத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

அரசியல் மோகத்தால் இல்லறத்தை இழந்தவன்

குப்புச்சாமி

நஞ்சை மனிதர்களில் உயர்ந்த எண்ணம் கொண்ட வெள்ளைச்சாமிக்குப் பிறந்த குப்புச்சாமி அவனின் தாத்தா

சோமுப்பிள்ளை மாதிரி பல பெண்களிடம் தொடர்பு வைத்துக் கொள்கிறான். இவன் பிறந்த சில ஆண்டுகளிலேயே தாயை இழந்தாலும் தந்தையால் செல்லமாக வளர்க்கப்பட்டவன். உட்கார்ந்து சாப்பிட்டாலும் குண்டுமணி அளவிற்குக்கூட குறைவு வராத சொத்துக்களைப் பல தீய வழிகளில் இழந்துவிடுகிறான். சொத்துக்கள் அனைத்தையும் இழந்ததோடு தன்னுடைய குழந்தைகளின் கழுத்தில் உள்ள சங்கிலிகளையும் அடகு வைக்க வேண்டுமென கொண்டு போய் வேறொருத்தியிடம் கொடுத்துவிடுகிறான்.

> "போனவாரம் கிருஷ்ணவேணி சங்கிலிய வாங்கி அடவு வைக்கன்னு சொல்லிப்புட்டு எடுத்துக்கிட்டுத்தான் போனான். அன்னிய மறுநாளே கீவளூர் கொடிக்காத்தெரு பொண்ணு போட்டுக்கிட்டு வந்தான்னு பாத்துட்டு வந்த காயத்திரி சொல்லி..."[59]

ருப்புச்சாமியின் கெட்ட செயல்களைச் சொல்லி காயத்திரி தன் தாயைத் திட்டுவதையும் தாய் அவளிடம் பதில் கூறுவதையும் வெள்ளைச்சாமியால் கேட்டுக் கொண்டுதான் இருக்க முடிகிறதே தவிர, மகனிடம் எதிர்த்துக் கேட்க முடிவில்லை. அந்த அளவிற்கு எல்லையைக் கடந்த அவன் தன் மனைவியைக் குழந்தையைப் பெற்றெடுக்கும் இயந்திரமாக்குகிறான். தனக்கு ஆண் வாரிசு வேண்டுமென்பதற்காக ஆறு ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்தும் அதில் சில இறந்தும் போன பிறகும் அவன் அவளைக் கொடுமை செய்வதிலிருந்து கொடூரமான குணத்தை அறிய முடிகிறது.

தலைமுறை தலைமுறையாக உட்கார்ந்து சாப்பிட்ட குடும்பம் இவனால் சொத்துக்களை இழந்து சோற்றிற்குச் சண்டைபோடும் அளவிற்கு வறுமை நிலைக்கு வந்துவிட்டது. போதாதற்கு அரசியலில் சேருவதற்காக மீதி இருக்கக்கூடிய காயத்திரியின் செயினைக் கேட்க, அவள் எதிர்த்துப்பேசித் தரமறுக்கவும், வலுக்கட்டாயமாக எடுத்துப்போக நினைக்கிறான்.

> "என்னாடி மூஞ்ச நீட்டிக்கிட்டு வந்து நிக்கிற? நான் ராத்திரிக்கு மெட்ராஸ் போவனும். என்ன உடனே புறப்பட்டு வரச்சொல்லி எம்.ஜி.ஆர். கிட்டக்கருந்து தந்தி வந்திருக்கு, இப்ப பணம் வேணும். காயத்திரிப் போட்டுருக்க சங்கிலிய வாங்கிக் கொடு"[60]

மூத்தபெண் பிறந்த போது தாங்கிய குப்புச்சாமி அடுத்தடுத்துப் பெண் பிள்ளைகள் பிறந்ததும் மனைவியை கொடுமை செய்கிறான். ஐந்து பெண் பிள்ளைகள் நிலைநிற்கும் போது அடுத்ததாவது ஆண் பிள்ளையாக இருக்குமென நினைத்த அவன் செய்யும் கொடுமைகளைச் சொல்லிமாளாது. கடையாக இருந்த சொத்துக்களையும் விற்கத் தன் தந்தையிடம் கையெழுத்து வாங்குவதற்கு இளைய மகளை அனுப்ப, மூத்த பெண் காயத்திரி தடுக்க இவன் வாங்காமல் போகமாட்டானென நினைத்த வெள்ளைச்சாமி போடப் போகும் போது சாவித்திரி போடவிடாமல் தடுக்கும் போது அவளை அப்படியே தள்ளி விட்டுவிட்டான்.

> "என்னாடி தட்டுவாணி முண்ட... ரொம்ப தான் முண்டிப் பாக்கிற? ஒப்பன் வீட்டுச் சொத்தையாடி..."[61]

என்று கூறி தள்ளிவிட நிறைமாதக் கர்ப்பிணியான அவள் அலறிக் கொண்டு கீழே விழ அவன் காரில் ஏறிச் சென்றுவிட சாவித்திரி இறந்து விடுகிறாள். கடைசியாக காயத்திரி தன் தந்தையின் பெயரை முன்னால் சேர்க்கக் கூடாதென நினைத்து தாயின் பெயரைச் சேர்ப்பதற்கான அரசாணையைப் பெறுகிறாள். மீதி கொஞ்சம் இருக்கக்கூடிய நிலத்தில் ஐந்து பெண் பிள்ளைகளும் வெள்ளைச்சாமியும் இறங்கி வேலை செய்வதைப் பார்த்துவிட்டுச் சென்று பின் வீட்டிற்கு வரும் குப்புச்சாமியின் கார் சத்தத்தைக் கேட்டவுடன் கடைசிப் பெண் வந்து வாசற்கதவை அடைத்துவிட்டுச் செல்கிறது. குப்புச்சாமி பிறந்த போது பரணியில் பிறந்திருக்கான, தரணி ஆளப்போகிறான் என்றது போல அப்பகுதியே அரசியலில் வெற்றிபெற்ற குப்புச்சாமியை பாராட்டும் போது வீட்டிலுள்ள கடைசிப் பெண் கூட அவன் வரவை எதிர்பார்க்கவில்லை என்பதை ஆசிரியர் காட்டியுள்ளதை அறியமுடிகிறது.

பங்காளிச் சண்டையால் பகைமை கொண்டவர்கள்

கோவிந்தசாமி பிள்ளை

கோவிந்தசாமி பிள்ளையும், சோமுப்பிள்ளையும் அண்ணன் தம்பியாக இருந்தும் தன் தந்தை இருக்கும் போதே பூனை எலி மாதிரி நடந்து கொள்கின்றனர். தந்தை இறக்கும்போது, நெல் களத்தில் பொழங்கும் போது மருத்துவனுக்கும் வண்ணானுக்கும் சேர வேண்டிய மானியத்தைக் கொடுத்துவிட வேண்டுமென சொல்லியதால், கோவிந்தசாமி புள்ளையும் எது எப்படி இருந்தாலும் ஏலாம்பாவுக்கும், ரெத்தினவேலுவிற்கும் அளந்துவிட்டு விடுவதால்

கோவிந்தசாமியின் குடும்பத்தின் மீது உயிரை வைத்திருக்கிறார்கள் என்பதிலிருந்து பரம்பரை பழக்கத்தை விடாமல் காத்து வருபவர் கோவிந்தசாமி பிள்ளை என புலனாகிறது.

சண்டை எல்லாவற்றையும் மறந்து காலப்போக்கில் மனசு மாறிய அவர் தன் தம்பியிடத்திலும், தன் தம்பியின் மகனிடத்திலும் அணுசரனையாக நடந்துகொள்ள வேண்டுமென நினைத்து மன்னிப்புக்கூட கேட்க தயாராக இருக்கும் போது சோமுப்பிள்ளை பழைய சண்டைகளை மனத்தில் வைத்துக் கொண்டு வீராப்புடன் நடந்து கொள்கிறார். ஐந்து பெண் பிள்ளைகள் மட்டுமே கொண்டு ஆண் வாரிசு இல்லாத அவர் சட்டப்படி ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் தான் சொத்துக்கள் போய்ச் சேரும் என்ற நிலையின் காரணமாகவும் தன் மருமகன்களும் தான் கிழித்த கோட்டைத் தாண்டமாட்டாதவர்கள் என்பதை அறிந்தும் எப்படியாவது மகள் வயிற்றுப் பேத்தியான அங்கம்மாவைத் தம்பியின் மகனான வெள்ளைச்சாமிக்குக் கொடுத்துவிட்டால் உறவுக்கும் உறவாகிவிடும், சொத்துக்கும் சொத்தாகிவிடும் என்ற எண்ணத்தில் மருத்துவச்சியிடம் கேட்டும், சொந்த பந்தத்தில் அதுவும் மாமன் உறவுல பொண்ணு எடுக்கிறதா இருந்தா பொருத்தம் கூடப் பார்க்கக்கூடிய பழக்கம் இல்லாவிட்டாலும், தொடர்ந்து சண்டையாக இருப்பதால் பார்த்துவிடுவோமென ஜாதகத்தைப் பார்த்தும் திருமணம் செய்து வைத்துவிடுகிறார். ஆனால் அந்த பகைமை உணர்வென்பது வளர்ந்து கொண்டே தான் வருகிறது. அங்கம்மாவின் பெற்றோர்கள் கோவிந்தசாமி பிள்ளையின் பேச்சை கேட்டுக்கொண்டு சோமுப்பிள்ளைக்கு மரியாதை கொடுப்பதில்லை. பகையானது மேலும் மேலும் வளரத்தான் தொடங்குகிறது.

அண்ணனின் திட்டத்தை அறிந்து கொண்ட சோமுப்பிள்ளை எந்த வழியில் போறது என மட்டுப்படாமல் இருக்கிறார்.

> "தனக்கு இல்லாத ஒரு மரியதை தம்பிக்காரனுக்கு மட்டும் கெடைச்சிருக்கேங்கிற பொறாமை தான் கோவிந்தசாமி பிள்ளைக்கு. அதை எப்புடியாச்சும் குலைச்சிப்புடுனுங்கிற எண்ணத்தோட கங்கணம் கட்டிக்கிட்டு இருக்காரு. பங்காளி பாகஸ்தன உறவாடித்தான் கெடுக்கினுங்கிற சாதூர்யம் தெரிஞ்சவர்க்கே அப்ப அப்ப சமயம் பாத்து, காய நவுத்துக்கிட்டு இருக்காரு..."[62]

வெள்ளைச்சாமியும் அங்கம்மாவும் தன் மகளின் வீட்டிற்கு வந்திருக்கும் போது வேண்டுமென்றே வம்பிழுக்கிறார். கோவில் உற்சவத்தன்று கோவிந்தசாமி பிள்ளை தன் மகன் மாதிரி வைத்து வளர்த்த மோகனராசு மற்றும் சில தடிப்பசங்களோடு சென்று சோமுப்பிள்ளையை கொலை செய்து விடுகின்றனர். பங்காளி சண்டையால் கொலை செய்யவும் தயங்காத கோவிந்தசாமி பிள்ளையின் குணநலன்களை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சோமுப்பிள்ளை

சோமுப்பிள்ளை பல நாடகக்காரிகளிடம் சென்றும், பல பெண்களிடம் தொடர்பு வைத்தும் தறிகெட்டுத் திரிவதால் அக்காள் மகளான நீலாயதாட்சியைத் திருமணம் செய்து வைக்கின்றனர். அண்ணனான கோவிந்தசாமி சொத்துக்களையும், நகைகளையும் கைப்பற்றிக் கொண்டதோடு மட்டுமில்லாமல், தன் பேத்தியைக் கல்யாணம் செய்து கொடுத்து அனைத்துச் சொத்துக்களையும்

கைப்பற்ற நினைக்கிறார் எனத் தெரிந்து தன் மகனிடம் அழுது புலம்பித் தடுக்க நினைக்கிறார். அவன் மீறவே திருமணம் செய்து வைக்கிறார். மகனின் ஆசைக்காக தன் வீராப்பையும் தளர்த்தியவர் இவர். தன்னுடை மனைவி இடத்தில்அவ்வளவாக பற்றில்லாத இவர் நாடகம் பார்க்கப் போகும்போது, சாத்தனூர் லலிதாம்பாவைக் கையோடு கூட்டி வந்து விடுகிறார். அவளையும் வீட்டோடு சேர்த்துக் கொள்கின்றனர். சோமுப்பிள்ளைக்கும், கோவிந்தசாமி பிள்ளைக்கும் இடையே இருக்கும் பகையைக் கொஞ்சமாவது குறைக்க வேண்டுமென சாத்தனூர் நினைத்தாலும், கோவிந்தசாமியின் திட்டத்தை அறிந்த சோமுப்பிள்ளை எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

கீழ்ச்சாதியினரோ மற்ற யாருமோ பசி என்று வந்துவிட்டால் சோமு அவர்களுக்கு கொடுக்கச் சொல்லிவிட்டுத் தான் தன் வாயில் தண்ணீரைக்கூட ஊற்றுவார். பண்ணை அடிமைகளுக்கு ஆடையும் உணவும் கொடுத்தால் தான் அவர்கள் அடிமையாக மாடாக நின்று உழைக்கும் பண்ணை அடிமைகளுக்கு உணவும், உடையும் கொடுத்து ஆதரிப்பவர். சாப்பாடு போடாமல் வேலை வாங்கமாட்டார். இப்படிச் செய்வதை மற்ற பண்ணையாளர்கள் எதிர்க்கிறார்கள்.

> “சோமுபுள்ள, ஆளு பறைக்கு ரொம்ப எடம் கொடுத்து ஒண்ணாடி முன்னாடியா ஆக்கிபுட்டாரு. எல்லாம் அந்த மொட்டப்பாப்பாத்தி செய்யிர வேல, அவ கால்ல உழுந்துக்கிட்டு கெடக்கிற மனுசன் அக்கம் பக்கம் பண்ணகாரவங்க மானம் மரியாதையோட இருக்கிறதுன்னா செய்யிராரு?”[63]

என்பதிலிருந்து அவரின் இரக்க குணத்தை அறியமுடிகிறது. ஆனால் அச்செயலைக் கண்ட மற்றவர்கள் தடுக்கின்றனர். பண்ணை அடிமைகளுக்கு மட்டும் இவ்வாறு சாப்பாடு கொடுக்கவில்லை. பசியென்று வருபவர்களுக்குக் கட்டாயம் உணவு கொடுத்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். ஒரு நாள் யாரோ ஒருவர் சாப்பாடு கேட்டு வந்ததற்குத் தன் வீட்டு வேலைகளைக் கவனிக்க வந்திருக்கும் பெண்ணிடம் சொல்லி சாப்பாடு கொண்டுவரச் சொல்கிறாள். அவள்

> "மரக்கா நெறையா பழைய சோத்த நொப்பி ஒரு கொட்டாங்காச்சி நிறைய கொளம்பும் ஒரு சாண் நீளத்துக்கு கொளஞ்சி நார்த்தாங்க ஊறுகாயையும் குத்து மிளகாயோடக் கொண்டு போய் வச்சதப் பாத்தப் பின்னாலத்தான் அவரும் சாப்புட ஒக்காந்தாரு..."[64]

இந்த அளவிற்கு யார் வந்தாலும் உபசரிக்கும் அவரின் குணத்தை அறியமுடிகிறது. இவரின் உபசரிப்பு மணிமேகலையின் கொள்கையான.

> "மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"[65]

என்ற வரிகளுக்கு ஒப்பிடுவதாக அமைந்துள்ளது. மேலும் சிறுவயதிலேயே பர்மாவிற்கு ஓடிப்போன மூத்தமகன் கோபாலுவை நினைக்கிறார். அவனை தந்திரமாகத் தன் அண்ணன்காரர் ரங்கூனுக்கு அனுப்பிவிட்டு, அவனிடமிருந்து வரும் கடிதத்திற்கு

இங்கிருந்து இல்லாததும் பொல்லாததுமாக எழுதிவிடும் கொடுஞ்செயல்களை நினைத்துப் புலம்புகிறார்.

இரு மனைவியர் இருந்தாலும் அவர்களுக்கு எந்த குறையும் இல்லாமல் ஒற்றுமையுடன் நடத்தக்கூடிய அவர் மகன் வெள்ளைச்சாமிக்கு மகன் பிறந்ததும், தன்னுடைய பேரனுக்குப் பங்காளி வந்து முறை செய்யக்கூடாது என்று தங்கை முறை உள்ள கமலத்தைக் கொண்டு வந்து செய்யச் சொல்கிறார்.

> "இந்தா பாரு கமலம்! என்னோட பங்காளிப்பய வகையறா என வீட்டு வாசலுக்கு எந்த உரிமையும் கொண்டாடிக்கிட்டு வரக்கூடாது. அதனால நீ தான் என்னோடப் பேரப்புள்ளைக்கு மாமன் வரிசக் கொண்டாந்து எறக்கணும்..."[66]

வைராக்கியம் நிறைந்த அவர் பெருக்காரியங்களைச் செய்ய வேண்டுமென கருதுபவர். கோவில் திருவிழா சிறப்பாக நடைபெற வேண்டுமென நினைக்கும் அவரை அவ்விழாவின் போதே வெட்டிக் கொன்றுவிடுகின்றனர். கோவிந்தசாமி பிள்ளை தான் ஆள் வைத்துக் கொலை செய்துவிட்டதாகச் செய்தி பரவுகிறது.

> "எல்லைபிடாரிய எல்லை சுத்தி கொண்டாந்து எறக்கிடனுன்னு முனைப்பா நின்ன சோமுப்புள்ளயை, அந்த பிடாரி எல்லை சுத்தி வந்து மலையேறங்கக் காட்டியும் இப்படி அடிவாடித்தனா வெட்டிப் புட்டானுங்களே..."[67]

என ஊரே திரண்டு. இது அவரின் குடும்பப் பிரச்சினையில்லை. ஊர் பிரச்சினையாக எடுத்து வெட்டுன படுபாவிகளை வெட்டாமல்

விடக்கூடாது என ஒரு கூட்டமே கிளம்புவதிலிருந்து சோமுப்பிள்ளையின் பண்புநலன்களை அறிந்து கொள்ள முடிகிறது. கோவிந்தசாமி பிள்ளையிடத்தில் மட்டுமே பகைமை கொண்ட அவர் பிறருக்கு நல்லதையே செய்பவராகத் திகழ்கிறார்.

குடும்பப் பிரச்சினையால் இறந்தவர்கள்

அங்கம்மாள்

இரு குடும்பங்களுக்கிடையே நிகழக்கூடிய சண்டைகளால் மனம் உடைந்து இறந்துவிடும் பாத்திரமாக அங்கம்மாவை ஆசிரியர் படைத்துள்ளார். அங்கம்மா என்ற பெயரை வைத்து ஆசிரியர் புதினத்தை எழுதவே தொடங்கியுள்ளார். ஐந்து தலைமுறைகளைப் பற்றிக்கூறும் இதில் அங்கம்மாள் என்ற பெயரை அடியொற்றி வைக்கப்பட்டுள்ளதால் குலதெய்வங்களின் பெயரை வைக்கும் முறைகளை அறிந்து கொள்ளமுடிகிறது. அங்கம்மாவின் அழகில் மயங்கித் தான் அவளையே மணமுடிப்பேன் எனப் பிடிவாதமாக இருக்கிறான் வெள்ளைச்சாமி. அவளின் தோற்றத்தை ஆசிரியர் குறிப்பிடும் விதத்தை வைத்து அவளின் எழில்நலத்தை உணரமுடிகிறது.

> "அங்கம்மா போன மாசம் ஆளானக் குட்டியாவாத் தெரியுரா? பதினெட்டு வயசுக்குட்டிப் போலல்ல வெளைஞ்சி நிக்கிறா? அப்புடியாப்பட்ட கட்டு செட்டான ஒடம்பு. செக்கசெவலேன்னு... ஒத்தச் சடையப் பின்னிப்போட்டா பின்னத்தித்தொடை ரெண்டுக்கும் இடையில கதண்டு கனக்கா கெடக்கும். பொம்பளைக்கு பொம்பளையே ஆசப்படுவா.

அவ்வளவு அழகு. அந்த அழகிலச் சொக்கிப்போய் தானே கட்டிக்கிட்டா அங்கம்மாவத்தான் கட்டிக்குவேன்னு ஒத்தக்கால்ல நிக்கறான் வெள்ளைச்சாமி...”[68]

வெள்ளைச்சாமியின் மனநிலையை அறிந்த சோமுப்பிள்ளை தடுத்துப்பார்த்தும் கேட்காமல் போகவே திருமணம் செய்து வைக்கிறார். திருமணம் ஆனவுடன் தாத்தாவிற்கும் பாட்டிக்கும் பயந்து கொண்டு தான் எதையும் செய்கிறாள் அங்கம்மா. சாத்தனூர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று கூறி அவளை வழி நடத்துகிறாள். நாட்கள் ஆக ஆக ஒவ்வொரு பிரச்சினையாக வளரத்தான் செய்கிறதே தவிர குறையவில்லை. ஆதலால் பெரிய தாத்தாவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு தன் பெற்றோர்கள் சின்னத் தாத்தாவான சோமுப்பிள்ளைக்கு மரியாதை கொடுக்க மாட்டேன்கிறார்களே என மனதிற்குள்ளேயே குமுறுகிறாள். தன்னுடைய மகன் குப்புச்சாமிக்கு மாமன் சீர் செய்து சிறப்புச் செய்யும் போது தன் வீட்டிலிருந்து வந்து செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் இருக்கிறது. ஒரு பெண் புகுந்த வீட்டிற்குப் போனபின் பிறந்த வீட்டிலிருந்து வந்து எல்லா நிகழ்ச்சிகளுக்கும் வந்து நின்றால் தான் பெருமை என்பதை ஆசிரியர் காட்டியுள்ளார். இப்படி குடும்பச் சிக்கலுக்குள் தவிக்கும் பெண்களின் நிலையை அங்கம்மா மூலம் அறியமுடிகிறது.

“அங்கம்மா மனசில ஒரு பக்கம பெரிய சந்தோஷம், இருந்தாலும் இந்த வைபவத்தில அவப் பொறந்த எடத்து சீர் உம் அவ அம்மா அப்பா கொண்டாந்து வச்சி செய்ய வேண்டிய தேவை. இப்ப அவ

அனாதையா இருந்து இந்த வீட்டுல வாக்கப்பட்டது போல...”[69]

கணவன் வீட்டு வகையறாக்கள் மட்டுமே வந்திருந்து சிறப்பிக்கும் போது இவளின் மனம் இருதலைக் கொள்ளி எறும்பு போல துடிக்கிறது. சோமுப்பிள்ளையின் சாவக்கூட வந்து கேட்காத தன் பெற்றோரை நினைத்து நினைத்துப் புலம்பியே மனம் வெறுத்து அரளிக் கொட்டையை அரைக்கும் போது சாத்தனூர் பார்த்துத் தடுத்து அறிவுரை கூறியும் கேட்காத அங்கம்மா யாரிடத்தும் பேசாமலும், கணவனின் முகத்துப் பார்த்துப் பார்த்து அழுது கொண்டேயிருந்தும் நெஞ்சடைத்து இறந்துவிடுகிறாள். இவள் இறக்கும் போது குழந்தை நடக்கக்கூட இல்லை என்பதையும் ஆசிரியர் சுட்டியுள்ளார். இப்படித் தவிக்கவிட்டுச் சென்ற மனைவியை நினைத்துக் கொண்டே கடைசிவரை வாழ்ந்து கொண்டு இருக்கிறார் வெள்ளைச்சாமி என்பதிலிருந்து அங்கம்மா தன் கணவன் மீது கொண்ட பற்றினையும் குடும்பத்தின் மீது கொண்ட பற்றினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

சாவித்திரி

இதே புதினத்தில் அங்கம்மாவை மறக்கமுடியாமல் தவிக்கும் வெள்ளைச்சாமியின் மகன் குப்புச்சாமி தன் மனைவியைக் கொடுமைப்படுத்தியும், கீழே தள்ளிவிட்டும் அவளின் சாவுக்குக் காரணமாகின்றான். அத்தகைய கொடுமைகளை அனுபவிக்கும் பாத்திரமாக சாவித்திரி திகழ்கிறாள். குப்புச்சாமி பிறந்தபோது மாமன் சீர்வரிசை செய்த கமலத்தின் பேத்திதான் சாவித்திரி. மாமன் முறையான குப்புச்சாமியை மணமுடித்து வைக்கின்றனர்.

திருமணத்திற்கு முன்பே குப்புச்சாமி சோமுப்பிள்ளை மாதிரி அக்கிரகாரத்துப் பெண்களான அலங்காரத்தோடும், சுகுணாவோடும் தொடர்பு வைத்திருந்தாலும் எல்லா வாலிபப் பசங்களும் இளம் வயதில் செய்வதுதான் எனச்சொல்லி சாவித்திரியைத் திருமணம் செய்து வைக்கின்றனர்.

> "பாட்டன் சோமுப்புள்ள வச்சிட்டுப் போன சொத்த அந்தாண்ட இந்தாண்ட நவத்திடாம மேலமேல நஞ்சையும் புஞ்சையுமா ஏராளமா அப்பாரு வெள்ளைச்சாமிபுள்ள சேத்து வைச்சிருக்காரு. இத்தனைக்கும் ஒரே வாரிசு அக்கு தொக்கு இல்ல. சாவித்திரி வாக்கப்பட்டுப் போனா அவன வச்சிக்கிட்டு எட்டு சித்திரம் போட்டுக் காட்டுவா..."[70]

பையன் எப்படி இருந்தாலும் சொத்துக்களைப் பார்த்தும், சொந்தங்களைப் பார்த்தும் மணமுடிக்கக்கூடிய பழக்கத்தைக் காணமுடிகிறது. இவ்வளவு சொத்துக்களையும் பல கெட்ட பழக்கத்தால் அழித்துவிடும் கணவனை யாரும் எதுவும் சொல்லிவிட்டால் அவள் மனம் பதைத்துவிடுகிறது.

"கல்லானாலும் கணவன்; புல்லானாலும் புருஷன்" என்ற வரிகளுக்கேற்ப கணவனை விட்டுக் கொடுக்காமல் வாழும் அவள் தன் மூத்தமகள் தன்னைத் திட்டி, நீ அவரை கண்டிக்காமல் விட்டுவிட்டாய் என ஏளனமாகப் பேசும் போது அவளின் கோபமான பேச்சையும் ஆற்றாமையையும் காணமுடிகிறது.

"...அதான் ஒப்பனபத்தி இப்பதான் எனக்கு தெரியுமாடி? கெட்டு மலிஞ்ச மனசுனுக்கு செக்கும் சிவலிங்கமும் ஒண்ணுதாடி. அன்னிக்கே நான் தலைய முழுவிட்டேன். நீ இன்னும் அந்த சங்கிலிய நெனைச்சிக்கிட்டு இருக்கிறியா? அந்த லம்பாடி நாயெல்லாம் வூட்டுக்கு வந்துடக்கூடாதுன்னு தான் வாயப் பொத்திக்கிட்டு அந்த ஆளுக்கு முந்தானை விரிச்சிக்கிட்டு கெடக்கிறேன்..."[71]

நகைகளை அடகு வைக்கக் கேட்டு வாங்கிச் செல்லும் அவன் அதை எவளிடமாவது கொடுத்துவிட்டாலும் பரவாயில்லை. அவள்கள் வீட்டிற்கு வந்துவிடக் கூடாதே என்ற பயம் சாவித்திரியை ஒட்டிக் கொண்டதால் எதைக் கேட்டாலும் கொடுத்துவிடுகிறாள். மூன்று தலைமுறையாகச் சேர்த்து வைத்த சொத்தை குப்புச்சாமியே அழித்துவிடுவதால் சாப்பாட்டிற்குக்கூட வழியில்லாமல் பசி பட்டினியோடு இருக்கிறார்கள் சாவித்திரியின் பெண்கள். கணவனின் இம்சைக்கு ஆளான அவள் ஆண் வாரிசுக்காக அடுக்கடுக்காய் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் இயந்திரமாகிறாள். இதில் இரட்டைக் குழந்தைகள் வேறு என பல கொடுமைகளுக்கு ஆளாகிறாள். மீது இருக்கக்கூடிய ஒரே சங்கிலியான காயத்திரியுடையதை கேட்கும் போது சாவித்திரி கொடுக்க மறுக்கிறாள்.

"அந்த சங்கிலி உங்க அம்மா போட்டிருந்தது. மாமா அவ கழுத்தில போட்டு கழட்டக் கூடாதுன்னு கண்டிச்சி தான்."[72]

எல்லாற்றையும் இழந்த அவள் பரம்பரைச் சங்கிலியை இழக்க விரும்பாமல் அதைத் தடுக்கிறாள். பேங்கில் இருக்கிற பணத்தையும் எடுப்பதற்காக தன் தந்தையிடம் மையெழுத்து வாங்கும் போது சாவித்திரி தடுக்கிறாள். தடுக்கும் அவளை அப்படி தள்ளிவிட்டதால் கீழே விழுந்து நிறை மாத குழந்தையேடு இறந்துவிடுகிறாள்.

ஒரு பெண்ணானவள் இப்படிப்பட்ட கணவனுக்கு வாக்கப்பட்டால் எத்தகைய கதிக்கு ஆளாக நேரிடுகிறது என்பதைச் சாவித்திரி பாத்திரத்தின் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

கல்வி கற்ற பெண்களின் நிலை

காயத்திரி

நஞ்சை மனிதர்களில் ஐந்தாவது தலைமுறையில் தான் கல்வி கற்கும் பெண்களைக் காணமுடிகிறது. குப்புச்சாமியின் ஐந்து பெண் குழந்தைகளில் மூத்த பெண் காயத்திரி. தந்தை செய்யும் கொடுமைகளை எதிர்ப்பவள். அவனின் கெட்ட பழக்கத்தைத் தடுக்காத தாயைத் திட்டுபவள். ஆண் அதிகாரத்தை எதிர்த்துக் குரல் கொடுப்பவள். தான் போட்டுள்ள சங்கிலியைத் தந்தை கேட்க அதைக் கொடுக்க மறுக்கும் போது கணவனின் பிடிவாதம் அறிந்த சாவித்திரி தன் மகளின் காலில் விழாத குறையாகக் கெஞ்சிக் கேட்கும் போது ஆவேசமாகக் கத்துகிறாள்.

> "நீயும் போ. உன்னையும் கொண்டு போய் அடவு வச்சிட்டு எவ கிட்டக்காச்சும் கொடுத்துட்டு வரட்டும். ப்பூ... இதெல்லாம் ஒரு மனுச சென்மம்..."[73]

என்று தாயின் இயலாமையையும், தந்தையின் அக்கிரமத்தையும் பேசும் போது அவளின் தாத்தாவான வெள்ளைச்சாமி ஒரு பக்கம் மகிழ்ச்சியடைந்தாலும், மறுபக்கம் வாயும், வயிறுமாய் இருக்கும் பொண்ணு இவ்வளவு இம்சைக்கு உள்ளாகுதே என வருத்தப்படுகிறார். சாவித்திரி கொஞ்ச சுதாரிப்பாய் இருந்திருந்தால் குப்புச்சாமியை வழிக்குக் கொண்டு வந்திருக்கலாம் என நினைத்த வெள்ளைச்சாமி, தன் பேத்தி காயத்திரி மூலமாகத்தான எதிர்காலமே என நினைத்து அவளின் படிப்பிற்கு உறுதுணையாகிறார். தன் தாய் சொரணையே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருப்பதைக் கொடுக்குத்தேள் மாதிரி கொட்டிக் கொண்டிருக்கிறாள். தன் தாய், கணவன் அழிச்சது போக மீதி இருப்பதைத் தான் நீங்கள் அனுபவிக்கலாம் என பரிந்து பேசும்போது,

> "அவரு தேடின சொத்தில்ல. என்னோட தாத்தா தேடின சொத்து நான் கேக்காம யாரு கேக்க முடியும்? அவரோட நீயும் வேணும்ன்னா போ. உன்னோட சக்காளத்திக்கு துணி தொவச்சிப் போட்டுக்கிட்டு இறேன்..."[74]

காயத்திரியின் துடுக்குத்தனமான பேச்சால் சுருண்டுவிடுகிறாள் சாவித்திரி. நாக்கப் புடுங்கிட்டு சாவலாம் போல் இருந்துச்சி, என்ற வரியால் தாயைப் பழித்துத் தந்தையின் போக்கை தடுக்க தவறியதைச் சுட்டிக் காட்டுகிறாள்.

தாய் இறந்தவுடன் தாத்தா மற்றும் தங்கைகளுடன் சேர்ந்து வயலில் வேலை செய்கிறாள். குண்டுக்கண்ணுவிடம் அடமானம் வைத்திருந்த பதினெட்டு மா நிலத்தில் மூன்று மாவை அவனுக்கே

விற்றுவிட்டு மீதி இருந்த நிலத்தை மீட்டு தன் பேத்திகளின் பெயரில் பத்திரம் போட்டுவிட்டு அந்நிலத்தில் குடும்பத்தோடு நின்று பருத்தி விளைய வைக்கின்றனர். வேலைக்காரர்களை வைத்து வேலை வாங்கிய வெள்ளைச்சாமி வயதான காலத்தில் பேத்திகளுக்காக வயலில் இறங்கி வேலை செய்கிறார். படித்துக் கொண்டிருக்கும் காயத்திரியும் களை வெட்டுகிறாள்.

தந்தையின் பெயரைத் தன் பெயருக்கு முன்னால் சேர்ப்பதை விரும்பாத காயத்திரி அன்னையின் பெயரைச் சேர்ப்பதற்கான அரசாங்க ஆணையை முறைப்படி பெறுகிறாள். இந்தத் தபாலை வாங்கிப் படித்த குப்புச்சாமிக்குப் பொறடியில் தாக்கியது போலிருந்தது. அப்பன் செய்த அடாவடித் தனத்திற்குத் தான் கற்றுக் கொடுக்கும் ஒரு பாடமாக நினைக்கும் இவளின் மூலமக அக்குடும்பம்தலை நிமிரும் என்பது புலனாகிறது.

திலகா

பெருந்திணை என்ற புதினத்தில் திலகா ஆசிரியர் பயிற்சி படித்து முடித்து வந்தும் அரசாங்க வேலைக்குப் பணம் கட்ட முடியாமலும், அதற்கு ஏற்பாடு செய்வதற்கான ஆட்கள் இல்லாமலும் குடும்ப வறுமையின் காரணமாக வீட்டு வேலைகளைச் செய்து கொண்டும், உள்ளூரில் இருக்கும் இங்கிலீஷ் பள்ளிக் கூடத்தில் தற்காலிகமாக ஐந்நூறு ரூபாய்க்கு வேலை செய்து கொண்டும் இருக்கும் பெண்ணாக இருக்கிறாள்.

திருச்சியில் தங்கி படிக்கும் போது மொழுமொழுவென்று இருந்த அவள், படிப்பை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் வீட்டு

நிலைமை அறிந்து கொண்டு இளைத்துவிடுகிறாள். மாட்டுக்கு ஊற்றும் கழனித் தண்ணீரை இடுப்பில் சுமந்து வரும்போது முழங்காலுக்கு மேல் சேலையைத் தூக்கிச் செருகியிருக்கிறாள். வீட்டிலிருக்கும் பெண் போன்று வீட்டு வேலைகளைக் கவனிக்கும் அவள் பண்ணையடிமையான ஆறுமுகத்திடம்,

> "எனக்கு இந்த வேலையெல்லாம் இன்னும் மட்டுப்படல ஆறுமுகம். அம்மா இந்த திசைப்பக்கம் கூட வர்றவங்க இல்ல. நான் இன்னும் கொஞ்ச நாள் மாடு கன்னோட பழகிட்டா..."[75]

எல்லா வேலைகளையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் கொண்டவள் அவள். மாடு, கன்னோட பழக வேண்டுவது மட்டுமில்லாமல், நாய் கூடவும் அன்பாகப் பழகுபவள் என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். திலகாவின் அக்கா வீட்டுக்காரர் இறந்த செய்தி கேட்டு சிவகங்கரன் பிள்ளையின் குடும்பமும் மற்ற உறவினர்களும் சேர்ந்து அலறியடித்து அழுகின்றனர். அப்போது திலகா அழுவதை நாய் போய் பார்த்துக் கொண்டு நிற்கிறது.

> "வாசலில் கிடந்த நாய் கூட்டத்தோடு கூட்டமாக மெல்ல மெல்ல வீட்டுக்குள் போய் திலகாவைப் பார்த்துக் கொண்டு நின்றது..."[76]

என்ற வரிகளின் மூலம் படித்த பெண்ணாக இருந்தாலும், பழகுவதிலும் வேலை செய்வதிலும் பக்குவமடைந்தவள் என்பதைத் திலகாவின் பாத்திரம் மூலம் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

பெருந்தெய்வ வழிபாட்டில் பித்தானவர்கள்

நந்தன்

மரக்கால் என்ற புதினத்தில் நந்தன் ஆதனூர் பறையர் குலத்தில் பிறந்திருந்தாலும் சிவபெருமானையே நினைத்து பூசித்து நாமம் செய்பவனாகவும், ஒருமுறையேனும் தில்லை நடராசப் பெருமானைக் காண வேண்டுமென சென்று அங்கு வேள்வித் தீயில் கருகி விடுபவனாகவும் ஆசிரியர் இவனைப் படைத்துள்ளார்.

பெருந்தெய்வ வழிபாடு மேற்குலத்தாருக்கும், சிறு தெய்வ வழிபாடு கீழ்குலத்தாருக்கும் உரியது என்ற கருத்து நிலவிய காலத்தில் மேற்குடியினர் மட்டுமே வழிபடுவதற்கு உரிமையான சிவனை நினைத்து உருகுகின்றான் நந்தன். இவனின் செயலால் மனைவி கூட விட்டுவிட்டு ஓடிவிடுகிறாள். நந்தன் கச்சாலையைப் பட்டமங்களத்திற்கு வேலை செய்யப் போயிருக்கும் போது தனக்குத் தகுந்த ஜோடி என சேர்த்துக் கொண்டு ஆதனுருக்கு வந்தவன் அங்கு வந்த பிறகு திருமணம் செய்து வைக்கின்றனர். திருமணமாகி சில நாட்களிலேயே இல்வாழ்வினை வெறுத்து சிவநாமத்தை உச்சரிக்கவே அவனின் மனைவி பெரும்பாடுபட்டாவது அவனை மாற்ற நினைக்கிறாள். அவனோ மாற்றம் எதுவுமின்றி பரமபதத்தைத் தேடுகிறான்.

> "சிவதரிசனம் பக்காத மனுசபபிறவும், மந்தை மாடும் ஒன்று. நீசப் பறைசாதியில பொறந்த பாவத்தைப் போக்க பரமபதத்தை தேடிப்போயட்டா நம்மல பிடிச்சியிருக்கிற தீட்டு கழிஞ்சிடும். சிதம்பரம்நாதரோட அருள் பார்வை பட்டப்போதும்,

நெருப்பில விழுந்த கொழுப்பு போல இளகிப் போயிடுமாம். கவுச்சி அண்டாம சுத்தம் தேடி நிப்போம். சிவஅருள் உன்னை பாவியா நிறுத்திடாது...”[77]

என்று கூறிவிடவும், பலவாறு எரிச்சலோடு இருந்த அவள் உப்பு ஏற்றி விற்க வந்த சோட்டானோடு ஓடிவிடுகிறாள். இதற்குப் பிறகாவது நந்தனுக்கு அறிவு வரவேண்டுமே என அவனின் தாய் வளத்தி கலங்கி நிற்கிறாள். நாளுக்கு நாள் நந்தனின் மனதில் நீசனாய் பிறந்துவிட்டோமே என்ற அருவருப்புக் கூடிக்கொண்டேயிருக்கிறது. எப்படியாவது இந்த இழித் தன்மையைப் போக்கிட வேண்டுமென நினைப்பதோடு மட்டுமல்லாமல் தன் கூட்டாளிகள் இருவரையும் நெற்றியிலும், மார்பிலும் துண்ணூறு பட்டையைப் போடவைத்துச் சிவநாமத்தை உச்சரிக்க வைக்கிறான். எதிர்ப்புகள் அதிகரித்தாலும் இவனுக்கு சிவசங்கரன் மீது கொண்ட பற்று குறையவில்லை.

நந்தனுக்கு மறுபடியும் திருமணம் செய்து வைத்தால் அதிலிருந்து மாறுவான் என பெற்றோர்கள் மகள் வயிற்றுப்பேத்தியான குட்டாவை விட்டு மனதை மாற்ற முற்படுகின்றனர். அவன் எதற்கும் இடம் கொடுக்காமல் சிவதரிசனத்திற்காகக் காத்திருக்கிறான். அதில் தர்மவர்த்தினி நந்தனின் மேல் ஈடுபாடு கொள்கிறாள். ஆதனூர் பிரமதேோயத்தின் அனுமதியோடு தில்லை சிவநாதரைத் தரிசிப்பதற்காக நந்தனும் கூட்டாளிகளும் செல்லும் போது இடையிலுள்ள ஊர்களிலிருக்கும் பறையர் குலத்தைச் சேர்ந்தவர்கள் தங்களின் குலத்தினர் இவ்வாறு செல்கின்றனரே என்று கூறி அவரவர் ஆச்சரியமடைகின்றனர். இடையில் மருதன் என்ற பறை குலத்தைச் சேர்ந்து தில்லைக்குச்

செல்லும்போது உமணன் ஒருவனின் துணையோடு யாருக்கும் தெரியாமல் தரிசனம் செய்துவிட்டு வரலாம் என்ற திட்டத்தோடு சென்ற நந்தனை வேல்வித் தீயில் போட்டு எரித்து சாம்பலாக்கி விடுகின்றனர். நந்தனை வரலாற்றுக் கதையை மையப்படுத்தி இப்புதினத்தைப் புனைந்துள்ளார் ஆசிரியர். அதுவும் தான் பிறந்த சாதியைத் தானே இழிபிறவி எனச்சொல்லி அத்தன்மை நீங்க தீயில் இறங்கி வந்து புனிதமடைவதாகச் சொல்லப்பட்டுள்ளது.

> "நாங்கள் காணப்போகும் சிவதரிசனம் குலத்திற்கும் குடிக்கும் வளம் சேர்க்கும். மாடு கன்னு பெருக்கச் செய்யும் சிவசிவ என்று சொல்லி அரோகரா அரோகரா என்று ஆடிப்பாடினான் நந்தன். கூடியவர்கள் நந்தன் சொன்னதைக் கேட்டதும் திரும்பவும் அரோகரா அரோகரா என்று ஓங்கிச் சொன்னார்கள்..."[78]

உயர்ந்த குடியானவர்கள் மட்டும் தரிசிக்கும் தெய்வத்தைக் கீழ்ச்சாதியினரும் வழிபடவேண்டும். ஆலயம் செல்ல வேண்டுமென்ற நந்தனின் உந்துதலை அறிய முடிகிறது.

மருதன்

நந்தனும் அவனின் கூட்டாளிகளும் சிதம்பரத்தை நோக்கி காட்டுப் பகுதியில் செல்லும் போது மருதனைக் காண்கின்றனர். அவன் வாட்ட சாட்டமாகக் கருத்த உடம்பையும் அதில் முடிகள் சிலிப்பிக் கொண்டும் முகமே தெரியாத அளவிற்குத் தாடியுடனும் மீசையுடனும் விழிகள் சிவந்தும் காணப்பட்டான். காண்பதற்கு அச்சத்தை வரவழைக்கக்கூடிய தோற்றத்தைப் பார்த்த நந்தனின்

கூட்டாளிகள் போய்விடலாம் எனக்கூற நந்தன் மட்டும் தாங்கள் யார், எங்கிருந்து வருகிறோம். எங்கே செல்கிறோம் எனத் தெரிவித்து தில்லை வலம் தரிசனத்திற்கு அனுமதி கொடுத்து பிரம்மதேவ அதிபர் ஆணைடையோட ஓலை முத்திரை கொடுத்திருப்பதைக் காட்டவும் மருதன்,

> "நந்தா! நீ தில்லை நாதரை தரிசனம் கண்டு முக்திப்பெற வழி கண்டு கலகம் மூட்டியிருக்கே. உன்னோட பிரம்பதேயமும் அதிபரும் கலக்கத்திலத்தான்... நம்மச்சாதி பண்ணை அடிமைகளை உசுப்ப ஒரு அடி எடுத்த வச்சிருக்க. நானும் இந்த நாகனும் இதுல தோத்துட்டு தப்பிலைந்து ஒளிஞ்சிக்கிட்டு நிக்கிறோம். நீ ஒரு படி மேல்தான் வா... போவோம்..."[79]

என்று கூறிவிட்டுத் தாங்கள் சோழ தேசத்திற்குக் கட்டுப்பட்ட செம்மங்குடி பிரமதேய பறை பண்ணை அடிமைகள் என்றும், அங்கு அவர்களை ஆடு மாடுகளைப் போல் நடத்துவதாகவும், ஏதாவது எதிர்த்தால் மரத்தில் கட்டி வைத்து சவுக்கடி கொடுப்பதாகவும், கோமணத்தை அவுத்துவிட்டு அதற்குள்ள மொளவாப்பொடி திணிச்சு கசையடி கொடுப்பதாகவும் ஆன கொடுமைகளை எடுத்துக்கூறி தண்ணீர் தாகத்திற்காக கோயில் குலத்தில் இறங்கி இரண்டு கை தண்ணீர் அள்ளிக் குடித்ததற்காக நஞ்சைக் கண்காணி புளியன் விளாரால் அடிக்கும் போது, விளாரைப் புடிச்சு இழுத்து கீழே அவரைத் தள்ளிவிட்டதால், கொதிக்கும் எண்ணெய் சட்டிக்குள் இரண்டு கட்டை விரல்களையும் அமுக்கி கொடுமை செய்ததையும் மருதன் கூறி கும்பிப்போன இரு கட்டை

விரல்களையும் காட்டுகிறான். அதன்பின் பிரமதேயன் இவன்களை விட்டுவைத்தால் எல்லாப் பண்ணைப் பறை அடிமைகளையும் மாற்றிவிடுவார்கள் என அயல் நாட்டிற்குக் கப்பல் ஏற்றும் போது காவலாளிகளை ஏமாற்றிவிட்டு மருதனும், நாகனும் செல்லும் வழி தெரியாமல் அக்காட்டுப் பகுதிக்குள் சுற்றித் திரியும் கதையை நந்தனிடத்தில் கூறுகிறான் மருதன்.

அதன் பின் மருதனும், நாகனும் நந்தனின் கூட்டத்தோடு சென்று தில்லை செல்கிறார்கள். அவ்வாறு தங்கித் தங்கி செல்லும் போது நந்தனின் தூக்கத்தில் கூட ஓம் ஓம் என்ற குரல் ஒலியைக் கேட்ட மருதன் நந்தனுக்குப் பித்து தலைக்கேறிப் போயிட்டு என்று முடிவுக்கு வருகிறான். எப்படியாவது நந்தனுக்குச் சிவதரிசனம் கிடைக்கச் செய்ய வேண்டுமென திட்டம் போட்டு நடு இரவில் நந்தனைக் கூட்டிக் கொண்டு யாருக்கும் தெரியாமல் செல்ல அங்கு எண்ணெய் ஊற்றுபவன் இவர்களைக் கண்டு திருடன் எனக் கத்த தொல்லை சூழ்ந்ததைக்கூட அறியாமல் சிவ மந்திரம் சொல்லி ஒன்றிச் செல்லும் நந்தனை மருதன் வந்துவிடுமாறு இழுக்க அவன் வெறிபிடித்தவன் போல மீண்டு செல்லவும் மருதனைக் கட்டையால் ஒருவன் தாக்க அவன் இறந்துவிடுகிறான்.

தன் பண்ணை அடிமையாளர்களை அந்நிலையிலிருந்து மாற்றவும் அயல் நாட்டிற்கு சென்றுவிடாமல் சொந்த மண்ணிலேயே மறைவாக வாழ்ந்தாலும் போதுமென்று நினைக்கும் மருதனின் பண்பை அறியமுடிகிறது.

துணைப் பாத்திரங்கள்

முதன்மைப் பாத்திரத்தின் இயல்புகளையும் செயல்பாடுகளையும் விளக்குவதற்குத் துணைபுரிபவர்கள் துணைப் பாத்திரங்களாவர். இதனை,

> "தலைமை மாந்தருக்குத் துணை நிற்கும் தன்மையினர் தனிப்பட்ட நிலையில் இவர்களால் பெரும் விளைவுகள் உருவகாவிடினும் தலைமை மாந்தரை ஒட்டிய நிகழ்ச்சிகளில் இவர்களுக்குக் குறிப்பிடத்தக்க பங்கிருக்கும்"[80] எனக் குறிப்பிடுவர்.

> "துணைமை மாந்தர் ஆற்றின் வேகத்தை அளக்க உதவும் ஆற்றங்கரை மரங்களைப் போன்றவர்கள் என்றும், தலைமை மாந்தர் தன்னுடைய வேகத்தையும், பாதையையும் அடிக்கடி மாற்றிக்கொண்டு கணத்திற்குக் கணம் மாறுபடும் ஆற்றையொத்தவர்கள் என்றும் ப்ளிஸ் பெர்ரி என்னும் அறிஞர் தலைமை மாந்தருக்கும் துணைமை மாந்தருக்குமிடையேயுள்ள வேறுபாட்டை விளக்குகின்றார்"[81]

எனச் சுட்டுவார்.

> "தலைமைப் பாத்திரத்தின் சிறப்புகள், குறைகள், நிறைகள் வெளிப்படத் துணை செய்வன துணைப் பாத்திரங்களாகும்"[82] என்பர்.

துணைப் பாத்திரங்கள் புதினத்தின் வளர்ச்சிக்குத் துணை புரிகிறார்கள். ஏதாவது ஒரு சமுதாய சிக்கலையோ சீர்திருத்தத்தையோ வழியுறுத்துவனவாக அமைக்கப்பட்டுள்ளன. துணைப் பாத்திரங்ளை அவர்களின் பண்புகளுக்கேற்பப் பிரித்துக் குறிக்கப்பட்டுள்ளனர்.

1. திருமணமானவுடன் பெற்றோர்களை வெறுப்பவர்கள்
 1. சிவராமன், 2. சாமிக்கண்ணு, 3. சிவநேசன்

2. திருமணமாகியும் பெற்றோருடன் வசிப்பவர்கள்
 1. அப்புனு, 2. பழனிக்குமார்

3. காதலில் ஏமாற்றமடையும் பெண்கள்
 1. மருதாயி, 2. வசுமதி

4. குடும்பப் பெண்கள்
 1. ஜெயந்தி, 2. செவத்தி, 3. பத்மாவதி, 4. மதிவதனி
 5. இராசாத்தியம்மாள், 6. வள்ளி, 7. லலிதாம்பாள்
 8. தனபாக்கியம், 9. ஜெயலெட்சுமி, 10. கமலம்
 11. அம்மாக்கண்ணு, 12. அஞ்சலை, 13. கங்கை

5. அடிமைப்பட்டுக் கிடக்கும் அனுபவசாலிகள்
 1. உத்தண்டி சாம்பான், 2. முனியாண்டி சாம்பான்

6. குடும்பச் சூழலில் சிக்கித் தவிப்பவர்
 1. சிங்காரம்

7. திருமணம் தடைபட்டு நிற்பவர்கள்
 1. சண்முகம், 2. வள்ளி, 3. செல்வி

திருமணமானவுடன் பெற்றோரை வெறுப்பவர்கள்

சிவராமன்

உறங்கமறந்த கும்பகர்ணர்கள் என்ற புதினத்தில் சின்னச்சாமி தங்கம் இவர்களின் மூத்த மகனான சிவராமன் சொத்தில் மட்டும் குறியாக இருப்பவன். மூளை வளர்ச்சி இல்லாத தம்பியை அன்பாகப் பேசி அரவணைத்தால் அவன் வளர்ச்சியடைய வாய்ப்புள்ளது எனத் தெரிந்தும் அன்பைக் காட்டாமல் அடித்து உதைப்பவன். அப்புனுவின் மருத்துவச் செலவுக்காக நிலத்தை விற்பதை எதிர்ப்பவன். அப்புனு மூளை ஓரளவு வளர்ச்சியடைந்த பின் செவத்தியிடம் தவறாக நடந்ததைத் தலையாரி ஊர்ச்சபையில் சொன்னதை மாற்றித் தன் தம்பி பைத்தியக்காரன் என்றும் குடும்பத்தைச் சந்தி சிரிக்க வைப்பதற்காகச் செய்த திட்டமென்றும் கூறுகிறான். கீழ்ச்சாதியைச் சேர்ந்த அய்யாவுவின் வீட்டுச் சடங்கிற்குச் சென்று வந்ததால் தாயையையும், தம்பியையும் அடித்து துன்புறுத்துகிறான்.

> “பைத்தியக்காரன் என்னத்தச் சொல்லப் போறான்... இது வரைக்கும் சொன்னது பூரா பொய்... எங்க குடும்பத்தைச் சந்தி சிரிக்க வைக்க, சேப்புக் கொடிக்காரவங்க கூட்டம் நடத்த நூறு ரூவா கேட்டத நான் கொடுக்கலன்னு போட்ட சதித் திட்டத்தைப் பஞ்சாயத்துல நிறைவேத்தறீங்க...”[83]

சொத்து ஒன்றிலேயே குறியாக இருந்த சிவராமன் அப்புனு முழு மனிதனாகியும் ஏற்றுக் கொள்ள முடியாமல் பைத்தியக்காரன் என்றே சொல்கிறான். அப்புனுவிற்குத் திருமணமாகிவிட்டால்

சொத்தில் பாதி அவனுக்குப் போய்விடுமோ என்ற எண்ணத்தை அவனின் செயல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. ஊர்க்கூட்டத்தின் தீர்ப்புப்படி செவத்தியை அப்புனுவிற்கே மணமுடித்து வைக்க வேண்டுமென்று இராசாமணி வாத்தியார் கூறியதும் அவரைத் தாக்குகிறான். இவ்வாறாக சாதிவெறி, சொத்துவெறி கொண்ட பாத்திரமாக சிவராமன் திகழ்கிறான்.

சாமிக்கண்ணு

பெருந்திணை என்ற புதினத்தில் ஆறுமுகத்தின் ஐந்தாவதாகப் பிறந்த சாமிக்கண்ணுவை ஆறுமுகம், ஊரே பெருமைப்படும் அளவிற்குத் தன் சக்தி மேல் பாடுபட்டுப் படிக்க வைக்கிறார். அவனும் நன்றாகவே படித்து இன்ஜினியராகிறான். வேலைக்குப் போவதற்கு முன்பும் தாயில்லாப் பிள்ளையான அவனுக்கு வேண்டியதைப் பார்த்துப் பார்த்து செய்கிறார் ஆறுமுகம். அதன்பின் தன் குடும்பத்தையும் உறவையும் பார்த்துக் கொள்ள தன் மகள் வயிற்றுப் பேத்தியான நிலாவை முடித்து வைக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கும் போது தன் அதிகாரியின் மகளைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுவதாகக் கூறுகிறான். மகனின் விருப்பத்திற்கு இடையூறாக இல்லாமல் மணமுடித்து வைக்கிறான்.

திருமணம் முடிந்தவுடன் அப்படியே மாறிவிடுகிறான் சாமிக்கண்ணு. பெரிய வீடுகட்டி எல்லாவிதமான வசதிகளுடன் வாழும் அவன் தந்தையையும், சகோதரிகளையும் இழிவாகப் பேசுகிறான். படித்து உயர்ந்த அளவிற்குத் தகுதிபெற்ற ஒரு தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவன் தன் வளர்ந்த இடத்தையும், உறவையும் மறந்து

மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்களைப் போல மாறுவதை ஆசிரியர் சாமிக்கண்ணு பாத்திரத்தின் மூலம் காட்டியுள்ளார். இவனின் செயலால் கூனிக் குறுகிப் போன ஆறுமுகம் தன் மகனை நினைத்து வருந்துகிறார்.

> "கடைசி காலத்தில் ஒக்கதக்க கிட்டக்க இருந்து நல்லது கெட்டது செய்ய ஒரு ஆம்பளப்புள்ளை வேணும்னு அஞ்சாவதாப் பொறந்த மகன் சாமிக்கண்ணு. அவனுக்கு என் தோல உரிச்சி செருப்பத் தச்சிப் போட்டுத்தான் வளத்து படிக்க வச்சேன். ஊரே பெருமைப்படுவது போல மெத்தை வீடு கட்டிக்கிட்டு பொண்டாட்டி புள்ளைகளோட வசதியா இருக்கிறப்ப, அக்கா மவ ரெண்டைப் பறி கொடுத்து அதுகளைக் குழியில் வச்சிட்டு யாரோ எவரோ போல இடுகாட்டுல இருந்தபடியே வீட்டுக்கு போனவன் தான். இருக்கிறதுங்களும் மழை காத்துல சிரிப்பா சிரிச்சிக்கிட்டு பண்ணை வீட்டுல வந்து கிடக்கிறப்பக்கூட வந்து எட்டிப் பாக்காம..."[84]

சொந்த பந்தங்கள் மழைக்கு ஒதுங்க இடமில்லாமல் தவித்துக் கெண்டிருக்கும் போது தான் மட்டும் மெத்தை வீட்டில் இருக்கும் அகந்தையில் செல்லும் சாமிக்கண்ணு போன்ற பாத்திரங்களைச் சமுதாயத்திற்குக் காட்டவே ஆசிரியர் சாமிக்கண்ணுவைப் படைத்துள்ளார்.

சிவநேசன்

இதே பெருந்திணைப் புதினத்தில் தாழ்த்தப்பட்ட சாதியில்

உள்ள சாமிக்கண்ணுவைப் போல் உயர்ந்த சாதியில் சிவநேசனின் பண்ணைக் குறிப்பிடலாம். சிவசங்கரன் பிள்ளையின் மகன் இவன். திருமணமானவுடன் வசதி வாய்ப்பாக, கார் வசதிகளுடன் உடைய மனைவியின் போக்கிலேயே சென்றுவிடுகிறான். தன் தந்தை வேளாண்மையில் நட்டம் ஏற்பட்டு கைச்செலவிற்குக்கூட பணமில்லாமல் தவிக்கும் போதும் தங்கை படித்துவிட்டு வேலைக்குச் செல்ல பணம்கட்ட முடியாமலும் திருமணத்திற்கான வயதில் திருமணம் செய்து கொடுக்க வழியில்லாமலும் நிற்கும் போது அவன் அதைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை.

சிவகங்கரன் பிள்ளை விவசாயத்திற்குண்டான மழையில்லாததால் ஆழ்குழாய்க் கிணறு போடுவதற்காக வங்கிக்கடன் பெறுவதற்காக ஏற்கனவே வங்கியில் சேமிப்புள்ள யாரேனும் பிணைக் கையெழுத்துப் போட வேண்டுமென்ற விதிப்படி தன் மகனிடம் கையெழுத்துக் கேட்கிறார். ஆனால் அவன் போட மறுத்துவிடுகிறான்.

> “இல்லப்பா... மாமாவுக்குத் தெரிஞ்சிப்போயிடும். வீட்டுக்குத் தெரிஞ்சா உங்களுக்குத் தான் ரொம்ப இளப்பமா ஆகிடும். போன வாரம் மாமாவும், பரிமளாவும் கார்ல கோயிலுக்குப் போயிட்டு வரப்ப எதிர்க்க திலகாவைப் பார்த்திருக்காங்க. காரை நிப்பாட்டிக்கிட்டு வீட்டுக்கு வந்துட்டுப்போன்னு சொன்னாங்களாம். திலகா அவங்களை மதிச்சாப்போல பேசாம, தேவையிருந்தா வரமாட்டேனான்னு வீம்பா சொல்லீருக்கு. அதனால

பெரிய காண்டா இருக்காங்க. இந்த சமயத்துல நான் வந்து பிணை போட்டா..."[85]

தான் மட்டும் அங்கு போயிருப்பது மட்டுமல்லாமல் தன் குடும்பமும், மாமனாருக்கும், மனைவிக்கும் மரியாதை கொடுக்க வேண்டுமென்று நினைக்கும் சிவநேசனின் பண்பை அறிய முடிகிறது.

திருமணமாகியும் பெற்றோருடன் வசிப்பவர்கள்

அப்புனு

இருபத்தைந்து ஆண்டுகளாயும் முழு மூளை வளர்ச்சியடையாமல் சிறு குழந்தை போலச் செயல்களைச் செய்துவரும் அப்புனு பெற்றோரின் அரவணைப்பாலும், மற்றவர்களின் பாசத்தாலும் முழு வளர்ச்சியடைந்து செவத்தியுடன் சூழ்நிலைக் காரணமாக ஒன்று சேர்கிறான். பஞ்சாயத்தில் தன் அண்ணன் சிவராமன் திட்டம் போட்டுத்தான் அப்புனுவை மாட்டிவிட்டார்கள். அப்புனு எதையும் செய்யவில்லை என்று கூற அப்புனு அதை எதிர்த்து தான் செய்த தவற்றை ஒத்துக் கொண்டு செவத்தியையே மணந்து கொள்கிறான்.

தன் இல்லற வாழ்க்கை இனிதாகச் சென்று கொண்டிருக்கும் போது தன் தாய் அண்ணனை நினைத்துத் தெளிவாக இருக்க முடியாமல் சோர்ந்து படுத்துக் கொள்வதைப் பார்க்கும் அப்புனு தாயின் கவலையைப் போக்க எண்ணுகிறான்.

"ம்மா... ம்மா... அண்ணனையும் அண்ணியையும் நெனச்சுகிட்டு தானே நீ இப்படி இருக்கே... நான்

வேனுண்ணா போயி அண்ணனைக் கூப்பிட்டுப் பாக்கட்டுமா..."[86]

அண்ணன் அடிப்பான், இழிவாகப் பேசுவான் எனத் தெரிந்தும் தாயிக்காக அண்ணனைக் கூப்பிடப்போக நினைக்கும் அப்புனுவின் இதமான மனதை அறிந்து கொள்ள முடிகிறது.

பழனிக்குமார்

பெருந்திணையில் சிவசங்கரன் பிள்ளையின் மூத்த மாப்பிள்ளையான பழனிக்குமார் குடும்பச் சூழலில் சிக்கி கடன் தொல்லையில் மூழ்கி மீண்டு வரமுடியாமல் தற்கொலை செய்து கொள்ளும் பாத்திரமாகத் திகழ்கிறான்.

விவசாயத்திற்காகவும் (டிராக்டரை மாற்றி புதியது வாங்கியது) குடும்பத்திற்காகவும் அடுத்தடுத்து வங்கியில் கடன் வாங்கும் பழனிக்குமார் தங்கையின் திருமணத்திற்கு முன்பு சொன்ன மாதிரியே மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்தால் தான் செல்வேன் என்று அழுது அடம்பித்த தங்கைக்காக மீண்டும் கடன் வாங்கிக் கொடுக்கவே கடன் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இவற்றையெல்லாம் சர்க்கரை மற்றும் இதர நோய்களையுடைய தன் தந்தைக்கு தெரியப்படுத்தினால் அவருக்கு ஏதாவது ஆகிவிடுமென நினைத்துத் தனக்குள்ளேயே போட்டுக் கொள்கிறான். மூன்று பேங்கிலிருந்து கடன் வசூலிக்க வந்து நிலுவையில் உள்ள வட்டியையும், அசலையும் உடனே ஒரு வாரத்திற்குள்ளும் கட்டாவிட்டால் சட்டப்படி ஜப்தி செய்ய வேண்டியிருக்கும் என எச்சரித்துவிட்டுச் செல்லவும் பழனிக்குமார் வழி தெரியாமல் தூக்கில் தொங்கிவிடுகிறான்.

காதலில் ஏமாற்றமடையும் பெண்கள்

மருதாயி

உறங்க மறந்த கும்பகர்ணர்களில் வரும் மருதாயியின் மூலம் ஒருதலைக் காதலை வெளிக்காட்டியுள்ளார் ஆசிரியர். மருதாயியை அவளின் தாய் மகன் சாமியப்பன் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென நினைக்க, அவளோ மேல்சாதிக்காரரான இராஜாமணி வாத்தியாரை விரும்புகிறாள். தான் விரும்புவதை அவரிடம் தெரிவிக்க நினைத்தும் சந்தர்ப்ப சூழலினால் சொல்ல முடியாமல் போய்விடுகிறது. அவள் மட்டும் தான் வாத்தியாரை விரும்புகிறாள் என்பதை அப்புனு வெகுளித்தனமாகச் செவத்தியிடம் கூறுவதிலிருந்து அறியமுடிகிறது.

> "மருதக்கூட சார இப்படித்தான் பாக்கும்... சாரு பாக்காட்டி அதுக்கு ஒன்னுமே புரியாதுன்னு அடிக்கடி சொல்லும்..."[87]

மருதாயி சாரை நினைத்துக் கனவு காண்பதும் தன்னை அலங்கரித்துக் கொண்டு அவர் முன் செல்வதும், மறைந்திருந்து பார்ப்பதுமான செயல்களைச் செய்கிறாள். அவளின் எண்ணத்தை அவளின் தாய், அப்புனு, செவத்தி என்ற இவர்களுக்குத் தெரியும். எல்லோரும் மருதாயி பள்ளி ஆசிரியருடன் சேர்ந்து வாழ வேண்டுமென்று நினைக்கின்றனர்.

கதையின் இறுதியில் அப்புனு செவத்தியுடன் வாத்தியாரின் வீட்டிற்கு விருந்துக்குச் சென்ற அவள் ஏற்கெனவே ஆசிரியருக்குத் திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்பதை அறிந்து

அதிர்ந்து போகிறாள். கண்ணீரை அவர் அறியா வண்ணம் மறைத்துத் துடைத்துக் கொள்கிறாள்.

வசுமதி

பெருந்திணை என்ற புதினத்தில் திலகாவின் தோழியான வசுமதியும் திலகவைப் போல் ஆசிரியர் பயிற்சி பெற்று வந்தவள். ஆறு மாதத்திற்கு முன்பு ஒரு வாரம் திலகாவின் வீட்டில் வந்து தங்கி இருந்தவள். அவளின் சொந்த பந்தங்கள் அனேகமானோர் அரசு வேலைகளில் இருக்கிறார்கள். அவளின் அண்ணன் சென்னைக் கோர்ட்டில் வேலை செய்வதால் மந்திரிமார்களின் ஆதரவில் அவளுக்கு ஒரு பெண்கள் மட்டும் படிக்கும் பள்ளியில் சேர்த்துவிடுகிறான். அவள் அங்குள்ள ஒரு வாத்தியாரைக் காதலித்துத் திருமணம் செய்துவிடுவோமென்ற உத்தரவாதத்தில் பழகியதால் கற்பமாகிறாள். அதன்பின் அவ்வாத்தியார் மணம் செய்ய மறுத்துவிடுகிறான். வசுமதி சிசுவை அழித்துவிட்டு யாருக்கும் தெரியாமல் நடந்து கொள்கிறாள். இவ்வளவு பெரிய அதிர்ச்சியான செயலை மிக எளிதாகச் செய்தும், எளிதாக எடுத்துக் கொண்டும் இருப்பது அவள் வேலை செய்து சம்பாத்தியம் பண்ணுகிறோம் என்ற தைரியத்தில் தான் அவ்வாறு செய்ய முடிந்தது என்று ஆறுமுகம் நினைத்துக் கொள்கிறார்.

இவ்வாறாகத் திருமணத்திற்கு முன்பே சில பெண்கள் கன்னி கழிந்து விடுகின்றனர் என்றும், அதுவும் வருமானம் ஈட்டும் பெண்கள் இதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்கின்றனர் என்றும் வசுமதி பாத்திரத்தின் மூலம் ஆசிரியர் விளக்கிக்காட்டியுள்ளார்.

குடும்பப் பெண்கள்

ஜெயந்தி

உறங்க மறந்த கும்பகர்ணர்களில் சின்னச்சாமியின் மூத்த மருமகள் ஜெயந்தி தன் வீட்டுக்காரரை ஏவிவிட்டு, அவனின் பெற்றோருடன் சண்டை போடவிடுவதும், தானே வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்குச் செல்பவளுமான பண்புடன் திகழ்கிறாள். சிவராமனுக்கு ஏற்ற பெண்ணாக தேடிப் பார்த்து இறுதியில் ஜெயந்தியை முடித்து வைத்தார்கள்.

> "படிச்சுட்டு வேல பாக்குறவன் பொண்டாட்டியா வர்றவளும் நாலெழுத்து படிச்சவளாதான் இருக்கணும்... அவுங்க ரெண்டு பேரும் போய் வந்தா பாந்தம் வேண்டாமா?..."[88]

படித்தவளாக இருக்கும் ஜெயந்தி, மூளை வளர்ச்சி குன்றிய தன் கொழுந்தனிடத்திலும் அன்பாக நடந்து கொள்ளவில்லை. குடும்பத்தில் பணம் இல்லாமல் நடவு வேலை தடைபடும் போது, தன் கணவனின் வேண்டுகோளுக்கிணங்க செயினைக் கழற்றி அடகு வைக்கக் கொடுக்கிறாள். சிவராமன் தன் மனைவியுடன் தனக்குரிய சொத்தைப் பிரித்துக் கொண்டு சென்றுவிடுகிறான். குடும்ப ஒற்றுமைக்குப் பக்கபலமாக இல்லாத பெண்ணாக ஜெயந்தி பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

செவத்தி

இதே புதினத்தில் சிவராமனின் தம்பியான அப்புனு, தாழ்ந்த சாதிப் பெண்ணான செவத்தியைச் சந்தர்ப்ப சூழ்நிலையால்

மணந்து கொள்கிறான். செவத்தி திருமணத்திற்கு முன்பு வயல்வெளிகளில் வேலை செய்யும் போது துடுக்குத் தனமாகப் பேசுவதும், கேலி செய்வதும், கிண்டல் செய்வதுமாகக் கலகலப்பாகக் காணப்படுபவள். அப்புனுவையே வம்புக்கிழுப்பாள். அவ்வாறு பேசினாலும் அவனுக்கு ஏதாவது என்றால் பதறிப் போய் பரிவு காட்டுவாள். அப்புனு முழு மனிதனாக மாற்றியதில் செவத்திக்கும் பங்குண்டு. செவத்தியிடம் தலையாரி வீரண்ணன் தவறான முறையில் நடக்க, அதை எதிர்த்து ஊரைக் கூட்டியவன் என்பதால் இவளின் கற்பு நிலையை அறியமுடிகிறது. திருமணத்திற்குப் பிறகும் தன்னுடைய பழக்கத்தை மாற்றாமல் சின்னச்சாமியையும் தங்கத்தையும் ஐயா ஆச்சி என்றே அழைப்பவள். தங்கம் அப்படி அழைக்காதே என்று கூறியும், அவ்வாறு கூப்பிடுவதை மாற்றாதவள். இவளின் குணம் ஜெயந்தியின் குணத்திற்கு முன் மேலானது என்று சின்னச்சாமி நினைக்கும் அளவிற்குச் செவத்தி நடந்து கொள்கிறாள். இவளைச் சின்னச்சாமியும் தங்கமும் வயல்வெளிக்கூட விடாமல் வயல் வேலைகளைத் தாங்களே செய்து கொள்கின்றனர். இவ்வாறு அடிமட்ட வாழ்க்கையிலிருந்து உயர்ந்த வாழ்க்கையை வாழும் செவத்தி அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பாங்கு சிறப்பானதாக அமைந்துள்ளது.

பத்மாவதி

பெருந்திணையில் சிவசங்கரன் மனைவி பத்மாவதி குடும்பத்தைக் கவனிப்பதில் கவனமாய் இருக்கிறாள். விவசாயம் தொடர்பான வரவு செலவுகளில் கணக்குக் கேட்கமாட்டாள். ஏனெனில் தன் கணவன் மீது மிகுந்த நம்பிக்கைக் கொண்டவள். மற்ற

ஆண்கள் போல அடாவடித்தனமாகத் திரிந்து பணத்தைக் கண்டவழிகளில் செலவு செய்யாத தன் கணவனின் மீது மரியாதை கொண்ட அவள், கணவன் விவசாயத்தில் நட்டப்பட்டுச் செலவுக்கூட பணமில்லாமல் இருந்தபோது அடகு வைத்தது போக மீதம் இருந்த ஒரே நகையான தாலி சரட்டையும் கழற்றித்தர முன்வருகிறாள். சிவசங்கரன் பிள்ளை நாற்பது வருடத்திற்கு முன் தாலி பெருக்கிப் போடும் போது அம்மா போட்டிருந்த ரெட்டை வட சங்கிலியை அழித்து இந்தத் தாலிச் சரட்டை செஞ்சுப் போட்டதை எப்படி கழற்றுவது என வாங்க மறுக்கும் போது மூத்த மகள் தொலைபேசியில் தலைபோற நெருக்கடியாகிவிட்டது. உடனே பணம் வேண்டுமெனவும் வேறு வழியின்றி அதை வாங்கி அடகு வைக்கலாம் என எண்ணுகிறார். பத்மாவதியின் பெரிய கவலை இளைய மகள் திலகா படித்துவிட்டு வந்து வீட்டில் இருப்பது. அவளை நல்ல இடத்தில் மணம் செய்து கொடுத்துவிட்டால் நிம்மதியாக இருக்கலாம் என நினைக்கிறாள். குடும்பத்தில் கணவனைக் கவனிப்பதிலும், அவர் கவலையாக இருக்கும் போது தகுந்தவற்றைச் சொல்வதிலும், செய்வதிலும் மகள்களை நல்ல நிலையில் வைத்துப் பார்ப்பதிலும் கவனம் செலுத்தும் ஒரு பாத்திரமாகத் திகழ்கிறாள் பத்மாவதி.

மதிவதனி

இதே புதினத்தில் சிவசங்கரன் பிள்ளையின் மூத்த மகளான மதிவதனியைச் செல்வ வளமிக்க இடத்தில் மணமுடித்துக் கொடுக்கின்றனர். அவளும் அங்கு ஒரு குழந்தைக்குத் தாயாகி நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கும் போது, அக்குடும்பத்தில் பண

நெருக்கடி வருகிறது. அதைச் சமாளிப்பதற்காக பல வங்கிகளில் கடன் வாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. இதற்கிடையே தன்னுடைய நகைகள் அனைத்தையும் அடகு வைப்பதற்குக் கொடுத்து உதவுகிறாள் மதிவதனி.

தன்னுடைய ஊரிலிருந்து வந்திருக்கும் பண்ணை அடிமைகளை நல்ல விதத்தில் கவனிக்க வேண்டுமென்று நினைப்பவள். அவர்களுக்குக் கொழ கொழவென்று காப்பி கொடுப்பதிலிருந்து, மீன் குழம்பு ஆக்கிப் போட்டு உபசரித்து தன் வீட்டுக்காரருக்குத் தெரியாமல் பணம் கொடுத்து உதவுவது வரை அவளின் செயல்பாடுகள் மேன்மையுடையதாக விளங்குகிறது.

> "இந்தா ஆறுமுகம்! இதை உன்னோட கைச்செலவுக்கு வச்சிக்க மாப்புள்ள அய்யா கொடுக்கிறதையும் வாங்கிக்க. நான் கொடுத்தேன்னு சொல்லாம போ..."[89]

பெரிய குடும்பத்தில் அனுசரித்துச் செல்லும் இவளின் கணவன் கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்ட போது ஆறுமுகம் வருந்தி அழுவதிலிருந்து மதிவதனியின் பண்பை அறியமுடிகிறது.

ராசாத்தியம்மாள்

இதே புதினத்தில் ராசாத்தியம்மாள் வள்ளுவப் பண்டாரச் சாதியில் பிறந்து, குப்புச்சாமி பிள்ளையை விரும்பி, எப்படி திருமணம் செய்வதென்று தெரியாமலிருக்கும் போது ராசாத்தியம்மாளின் மீது காத்தாயி அம்மன் இறங்கி, குப்புச்சாமியின்

தந்தையை அழைத்து, கோவிலில் வைத்து ஊரறிய குப்புச்சாமிக்கும் ராசாத்தியம்மாளுக்கும் திருமணம் செய்து வைப்பதோடு இல்லாமல் சொத்தில் பாதியையும் அவள் பெயரில் எழுதி வைக்கச் சொல்லிவிட்டு மலையேறிய காலத்திலிருந்து ராசாத்தியம்மாளின் மீது மிகுந்த மரியாதை கொண்டவர்களாகத் திகழ்கின்றனர். குப்புச்சாமி வகையறாக்கள் ராசாத்தியம்மாளின் பேரன் தான் பழனிக்குமார். இந்த அம்மாளின் மூலம் பழைய காலத்தில் கடன் தொல்லையால் இரத்தக் கொதிப்பு வந்தவர்களையும், விசம் குடித்து இறந்தவர்களையும் அறிந்து கொள்ள முடிகிறது.

> "ஆறுமுகமும் மற்றவர்கள் வைக்கோல் ஏற்ற வந்திருக்கும் போது மதிவதனி மதியம் சமையலுக்கு என்ன செய்வதென யோசித்துக் கொண்டிருக்கும் போது, குறிப்பறிந்து இந்த அம்மா கெண்டை மீன் வாங்கி வரச் சொல்வதிலிருந்து இவரின் உபசரிப்பை அறிய முடிகிறது. உன் வீட்டு ஆளுங்களுக்கு அந்திக்கு நல்ல சோறு ஆக்கிப்போட்டு அனுப்புனாத்தான் உங்களுக்கும் எங்களுக்கும் பெருமை. டிரைவரைக் குடவாசலுக்கு அனுப்பி கெண்டை மீனு வாங்கி குழம்பு வைக்கச் சொல்லு... நாமளும் மீனு வாங்கி நாளாயிட்டு..."[90]

பண்ணை அடிமைகள் தானே என்று நினைக்காமல் அவர்கை நன்றாக உபசரித்து மகிழ்விக்க வேண்டுமென்ற விருந்து உபச்சாரப் பண்பை ராசாத்தியம்மாளின் மூலம் ஆசிரியர் காட்டியுள்ளார்.

லலிதாம்பாள்

நஞ்சை மனிதர்கள் என்ற புதினத்தில் சாத்தனூர் லலிதாம்பாள் அக்கிரகாரத்தைச் சேர்ந்தவள். திருமணமாகி சில நாட்களிலேயே கணவன் இறந்துவிட. எதார்த்தமாக சோமுப்பிள்ளை அங்குப் போய்ச்சேர, இருவரும் ஒன்று சேர்ந்து பேசி, பழகி பிரிய மணமில்லாமல் தன் வீட்டிற்கே வப்பாட்டியாக கூட்டி வந்துவிட்டார் லலிதாம்பாவை. லலிதாம்பா தன்னுடைய சக்காளத்தியா மீது வெறுப்பு வைத்திருந்தாலும் அவளின் மகனான வெள்ளைச்சாமியின் மீது பாசத்துடன் நடந்து கொள்கிறாள். கோபக்காரரான சோமுப்பிள்ளையின் வீராப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக குறைக்க நினைப்பவள் இவள். பங்காளிச் சண்டைகளுக்கிடையேயும் வெள்ளைச்சாமி-அங்கம்மாவின் திருமணம் நடைபெறவும், புதிதாகத் திருமணமான அங்கம்மாவிடம் எவ்வாறெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமென்றும் கூறுகிறாள். சோமுப்பிள்ளை கீழ் சாதியினருக்கும் சாப்பாடு போடும் பழக்கத்திற்குக் கொண்டு வந்தவள் இவள் தான் என்று மற்ற உயர்ந்த சாதியினர் சொல்லுமளவிற்கு நல்ல பழக்கத்தைச் சொல்லிக் கொடுப்பவர் இவள். சோமுப்பிள்ளையைக் கணவனாக ஏற்றுக் கொண்டாலும் குழந்தை எதுவும் பெற்றுக் கொள்ளாமல் வெள்ளைச்சாமியையே தன் மகனாகப் பாவித்து வருவதையும் அறிய முடிகிறது.

> “நான் புள்ளக்குட்டிப் பெத்துக்கல. நானே வேண்டாம்ன்னு தான் நீலாயதாட்சி பெத்தபுள்ள யாண்டான் என் மேலத்தான் உசுரா இருக்கான். இன்னிக்கு சாயந்தரம் தான் புள்ளையாண்டானும்

நீலாயதாட்சியும் பொறந்த எடத்துக்குப் போயிருக்காங்க. இல்லாட்டா நீங்களே பாத்திருக்கலாம்..."[91]

என்று மணலூர்மணியம்மாவிடம் கூறுவதிலிருந்து பிறரிடத்தில் அன்பு கொண்டவள் என்றும், தனக்கென்று எயையும மைத்துக் கொளளாதவள் என்றும் அறியமுடிகிறது. சோமுப்பிள்ளையின் உறவினர்களோடு ஒட்டுறவாக இருந்தாலும், அவர்களின் நல்லது கெட்டதறகெல்லாம் நீலாயதாட்சியைத் தான் அனுப்புவாள். வெள்ளைச்சாமியின் குழந்தையை எடுத்துக் கொஞ்ச வேண்டுமென்ற எண்ணங்கொண்டவள். இத்தகையவாறு அக்கிரகாரத்தில் பிறந்து இரண்டாவதாக வப்பாட்டியாக வந்து பல நல்லசெயல்களைச் செய்யத் தூணடும் பாத்திரமாக லலிதாம்பாள் திகழ்கிறாள்.

தனபாக்கியம்

நஞ்சை மனிதர்களில் கோவிந்தசாமியின் மகளான தனபாக்கியம், சித்தப்பாவான சோமுப்பிள்ளையின் மகனுக்குப் பெண்ணைக் கொடுத்துள்ளார். எந்த செயலாக இருந்தாலும் தன் தந்தை சொல்படியே நடக்கும் இவளைச் சோமுப்பிள்ளைக்குப் பிடிப்பதில்லை. அப்பனுக்குத் தப்பாமல் பிறந்த சூரப்புலி தனபாக்கியம் என நினைப்பார். தந்தையின் திட்டப்படி அங்கம்மாவைக் கரையேற்றிய பின், மறுபடியும் இரண்டாவது பெண் திருமணத்திற்குச் சொல்ல வந்த அவள், தன் கணவனுக்கு நல்லது கெட்டது செய்யத் தெரியாததால் தன் தந்தையைக் கூப்பிட வேண்டிய கட்டாயம் இருப்பதாகக்கூறி, தம்பியையும்,

பாப்பாவையும் அனுப்பி வைக்குமாறு கூறுகிறாள். ஒரு வார்த்தைக்குக்கூட சம்மந்தி என்ற முறையில் கூட சோமுப்பிள்ளையை அவள் கூப்பிடாததால், அவள் தன் தந்தை எதைச் சொல்லிவிட்டாரோ அதை மட்டும் செய்பவள் என்பதை அறிய முடிகிறது.

சோமுப்பிள்ளை இறந்தபின்பு கூட, இறந்த செய்தியைக் கேட்க வராதவள் இந்த தனபாக்கியம் என்பதிலிருந்து தந்தையின் வழியில் செல்பவள் என்பது புலனாகிறது.

ஜெயலெட்சுமி

(வெள்ளைச்சாமியின் மகன் குப்புச்சாமியை தத்தெடுப்பவர்கள் ரெத்தினம் பிள்ளை-ஜெயலெட்சுமி தம்பதியர்) ஜெயலெட்சுமிக்கு அங்கம்மா மகள் முறை வேண்டும். தன்னுடைய சொந்த மகள் பிரெஞ்சு நாட்டில் கணவனுடன் குடியுரிமை பெற்று வாழ்ந்து வருவதும், எப்பாவது இங்கு வந்து பத்து நாட்கள் தங்கிவிட்டுப் போவதும் வழக்கம். தன் மகள் மாதிரியே இருக்கும் அங்கம்மா மீது அதிகமாகப் பாசம் வைத்திருக்கிறாள் ஜெயலெட்சுமி. தன் வீட்டுக்கு விருந்துக்கு வந்திருக்கும் வெள்ளைச்சாமியையும் அங்கம்மாவையும் ஒன்றாக அமர்த்தி சாப்பாடு வைக்கிறாள். இவ்வாறு சாப்பிடுவது அங்கம்மாவிற்குப் புதிதாகத் தோன்றுகிறது. தன் வீட்டில் அவன் சாப்பிட்ட மீத சாப்பாட்டோடு போட்டு சாப்பிடுவது தான் வழக்கம். அதெல்லாம் அந்தக் காலத்தோடு போகட்டுமென்று கூறி, அவர்களுக்கு சினிமா ஆட்டம் பார்ப்பதற்காக டிக்கெட் வாங்கிக் கொடுத்து அனுப்புகிறாள்.

இவளின் மூலமாகப் பழைய சம்பிரதாயங்களைத் தகர்த்தெரிய நினைக்கிறார் ஆசிரியர். கணவனோடு சமமாகச் சேர்ந்து சாப்பிடுவதும், கொட்டகைக்குச் சென்று தம்பதியர் ஆட்டம் பார்க்கப் போகச் சொல்லுவதும் புதிய பழக்கமாகக் காணப்படுகிறது.

கமலம்

இதே புதினத்தில் சோமுப்பிள்ளையின் ஒன்றுவிட்ட தங்கை கமலம். வசதி வாய்ப்பில் குறைந்தவள். சோமுப்பிள்ளை கோவிந்தசாமிபிள்ளை மாமன் சீர்வரிசை கொண்டு வரக்கூடாது எனக்கூறி, தடபுடலாக மாமன் வரிசை செய்யச் சொல்லி கமலத்தின் வீட்டிற்குச் சென்று அவளிடம் ரூபாய் கொடுத்துச் செய்யச் சொல்கிறார். அவளுக்கு அதை வாங்கும் போது நடுக்கமாகவும், அழுகையாகவும் வருகிறது.

> "அண்ணே! உங்கப் பேரப்புள்ளைக்கு வரிசை கொண்டந்து எறக்க நீங்கப் பணம் கொடுத்து தான்..."[92]

என்று கேட்டாலும், அதை வாங்காவிட்டாலும் வரிசை செய்யுமளவிற்குப் பணமில்லை எனத் தெரிந்து வாங்கிக் கொண்டு காரில் வந்து இறங்கிவிடுவோம் என்று ஆள் மூலம் சொல்லி அனுப்புகிறாள் ஜெயலெட்சுமி.

சுயமரியாதைக்காகச் சோமுப்பிள்ளை சொல்வதைக் கமலம் கேட்டு அதன்படி நடக்கிறாள். வெள்ளைச்சாமி மகன் குப்புச்சாமிக்குத் தன்னுடைய பேத்தியான சாவித்திரியை மணம்முடித்து வைக்கிறார்.

அம்மாக்கண்ணு

இதே புதினத்தில் வெள்ளைச்சாமியிடம் பண்ணை அடிமைகளாக இருப்பவர்கள் குண்டுக்கண்ணு-அம்மாக்கண்ணு. குண்டுக்கண்ணு தன் மனைவியின் பேச்சைத் தட்டாதவர். இரவு பகலாக இருவரும் சேர்ந்து உழைத்ததால், அம்மாக்கண்ணுவின் பெயரில் ஒரு லட்சம் ரூபாய் பேங்கில் போட்டுள்ளார்கள். தன் கணவனுக்கு ஒரு துண்டு வேணும்னாலும் அம்மாக்கண்ணு தான் எடுத்துக் கொடுக்கிறாள். இவளின் பொறுப்பில் குடும்பம் செயல்படுவதால் பிள்ளைகளும் திருவாரூர் போய்ப் படித்து வருகின்றனர். கணவன் ஒரு நாள் கொஞ்சம் குடித்ததற்கு அம்மாக்கண்ணு திட்ட ஆரம்பிக்கிறாள்.

> "ஒப்பன் பாட்டன் சேத்து வச்ச சொத்தையா வச்சி குடிக்கிற? மரியாதையா இன்னியோட இந்தக் குடிக்கிற பழககத்த உட்டுப்புடு. இல்ல ஆக்கனப் பண்ணிப்புடுவேன..."[93]

என்று திட்டுவதைக் கேட்ட சாவித்திரி குன்னிப்போய் விட்டாள். சாவித்திரியால் இப்படித்திட்டி கணவனை நல்வழிக்குக் கொண்டுவர முடியாத நிலையை, ஆசிரியர் குண்டுக்கண்ணுவைத் திருத்தி உழைக்க வைத்து அவ்வூரில் அவர்களின் இனத்திலுள்ள ஒரு பெரும்புள்ளிகளில் இவர்களும் ஒருவர் என்ற நிலையில் காட்டியுள்ளார்.

உழைப்பு ஒன்றையே மூலதாரமாகக் கொண்டு உயர்ந்த அம்மாக்கண்ணு பண்ணை அடிமையிலிருந்து நிலவுடமையாளராக மாறுகிறார்கள். ஆள்வதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே

என்ற வரிகளுக்குப் பொருத்தமான பாத்திரங்களை நஞ்சை மனிதர்களில் காணமுடிகிறது.

அஞ்சலை

ஒரே ஒரு ஊர்ல என்ற புதினத்தில் அஞ்சலை கங்கையின் கணவனான வீரபத்திரனுடன் தவறான தொடர்பு கொண்டதால் குழந்தை உண்டாகி, பஞ்சாயத்தைக் கூட்டி வீரபத்திரனுக்கே அவளை மணமுடித்து வைக்கின்றனர். இதைப் பொறுக்காத கங்கை தற்கொலை செய்து கொள்கிறாள்.

பல பெண்களிடம் தொடர்பு வைத்திருந்தாலும் திருந்திவிடுவான் என்ற நோக்கில் வீரபத்திரனுக்குத் திருமணம் செய்து வைக்கின்றனர். ஆனால் அவன் அஞ்சலை என்பவளுடன் நெருங்கிப பழகியதால், நாயம் பேசி அவளை வீரபத்திரனுக்கு முடித்து வைக்கின்றனர். திருமணமாகி தன் தந்தையின் வீட்டிலேயே வீரபத்திரனுடன் வாழும் அவள் சட்டமாக இருந்து கொண்டு எந்த வேலையும் செய்யாமல் சாப்பிட்டுக் கொண்டிருப்பதை அண்ணனும் அவனின் மனைவியுமான செல்லம்மாள் விரும்பவில்லை. தங்களுடைய சம்பாத்தியம் முழுதும் வீட்டிற்கே செலவாகி விடுவதாகக் குடும்பத்திற்குள் பிரச்சினை ஏற்படவே, அஞ்சலையின் தந்தை மாட்டுக் கொட்டிலுக்கு முன் தனியாக வீட்டைக் கட்டிக் கொடுக்கிறார். அதன் பின் ஆடம்பர வாழ்க்கையைக் குறைத்துக் கொள்கிறார். மேலும் தன் தந்தையின் சம்பாத்தியத்தில் வாங்கிய பட்டகால் நிலத்தைத் தன் பெயரில் மாற்றிக் கொள்வதென்றால் அடங்கிப் போக வேண்டுமென்று, கோவத்தைக் குறைத்துக் கொள்கிறாள்.

இவ்வாறு அடுத்தவளின் கணவனின்மீது ஆசை கொண்டு அதனால் அவளையும் இழந்த பாவத்திற்கு ஆளாகி, தன் அண்ணன் தனக்குப் பல உதவிகள் செய்தாலும், தந்தையின் சொத்து தனக்கே வரவேண்டும் என நினைக்கும் பாத்திரமாக அஞ்சலை திகழ்கிறாள்.

கங்கை

இதே புதினத்தில் வீரபத்திரனின் அக்கா மகள் கங்கை. பலவாறு கெஞ்சி கூத்தாடி இவளை மணமுடிக்கிறான். மணம்முடித்து இரண்டு வருடங்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழும் கங்கை, அடுத்து கணவனின் கொடுமைக்குள்ளாகிக் கண்ணைக் கசக்கிக் கொண்டு தாய் வீட்டிற்கு வருகிறாள்.

கங்கை கர்ப்பமாக இருக்கும் போதே, வீரபத்திரன், கங்கையிடம் அஞ்சலையை வீட்டோட கூட்டிக் கொண்டாந்து வைத்துக் கொண்டான் அடிக்கடி உடம்புக்கு முடியாமல் போகும் உனக்கும் உதவியாக இருக்கும் என்றும், அவளின் அண்ணன் தம்பிகள் துணையாக இருப்பார்கள் என்றும் கூறி அனுமதி கேட்க, கங்கை அதற்கு மறுத்துவிட்டாலும் வீரபத்திரன் அஞ்சலையிடம் கொண்ட தொடர்பை முடித்துக் கொள்ளாமல், அது கடைசியில் ஊர்சபை வரை போய் ஊர் கூடி அவர்களை மணமுடித்து வைத்துவிட்டனர் என்ற செய்தியைக் கேட்ட கங்கை பச்சிளம் குழந்தையான வள்ளியை விட்டுவிட்டுத் தற்கொலை செய்து கொள்கிறாள்.

வள்ளி

செந்நெல் புதினத்தில் சில இடங்களில் மட்டும் வள்ளியின் மூலம் ஆசிரியர் குறிப்பு வைத்து செய்தியை வெளிக்காட்டி யுள்ளார்.

பெரியானின் மூத்த மருமகளான இவள் கர்ப்பகாலத்திலும் வயல் வெளிகளில் வேலை செய்கிறாள். தன்னுடைய ஆசையான சர்க்கரைத் தேங்காய் அதிகமாகப் போட்டு சோளக்களி கிண்டித் தரச்சொல்ல திண்பதாக இருந்தது. இரண்டு நாட்களாகத் தொடர்ந்து கேட்டதால் காசு சேர்த்து அதைச் செய்து கொடுக்கிறாள் ஆராயி. அவ்வாறு செய்து கொடுக்காவிட்டால் குழந்தைக்குச் சீழ் வடியும் என்ற பழக்கத்தை இவளின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. புதினத்தின் முடிவில் இவளுக்குப் பிரசவ வலி ஏற்படவும், ஊருக்குள் கோபாலகிருஷ்ண நாயுடு ஆட்கள் மக்களைச் சூரையாடவும் ஆன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதனால் இவளைத் தூக்கிக் கொண்டு போய் கருவக் காட்டுப் புதருக்குள் போட்டுவிட்டு மற்ற அனைவரும் மற்ற உடமைகளையும் குழந்தைகளையும் காப்பாற்ற வரும்போது, அதில் ஆராயியும், கிளியம்மாவும், மற்றவர்களுடன் சேர்ந்து அவர்கள் மூட்டிய தீயில் சாம்பலாகிவிடுகின்றனர். ஊரே தீயிக்கு இரையாகிவிட்டது. பள்ளுபறை கொட்டமும் அடங்கிவிடும். சிவப்புக் கொடியும் ஒழிஞ்சிடும் என்று நினைத்தவர்களின் மத்தியில், வள்ளி கருவக்காட்டுப் புதருக்குள் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள்.

> "கருவக்காட்டுப் பொதருக்குள்ள கெடக்கிற வள்ளி, பெத்த புள்ள தொப்புள் கொடி அறுபடாம ரத்தத்தோடவும் கோழையோடவும் நஞ்சுக் கொடியோட பொறண்டுக்கிட்டு கெடக்கிறாள்..."[94]

கீழவெண்மணி மக்களின் உரிமைப் போராட்டத்தைக் காட்டும் இப்புதினத்தில் 44 பேர் உயிரோடு எரிந்து சாம்பலானாலும்

மீண்டும் புதுப்பிறப்பு என்பது உண்டு என்பதை ஆசிரியர் வள்ளி மூலம் உணர்த்தியுள்ளார்.

அடிமைப்பட்டுக் கிடக்கும் அனுபவசாலிகள்

உத்தண்டி சாம்பான்

பெருந்திணை என்ற புதினத்தில் ஆறுமுகத்தின் தாத்தா உத்தண்டி, ஆறுமுகம் ஐந்து வயதாக இருக்கும் போதே பண்ணை, கறவை மாடுகளைக் கவனிக்கக் கற்றுக் கொடுக்கிறார். ஆறுமுகம் வாலிபனாகும் போது அவனுடன் பழகும் கிளியம்மாவையும் ஆறுமுகத்துடன் சேர்ந்தவள். ஆதலால், கார்வாரி உத்தண்டியிடம் மதிக்கலப்பு செய்யக்கூடாது என்றும், அதுவும் பண்ணை மாட்டுக் கொட்டிலுக்குக்கூட விடாமல் வச்சிருக்கிற வண்ணார் சாதிப் பெண்ணோட தொடர்பு வைக்கக் கூடாதென்றும் கண்டிக்கிறார். ஆனால் உத்தண்டி வெளியில் மட்டும் இப்படி பேசிக்கிட்டு, அவர்களைப் பண்ணைக் கட்டுக்குப் பின்னாடி வரச் சொல்லும் போது தித்திப்பா இருக்குதா என்று வாய்விட்டு கேட்கமுடியாமல் மனதிற்குள்ளே புழுங்குகிறார். இருந்தாலும் மகன் கண்டித்துத்தான் வைக்கிறான் என்று சொல்லிவிட்டு, இந்தத் திமிங்கிலத்திடமிருந்து பிள்ளை எப்படிக் காப்பது என்று யோசனை பண்ணுகிறான். அவர்கள் இருவருக்காகப் பல இடங்களில் அவரின் இனத்தாருடன் சண்டை கூட போடுகிறார்.

முனியாண்டி சாம்பான்

தப்பாட்டத்தில் தங்கசமி மூப்பனாரிடம் பண்ணை அடிமையாக இருப்பவர் முனியாண்டி சாம்பான். இவரின்

மூலமாகக் கீழ்ச்சாதியினர் பெரும் துன்பநிலைகளை அடிமைத் தன்மையை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். முனியாண்டி சாம்பானுக்குச் சாப்பாடு கொண்டு வந்த அவரின் தங்கச்சி பெண் வெள்ளையைத் தங்கச்சாமி மூப்னாரின் நான்காவது மகன் காமவெறியால் கொன்றுவிடுகிறான். இதை நேரில் பார்த்த முனியாண்டியிடம் வெளியில் சொன்னால் குடும்பத்தையே அழித்துவிடுவதாக மிரட்டவும், வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கும் அவரின் மனநிலையை அறியமுடிகிறது.

முனியாண்டி சின்னவனாக இருக்கும் போது தங்கசாமி மூப்பனாரின் அப்பா, காயப்போட்டிருந்த பயிறு, உளுந்தைக் கொஞ்சம் அள்ளி ஒழிய வைத்ததற்குத் தண்டனையாக பெற்ற மகளை அப்பனை விட்டும் பெற்ற தாயை மகனை விட்டும் பண்ணைக்களத்தில் புணரச் சொல்லி சவுக்கு அடிக் கொடுக்கும் போது அப்பனும் மகனும் கோப ஆவேசத்தில் அவரைக் கடித்துக் குதறிவிட்டதால், அக்குடும்பத்தையே சுண்ணாம்பு காளவாயில் தூக்கிப் போட்டு எரித்துவிட்டு, ஊரை விட்டு ஓடிப்போய் விட்டதாக பரப்பினதுக்குச் சாட்சி இந்த முனியாண்டி சாம்பான் தான். அப்பவும் வாயடைத்துத் தான் கிடக்க வேண்டிய நிலை அவருக்கு.

அவரின் பேத்தி விசாலாட்சி, பசுமாடு கன்னு போட்டா தெரட்டுப்பால் சாப்பிடலாம் என்று சொல்கிறார். ஆனால் மாட்டை கன்னுப் போடுவதற்கு முன்பு வரை இவர்கள் வளர்த்து, கன்னுபோடும் சமயத்தில் பண்ணை வீட்டில் கொண்டு போய் விட்டுவிட வேண்டும். தெரட்டுப்பால் எப்படி இருக்கும் என்று கூட அவர்களுக்குத் தெரிவதில்லை.

"பறையனுக்குப் பொறந்துட்டா உழைக்கவும் பறிக்கவும் தான் உரிமை. ருசியா திங்க உங்க நாக்கத் தட்டிக்கிட்டு நிக்க உரிமை ஏது..."[95]

தனக்குத் தானே புலம்புகிறார் முனியாண்டி. தன்னுடைய பேத்தி விசாலாட்சியின் சடங்கை வெகு விமரிசையாக நடத்துகிறார். அடுத்துத் திருமணத்தையும் நடத்தி வைக்க அவளின் வாழ்க்கை மதமாற்றம் என்ற பெயரில் சீரழிந்து போகவும், அவளுக்காக வருந்துகிறார். அவளின் மனத்தை மாற்றி நல்ல வாழ்க்கையை மறுபடியும் ஏற்படுத்திக் கொடுக்க நினைக்கிறார். விசாலாட்சி மூப்பனார் சாதியில் பிறந்த சுந்தரமூர்த்தி வாத்தியாரையே மணக்கப் போவதை நினைத்து மகிழ்கிறார். காலங்காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த அவர்கள், தங்கள் கண் முன்னாலேயே இத்தகைய மாற்றங்கள் நிகழ்வதையும், தங்களையும் மனிதர்களாக மதிக்கும் அளவிற்கு உயர்ந்ததையும் நினைத்து, இத்தனையும் பெறுவதற்காகத் வீரமாகப் போராட்டம் நிகழ்த்தியதையும் நினைத்துப் பார்க்கிறார்.

முனியாண்டி சாம்பான் மூலமாக அவர்களின் அடிமை வாழ்க்கையும், அதன் பிறகு கிடைத்த சமுதாய மாற்றத்தையும் காணமுடிகிறது.

குடும்ப சூழலில் சிக்கித் தவிக்கும் மாந்தர்

சிங்காரம்

ஒரே ஒரு ஊர்ல என்ற புதினத்தில் சிங்காரம் கதைத் தலைவனான சண்முகத்தின் தந்தை. தன்னுடைய தந்தையின் வார்த்தையைத் தட்டாதவர். தங்களின் உழைப்பால் தான்

அக்குடும்பமே உட்கார்ந்து சாப்பிடுகிறது எனத் தெரிந்தும் தட்டிக் கேட்க முடியாதவர். தன் மனைவி இருபத்தைந்தாண்டு காலமாக உழைத்து ஒரு குண்டு மணி அளவிற்குக்கூட தங்கம் சேர்க்கவில்லை என்றும், திருமண வயதில் ஒரு பெண் உள்ளாள் என்றும் வற்புறுத்த, சிங்காரம் வீட்டில் தந்தையிடம் சண்டையிட்டு, அவர் தன் வீட்டோட இருந்த மகளையும் மருமகனையும் மாட்டுக் கொட்டிலுக்கு முன் தனி வீடமைத்துத் தனிக் குடுத்தனம் வைக்கிறார். அவர்கள் அவர்கள் செல்வதற்கு ஐந்து மூடை நெல்லையும், தேவையான சாமான்களையும் கொடுக்கிறார் சிங்காரம்.

தன் மகன் சண்முகம் தன் தங்கை அஞ்சலை கட்டியிருக்கும் மாப்பிள்ளையின் மகள் வள்ளியை விரும்புகிறான் எனத் தெரிந்து அவளின் ஜாதகத்தை வாங்கி வரப் போக நினைத்து, ஜாதகப் பொருத்தம் பொருந்தவில்லையென கூறவும், ஒன்றிற்கு இரண்டு இடங்களில் பார்த்தாவது வள்ளியை முடிக்க வேண்டுமென்று நினைக்கிறார். பரம்பரை பரம்பரையாக மன்மதன் வேடம் போட்ட அவர்களின் வாரிசில், மனம் சரியில்லாததால் அவ்வேடம் புனைய மறுத்த மகனின் மனத்தை மாற்றுவதற்காக வள்ளியின் வீட்டிற்குச் சென்று வள்ளியிடம் அவளின் பாட்டியிடமும் நீங்கள் சொன்னால் அவன் கேட்பான் என்று கூறுவதிலிருந்து அவர் மான மரியாதையுடனும், கௌரவத்துடனும் வாழக்கூடியவர் என்பது புலனாகிறது.

திருமணம் தடைபட்டு நிற்பவர்கள்

வள்ளி

ஒரே ஒரு ஊர்ல என்ற புதினத்தில் வள்ளி, வீரபத்திரன்-கங்கையின் மகள். வீரபத்திரன் அஞ்சலையை

மணந்ததால் கங்கை தற்கொலை செய்து கொள்கிறாள். வள்ளியை அவளின் பாட்டியான ஆச்சியம்மா வளர்க்கிறார். பருவமடைந்தவுடன் மாதவிலக்குச் சரியாக இருப்பதில்லை என ஏலாம்பாவிடம் மருத்துவம் கேட்பது, அவள் மருந்துக் குறிப்புடன், கல்யாணம் வரைக்கும் அப்படித்தான் இருக்கும், பிறகு எல்லாம் சரியாப் போயிடும் என்று சொல்வதும் இவளின் பாத்திரப் படைப்பு மூலம் ஆசிரியர் காட்டியுள்ளார்.

மேலும் சாதகம் பார்ப்பதும் இவளை மையப்படுத்தியே வைக்கப்பட்டுள்ளது. இவள் விரும்பும் சண்முகத்தின் ஜாதகத்தில் நாகதோசம் உச்சத்தில் இருப்பதால், வள்ளியின் ஜாதகத்தோட சேர்க்கக்கூடாது எனக் கூறுவும், அழுது புலம்பி அவள் இளம் பிராயத்தில் நடந்ததையும் நினைக்கிறாள். சண்முகத்தின் தாத்தாவான கந்தபிள்ளைக்கு வள்ளியை எப்போதுமே பிடிக்காது. பிறந்தவுடனேயே தாயை முழுங்கிட்டவள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லியே திட்டுகிறார். இறுதியில் சாதகத்தையும் தாண்டி வள்ளி சண்முகம் இருவரும் காமன் பண்டிகை அன்று ஒன்று சேர்கின்றனர். ஜாதகப்படி தனக்கு எதுவும் நேரவில்லை என சண்முகம் சொல்ல வள்ளியும், ஆச்சியம்மாளும் மகிழ்ச்சியடைகின்றனர்.

இவ்வாறு பருவமடைந்த பெண்களுக்கான பிரச்சினை, ஜாதகம் பார்த்தல், குழந்தை பிறந்த போது யாரேனும் இறந்துவிட்டால் அக்குழந்தைப் பழித்தல் போன்ற செய்திகளை இப்பாத்திரம் மூலம் ஆசிரியர் காட்டியுள்ளார்.

சண்முகம்

இதே நாவலில் வள்ளியை விரும்பும் சண்முகம்

உழைப்பால் உயர்ந்து கொண்டிருப்பவன். மற்ற வாலிப பசங்களைப் போன்றில்லாமல் வண்டி மாடு வைத்துக் கொண்டு சுமை ஏற்றி சம்பாத்தியம் செய்து அதைக் கெட்ட வழியில் செலவு செய்யாமல் தன் குடும்பத்திற்குச் செலவிடுகிறான். வள்ளியை விரும்பாத அவளின் பாட்டி, அவளிடம் தொடர்பு வைத்துக் கொள்ளாதே. அவள் அடிவச்ச இடத்துல புல் பூண்டு கூட முளைக்காது எனக்கூற, அதற்கு அவள்,

> "ஆத்தா சும்மா கெட, இனிமே பேசினா நாங்கெட்டவனா ஆயிடுவேன். ஒரு சல்லிக் காசு தரமாட்டேன்..."[96]

என்று கூறி பாட்டியைப் பேசவிடாமல் செய்து விடுகிறான். வள்ளியை மணமுடிக்க முடியாது என்று தாத்தா கூறியவுடன், பரம்பரை பரம்பரையாக வேடம் புனையும் முறையையும் செய்யப் போவதில்லை என் மறுக்கிறான். இச்செயல் காதல் தோல்வியால் தாடி வளர்க்கும் ஆண்களை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

வள்ளியும் அவளின் பாட்டியும் எடுத்துக்கூறி, அவனின் மனத்தை மாற்றி வேடம் போடச் சொல்கின்றனர். வள்ளி தான் அவனுக்கு மன்மதன் வேடம் போட்டுவிடுகிறான். பல எதிர்ப்புக்கு இடையிலும் இருவரும் ஒன்று சேர்க்கின்றனர். இதில் இருவரின் மனமும் ஒரே கருத்தையே கூறுவதாக அமைந்துள்ளது. ஒத்த கருத்துடையவர்களுக்கு மணப் பொருத்தம் தேவையில்லை என்பதையும், அந்த சாதகத்தை கந்தபிள்ளை ஏதேனும் செய்திருப்பாரா என்பதும் விளங்கவில்லை. ஆனால் இருவரும் உடல் அளவில் ஒன்று சேர்கின்றனர் என்று ஆசிரியர் கதையை முடித்துள்ளார்.

செல்வி

செந்நெல் என்ற புதினத்தில் செல்வி சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பாத்திரமாகத் திகழ்கிறாள். பள்ளர் சாதியை சேர்ந்த இவள். பறையரான கண்ணுச்சாமியை விரும்புகிறாள். இவர்களின் சாதிக்கலப்பிற்குப் பல எதிர்ப்புக் குரல்கள் கிளம்புகின்றன. இவளின் அக்கா வீட்டுக்காரர்கள் இருவரும் வந்து கண்டவாறு பேசி, தன் மனைவியரையும் வீட்டோட விட்டுவிட்டுச் செல்ல நினைக்கும் போது வடிவேலு பேசி சமாதானம் செய்து அனுப்பி வைக்கிறான். அவளின் மாமன் சாதி விட்டு சாதி போனால், மற்ற பிள்ளைகளுக்கு எப்படி பெண் எடுப்பது, எப்படி கொடுப்பது போன்ற எதிர்காலப் பிரச்சினைகளைப் பேசி அவள் மாதர் சங்கத்தில் இருக்கட்டுமே என விட்டு வைத்தால் அவளாக புருஷன் தேடுறானா என்று பலவாறாக எதிர்ப்புகள் தோன்றுகின்றன.

மற்றொருபுறம் மேல் சாதியினரான ரெங்கடாஷ்ய நாயுடு இவளை பாலியல் தொல்லை கொடுக்கும் போது, இவள் சீறி விழுகிறாள். நாய்க்கப்பயலே! போடா உன்னோட பெண்ணை அழைச்சிட்டு வந்து என் மாமன் கிட்ட விடுட்டுவா வாடா நான் உன்கிட்ட படுத்துக்கிறேன் என்று கூறுவதன் மூலம் அடிமையாக ஒடுக்கப்பட்டு இழுத்த இழுப்பிற்செல்லாம் பெண்கள் சென்ற காலம் மாறி கீழ்ச்சாதி பெண்கள் விழிப்புணர்வை அடைந்துவிட்டனர் என்பதைச் செல்வி பாத்திரம் மூலம் அறிய முடிகிறது. மேலும் நாயுடு ஆளான வீரப்பன் செல்வியைத் தூக்கிக் கொண்டு போக, செய்தியறிந்த கண்ணுச்சாமியும் மற்றவர்களும் உடனே சென்று

மீட்டு வருகின்றனர். இதெல்லாம் இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடக்க முடியாத செயல். இப்போது விழிப்புணர்வு அடைந்த கீழ் மட்டத்தினரை இப்புதினம் விளக்கிக்காட்டுகிறது.

அய்யாவு

உறங்க மறந்த கும்பகர்ணர்களில சின்னச்சாமியின் பண்ணை அடிமை அய்யாவு. அய்யாவும் சின்னச்சாமியும் கலந்து பேசி தான் விவசாயம் செய்யும் பழக்கம். மூளை வளர்ச்சி குன்றிய அப்புனுவின் மீது பாசமும் மரியாதையும் கொண்டவர் இவர். அப்புனுவைச் செவத்தி ஏதேனும் கேலி பேசினாலும் திட்டி அப்புனுவை அரவணைப்பவர். தன் மகள் மருதாயியை, மனைவி வேலை செய்யவில்லை என்று கடிந்து கொள்ளும் போதும் மருதாயிக்காகப் பரிந்து பேசுபவர்.

மச்சினன் செய்த தவற்றிற்காக ஊர்ச்சபையில் கூனி குறுகி கைகட்டி நிற்கிறார். தன்னை அவமானப்படுத்தி விட்டு ஓடிப்போனவனைத் தன் மகளின் சடங்கிற்கு அழைக்க விரும்பாதவர். ஊர்ச்சபையினர் கூப்பிடச் சொல்லவும் கூப்பிட்டு மரியாதை செய்பவர். சாமியப்பனின் நல்ல மனமாற்றத்தைக் கண்டு அவனை மன்னிக்க வேண்டும் என்ற மனப்பக்குவத்திற்கு வருபவர்.

மனைவி இரண்டாவதாக உண்டானதை கலைக்கப் போகும் போது தடுத்து ஆண்வாரிசு வேண்டும் என்று சொல்பவர். பொன்னுகண்ணுவைத் திருமணம் செய்த பிறகு வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தால் பஞ்சாயத்தில் நிப்பாட்டி அவளுக்குத் தண்டமாகப் பணம் கட்டித் தீர்த்து வைத்தவர்.

இவ்வாறாக உள்ள சமூகச் செயல்களை அய்யாவுவின் பாத்திரம் சுட்டி விளக்கி நிற்கின்றது.

பொன்னுக்கண்ணு

இதே புதினத்தில் அய்யாவுவின் மனைவி பொன்னுக்கண்ணு கண்டிப்புடன் திகழ்பவள். காலையிலேயே கணவனை வயல்வெளிக்கு அனுப்புவதிலிருந்து மகளை எழுப்பி வீட்டு வேலைகளைச் செய்துவிட்டுச் சாப்பிடக்கூட நேரமில்லாமல் நின்று கொண்டே சாப்பிட்டு விட்டு வயலுக்குச் செல்கிறாள்.

கணவன் தவறான வழியில் செல்கிறான் என்று தெரிந்ததும் கண்டிக்கவில்லை. ஏனெனில் இவ்வாறுள்ளவர்களைக் கண்டித்துத் திருத்த முடியாது. பட்டால் தான் புத்தி வரும் என்று விட்டுவிடுகிறாள். அப்பெண்ணை விடுவதற்காகப் பணம் கட்டும் போதும் எதுவும் சொல்லவில்லை. தன் தம்பிக்காகப் பரிந்து பேசும் போதும், தம்பி நன்றாக சீர்வரிசை கொண்டு வந்து இறக்கும் போதும் மகிழ்ச்சியடைகிறாள். சாமியப்பன் மருதாயியைக் கட்டுவதற்காக நாள் குறிக்க வேண்டுமென்று சொல்லும் போது அதைத் தன் கணவனிடமும் மகளிடம் சொல்ல முடியாமல் தவிக்கிறாள்.

மகள் மேல்சாதியினரான இராஜாமணி வாத்தியாரை விரும்பும் போது எதிர்ப்புக் காட்டவில்லை. மாறாக ஊரே மதிக்கும் அவர் மருமகனாக வந்தால் பெருமை கிடைக்குமென்று எண்ணுகிறாள். மருதாயி இராஜாமணியின் வீட்டிற்கு விருந்துக்குப் போகும் போது அறிவுரைகளைக் கூறி அனுப்புகிறாள்.

"மருத சார் வீட்டுக்குப் போகும் போது அடக்க ஒடுக்கமாய் போகனும்... செவத்தியோட

சேர்ந்துகிட்டு ஓடாதே ஓடியாறாதே. பதவிசா போய் உட்கார்ந்து பாந்தமாக எழுந்திருச்சோம்னு வரணும். வீட்டுக்குத திரும்பறப்ப சாரோட அம்மா கால்ல விழுந்து கும்புட்டுக்க. என்ன?"[97]

வீட்டைக் கவனிப்பதிலும், கணவனையும், தம்பியையும் சமாதானம் செய்து ஒழுங்குபடுத்துவதிலும் பொன்னுக்கண்ணு குறிப்பிடத்தகுந்த பாத்திரமாகத் திகழ்கிறாள்.

வேலு நாடார்

செந்நெல் என்ற புதினத்தில் பெரியானும் அவரின் மூத்த மகன் வேலு நாடாருக்கு பண்ணை அடிமையாக இருக்கின்றனர். ரெங்குவை அரையாளாக நிப்பாட்டி அவன் செய்யும் வேலைக்கு அவனுக்காக பெரியான் ஆண்டையிடத்தில் திட்டு வாங்குகிறார். சின்னவனைக் கண்ணுச்சாமி படிக்க வேண்டுமென்று ஆசைப்படும் போது, பெரியான் அவரிடம் சொல்லும் போது எதிர்ப்புத் தெரிவிப்பதுடன், அவனின் படிப்பிற்கென்று எவ்வித பண வசதியும் செய்ய முன்வரவில்லை. பண்ணை அடிமைகள் அடிமைகளாகவே இருக்க வேண்டுமென்ற வெகுபிடியைக் காணமுடிகிறது.

வேலு நாடார், பள்ளுபறைக்கிட்ட நயமாகப் பேசியே காரியத்தைச் சாதித்து விடுவர் என்று அவருக்குப் பிடிக்காதவர்களிடம் வத்தி வைப்பன் ரெங்கபாஷ்யநாயுடு.

நாயுடுவும் மற்ற குடியானவர்கள் சேர்ந்து கூட்டத்தைக் கூட்டி செங்கொடியை வீழ்த்த வேண்டும் என்று திட்டமிடும் போது, நாடார் தன்னுடைய நடவு வேலை தடைபட்டு விட்டதே என வேதனையடைகிறார்.

"நம்ம நடவ அப்புடியே போட்டதோட இல்லாம எல்லா நாத்தையும் பறிச்சி வச்சிட்டு மறியல் பண்ணி ரொம்ப ரூவாய நட்டம் பண்ணிட்டானுங்கலேங்கிற ஆதங்கம் ரெண்டு நாளா அவர அசச்சி எடுக்க அதுவே கசப்பா ஏறிட்டு"[98]

வேலு நாடார் கிராமப் பொறுப்பிற்கு வந்த இத்தனை ஆண்டுகளிலும் தொழிலாளி முதலாளி என்ற பாகுபாடில்லாமல் இப்படி வந்து கூட்டத்தில் உட்கார்ந்தது இல்லை. இந்த வர்க்கப் போராட்டப் பிரச்சினை உச்சகட்ட நிலைக்குப் போகிறதே என்று எண்ணும் அவர் அதைப் பேசி முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென நினைக்கிறார்.

குண்டுக்கண்ணு

நஞ்சை மனிதர்கள் என்ற புதினத்தில் வெள்ளைச்சாமியின் பண்ணையில் அடிமையாக வேலை செய்யும் குண்டுக்கண்ணு எவ்வித கெட்ட புத்தியும் இல்லாதவன். எப்பவாது கொஞ்சம் குடித்தாலும் மனைவி பயங்கரமாகத் திட்டி கண்டிப்பதால் அதை எப்பவும் தொடுவதில்லை. இவ்வாறான நல்வழியில் சென்று அயராது உழைத்ததால் நிலவுடமையாளராகிறான். தன் மனைவியின் பெயரில் லட்சம் ரூபாய் பணம் சேர்த்து வைத்துள்ளான்.

வெள்ளைச்சாமியின் மகன் குப்புச்சாமி நிலங்களை விற்கும் போது, இவனிடம் விற்றால் தந்தையைச் சமாளித்துவிடலாம் என்று எண்ணுவதிலிருந்து, இவனின் நாணயம் தெளிவாகிறது. குப்புச்சாமி வந்து உடனே சொத்தை அடமானம் வைத்துவிட்டுப் பணம் கேட்கும் போது, அவனின் தந்தைக்கிட்ட கேட்ட பிறகு தான்

தருவேன் என்கிறார் முதலில் பணம் கொடு, பத்து நாட்களுக்குள் அப்பாவின் அனுமதியோடு கையெழுத்து வாங்கித் தருகிறேன் என்பதிலிருந்து, தலைமுறை தலைமுறையாக பிறருக்குக் கொடுத்து உதவிய பரம்பரை குண்டுக்கண்ணுவிடம் பணம் கேட்டு நிற்பது. நல்லவன் நல்வழியில் உயர்வான், கெட்டவன் கெட்ட வழியிலேயே சென்று அழிவான் என்பதை உணர முடிகிறது. இதற்குப் பெண்களும் காரணமாகின்றனர். குண்டுக்கண்ணுவைத் தவறான வழிக்குச் சென்றுவிடாமல் தடுத்து வைத்திருப்பவள் அவளின் மனைவி தான். கீழ்மட்டத்தைச் சேர்ந்த குடும்பம் உயர்ந்த மட்டத்தில் பொருளாதார திருப்தி அடைவதற்கு இவர்கள் இருவரின் உழைப்பும் கடமையுணர்வும் காரணமாகிறது.

ராசாத்தி

ஒரே ஒரு ஊர்ல என்ற புதினத்தில் சண்முகத்தின் தங்கையான ராசாத்தியும் வள்ளியும் நன்றாகப் பழகுபவர்கள். குடும்பத்தையும் மற்றவற்றையும் பேசி அரட்டை அடிப்பவர்கள். மாலை நேரத்தில் இழுத்துப் போர்த்திக் கொண்டு இவள் தூங்கும்போது, தாய் செல்லம்மாள் கன்னிப்பொன் விளக்கேற்றும் நேரத்தில் படுத்திருக்கலாமா எனத்திட்டுவதிலிருந்து, மாலை நேரத்தில் தூங்கக் கூடாதென்ற பழக்கத்தைக் காட்டியுள்ளார்.

இவளின் அத்தை அஞ்சலை தனிக்குடித்தனம் சென்ற பிறகு காய்கறி இல்லாமலும் கையில் காசு இல்லாமலும் சிரமப்படும் போது செல்லம்மாள், கருவாட்டையும் முருங்கக்காயையும் ராசாத்தியிடம் கொடுத்துக் கொண்டு போகச் சொல்லும்போது, தன் தாயைப் பட்டும் புத்தி வரலியே என திட்டி அதைக் கொண்டு போய் கொடுக்க மறுத்துவிடுகிறாள்.

காமன் பண்டிகையன்று இவள் பூவைக் கொண்டு வந்து வள்ளியின் தலையில் சூடிவிட்டு விழாக் காண்டதற்காகக் கூட்டிச் செல்கிறாள். வடிவேலு என்ற மிலிட்டரியில் வேலை செய்யும் அவளின் மாமாவை விரும்பி திருமணம் செய்யக் காத்திருப்பவள். விழாவின் போது ராசாத்தியும் வடிவேலும் வள்ளியை விட்டு விட்டுத் தனியே சென்றுவிடுவதால் வள்ளியும் சண்முகமும் தனியே சந்திக்க வாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

கந்தப்பிள்ளை

இதே புதினத்தில் கந்தப்பிள்ளை சங்காரத்தின் தந்தையாவார். சிங்காரம் திருமணம் முடிந்து இருபத்தைத்தாண்டு காலமாக ஒன்றாக வாழ்பவர்கள். திருமணம் முடித்து வந்தவுடன் சிங்காரத்தின் மனைவி செல்லம்மாவைப் புகழ்பவர். பொருமையான குணமுள்ள அவள் இக்குடும்பத்தைத் தாங்கிப் பிடிப்பாள் என்று சிங்காரத்திடம் சொல்லி பூரித்துப் போனார். தன் மகள் அஞ்சலை வீரபத்திரனுடன் தவறாகப் பழகியதால் பஞ்சாயத்துக்கூட்டி அவனுக்கே தன் மகளை மணமுடித்து தன்னோடவே கூட்டாக வாழ்கின்றனர். அஞ்சலை ஆடம்பரமாக வாழ்க்கையை நகர்த்திச் செல்லும்போதும் தட்டிக் கேட்காமல் அவளின் வழிக்கே செல்லவிடுகிறார். வள்ளியைத் தன் பேரனுக்கு முடிக்கக்கூடாது என்று நினைக்கும் போது, பேரன் அவளையே கட்டுவேன் என்னும் போது, சிங்காரம் வள்ளியின் பிறந்த குறிப்பை வாங்கப் போவதாகக் கூறும்போது, அவனை நிறுத்திவிட்டுப் பிச்சப்பிள்ளையைப் போய் வாங்கிட்டு வரச்சொல்லி அதில் வள்ளியையும் சண்முகத்தையும் இணைப்பதில் சிக்கல் இருப்பதாகக் கூறுபவர்.

இவ்வாறாகக் குடும்பத்திற்குள் பிரச்சினை ஏற்படவே, தன் மகளுக்கு மாட்டுக் கொட்டிலுக்கு முன் தனி வீடு கட்டிக் கொடுத்துவிட்டு, தான் மட்டும் மகன் வீட்டில் சாப்பிடுபவர். பேரனிடத்தில் மகன் போ வா என்று பேசிவிட்டதைச் சொல்லி குமுறுகிறார்

> "ஓம் மாமனுக்கும், அத்தைக்கும் மாட்டுக் கொட்டுல அடைச்சி கொடுத்து தனியே வச்சிடலாமுன்னு இருக்கேன்... நீ பார்த்து எனக்கும் எம்பொஞ்சாதிக்கும் சோறு போட்டா இந்தத் திண்ணையில வீட்டுக்குக் காவலா கிடப்போம். உங்கப்பனை எங்கள மண்ணிச்சிட சொல்லுப்பா... நீயும்..."[99]

தன் மனைவி மகன் வீட்டில் சாப்பிடாவிட்டாலும் அவர் மட்டும் சாப்பிடுகிறார்.

எதிர்மறைப் பண்புடைய பாத்திரங்கள்

எதிர்மறையான பண்புகளைக் கொண்ட இவர்கள் கதை முழுவதும் பிறருக்குத் துன்பத்தைத் தருபவர்களாகவே வருவார்கள். ஏதேனும் நல்ல செயல் நடக்கவிருக்கிறதென்றால். அதை எப்படியாவது திரித்து பிறரைத் தூண்டிவிட்டு நிறுத்திவிடுவார்கள். அல்லது நல்லது செய்பவர்களை எந்தவிதத்திலாவது இடையூறு கொடுத்துக் கொண்டு இருப்பார்கள். சோலைசுந்தரபெருமாள் இத்தகைய பாத்திரங்களை ஒவ்வொரு புதினத்திலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மாணிக்கராஜ் - வீரபத்திரன்

ஒரே ஒரு ஊர்ல என்ற புதினத்தில் மாணிக்கராஜ், கந்தப்பிள்ளைக்கு மிகவும் வேண்டிய பொண்ணுகக்குப் பிறந்தவன் என்ற உரிமையோடு அவர்களின் குடும்பத்தோடு ஒட்டிக் கொண்டிருககிறான். கந்தப்பிள்ளையின் மகள் அஞ்சலையை இரண்டாம் தாரமாக மணந்த வீரபத்திரன் அவனுக்குப் பக்கபலமாக இருக்கிறான். இருவரும் நட்பாகப் பழகிக் கொண்டு கந்தப் பிள்ளையிடம் அதிக நெருக்கமுடன் இருக்கிறார்கள். இதைச் சண்முகம் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுகிறான். மாணிக்கராஜும் வீரபத்திரனும் கஞ்சா குடிப்பதுடன் பல பெண்களின் தொடர்பு என்ற பழக்கத்தோடு மோட்டார் பைக்கில் ஊரில் சுற்றிக் கொண்டு திரியும் போது, வள்ளியிடம் வம்பிழுக்கிறான். பக்கத்திலிலேயே அவனின் தந்தை நிற்கும் போதே அவளை மாணிக்கராஜ் குட்டி மொழு மொழுன்னு என்றும்,

> "ஏய் வள்ளிக்குட்டி யாருமில்லாத நேரத்துல வம் பண்றேன்னு ஊரக்கூட்டி மானத்த வாங்கிடுவேன்னு மிரட்டினியேடீ... இப்ப ஒங்கொப்பனே எங்கைக்குள்ளேடீ... என்னடீ செய்வே? ஒங்கழுத்தில தாலி கட்டப் போறது நான் தாண்டி. அநதப்பய சம்முவம என்னப்பாத்துப பாத்து ஏங்கிச் சாக வேண்டியது தாண்டி..."[100]

மாணிக்கராஜ் எஃப்.ஸி.ஐ. குடோனில் வேலை செய்வதால் அரசியில் கலப்படம் செய்து ஏமாற்றிய பணம் அதிகமளவிற்கு இருப்பதால் இந்த மாதிரியான காரியங்களைச் செய்கிறான்.

அவனுக்குத் துணையாக வள்ளியின் தந்தையான வீரபத்திரனே செல்வரால், தந்தையின் பேச்சை எடுத்தாலே சினத்தால் கண்கள் சிவந்துவிடும். வள்ளியிடம் வம்பிழுத்த அவனை அவளே கன்னத்தில் அறைந்துவிட்டு வர, மற்றொரு நாள் தனியாக வந்த வள்ளியின் வாயைக் கையால் பொத்திவிட்டு, அவளின் தாவணியைக் கைப்பற்ற நினைக்கும் போது சிங்காரம் வந்து காப்பாற்றுகிறார். இவ்வாறு சுற்றித்திரிந்த அவன் குடிபோதையில் வண்டியில் வரும் போது மரத்தில் அடிபட்டு இறந்தவிடுகிறான்.

> "செத்துப்போன பிறகு யாரும் யாரையும் தூற்றக்கூடாதுதாம்மா, இருந்தாலும் அது ஆடுன ஆட்டத்துக்கு சரியான தண்டனை கெடைச்சிருக்கு. எத்தினி பொம்பள. சாபம் உட்டுருப்பா... சும்மாவுடுமா?..."[101]

என்று கூறுவதிலிருந்து மாணிக்கராஜ் எந்த விதத்திலும் நல்லவன் இல்லை என்பதை அறியமுடிகிறது. மாணிக்கராஜின் இறப்பை வீரபத்திரனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் தன் மனைவியுடன் தனிக்குடித்தனம் சென்று அங்குச் சாப்பாட்டிற்குரிய பொருள்கள் இல்லாததால் ஆடம்பர வாழ்க்கையைக் குறைத்துக் கொண்டு வாழ ஆரம்பிக்கிறான்.

ரெங்கபாஷ்ய நயுடு

நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் இருக்கும் ரெங்கபாஷ்ய நாயுடு, கூலிக்காரர்கள் கேட்கும் கூலி உயர்வைத் தரக்கூடாது என்றும், அவர்களுக்கு எதையும் கேட்க உரிமை வழங்கக்

கூடாதெனவும் கூறி மக்களை அடிமைப்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறார்.

> "கூலிககார பசங்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சி பக்கத்தொணையா நிக்குது. ஒண்ணும் தெரியாம மாக்கானுங்களா கெடந்த பயல்களுக்கு ராப்பள்ளிக்கூடம் வச்சி பேசவும் கொடித்தூக்கவும் கத்துக் கொடுக்கிறானுங்க. இப்ப எல்லாப் பசங்களும் பேச கத்துக்கிட்டானுங்க. அவனுங்கள பேசவிட்டுட்டு இருந்துட்டா நாம வெள்ளாம செய்ய வேணாம். எல்லாம் அவனுங்க ராஜ்யமா போயிடும்..."[102]

கீழ் சாதியினரை அடிமைப்படுத்தும் இவன் அப்பெண்களை விட்டு வைப்பதில்லை. ஒவ்வொரு பெண்களையும் விட்டு வைப்பதில்லை. கண்ணுச்சாமி விரும்பக்கூடிய செல்வியிடம் சில்மிஷம் செய்யக் கருதிய இவன், போதையின் உச்சத்தில் இருந்து கொண்டு வேங்கடபதியை விட்டு அவளிடம் பேச்சுக் கொடுக்கச் சொல்கிறான்.

> "போடா இவளப்போல உள்ள குட்டிக குடியானத் தெருன்னாவே லாவிப்புடுவாளுங்க. வசக்கு குட்டி, எத்தினி தடவ போனாலும் சளைச்சிக்காத உடம்பு. பாப்பாத்திக்கு மொக அழகு. பறைச்சிக்கு மொலை அழகுன்னு சும்மாவாச் சொல்லுறாங்க. இவக்கிட்ட ரெண்டுமு; சேந்துல்ல... கறுப்பு தோலு பாப்பாத்தியும் சேப்பு தோலு பறைச்சியும் ஒரு

சாதிக்குப் பொறப்பு இல்லிடா. இவ யாருக்குப் பொறந்தவன்னு யாருக்குத் தெரியும்?"[103]

பெண்களைக் கணக்கெடுத்து வைப்பதில் கில்லாடியாகத் திரியும் இவனைச் செல்வி சாதியின் பெயரைச் சொல்லித் திட்டியும் போடா வாடா என மரியாதையின்றியும் பேசினாலும் அவன் விடுவதாக இல்லை.

கோபாலகிருஷ்ண நாயடு

கோபாலகிருஷ்ண நாயுடுவிற்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டுமென்று அவரின் தந்தை பல வகையாலும் முயற்சி செய்தார். ஆனால் பிடிவாதமாக மறுத்ததற்கும் காரணமுண்டு. பல தண்ணிக் குடிச்சவனும், "பல பொண்டுவ ருசி கண்டவனும் ஒரு எடத்தில நிக்க மாட்டான்" என்ற கதைக்கேற்ப, தன்னுடைய ஆசைக்குத் தடை ஏற்பட்டுவிடுமென மறுத்துவிடுவதைக் காணமுடிகிறது.

"ஒருத்திய கல்யாணம் பண்ணிக்கிட்டு அவக்கிட்ட மட்டும்... அவருக்கு புடிக்காமத்தான்... அடவாடித்தனமா நெதம் நெதம் ஒரு பொம்பளைய கொண்டாந்து வச்சிக்கிட்டு இருக்கிறதும், சிலதுகள நாள் கணக்கில் வச்சிருந்துட்டு அனுப்பி வைக்கிறதும், சந்தர்ப்பத்தில குடும்பத்தில உள்ள பொம்பளைகளயும் விட்டு வைக்காம இருக்கிறத பாத்த அவரோட நைனா, இருக்கிறதோட செத்துப் போயிடலாம்ன்னு மனசு ஒடிஞ்சுப் போய் தூக்கு மாட்டிக்கிட்டு செத்துப் போயிட்டாருங்கிற ஒரு பேச்சும் ஊருல நிக்குது..."[104]

அவரின் செயலைப படிக்க தந்தையே அவமானம் தாங்காமல் இறந்து விடுகிறார். கம்யூனிஸ்ட் கட்சியன் துணையோடு மக்களை விழிப்புணர்வு ஏற்படுத்தும் கண்ணுச்சாமியின் மீது கோபம் கொண்டு, இருபது வருடங்களுக்கு முன்பென்றால் தங்களை எதிர்ப்பவர்களைக் களிக்கம் செய்து விடலாம். ஆனால் அன்று மாதிரி இப்பொழுது செய்ய முடியவில்லையே என நினைப்பவர். மக்களை அடிமைப்படுத்தும இவர் வர்க்கப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அழிக்க நினைக்கிறார். இதற்குத் தோதாக இவரின் காரியககாரரான வீரப்பனைக் கொன்றுவிட, போலீஸின் உதவியுடன் கீழ்தட்டு மக்கள் வசிக்கும் குடிசைகளையும், ஆடு, மாடுகளையும், ராமையன் வீட்டிற்குள் பயந்து கொண்டு தஞ்சமடைந்த குழந்தைகளையும், பெண்களையும் வீட்டின் கதவைப் பூட்டி வைத்து பெட்ரோல் ஊற்றி தீவைத்து எரித்து விடுகிறான். வீட்டிற்குள் இருந்து பெண்கள், குழந்தைகளாவது தப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தில் வெளியே தூக்கி எறிய குழந்தைகளை அப்படியே பிடித்து துண்டு துண்டாக வெட்டி எரிகின்ற வீட்டுக்குள் போடும் போது “இதோட கம்யூனிஸ்ட் கட்சின்னு சொல்லிக்க ஒரு உசுரு இருக்கக்கூடாது” என உரக்கக் கத்தி சிரித்து ஆரவாரம் செய்கிறான்.

ஒரு இனமே அழிவதற்குக் காரணமாகும் இவனின் குணத்தை ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

வீரப்பன்

கோபாலகிருஷ்ண நாயுடுவிற்குக் காரியக்காரனாக இருப்பவன் வீரப்பன். குதிரை வண்டி ஓட்டுறதிலருந்து

கோபாலகிருஷ்ண நாயுடுக்கு எது போல உள்ள பெண்ணுகளைப் பிடிக்கும் என்பது வரை அத்துபடியான அவனுக்கு எந்த நேரத்தில் எதைப் பேசனும் என்ற குறிப்புத் தெரிந்ததால் நாயுடு கூட அவன் இழிக்கும் கோட்டுக்குள்ளேயே கட்டுப்பட்டு நின்னுடுவான். அத்தகைய அளவிற்கு சூரப்புலியாகத் திகழ்பவன்.

கீழ் சாதியனருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வடிவேலுவைக் கண்டித்து வைப்பதற்காக வீரப்பன் செல்கிறான். பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லையென்றல் கேக்கரை ராமச்சந்திரன் மாதிரி வெட்டிப் பொலி கொடுத்திடுவாங்க என்று கூற அவனின் மனத்தை மாற்ற நினைக்கிறான்.

எப்படியான பெண்களையும் கவர்ந்து செல்லும இன் செல்வியைக கடத்திச் செல்கிறான். ரெங்கபாஷ்ய நாயுடுவை செல்வி திட்டியதை மனதில் வைத்து நாயுடுவிற்கு இரையாக்க நினைத்து கவர்ந்து செல்கிறான்.

> "எவவளவு பாளை வச்சிருந்தா உன்னேட பெண்ணக் கூட்டிக்கிட்டு வந்து என்னோட மச்சான்கிட்ட விட்டுட்டு வாடா நான் உன்கிட்ட படுத்துக்கிறேன்னு ரெங்கபாஷ்ய நாயுடுவக் கேட்டுருப்பே? இப்ப வாடி ஒன்னோட மச்சாளை அந்த மாரியம்மனுக்கு காவுக் கொடுத்துட்டு தான் உன்ன..."[105]

கடத்தி சென்ற அவளை உடனே சென்று கறைபடியாமல் காப்பாற்றி வருகிறான் கண்ணுச்சாமி. காவல்காரர்களுடன் வீரப்பன் மற்றும் நான்கைந்து ஆட்களும் சேர்ந்துத் தாக்கவரும் போது வடிவேலு கற்றுக் கொடுத்த சிலம்பக் கலையையும், குத்துக்

கலையையும் வைத்து வீரப்பனைத் தாக்குகின்றனர். வீரப்பன் இறந்துவிடுகிறான்.

வாஞ்சூரான்

உறங்க மறந்த கும்பகர்ணர்கள் என்ற புதினத்தில் வாஞ்சூரான், இளைஞர்களைக் கெட்ட வழிக்குக் கொண்டு செல்பவன். அந்த ஊருக்கு நல்லவை நடக்க வேண்டுமென்று நினைக்கும் இராஜாமணி வாத்தியார் கூட இவன் செயலால் காரியம் தடைபட்டுப் போகுமோ எனப் பயப்படுகிறார். பீடி உருண்டை புதுசுப்பா இவைகள் தான் அவனின் யாவரத்திற்குரிய அறிகுறிகள்.

அய்யாவுவின் மச்சான் சமியப்பன் ஊரில் தவறு செய்துவிட்டு வழக்குமன்றத்தில் அய்யாவுவை நிப்பாட்டிவிட்டு ஓடிபபோய் விடுகிறான். அவனுக்கும் வாஞ்சூரனுக்கும் நல்ல பழக்கம். அவன் என்ன செயகிறான் என்று அய்யாவுக்குச் சொல்லும் போது அய்யாவு,

> கஞ்சா அடிசசிட்டு பொம்பள பொறுக்குற பயலுக்கு,
> தேவிடியப்பய சிநேகிதம்தான் கிடைக்கும்...[106]

வாய்விட்டுச் சொல்ல நினைத்தவருக்குச் சொற்கள் எழவில்லை. அந்த அளவிற்கு இளைஞர்களைக் கெட்ட பழக்கத்திற்கு இழுத்துச் செல்பவன் வாஞ்சூரான். அப்புனு-செவந்தி பஞ்சாயம் நடக்கும் போது, உண்மையை மறைத்து, அப்புனுவை பைத்தியககாரனென்றும் தலையாரி நடக்காததை நடந்ததென்றும் காதில் பூச்சுத்துகிறார் என்றும் கூறி எதுவும் நடக்கவில்லை என்று கூறி திசை திருப்ப நினைக்கிறான். அய்யாவுவின் மகள் மருதாயிடம்

வழியில் பார்த்து உன் கொட்டத்தை அடக்க சாமியப்பன் வரப்போறாண்டி என்று சீண்டுகின்றான். இவ்வாறு பல பெண்களின் மன உலைச்சலுக்கு ஆளாகுபவன் வாஞ்சூரான்.

சாமியப்பன்

அய்யாவுவின் மனைவி பொன்னுக்கண்ணுவின் தம்பியான சாமியப்பன் வாஞ்சுராணிடம் சேர்ந்து கொண்டு பாவச் செயல்களைச் செய்கிறான். நான்கு வருடங்களுக்கு முன்பு காளியப்பன் மகளை வழி மறித்த குற்றத்திற்காக ஊர்சபையைக் கூட்ட, அதில் அய்யாவும் கைகட்டி தலை குனிந்து நிற்க வேண்டியதாகிற்று. அத்தோட ஓடிப்போன சாமியப்பன் அரசு கிடங்கில் வேலை கிடைத்து கை நிறைய சம்பளம் பெறுகிறான். ஆனால் அவனை அய்யாவிற்குப் பிடிப்பதில்லை.

அய்யாவுன் மகள் மருதாயின் சடங்கிற்கு அவன் தான் சீர் கொண்டு வர வேண்டுமென்று பொன்னுக்கண்ணுவும் ஊர்ச்சபையாரும் சொன்னதால் அவன் மாமன் சீர் வரிசை செய்கிறானன். அத்தோடு மருதாயயையே மணக் வேண்டுமென்றும் அக்காவிடம் கூறுகிறான். ஆனால் அவள் இராஜாமணி வாத்தியாரை விரும்புவதால்எதனையும் சொல்ல முடியவில்லை. சாமியப்பனின மனமாற்றந்தால் அய்யாவு கூட மன்னிக்குமளவிற்கு வந்துவிட்டார். கடைசியில் சாமியப்பன் தன் அக்காவிடம், நல்ல இடத்தில் வசதி வாய்ப்போடு மருதாயியைக் கட்டிக்கொடு. மாமன் என்ற முறையில் எனக்கு சொல்லு நான் வரிசையோடு வருவேன் என்று கூறுவதிலிருந்து அவன் கெட்ட பழக்கத்திலிருந்து நல்ல மனிதனாக மாறியதை அறிந்து கொள்ளமுடிகிறது.

கெட்டவனும் நல்லவனாக மாறுவதற்குரிய சந்தர்ப்பம் உண்டு என்பதை சாமியப்பன் பாத்திரம் உணர்த்துகிறது.

சார்புப் பாத்திரங்கள்

முதன்மைப் பாத்திரத்திற்கும் கட்டமைப்பிற்கும் உதவும் வகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அமையும் பாத்திரங்கள் சார்புப் பாத்திரங்களாகும். இவர்கள் ஒரு நிகழ்ச்சியில் கோடிட்டுக் காட்டும் வகையில் அமைவர்.

> "நிகழ்ச்சிகளின் வளர்ச்சிப் போக்கில் சில பொதுக்கருத்து வெளிப்பாடுகளுக்கு வாயிலாகின்றனர். இவர்களுக்கென்று தனித்த ஆளுமை வளர்ச்சி நிலைகள் இல்லை. இம்மாந்தர் இல்லையெனினும் கதையோட்டம் தடைபடுவதில்லை"[107]

என இயம்புவர். அவ்வகையில் சோலைசுந்தரபெருமாள் சார்புப் பாத்திரங்களை நிகழ்ச்சிப் போக்கிற்கேற்ப கோடிட்டுக் காட்டும் வகையில் அவர்களின் பெயர்களைச் சுட்டிச் செல்கின்றார்.

குப்பம்மாள்

உறங்க மறந்த கும்பகர்ணர்களில் சாமியப்பன் அக்கா மகளின் சடங்கிற்குப் பட்டுப்புடவை எடுத்துவர அதைக் கட்ட மறுத்த மருதாயியை மடக்கி, அவன் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் தாலி கட்டினாலும் யாரும் கேட்க முடியாது. பாத்தியப்பட்டவன் பட்டுப்புடவை எடுத்து வந்துள்ளான் கட்டிக்கொள் எனக் கட்டிவிடுபவள்.

சகுந்தலா

இதே புதினத்தில் நடவு நடும் போது செவத்தி, மருதாயி போன்றோருடன் எதிர்ப்பாட்டுப்பாடி வேலை செய்பவர்கள். பாட்டுப்பாடும் செவத்தியின் பாட்டு ஈடுகொடுத்து பாட முடியாதவள். தோல்வி வெளிப்படும் முன் திசைமாற்ற முனைபவள்.

பிச்சமுத்து வாத்தியார்

நாவலங்குடியில் இருபத்தைந்து ஆண்டுகாலமாக ஒரே வாத்தியாராக வேலை செய்பவர். தன்னால் ஊர் மக்களுக்கு எழுத்தை மட்டுமே கற்றுக் கொடுக்க முடிந்தது. இவ்வூரில் நல்ல மாற்றத்தை நீங்கள் நினைத்தால் கொண்டு வரலாம் என்று இராஜாமணி வாத்தியாரிடம் கூறிவிட்டு தொடர் இருமலால் பேச முடியாமல் மருத்துவம் பார்ப்பதற்காக மருத்துவ விடுப்பில் செல்பவர்.

ரெங்கசாமி

பெரியானின் மூத்த மகன் செந்நெல்லில் வரும் இவன் தந்தைக்கு உதவியாக அரை ஆளாக பண்ணையில்சேர்ந்தவன். தந்தை என்ன சொல்கிறாரோ அதை அப்படியே செய்பவன். இவனின் மனைவி வள்ளி தான் கடைசியில் கருவக் காட்டிற்குள் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள்.

வேங்கடபதி

குடியானவர்களாக இருந்தாலும் பண்ணையில் கூலி வேலை செய்பவர். அதனால் கீழ் சாதியினருடன் சேர்ந்து போராட்டத்தில்

இறங்கும் போது ரெங்கபாஷ்ய நாயுடு தடுத்து தங்களின் பக்கம் இழுத்துக் கொண்டான். செல்வியிடம் நாயுடு தகராறு செய்யும் போது தடுப்பவர் இவர்.

பரமசிவம் - பதஞ்சலி

செந்நெல்லில் இத்தம்பதியர் வண்ணார் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சலவைக்குப் போகும் போது வேங்கடபதி பாடச் சொல்ல, இவர்கள் இருவரும் பாடும் போதே காத்தமுத்துவிடம் வடிவேலுவையும் கண்ணுச்சாமியையும் ரெங்கபாஷ்ய நாயுடுவின் வீட்டில் கட்டி வைத்திருப்பதைப் பாட்டாலே கூறி வத்தி வைக்கிறான். பிறகு கீழ்வெண்மணி மக்கள் ஆயுதங்களுடன் சென்று அவர்களை மீட்டு வருகின்றனர்.

ராமையனின் வீடு

ராமையன் புதினத்தில் எங்கும் பேசவில்லை. ஆனால் அவனின் வீடு பேசப்படுகிறது. கதையின் தொடக்கத்தில் காளியின் மகன் ராமையனின் வீடு தான் குடிசைகளுக்கிடையே ஒரு பெரிய விடு எனவும், கதையின் கடைசியில் அந்த வீட்டிற்குள் தான் 44 பேர் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள புகுந்தனர் என்றும் அவர்களை உயிரோடு எரித்துக் கொன்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஏலாம்பா

ஒரே ஒரு ஊர்ல என்ற புதினத்தில் மருத்துவச்சியான ஏலாம்பாவின் மூலம் தான் குழந்தை பிறப்பு வளர்ப்பு அனைத்தும் கேட்கப்படுகிறது. பெண்களுக்குண்டான பிரச்சினைகளுக்கு மருந்து

கூறும் இவள், இன்னாருக்கு இன்னாரை மணமுடித்து வைக்கலாம் என்று உடம்பின் குறிப்பை வைத்து சொல்லிவிடுவாள்.

வடிவேலு

இதே நாவலில் வரும் வடிவேலு மிலிட்டரியில் வேலை செய்பவன். இராசாத்தியை இவனுக்குத் தான் மணமுடித்துக் கொடுக்க வேண்டுமென்று சண்முகம் சொல்கிறான். வடிவேலு செல்லம்மாவின் தம்பியாவான்.

பேச்சிமுத்து

சண்முகத்தின் அப்பத்தாவான இந்த பேச்சிமுத்து சண்முகம் வள்ளியை விரும்புவதைத் தடுப்பவள். சண்முகம் அதட்டவும் அமைதியாகி விடுகிறாள். ஏனெனில் அவரின் சம்பாத்தியத்தைப் பேச்சிமுத்து கிழவி தான் வாங்குகிறாள். தன் மகளுக்காகப் பரிந்து பேசுபவள்.

பிச்சைப்பிள்ளை

அஞ்சலையைக் கட்டும் முறைப்பட்டவன். இருவரும் விரும்பிக் கொண்டிருக்கும் போது பிச்சப்பிள்ளையின் குடும்பத்தில் திடீரென்று சரிவு ஏற்பட குடும்பம் அதிகமாக நொடிந்து போய் விடுகிறது. நொடிந்த குடும்பத்தில் தான் சென்றால் அல்லல்பட வேண்டியிருக்குமென்று அஞ்சலை வீரபத்திரனைப் பிடித்துக் கொண்டார். அந்த பிச்சைப் பிள்ளையைத் தான் வள்ளியின் பிறந்த குறிப்பை வாங்கி வரும்படி கந்தபிள்ளை அனுப்பிகிறார்.

சீதா

ஆச்சியம்மாளின் அத்தை மகள் சீதா. வள்ளியைச் சண்முகத்தோட சேர்க்க முடியாது என்று கேள்விப்பட்டவுடன், தன் மகனுக்கு வள்ளியைப் பேசி முடித்துவிடலாம் என்ற முடிவோடு வருபவள் சீதா.

சிவக்கண்ணு

பெருந்திணையில் ஆறுமுகத்துடன் சேர்ந்து வேலை செய்பவன் சிவக்கண்ணு. புயல் காற்றல் புளியமரம் வீட்டின் மேல் விழுந்து ஆறுமுகத்தின் பேத்திகள் இறந்த செய்தியைச் சிவகங்கரன் பிள்ளைக்குச் சொல்ல வருபவன்.

கச்சலை

மரக்கால் என்ற புதினத்தில் கச்சலை நந்தனின் மனைவியாவாள். நந்தன் வேலை செய்யப்போன இடத்தில் வேலை செய்யும் இவளைக் கூட்டிக் கொண்டு வந்து விடுகிறான் நந்தன். இல்லற வாழ்க்கை செல்லும் போது நந்தன் சிவமயத்தை உச்சரிக்கவும் அவனைத் திருத்த வழி தெரியாமல் உப்பு விற்க வந்தவனுடன் ஓடிவிடுகிறாள்.

தொகுப்புரை

கதையின் மையக்கருத்தையும் சிறப்பினையும் விளக்குவதற்குப் பாத்திரப்படைப்பு இன்றியமையாததாகத் திகழ்கின்றது.

சோலை சுந்தரபெருமாள் படைப்புகளில் காணலாகும் பாத்திரங்கள் தலைமைப் பாத்திரங்கள், துணைமைப் பாத்திரங்கள்,

சார்புப் பாத்திரங்கள், எதிர்மறைப் பாத்திரங்கள் எனப் பகுத்துப் பார்க்கப்பெற்றுள்ளது. பாத்திரப் படைப்பு பற்றிய பிற அறிஞர்களின் கருத்துக்களும் சுட்டப்பட்டுள்ளன.

தலைமைப் பாத்திரங்களில், அவர்களின் தன்மைகளுக்கேற்ப சாதிய கட்டுமானத்தைத் தகர்த்தெறிய நினைப்பவர்களாகவும், மனைவியை இழந்தும் அவளின் நினைவாகவே இருந்து குடும்பக் கடமையைத் தவறாது நடத்திச் செல்பவர்களாகவும் படைத்துள்ளார். பல பிரச்சினைகளுக்கிடையிலும், உயிருக்கே ஆபத்தான வேளையிலும் சமூக விழிப்புணர்விற்காக எல்லா எதிர்ப்புகளையும் சமாளித்து வாழ்பவர்களையும் காட்டியுள்ளார்.

குடும்ப வாழ்க்கைச் சீர்குலைந்து போன பின்பும் சமூக அக்கறையுடன் பொதுவாழ்வில் தன்னை ஈடுபடுத்திய பெண்களின் நிலை பற்றியும் சுட்டியுள்ளார். குடியானவராக இருந்தாலும் சிலர் கீழ்ச் சாதியினர் பெரும் துயரங்களைத் துடைக்க நினைப்பவர்கள், கணவன்மார்களின் நேசத்திற்கேற்ற மனைவியரின் பண்பு நலன்கள், அரசியல் மோகத்தாலும் பிற பெண்களின் தொடர்பாலும் சொத்துக்களை இழந்ததோடு மட்டுமின்றி தன் வீட்டிற்குள்ளேயே செல்ல அனுமதியில்லாதவனின் செயல்கள், சொத்துப் பிரச்சினையால், அண்ணன் தம்பியாகப் பிறந்தும் கடைசி வரை மாறுபாடு கொண்டபாங்குடன் நடந்து கொள்பவர்கள் என பல மனநிலை கொள்பவர்கள் என பல மனநிலை கொண்டவர்களையும் படைத்துள்ளார்.

குடும்பப் பிரச்சினையால் மனமுடைந்து இறந்த பெண்கள், கணவன், மனைவிடையே மட்டுமின்றி குழந்தைகளையும்

கொடுமைப்படுத்துவதால் கணவனால் இறந்துவிட்ட பெண்கள் அவர்களின் தன்மைகள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. இன்றைய காலகட்டத்தில் பெண்கள் கல்வி கற்றாலும் வீட்டிலும் பொறுப்பாக நடந்து கொள்கின்றனர் என்பதையும் கூறியுள்ளார். விளிம்புநிலை மக்கள் சிறு தெய்வங்களை மட்டுமே வழிபடவேண்டுமென்று எழுதப்படாத சட்டமாக இருக்கும் போது கீழ்ச்சாதியைச் சேர்ந்த சிலர் பெருந்தெய்வ வழிபாட்டின் மூலம் பித்தாகி கடைசியில் ஈடுபடுவதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

துணைமைப் பாத்திரங்கள் பண்பு நலன்களுக்கேற்ப படைக்கப்பட்டுள்ளனர். திருமணமானவுடன் பெற்றோரையும் உடன்பிறந்தவர்களையும் மறப்பது மட்டுமின்றி எத்தருணத்திலும் சிறுஉதவிகள் கூட செய்யாத ஒரு சில ஆண்மக்களைப் பற்றிய செய்தியும், சுட்டப்பெற்றுள்ளன. திருமணமானாலும் பெற்றோருடனே தங்கியிருந்து குடும்ப வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர்களையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

காதல் திருமணங்கள் பெரும்பாலும் பிரச்சினைகளிலேயே நடைபெறுகின்றன. ஒரே இனத்திற்குள் காதல் திருமணம் நடைபெறுவதும், வேற்று கலப்பு ஏற்பட்டு சாதி விட்டுச் சாதி மணம் முடித்துக் கொள்வதுமான திருமணங்கள் நிறைவேறுகின்றன. சில பெண்கள் காதலில் ஏமாற்றம் அடைந்து தன்னை இழந்து கருக்கலைப்பு செய்து கொண்டும் சமுதாயத்தில் வாழ்கின்றனர் என்பதும் அறியப்பட்டுள்ளன.

குடும்ப பெண்கள், குடும்பம் நடத்தும் தன்மையும், உற்றார் உறவினர்களைக் கவனிக்கும் முறையும், மாமன் மாமியார்,

நாத்தனார், கொழுந்தனார், மச்சினர்களை அரவணைத்துச் செல்லும் பாங்கும், எதிர்க்கும் பாங்கும் எடுத்துரைக்கப்படுகின்றன.

எதிர்மறையான பண்புகளை உடையவர்கள், சமுதாய வளர்ச்சிக்கு ஊறு விளைப்பவர்களாகவும், நல்ல செயல்களுக்குத் தடை ஏற்படுத்துபவர்களாகவும், பல பெண்களிடம் தொடர்பு கொள்பவர்களாகவும், விருப்பமில்லாத பெண்களையும் வம்புக்கிழுப்பவர்களாகவும், ஆடம்பரமான தன்மையுடன் திகழ்பவர்களாகவும் காட்டப்பட்டுள்ளனர்.

அடிக்குறிப்புகள்

1. கரு.முத்தையா, ஜெயகாந்தன் நாவல்களில் பாத்திரப் படைப்பு, ப.13.

2.மேலது, ப.22.

3.கீதா. கோ.வே.தி.ஜானகிராமனின் நாவல் கதை, ப.68.

4.மேலது, ப.69.

5.மேலது, ப.73.

6.திருமலை ம. தமிழ் மலையாள நாவல் ஒப்பாய்வு, ப.132.

7.ஞானமூர்த்தி தா.ஏ. இலக்கியத் திறனாய்வியல், ப.307.

8.சுப்பிரமணி, இளவேனில், ப.71.

9.பிரபாகரி. க. இக்கால இலக்கியம், ப.68.

10.ஞானசம்மந்தன், இலக்கியக்கலை, ப.318.

11.மோகன்.இரா. மு.வ.வின் நாவல்கள், ப.46.

12.திருமலை. ம. புனைகதை இலக்கியப் பொலிவு, ப.35.

13.பிச்சமுத்து. ந. திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், ப.227.

14. ஜகன்நாதன், ச.வ. தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும், ப.106.

15. முத்துச்சண்முகம், இராம. பெரியகருப்பன், அகிலன் கருத்தரங்க ஆய்வு கட்டுரை, ப.164.

16. கீதா. கோ.வே. ஜானகிராமனின் நாவல் கதை, ப.107.

17. மேலது, ப.107.

18. மேலது, ப.107.

19. ஜெயகாந்தன், சில நேரங்களில் சில மனிதர்கள், முன்னுரை.

20. இராமலிங்கம். மா., நாவல் இலக்கியம், ப.79.

21. அவ்வையார் பாடல்கள் நல்வழி, ப.104.

22. பாரதியார் கவிதைகள், பல்வகைப் பாடல்கள், ப.197.

23. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.93.

24. மேலது, ப.130

25. செந்நெல், ப.16

26. மேலது, ப.96

27. தப்பாட்டம், ப.26

28. மேலது, ப.112.

29. பெருந்திணை, ப.7

30. மேலது, ப.49

31. மேலது, ப.59

32. நஞ்சை மனிதர்கள் ப.12

33. மேலது, ப.216

34. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.52

35. திருக்குறள், 664.

36. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.84

37. மேலது, ப.55

38. மேலது, ப.86

39. செந்நெல், ப.45

40. மேலது, ப.46

41. மேலது, ப.97

42. மேலது, ப.25

43. தப்பாட்டம், ப.244

44. மேலது, ப.271

45. பாரதியார் கவிதைகள், கண்ணன் பாட்டு, ப.319

46. தப்பாட்டம், ப.166

47. பெருந்திணை, ப.9

48. மேலது, ப.152

49. மேலது, ப.167

50. தேசிய விநாயகம் பிள்ளை, கவிமணி பாடல்கள், மலரும் மாலையும், ப.674.

51. உறந்த மறந்த கும்பகர்ணர்கள், ப.147.

52. செந்நெல், ப.19.

53. மேலது, ப.31.

54. நஞ்சை மனிதர்கள், ப.16.

55. ஒரே ஒரு ஊர்ல, ப.65.

56. மேலது, ப.84.

57. மேலது, ப.44.

58. மேலது, ப.111.

59. நஞ்லசை மனிதர்கள், ப.193.

60. மேலது, ப.192.

61. மேலது, ப.220.

62. மேலது, ப.103.

63. மேலது, ப.65.

64. மேலது, ப.122.

65. புலியூர்கேசிகன் தெளிவுரை, மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, பா.95, ப.132.

66. நஞ்சை மனிதர்கள், ப.143.

67. மேலது, ப.177.

68. மேலது, ப.11.

69. மேலது, ப.148.

70. மேலது, ப.184.

71. மேலது, ப.193.

72. மேலது, ப.192.

73. மேலது, ப.193.

74. மேலது, ப.196.

75. பெருந்திணை, ப.49.

76. மேலது, ப.174.

77. மரக்கால், ப.27.

78. மேலது, ப.237.

79. மரக்கால், ப.215.

80. ஹரி. விஜயலெட்சுமி, இராஜம்கிருஷ்ணன் புதினங்களில் பெண் மாந்தர், ப.45.

81. மேலது, ப.46-47.

82. கோ.வே.கீதா. ஜானகிராமனின் நாவல் கதை, ப.18.

83. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.136.

84. பெருந்திணை, ப.169.

85. மேலது, ப.52-53.

86. உறங்க மறந்த கும்பகர்ணர்கள், ப.145.

87. மேலது, ப.122.

88. மேலது, ப.144.

89. பெருந்திணை, ப.148.

90. மேலது, ப.147.

91. நஞ்சை மனிதர்கள், ப.80.

92. மேலது, ப.144.

93. நஞ்சை மனிதர்கள், ப.202.

94. செந்நெல், ப.207.

95. தப்பாட்டம், ப.66.

96. ஒரே ஒரு ஊர்ல, ப.35.

97. உறங்க மறந்த கும்பர்கர்ணர்கள், ப.167.

98. செந்நெல், ப.68.

99. ஒரே ஒரு ஊர்ல, ப.108.

100. மேலது, ப.50.

101. மேலது, ப.135.

102. செந்நெல், ப.57.

103. மேலது, ப.99.

104. மேலது, ப.55.

105. மேலது, ப.150.

106. மேலது, ப.31.

107. ஹரி. விஜயலெட்சுமி, இராஜம்கிருஷ்ணன் புதினங்களில் பெண்மாந்தர், ப.47.

இயல்-4

உத்திமுறைகள்

இயல் - 4

உத்திமுறைகள்

புதினங்களில் இடம்பெறும் ஒவ்வொரு கூறும் நேர்த்தியுடன் கையாளப்படும் பொழுது அவை உத்திகளாக வெளிப்படுகின்றன. படைப்பின் தரத்தை மதிப்பிடுவது வெளிப்பாட்டுத் திறனாகும். படைப்பாளன் தன் கருத்தினைத் திறமையாக வெளிப்படுத்திக் காட்டுவது கலை நுட்பத் திறனாகும். அது கலைஞனின் தனித்துவங்களைச் சுட்டிக் காட்டவல்லதாகும். செய்திறன் என்பது உத்தி ஆகும். சோலை சுந்தரபெருமாள் படைப்புகளில் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை, ஊரக மண் வாசனை, பேச்சு வழக்குச் சொற்கள் எனப் பல உத்திகளைப் புகுத்தியுள்ளார். அவ்வுத்திகளைப் பற்றி ஆய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

உத்திகள்-விளக்கம்

ஓர் இலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளனுக்கு இப்படித்தான் இலக்கியத்தைப் படைக்க வேண்டும் என்று எந்த கட்டுப்பாடும் இல்லை. அவனது விருப்பத்திற்கேற்றவாறு எப்படி வேண்டுமானாலும் படைக்கலாம். “எழுதும் கலை பற்றி முடிந்த முடிவான கோட்பாடுகள் என்றுமே இருக்க முடியாது. படைப்பாளியும், படிப்பாளியும் தான் முக்கியம். இடையே எத்தனையோ கோட்பாடுகள் தோன்றலாம் மறையலாம்”[(1)] என்ற கருத்தும் மிகமுக்கியமானது.

உத்தி என்பது ஆங்கிலத்தில் 'Technique' என வழங்கப்படுகிறது. நா. கதிரைவேற்பிள்ளை அவர்களின் தமிழ் - தமிழ் அகராதி 'உத்தி' என்னும் சொல்லுக்கு அனுமானம், அறிவு, சேர்தல், இசைவு, இணக்கம், செல்வம், சொல், தந்திரவுத்தி, திருவுறுப்பு தாக்கங்கள் ஆகிய பல பொருள்களைக் குறிப்பிடுகிறது.

படைப்பாளன் தன் அனுபவத்தை உணர்ச்சிப் பெருக்கோடு வெளிப்படுத்தும் போது உத்திகள் இயல்பாகவே அமைந்து விடுகின்றன. இது வாசகர்களுக்குப் படிப்பின் ஆர்வத்தைக் கூட்டுவதாகும். "கலைஞன் கொண்டுள்ள திறமையின் வடிவே உத்தி. அதனை அவன் ஒரு கைவினைஞனைப் போல் தனது சொந்த அனுபவத்தின் வாயிலாகவும், ஒரு பகுதியை மற்றவர்களின் அனுபவங்களில் பங்கு கொள்வதன் மூலமாகவும் பெறுகிறான். இங்ஙனம் பெறப்பட்ட உத்தித்திறன் அவனைக் கலைஞன் ஆக்குவதில்லை. ஏனெனில் உத்திகளால் உருவாக்கப்படுகிறான். ஆனால் கலைஞன் பிறக்கிறான்."(2)

படைப்பில் நல்ல உத்திகள் இருந்தால் மட்டுமே அது சிறப்பான வெற்றியைத் தரும். "நாவலாசிரியர் எவ்வளவு பெரிய மேதையாக இருந்தாலும் அவருடைய படைப்பில் நல்ல உத்தி நுணுக்கங்கள் இல்லையென்றால் புதினம் சிறக்காது"(3) என்பர். "உத்தி அல்லது உணர்த்தும் முறைஅல்லது கலைத்திறன் என்பது கண்டுபிடிப்பைப் போன்றதாகும். உத்தி என்பது படைப்பாளன் தான் சொல்ல விழையும் கருத்தினை வளர்த்துச் சென்று முழுமைபெறச் செய்யும்

திறனேயாகும். படைப்பின் உள்ளடக்கத்திற்கும் அடையப்பட்ட உள்ளடக்கத்திற்கும் உள்ள வேறுபாடே உத்தி"(4) என மார்க்ஸ் கோரர் சுட்டுவர். "உத்தி என்பது கலை ஆக்கமுறை படைப்பில் முத்திரைப் பதிவாய் அமைவது அவன் ஆளுமைத்திறத்தின் தனித் தத்துவங்களைச் சுட்டவல்லது"(5) என்கிறார் சி.இ.மறைமலை.

உள்ளடக்கத்தின் வெளிப்பாட்டு முறையே உத்தியாகும். "ஒரு கலைஞன் தன் துறையின் செவ்விய வெளியீட்டிற்கும், பயன் கொள்ளும் ஆற்றலும் ஆக்கமுறையும் உத்தி எனப்படுகிறது என்கிறார்"(6) இரா.குருநாதன். "உத்தி என்பது தான் கூறவந்த செய்தியிலுள்ள பக்கத்தை வெளிப்படுத்தும் முறையே"(7) என்பர். "ஆக்குவோரின் படைப்பாற்றலும் தனித்தன்மையும் ஒவ்வொரு கூற்றிலும் வெளிப்படும் போது புலமை வண்ணம் தெரிகிறது. அதனை நுனித்து உணர்ந்து கொள்ள உத்தியாய்வு உதவுகின்றது"(8) என்கிறார் ச.வே.சுப்பிரமணியன்.

உத்தி - இலக்கணம்

பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் முப்பத்திரண்டு உத்திகளை,

"ஒத்த காட்சி, உத்திவகை விரிப்பின்
நுகலிய தறிதல் அதிகார முறையே
தொகுத்துக் கூறல் வகுத்து மெய்ந்நிறுத்தல்
............

மனத்தி னெண்ணி மாசறத் தெரிந்து கொண்டு

இனத்திற சேர்த்தி உணர்த்தல் வேண்டும்

நுனிர்தகு புலவர் கூறிய நூலே"(9)

இவ்வாறு உணர்த்துகிறது.

பவணந்தி முனிவர் தம் நன்னூலில் தொல்காப்பியர் குறிப்பிடும் உத்திகளையே பெரும்பான்மை குறிப்பிடுகிறார். இதனை,

"நுதலிப்படுத்தல் ஒத்த முறைவைப்பு தொகுத்துச்சுட்டல்

வகுத்து காட்டல் முடித்துக்காட்டல் முடிவிடங்கூறல்

................

மிக வெடுத்துரைத்தல், சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல்

ஒன்றின முடித்தல், தன்னின முடித்தல், உய்த்துரை வைப்பு"(10)

என்பது சுட்டும். நன்னூல் உரையாசிரியரான சிவஞான முனிவர் உத்தி இலக்கணத்தை, ஓரிலக்கண நூலால் உணர்த்தப்படும் பொருளை நூல் வழக்கோடும் உலக வழக்கோடும் பொருந்தி உணர்த்தி அப்பொருளை மற்றோர் இலக்கிய நூற்கண்ணும் ஏற்குமிடம் அறிந்து இவ்விடத்திற்கு இஃதம் எனக் கருதித்தக்க வகையாகச் சொல்லுவது தந்திரவுத்தியாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

தஞ்சை மாவட்டத்தின் கிராம மக்களையும் அவர்களது வாழ்க்கையையும் அவர்களில் ஒருவராக நின்று படைப்புகளைப் படைத்துக் கொண்டிருக்கும் சோலை சுந்தரபெருமாளின் புதினங்களனைத்தும் வட்டாரப் புதினங்களாகக் கருதப்படுகின்றன.

அவருடைய புதினங்களில் உத்திகள் வலிந்து கூறப்படாமல், தாமாகவே அமைந்துள்ளன. கிராம மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வை வாழ்கின்றனர் என்பதையும் புதினங்கள் சுட்டிநிற்கின்றன. இவருடைய உத்திகளைச் சிறப்பித்துக் காட்டும விதமாக ஆங்காங்கே, இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், ஒலிக்குறிப்புச் சொற்கள், உவமைகள், உம்மைத் தொடர், சுருக்கிச் சொல்லும் உத்தி, முருகியல் உத்தி, நாட்டார் பாடல்கள், திரைப்படப் பாடல்கள் கூறும் உத்தி, புதினத் தொடக்கம், கடித உத்தி, பின்னோக்கு உத்தி, கதைக்குள் கதை கூறும் உத்தி, நனவோடை உத்தி, கதை முடிப்பு உத்தி, வட்டாரப்புனைவு போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளார்.

அடுக்குத்தொடர்

ஒரு சொல்லானது இரண்டு அல்லது மூன்று முறை அடுக்கி வந்தால் அது அடுக்குத்தொடராகும். உவகை, அச்சம், வெகுளி, விரைவு ஆகியவை உணர்ச்சியின் காரணமாக வரும். இதனைத் தொல்காப்பியர்,

> "இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்த்தல் என்று
> அவை மூன்று என்ப ஒரு சொல் அடுக்கே"(11)

என்னும் நூற்பாவில் சுட்டுவர். புதினங்களில் ஆங்காங்கே அடுக்குத் தொடரைச் சேர்த்து மெருகூட்டியுள்ளார் ஆசிரியர். குல தெய்வ வழிபாட்டிற்காகச் சென்ற அங்கம்மா அங்குள்ள இயற்கையைக் கண்டு மகிழ்கிறாள். "அடுக்கு மல்லிச் செடியில் உட்காந்திருந்த நார்த்தங் குருவிக கத்தியபடி பறந்து பறந்து அடுத்த அடுத்த

கிளையில, நந்தியாவிட்டையில் இருந்த அணில்க ஒண்ண ஒண்ணு மோந்தபடி அவள் மேல விழுறது போல குதிச்சி ஓடுது"[12] என்ற தொடர்களாலும், "அங்காளம்மனுக்கு பொங்க வச்சி மொதோ பத்திரிக்கை வச்சி கும்பிடுறது. அதுக்குப் பொறவு தான் அந்தாண்ட இந்தாண்ட போறது. அந்த பூசையிலயே அடுத்து அடுத்து என்னா செய்யலான்னு அம்மன்கிட்டக்க பூவும் துண்ணுருமா கட்டிப் போட்டு உத்தரவு கேப்பாங்க. அதில பூ விழுந்தா தான் எந்த நல்ல காரியமும் செய்யனுங்கிற பழக்கம் இந்தக் குடும்பத்துக்கு வழிவழியா வர்றது"[13] என்ற தொடர்களாலும், "இந்தக் கோட்ட ஆட்டக் கட்டுனப்ப வெடவு பிரிக்கும் போது கெடைச்சது தான் சாமி அறையில் இருக்கிற ஐம்பொன் புள்ளையாரு. அத வச்சு தான் தெனம் தெனம் பாலாபிசேகம் பண்ணிட்டு பூசையை முடிப்பாராம் காத்தையாப் புள்ள."[14]என்ற தொடர்களாலும் அடுக்குத்தொடரைப் பயன் படுத்தியுள்ளமை புலனாகிறது.

"பரக்கப் பரக்க இருக்கிற மோர கெண்டாந்து கொடுத்து, "என்னாங்கண்ணே ஏதாச்சும் விஷேசம்..."[15] என்ற வரிகளிலும், "நாத்த பறிச்சி கரையோரத்தில் போட்டு ஆத்திபோவ விடாம உடன் கட்டா கட்டுனா இப்படித் தான தண்ணி வடிய வடிய...."[16] அடுக்குத் தொடர் காணப்படுகிறது.

"பெரியன் வாங்களைய அறுக்கும் போது அந்தப் பனிமுட்டை பொசுக்கு பொசுக்குன்னு வந்தது தெரியாம அழிஞ்சிப் போவுது, அவன் மனசப்போல. அறுத்துப் போடும் வாங்களையிலிருந்து குப்பு

குப்புன்னு கவுச்சி நாத்தம். இத மாடுகன்னு திங்கிறாப் போல இருந்தா ரெண்டு மூணு தெரை தெரைச்சிடலாமன்னு நெனச்சிக்கிறான்."[17] என்று கூறும் வரிகளின் மூலம் அறியமுடிகிறது. ஒரே பத்தியில் இரண்டு மூன்று அடுக்குத் தொடர்களை அடுக்கிச் சொல்லும் விதத்தையும் காணமுடிகிறது.

"மீண்டும் மீண்டும் ராசாமணியின் உருவம் வண்ண வண்ணமாய்ப் பூத்துக் குலுங்கும் பூக்களில் ஒட்டிக் கொண்டிருப்பது போலவும் சில்வண்டுகள் பறந்து சென்று அப்பூக்களில் அமர்ந்து ரீங்காரத்துடன் தேனருந்துவது போலவும் கற்பனையில் லயித்துப் போயிருந்தார்."[18] என்று 'உறங்க மறந்த கும்பகர்ணர்' என்ற புதினத்தில் அடுக்குத்தொடரைக் கையாண்டுள்ளார்.

அவள் மனம் ஆசிரியர் இராசாமணியின் முகத்தைப் பல கோணங்களில் திருப்பித் திருப்பப் பார்க்க அவன் மெல்ல மெல்ல வந்து அவள் மனதை ஆக்கிரமித்துக் கொண்டான்."[19]அய்யாவுவின் வீட்டிற்கு சடங்கிற்குச் சென்று வந்த அப்புனுவை, அவனின் அண்ணன் சிவராமன் அடிக்கும் போது நடக்கும் நிகழ்ச்சியில்,

'எங்கடா பொறுக்கப் போனீங்க கூரையில் சொருகியிருந்த தார்க்குச்சியை உருவி பளீர் பளீரென்று' அடிக்க "இல்லே...இல்லே"[20] என்று அப்புனு கத்துகிறான். "விடிஞ்சதும் விடியாததுமாய் பனங்கள்ள குடிச்சுட்டு வந்து மீசையை முறுக்கிக்கிட்டு மாங்கு மாங்குன்னு தண்ணிய எறச்சுபுட்டா"[21]என்ற

வரிகளாலும் "விடியலில் தொடங்க காயும் வெயிலையும் பொருட்படுத்தாமல் சாயுங்காலம் வரை, வள்ளி ஆற்று மடுவிலிருந்து குடம் குடமாய்த் தண்ணீர் எடுத்து வந்து ஊற்ற வேண்டியிருந்தது"[22] என்று வரும் வரிகளிலும், "தினுசு தினுசாக புட்டியும் குட்டியுமாக"[23] என்று வரும் வரிகளிலும் அடுக்குத் தொடரைக் காணமுடிகிறது.

தப்பாட்டத்தில் தெருக்களைப் பற்றிக் கூறும் போது, "இங்கிருந்து வடக்கப் பாத்தா குட்டான் குட்டானா குடிசைகள் மிகவும் நெருக்கமான சந்துகள்....."[24] என்று வரும் வரிகளிலும்,

பெருந்திணை என்ற புதினத்தில் ஆறுமுகம் தன் பேத்திகளுக்குக் கதை சொல்லும் போது, "நான்கு பேத்திகளும் ஆளுக்கு ஒன்றாய் சொல்ல, இது வேணாம் தாத்தா, வேற சொல்லு தாத்தா இப்புட்டியாய் முழுசாய் ஒரு கதையைக்கூட சொல்லவிடவில்லை. அவரும் அதுகளுக்கு ஏத்தாப்போல தாவித் தாவி எதை எதையோ சொன்னபடி பேத்திகளோடு தூங்கிப போனார்"[25] என்று வரும் வரிகளிலும், சிவசங்கரன் பிள்ளையின் மூத்தமகள் வீட்டிற்குப் போகும் ஆறுமுகமும் கூட்டாளிகளும் வேகமாகச் செல்கின்றனர் என்பதை, "ஊதல் காத்துக்கு அசராமல் இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்தாக வேண்டும். நடையை எட்டி எட்டிப் போட்டால் தான் திருக்கண்ணமங்கையில் பேருந்தைப் பிடித்து குடவாசலில் இறங்கி நடந்து ராதா நல்லூரிலாவது விடியலைச் சந்திக்கலாம்."[26]

என்று வரும் வரிகளிலும் அடுக்குத் தொடரைக் கையாண்டுள்ளார் ஆசிரியர்.

மரக்கால் என்ற புதினத்தில், தர்மவர்தினி சிவபெருமானைத் தரிசிக்கும் போது தப்பு ஒலியால் மனம் நாடியது என்பதை "சிலோகநாதர் மேல் மனத்தைச் செலுத்தினாள் தர்மவர்தினி தன்னைக் கொஞ்ச கொஞ்சமாக மறக்கடித்துக் கொண்டு இருந்தவளைத் தப்புஒலி சிலும்பல் செய்ததும் கீழண்டத் திரும்பி தேரடியை அவர் பார்வை வருடியது"(27) என்று வரும் வரிகளிலும், நந்தனும் அவளின் கூட்டாளிகளும் தில்லையை அடையவிருக்கும் சமயத்தில் நடந்த நிகழ்வைக் கூறும் போது ஆசிரியர்,

"தில்லைவலத்தை நெருங்க நெருங்க மக்கள் நடமாட்டமும் அதிகமாக தெரிந்தது"(28) என்று கூறும் வரிகளிலும் அடுக்குத் தொடரைக் கையாண்டுள்ளார்.

மேற்குறித்தவற்றுள் அடுக்குத் தொடர்களாக பறந்து பறந்து, அடுத்த அடுத்த, அடுத்து அடுத்து, வழி வழி, தெனம் தெனம், பரக்க பரக்க, வடிய வடிய, பொசுக்கு பொசுக்கு, குப்பு குப்பு, தெரை தெரை, மீண்டும் மீண்டும், வண்ண வண்ண, திரும்பித் திரும்பி, மெல்ல மெல்ல, குட்டான் குட்டான், உக்காந்து உக்காந்து, தாவித் தாவி, எதை எதை, எட்டி எட்டி, கொஞ்சம் கொஞ்சம், நெருங்க நெருங்க ஆகியன சுட்டப்பெறுகின்றன. இவ் அடுக்குத் தொடர்கள் பாத்திரங்கள் செயல்களில் காட்டும் வேகத்தைப் புலப்படுத்த எடுத்துக் காட்டியுள்ளனர்.

இரட்டைக்கிளவி

சொல்லும் கருத்தில் வேகத்தையும், சுவையையும், கலை உணர்வையும் புலப்படுத்தவல்லது இரட்டைக்கிளவியாகும். ஒரு சொல்லானது இரண்டு அல்லது மூன்று முறை தொடர்ந்து வந்து பிரித்தால் பொருள் தராதது இரட்டைக்கிளவி. "சொல்லும் கருத்து வெறும் செய்தியாக வெளிப்படாமல் உயிர்ப்பாகவும் காட்சிப் பொருளாகவும் விளங்குவதற்கு இரட்டைக் கிளவி துணை நிற்கிறது. உணர்ச்சியில் அழுத்தம் காட்டுவதற்குப் பயன்படுகிற இந்த உத்தி இரட்டித்து வந்த போதும் ஒரே சொல்லாக உருவம் பெற்று விளங்குகிறது. சில இடங்களில் தனிச் சொல்லாக நின்றும் கருத்தைப் புலப்படுத்துவதுண்டு"(29) என்று இயம்புகிறார்.

"... அவன் தலையில் இருக்கிற சொமயிலருந்து சேறும் தண்ணியும் தலை சும்மாட்டுக்கு கீழால வழிஞ்சி மார்பும் வாயிலும் சதசதன்னு. கண்ணுசாமி போட்டுருந்த சேப்பு நெற கால்ச்சட்டை வரைக்கும் நெனைஞ்சி சரசரன்னு அடிக்குது."(30)

"வெள்ளாமைக்காரதுங்க எல்லாம் உள்ளுக்குள்ளேயே கூலிப் பேசி வேலையை ஆரம்பிச்சிட்டுங்க. அதனால் நெல்லு உற்பத்தியாளர் சங்கத்துக்குள்ள சலசலப்பு வந்துட்டு"(31)

"சாலையின் ரெண்டு பக்கமும் உத்து பாத்து இடதுபக்கம் போக அவரது இதயம் படபடன்னு அடித்துக் கொண்டது"(32)

“நாக்கில் எச்சில் ஊற தட்டுகளில் சுடசுட மொண்டு போட்டுக் கொண்டாந்து வச்சிக்கிட்டு ஊதி ஊதி தின்னதுகள் குழந்தைகள்”(33)

“பேத்திகள் பிலுபிலுன்னு கூடிக் கொண்டார்கள்”(34)

“சித்தாடியில கருவேப்பிலை இல்லாம இல்லை. அங்க இருக்கிற கருவேப்பிலை கொழுந்து கூட மொடமொடப்பா துவையல் அரைச்சா திப்பிதிப்பியா பச்சை அடிச்சிக்கிட்டு ருசியே தெரியாம.....”(35)

“மூணாம் சாமக் கோழி கூவுறதக் கேட்டு எழுந்திருச்சி நடையைப் புடுச்சா பொழுது பளபளன்னு விடிய சாக்கோட்டை போயி சேந்திருக்கார்”(36)

“ஐப்பசி பொறந்து பத்து நாளா கடும் உக்கர வெயிலு. அநதியாயிட்டா செடசொடன்னு பனி”(37)

“நாகூர் ஃபேஸ்ட் பாஸஞ்சர், வழக்கமான ஆரவாரத்துடன் கர்டரை கடக்குமுன் எழுப்பும் ஒலியும் ஊகூஊ.... ஊதலுடன் தடதட என்று ஓசையுடன் கர்டரைக் கடக்கும் ஓசையும் மிகத் தெளிவாகக் கேட்டது”(38)

“ஏன் இப்படி மொலு மொலுன்னு வரிஞ்சி கட்டிகிட்டு வர்றே.....நாம நடக்குற பாத தானே இது....”(39)

"மருதாயி எல்லாவற்றையும் அலட்சியப்படுத்தி விட்டு விடுவிடுவென்று போய் புல்லுக்கட்டை மாட்டுக் கொட்டகையில் போட்டாள்"(40)

"கண்ணுக்கு எட்டின தூரம் வரைக்கும் பச்சேபசேல்ன்னு நரிப்பயிறு. ஈக்கு குத்த எடம் இல்லாம அடம்பா. சிலுசிலுன்னு வீசின தென்னலுக்கு சீத்துப் பூத்துன்னு மஞ்சள் பூவ தலையில தாங்கிக்கிட்டு காய்ப்புக...."(41)

"வெள்ளைக் காரவங்க ரெண்டாவது உலகப் போர்ல போட்டச் சண்டையில் வச்சிருக்கிற பீரங்கி சுடுறதப் பாக்கவே பயமா இருக்கும். இருந்தாலும் பாத்துக்கிட்டே இருக்கலாம் போல. அப்புடியாப்பிட்ட விறுவிறுப்பா இருக்கும்."(42)

"நாளைக்குத் தானே வரப்போறேன்னு சொல்லிட்டுப் போனஅப்பா இப்ப திடுதிப்புண்ணு வந்து உட்காந்திருப்பதப் பாத்ததும் என்னா சொல்லி தப்பிக்கிறதுன்னு புரியாமத்தான் பதட்டமாயிட்டான்"(43)

"பேரப் புள்ளைங்க அப்படியே வெள்ளைக்காரப் புள்ளைங்களப் போல தகதகன்னு பொறக்கனும்.... எப்பவும் மருமவப் பொண்ணு மேல சல்லு சல்லுன்னு எரிஞ்ச விழுந்துக்கிட்டு இருக்கிற நீலாயதாட்சிக்கும் தான்"(44)

"அன்று ஒரு நாதியும் இல்லை. வள்ளியின் நெஞ்சுக்குள் திக்திக் என அடித்துக் கொண்டது"(45)

“அவர் கைக்குச் சுறுசுறுப்பு எப்படியே அப்படியே அவன் வாயும் வெகு சுறுசுறுப்பாய் பேசும்.”[46]

“ஒரு வருசத்துக்கு முன்னால சிதலமடைஞ்சி கிடந்த அந்த சிவன் கோயிலுக்கு மூணு மாசத்துக்கு முன்னாலதான் குடமுழுக்கு ஆயி பளிச்சின்னு மின்ஒளியால மினுமினுத்துக்கிட்டு இருக்கு”[47]

“..... அப்போது கூட அவன் சாதிக்கார்கள் சிக்கிக்குமாறு கூட முணுமுணுப்பு செய்ததில்லை”[48]

“மசமசப்பான இருள் கூடியிருந்தது”[49]

“பெரும்மழை ஓய்ந்திருந்தது. பொசு பொசு என்ற தூறல் மட்டும் விழுந்து கொண்டிருந்தது”[50]

“கோதான கட்டளைக் கொட்டிலின் வாசலில் இரண்டு பக்கமும் இருந்த தீவட்டிகள் எண்ணெய் கண்ட மலர்ச்சியில் திருதிரு என்று எரிந்து கொண்டு இருந்தன”[51]

மேற்சுட்டியவற்றுள் சத சத, சர சர, சல சல, பட பட, சுட சுட, பிலு பிலு, மொட மொட, பள பள, சொட சொட, தட தட, மொலு மொலு, விடு விடு, சிலு சிலு, விறு விறு, திடு திடு, தக தக, சல்லு சல்லு, திக் திக், சுறு சுறு, மினு மினு, முணு முணு, மச மச, பொசு பொசு, திரு திரு என வரும் இவ்விரட்டைக்கிளவிகள் பண்பு பற்றியும், ஓசை பற்றியும் வந்துள்ளன.

ஒலிக்குறிப்புச் சொற்கள்

சொற்களை ஒலியினால் வெளிப்படுத்துவது ஒலிக் குறிப்புச் சொற்களாகும். "ஒலிக் குறிப்புகள் தாம் முதலில் தோன்றின. பின்னரே அவற்றிலிருந்து சொற்கள் உருவாயின"(52) என்பார் இந்திராணி மணியன். "சொல்லுகின்ற கருத்தின் தன்மையை உணர்த்தவும் கருத்திற்கு அழுத்தத்தை உருவாக்கவும், சித்திரிக்கும் காட்சியை நிழற்படம் போல் பருப்பொருளாக்கிக் காட்டவும் ஒலிக்குறிப்புச் சொற்கள் இலக்கியத்தில் வழங்கப்படுகின்றன"(53) எனக் குறிப்பிடுவர். சோலை சுந்தரபெருமாள், சொல்லின் வேகம், செயலின் விரைவு, உணர்வின் நுட்பம் ஆகியவற்றைப் புலப்படுத்த ஒலிக்குறிப்புச் சொற்களைக் கையாண்டுள்ளார்.

"குக்குக்கூ...குக்குக்கூ... எனக் கட்டைக் குரலில் கூவி ஓய்ந்தது"(54)

"நாகூர் ஃபேஸ்ட் பாஸஞ்சர் வழக்கமான ஆரவாரத்துடன் கர்டரை கடக்குமுன் எழுப்பும் ஒலியும் ஊகூ ஊ ஊதலுடன்"(55)

"அவன் போக வேண்டிய ரயில் வந்துக் கொண்டிருக்கும் அறிகுறியாக காட்டாற்றுப் பாலக் கர்டரின் கடக் கடக் ஒலி அவனை எச்சரித்து எழச்செய்தது."(56)

"பறவையினங்கள் கிறிச் சிட்டபடி தெற்கு நோக்கிப் பறந்தன"(57)

"இது போல் மெலிதாக வாஞ்சியூரான் மணி அடிக்க மாட்டானே.... தலையில் அடிப்பது போல நச்... நச் என்றவல்லவா அடிப்பான்."(58)

"பஞ்சாரத்தில் கவிழ்ந்து கிடந்த கன்னிச் சேவல் வரட் வரட் டென்று அலகை பூமியில் தீட்டி க்கூஉ, க்கூஉ என உடைந்து போனக் குரலில் கூவியது"(59)

"மேடையை நோக்கி வானம் புஸ் ஸென்று சீறிப் பாய்ந்தது"(60)

"கொட்டு கொட்டாம சாமுசாம்பான் இருந்ததில்லை
டண்டணக்கா டண்டணக்கா
டண்டணக்கா டண்டடகிட
................
ஜிஞ்சுனக்கா ஜினக்கு னக்கடி
ஜினக்கு னக்கடி ஜினக்கு னக்கடி
................."(61)

இவ்வாறு ஒலிக்குறிப்புச் சொற்களைப் பரவலாகப் பயன்படுத்தியுள்ளார். படிப்பவர்களின் உள்ளத்தில் வேகத்தையும் உணர்ச்சியையும் தூண்டுகின்றன. சொல்லுகின்ற கருத்திற்கு உயிரூட்டிச் செல்வதாகவும் திகழ்கின்றன.

பழமொழி

மக்களின் அனுபவங்களைச் சுருக்கமாகக் குறித்து வரும் சொற்றொடர்களே பழமொழியாகும். பழமொழியினை முதுமொழி

என்றும் அழைப்பர். சான்றோர்களால் முற்காலத்தில் வழங்கப்பட்டு வந்த பழமையான மொழி பழமொழி. இவை மக்களின் கருத்துக்களை எடுத்துக் கூற உதவுகின்றன. "மக்கள் வாழ்க்கையில் பொது உண்மைகளையும், அன்றாட நிகழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்ட பழமொழிகளைப் பொருத்தமான சூழலில் பயன்படுத்தும் போதே அதன் நுண்மைத் தன்மை சிறக்கும்"(62) என ஜே.ஏ. காட்டன் கூறுவதாகக் குறிப்பிடுவார்.

"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்
மென்மையும் என்று இவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப"(63)

என வரும் நூற்பாவில் பழமொழிப் பற்றி தொல்காப்பியர் இயம்புகிறார். பழங்காலத்திலிருந்து வழங்கப்பெற்று வரும் தொடரமைப்பான பழமொழி, எல்லா நாடுகளுக்கும் மக்களுக்கும் பொதுவானது. மக்களிடையே இன்றும் சாதாரணமாகப் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

"போடா காளி.... கொடுக்கச் சொல்லிப் பாக்கிறேன்...ன்னு சொல்லி கழுவிற மீனுல நழுவின மீனு கணக்கா"(64) நழுவிக்கிட்டார்.

சின்ன ஆண்டே "சாது மெரண்டா காடு கொள்ளாது"(65) ன்னு சொல்லத்தான் வாயெடுத்தான் காளி.

இப்ப "எரியிற எடத்தில எண்ணெய ஊத்தாதீங்க..."[66]

"ஒழைக்கிற காலத்தில் ஊரச் சுத்திட்டு அறுக்கிற காலத்தில அரிவாள எடுத்துக்கிட்டுப் போன"[67] என்னாடி இருக்கும்.

"பட்டக் கால்லேயே படுங்கிறது போல"[68] ரெண்டு வருஷமாகவே குடும்பத்தில ரெண்டு துக்கம்.

"அண்டையில உள்ள பகையும் அடுப்படிப்புகையும் மெல்ல மெல்ல சாகடிச்சிடும்ங்கிற"[69] கவலை அவரைக் கிள்ளிக்கிட்டு இருக்கு.

".... தம்பி முழுசா நெனைஞ்ச பொறவு முக்காடு போட்டுக்கவாப் போறோம்"[70]

"வெண்ணை உருண்டு வர்ற நேரத்தில தாழி உடைஞ்ச கதையா"[71] ஆயிட்டேங்கிற கவலை

"மூட்டைப்பூச்சிக்குப் பயந்துக்கிட்டு வீட்டக் கொளுத்தி விடவா முடியும்"[72]

"தும்ப விட்டுட்டு வாலப்புடுச்ச கதையா"[73]

"கைக்கு எட்டினது வாயிக்கு எட்டாம போயிடுமோ"[74]

"கெணத்துத் தண்ணிய வெள்ளம் கொண்டு போயிடாது"[75]

"உண்டுன்னு எடம் கொடுத்தா பல்லப் புடுச்சி பதம் பாக்குமாம்"[76]

"பெத்தபுள்ள சோறு போடுதோ இல்லையோ வச்சப்புள்ள ஏமாத்திடாதுங்கிற நம்பிக்கை"[77]

"நொண்டிக் கழுதைக்கு செனைக் கழுத வப்பாட்டி யாம்ங்கிற கதையால்ல வளந்துடுச்சி"(78)

"வீடு ரெண்டுபட்டா கூத்துக்காரிக்கு கொண்டாட்டம் தான்"(79)

"உலை வாய மூடினாலும் ஊரு வாய மூட யாரால முடியும்."(80)

"ஒரே கல்லுல ரெண்டு மாங்கா"(81)

"சின்ன மீனப் போட்டு பெரிய மீனாப் புடிக்கிறது"(82)

"முள்ளுல போட்ட பட்டுப் பொடவ போல"(83)

"தான் புடுச்ச முயலுக்கு மூணு காலுதாங்கிற புடிவாதம் புடிப்பாங்க"(84)

"குலைக்கிற நாயி கடிக்காது"(85)

"மண் குதிரைய நம்பி நட்டாத்தில எறங்கின கதையா"(86)

"விடிஞ்சா கல்யாணம் புடிடா வெத்தலைப் பாக்குங்கிற கதையா"(87)

"யானை தடுக்கி கீழே விழுந்தா எலிருஞ்சி கூட தாது பாக்கும்"(88)

"இரும்பு அடிக்கிற எடத்தில ஈக்களுக்கு என்னா வேலை"(89)

"சின்னப் புள்ளைங்க விட்ட வெள்ளாமை வீடுவந்து சேராதுன்னு"(90)

"ஊர்குருவி உசர உசர பறந்தாலும் பருந்தா எறங்கி வந்து உக்காந்திட முடியுமாய்யா"(91)

"அரக்க பரக்கப் பாடுபட்டாலும் படுக்க பாய் இருக்காதாம்"(92)

"எட்டாத பழத்துக்கு கொட்டாவி விடாதே"(93)

"கிளிய வளர்த்து பூனை கையில கொடுத்திட்டேன்"(94)

"பிள்ளையார்ப் பிடிக்க அது குரங்காக ஆனதை"(95)

இவ்வாறாகப் பழமொழிகள் கையாளப்பட்டுள்ளன.

பாத்திரங்களின் இயல்பினையும், தன்மையையும் குறிக்க இவை எடுத்தாளப்பட்டுள்ளன. இதன் மூலம் படைப்பாசிரியரின் ஆழ் புலமையினை அறியமுடிகிறது.

சொலவடைகள்

ஆசிரியர், தஞ்சை வட்டார மக்களின் வழக்குச் சொற்களைத் தன் படைப்புகளில் தக்க இடங்களில் எடுத்தாண்டுள்ளார். இது புதுமொழியாகப் பரிணமித்து புதினங்களின் உயிரோட்டத்திற்குப் பக்கபலமாக விளங்குகின்றன.

புள்ளைங்க கையில காசு வந்துட்டா அப்புறம் "சதை உள்ள இடத்துக்கு கத்தி நாடுறாப் போல"(96) போயிடுதுங்க.

"அழுதாலும் புள்ள அவதான் பெக்கணும்"(97)

"அரசனை நம்பி புருஷனை விட்ட கதை போல"(98)

"அற்பனுக்கு வாழ்வு வந்துட்டுன்னா நாம போய் அர்த்த ராத்திரியிலே குடையாய் பிடிக்க முடியும்..."(99)

"எரியுற வீட்ல புடுங்குனது ஆதாயம் இப்ப"(100)

"குட்டி, குலைச்சு நாய் தலையில வச்ச மாதிரி"(101)

"ஆத்தில போற தண்ணிய, நாயால நக்கித் தாண்ட குடிக்க முடியும்..."(102)

"நண்டு கொழுத்தா வலையில இருக்காது. பறை கொழுத்தா பாயில படுக்காது"(103)

"பல்லாக்கு செய்யிற அலங்காரமும், பள்ளு பறைக்கு செய்யிற உபகாரமும் அலங்கோலமா போயிடும்ன்னு சும்மாவாச் சொல்லி வச்சிருங்காங்க"(104)

"பல தண்ணிக் குடிச்சவனும், பல பொண்டுவ ருசி கண்டவனும் ஒரு எடத்தில நிக்க மாட்டான்னு"(105)

"கட்டிக்க சீலை இல்லைன்னு நாத்தினா வீட்டுக்குப் போனாளாம். நாத்தினாக்காரி ஓலைப்பாய சுத்திக்கிட்டு எதிரக்க வந்தாளாம்"(106)

"நாய குளிப்பாட்டி நடுவூட்டுல வச்சாலும் அது வாலை ஆட்டிக்கிட்டு தோப்புக்குத் தான் போவும்"(107)

"ஆசை அறுபது நாளு. மோகம் முப்பது நாளு"(108)

"நரி வலம் போனா என்ன? வடம் போனா என்ன?"(109)

"ஓடுற நாயிக்கு செக்கும் சிவலிங்கமும் ஒண்ணு தான்"(110)

"பாம்பு திங்கிற ஊருக்கு போனா நடு கண்டத்தை எனக்கு போடுன்னு உக்காந்திடத்தான் வேணும்"(111)

"பண்ணை அடிமை பாக்கிரவனுக்கு வர்ற ஆத்திரம் மூத்தரம் பேஞ்சதும் அடங்கிப் போறது போலத்தான்"(112)

“அலியூரப் பழிச்சிட்டு புலியூர் போனா புலியூரும் அலியூரா போன கதையால்ல....”(113)

“உரலுக்கு ஒரு பக்க் இடின்னா வெள்ளாமைப் பாக்கிற சாகுபடிக்காரனுக்கு ரெண்டு பக்கமும்....”(114)

“துளுக்கணுக்கு நோம்பு வந்த தூக்கிப் பேட்டு அறுத்துடுவான்னு....”(115)

“சக்கரையத் தடவிக்கிட்டு எறும்பு புத்துலேயே உக்காந்த கதையா ஆயிடும்”(116)

“ஏரி மேலக் கோவிச்சிக்கிட்டு சூத்துக் கழுவாம போன யாரு சொமக்கிறது”(117)

“அவுச்சி எடுத்தாலும் கவுச்சி நாத்தம் போவாது”(118)

“எரியிறத இழுத்துட்டா தானே கொதிக்கிறது நின்னு போயிடும்”(119)

“காசு மீது, எருக்கு முளைக்குமளவுக்கு பணப்பெருக்கம்”(120)

“தோலக்கடிச்சு துருத்யக் கடிச்சு.... ஆளக்கடிச்ச கதையா....”(121)

“குளத்துத்தண்ணியில உக்காந்துக்கிட்டு குசுவிட்டா வெளியே தெரியாமயாப் போவப் போவுது”(122)

“எடச்சன புள்ளப் பெத்தவளுக்கு தலைச்சன் புள்ள பெக்கிறவ மருத்துவம் சொல்லுறாப்போல”(123)

சொலவடைகளைக் கையாளும் போது அதிகமாகக் கொச்சைச் சொற்கள் கலந்துள்ளதை அறியமுடிகிறது. மக்கள் பேசும் பேச்சு நடைய அப்படியே கையாண்டுள்ளதால், இதுவும் புதினங்களின் வளர்ச்சிக்குத் துணைபுரிகிறது. மேலும் ஒரே பழமொழியோ, சொலவடையோ ஒன்றிற்கு மேற்பட்ட புதினங்களில் காணப்படுகின்றன. ஒரே புதினத்தில் இரு இடங்களில் கூட ஒரே பழமொழியையோ சொலவடையோ காணமுடிகிறது.

பிறமொழிச் சொற்கள்

இயல்பாக நடைமுறையில் பயன்படுத்தப்படும் சொற்களை படைப்பாசிரியர்கள் தம் படைப்பில் கையாள்வது இயற்கையாகும். பிறமொழிச் சொற்களை எல்லோராலும் புரிந்து கொள்ளத் தக்க வகையில் கையாண்டுள்ளார் ஆசிரியர்.

ஆபிஸர், ஜாக்கிரதை, கிஷான் போலீஸ், நமஸ்காரம், கெவுருமெண்டு, ஜில்லா, விலாஸம், அன்னப் போஸ்ட், சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்கலெக்டர், டெப்புட்டி கலெக்ட்டர், மலபார் போலீஸ், சர்க்கஸ், பெட்டிசன், கேஸ், ரிமாண்ட், ரெக்காடு சீட், கோர்ட், பேங்க், சப்போட், சோமவாரம், தோஸ்ஸா, அட்வான்ஸ், பேமஸ், ஜாமின், மோட்டா மோட்டா, டபுல் ஸ்டாங்கா.

(செந்நெல்)

கண்டிசன் பெயில், டபோதாரர், மோடடிப்பா, கலேஜ், ஸ்டூல், கிளாஸ், ஹரிசனன், சல்தி, ஜுப், இன்ஸ்பெக்டர், அரஸ்ட், ஸ்தலம், ரெக்கமண்டு, கேஷ், சீரியஸ், ஸ்பெஷல் பிராஞ்சு, லேசில், டவுன்.

(தப்பாட்டம்)

பாஷை, ஜிப்பா, ஜோல்னாப் பை, பேஸா, ஜில்லா, ஜாஸ்தி, ஜுவாலை, நமஸ்காரம, கப்சிப், கோஷ்டி, ஆக்ரோஷம், ஷணம்.

(நஞ்சை மனிதர்கள்)

சில்மிஷம், மிலிட்டிரி, மிஷின், போஸ்டுமேன், ஷவரம், உஷ்ணம், ஆபிஸர், விஸ்கி, லக்கேஜ், லேட், கண்ட்ரோல்.

(ஒரே ஒரு ஊர்ல)

டாக்டர், ஜுவாலை, லாயக்கு, டம்ளர், டப்பா, செயின், மெடிக்கல் லீவு, லெட்டர்கு எடிட்டர், பஞ்சாயத்து, டெப்போ, விசேஷம், மோட்டார் சைக்கிள், காப்பி, ஜவுளிப் பொட்டலம்.

(உறங்க மறந்த கும்பகர்ணர்கள்)

சந்தோஷம், ஒயர்மேன், ஆபிசர், புரோஜனம், ஜெயில், போலீஸ், பேஷா, சண்டி ஹோமம், ஆயில் இன்ஜின், தாலுகா கமிட்டி, கட்டிங் ஆர்டர், ரிஜிட்டர் ஆபிஸ், வேன்.

(பெருந்திணை)

சாஸ்திரக்காரன், திருஷ்டி, ஜாடை, ஷேமம், ஜென்மம், லேசு, பஸ்பம், சோமவாரம், பிராமணபரிஷம், அந்தஸ்து.

(மரக்கால்)

போன்றவை புதினங்களில் காணப்படும் பிறமொழிச் சொற்களாகும்.

நனவோடை உத்தி

ஒரு கதையைச் சொல்லிக் கொண்டே போகின்ற போது கடந்தகால நிகழ்ச்சிகளை ஒரு பாத்திரத்தின் நினைவோட்டமாக எழுத்தாளர் எடுத்துக்காட்டுவர். இலக்கியத்தின் வெளியீட்டிற்குச் சிறப்பளிக்கும் பல உத்திகளில் ஒன்றாக முன்னிகழ்வினைப் பின்பு கூறுதல் அமைகின்றது. முன்கதைச் சுருக்கம் உரைத்தலாகாயன்றி கூறப்படாததைத் தேவை ஏற்படுமிடத்து, மிக்க கால இடைவெளிக்குப் பின் தருவதாக இணைகின்றது. எனவே, நனவோடை கதைக்கூட்டமைப்பில் மிகவும் இன்றியமையாத உத்தியாக உருவாகின்றது.

இதைப்பற்றி இர. இராமானுசாச்சாரியார், “இத்தகைய மனவோட்டத்தில் காணப்படும் எண்ணங்கள், உணர்ச்சிகள், புலப்பதிவுகள் தனித்தனியாக இருப்பதாகக் கருதினர். ஒருவர் இன்னொருவர் மனத்திற்குச் சில ஆற்றல்கள் உண்டென்றும் பலவாக அமையும் பதிவுகளை ஒழுங்குபடுத்தி உட்படுத்தி அவற்றினிடையே இயைபுகண்டு பொருள் பயக்கும் காட்சியாகக் காணத் துணைசெய்வது மனம்”(124) என்று இவ்வுத்தியைப் பற்றிக் கூறுகின்றார்.

ஆசிரியர் கூற்றாக இல்லாமல், பாத்திரங்கள் தங்களுக்குள்ளேயே பேசிக் கொள்வது போல் அமைந்திருப்பது நனவோடை உத்தியாகும். இதில் எவ்விதக் கட்டுப்பாடுமின்றிப் பாத்திரங்கள் வாசகனுக்கு நேரடியாகக் கதை சொல்வதைப் போல இருப்பதால் அவனை ஒன்றிப் போகச் செய்கிறது.

கதையோட்டத்திற்கேற்பப் புதினங்களில் இவ்வுத்தியைக் கையாண்டுள்ளார் ஆசிரியர். பிறரிடம் சொல்லமுடியாத மனத்தின் சுமைகளைக் கதை மாந்தர் வெளிப்படுத்தவும் இது ஒரு வாயிலாக அமைகிறது.

கண்ணுச்சாமியின் செயல்களைக் கண்டிக்க முடியவில்லையே என்று நினைக்கும் கோபாலகிருஷ்ணநாயுடு, "இதே, இருவது வருஷத்துக்கு முன்னாலன்னா இந்நேரம் கண்ணுசாமிய தூக்கிக்கிட்டு வரச்சொல்லி நிப்பாட்டி இந்தக் கடையில் உள்ள காவடியில கெண்டை கால விட்டு சேத்துப் பூட்டு திருக்கவாலை எடுத்து சாத்துனா அவன் அசைஞ்சிக் கொடுக்க முடியாது. சமயத்தில ரெண்டு கையையும் மேலே தூக்கி கட்டிப்புடுறதும் உண்டு. கொடுக்கிற அடியில தோலு உரிச்சிக்கிட்டு வந்திடும். கொஞ்சம் லேசு பாசானா தண்டனை கொடுக்கிறதா இருந்தா கையையும், காலையும் கட்டிப்புடுவாங்க, சாத்தூர் மிளகாய அரைச்சிக்கிட்டு வரச் சொல்லி ஒடம்புல உள்ள துவாரவாசல்கள் வழிய உள்ளார ஏத்தி களிக்கம் போடுறது உண்டு. இத்தெல்லாம் இல்லங்கிற திமிரு தான் இப்ப அவனுங்களுக்கு"[125] என்று முணுங்கிக் கொள்கிறார்.

திருமணமான புதிதில் சிங்காரம் தன் தந்தை கூறியதை இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நினைவு கூர்ந்து பார்க்கிறார்.

"சிங்காரம்! உன் பொண்டாட்டி குணம் தங்கம்டா...நான் ரொம்ப பெருமைப்படுகிறேன். யாரு மனசும் கோணாம பெரிய குடும்பத்த அரவணச்சுக் கொண்டு போறதே பெரிசு. இது போலவே நம்ம குடும்பம் இருநதுடணும்பா. எந்தக் காலத்திலும் சிதறிப் போயிடக் கூடாது. நம்ம குடும்பத்திலுள்ள அஞ்சலையும் வீரபத்திரனும் உன் பொண்டாட்டியப் பொருத்தவரை வேத்தாளுதான். இருந்தாலும் அதுங்க காலம் வரைக்கும் உங்க நிழல்லதாம்பா நிக்கணும். அது மட்டுமில்ல, அது உங்களுக்கும் பாதுகாப்பா இருக்கும்பா..... இதை என்னிக்கும் மறந்துபுடாதே ஆமா....."(126)

கிளியம்மாவோடு வாழ்ந்த வாழ்க்கையைக் கனவு கண்ட ஆறுமுகம், விழித்துக் கொண்ட பின் கிளியம்மாவுடன் கொண்ட தொடர்பை நினைத்துப் பார்க்கிறார்.

"இப்பவும் அவர் மனிசல், இந்தே! சும்மாத்தான் நோஞ்சிக்காதே, ஆமாமான்னு உதட்டை மென்ற படி மத்த எல்லா ஆம்பளையும் உன்னைப் போலவா நான்.... என்று சொல்லி அவர் கன்னத்தை நெருடிவிட்டு மசக்கும் கிளியம்மாவின் சிரிப்பு. அப்பப்பா அதில் தான் எப்படியான ஓர் ஈர்ப்பு. உடம்புக்குள் அவள் நடத்திக் காட்டிய விதத்தை எல்லாம் அவர் மனசில்

இப்போதும்..."[127] தப்பாட்டத்தில் முனியாண்டி சாம்பான் சிறுவனாக இருந்த போது நடந்த கொடுமைகளை, வயதான பிறகு நினைத்துப் பார்க்கிறார்.

"அப்போது வைக்கப்போரு.....

............................

....சரிங்க பெரியாண்டே....."[128] என்று சொல்லிய போது மீறிட்டு வந்த அழுகையையும் கண்ணீரையும் துடைத்துக் கொண்டு நின்ற அந்த நினைவுகளும் அவர் மனதில் வந்து அலையடித்தது. இவ்வாறாக நனவோடை உத்தியானது பொரும்பாலன புதினங்களில் காணமுடிகிறது.

கதைக்குள் கதை கூறும் உத்தி

கதைக்குள்ளேயே மற்றொரு கதையைக் கூறும் உத்தியை ஆசிரியர் கையாண்டுள்ளார். முன்பு நடந்த ஒரு கதையைக் கூறும் போது இளைய தலைமுறையினரும் அதை அறிந்து கொள்கின்றனர். புதினத்திற்கு மேலும் மெருகூட்டுவதாகவும் அமைகின்றன.

'பெருந்திணை' என்ற புதினத்தில் 'குட்டிச்சலான்' என்ற தெய்வ வழிபாடு காணப்படுகிறது. அத்தெய்வத்திற்குப் புழுங்கல் அரிசிப் பொங்கலும், வெல்லப் பொங்கலும் வைக்கின்றனர். பெண்கள் பழம், பூ, சந்தனம் தாங்கிய தட்டுக்களுடனும், ஆண்கள் பால் குடத்தைத் தலையில் தாங்கியும் தாரை தப்பட்டத்துடன் ஆடிப்பாடி வாண வேட்டுவிட்டு அக்கோயிலுக்குச் சென்று வழிபடுகின்றனர்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த ‘குட்டிச்சலான்’ தெய்வத்தைப் பற்றிய கதையை ஆசிரியர் இடையில் கூறியுள்ளார்.

பறையர் குடியில் பிறந்த ‘குட்டிச்சலான்’ ஊர்த் தலையாரியாக இருக்கும் போது, ஊருக்குள் ஒரு காக்கா குருவி கூட வந்துவிடாமல் இரவு பகலாகக் காவல் காத்து வருகிறார். இதைக் கேள்விப்பட்டு மேற்கிலிருந்து ஒரு திருட்டுக் கும்பல் ஊருக்குள் நுழைய அதைக் கண்ட குட்டியான் தனியாக எல்லோரையும் சமாளிக்க முடியாதெனத் தெரிந்து, அம்பட்டன் ஓடையில் குதித்து, தண்ணீருக்குள்ளேயே நீந்தி போய் பறைக்குடியைச் சேர்ந்த ஆட்களைத் திரட்டிக் கொண்டு வந்து, தங்களிடமிருந்த எலிக்கிட்டியின் மூலம் திருடர்களை விரட்டியடித்து விட்ட பிறகு குட்டியானுக்குத் தலையில் பெரிய காயம் ஏற்பட்டு, பெரிய பெரிய வைத்தியர்களும் பார்த்தும் குணமாகாமல் இறந்து விடுகிறான். மேல் சாதியினரும் கீழ்சாதியினரும், அவரை இழந்ததால் ஒப்பாரி வைக்கின்றனர். காசிநாதன் பிள்ளை அவருக்கு சிலை எடுக்கச் சொல்லி ‘குட்டிச்சலான்’ என்று பெயரும் வைக்கிறார். சிலைக்குக் கண் திறக்கும் நாளில் பெரிய விழாவே எடுத்து கொண்டாடுகிறார். குட்டிச்சலான் தான் குலத்தையும் ஊரையும் காவல் காத்து நிற்கிறார் எனப் பெரும் சொத்தை எழுதி வைக்கிறார் காசிநாதன்பிள்ளை.

இவ்வாறாக ஊருக்காகத் தன் உயிரைக் கொடுத்த குட்டிச்சலானுக்கு, ஒவ்வொரு வருடமும் வெள்ளாமைப்பட்டம்

தொடங்கும் போது 'புள்ளைத்தூக்கு' என்ற ஒரு உற்சவத்தைச் செய்து அவருக்கு மரியாதை செய்கின்றனர்.

"ஊரின் கால்மாட்டின் ஒதுக்குப்புறம் துரைசாமி ஓடையின் வடவண்டக் கரை, மூன்று ஆளுகள் நின்னு கட்டி அணைக்க முடியாதபடி பருத்து நிக்கிற ஒதிய மரம். அதன் அடியில் சின்ன ஒற்றை மண்டபம். சுதை வேலைப்பாட்டில் ஆன அஞ்சு அடி உயரத்தில் நிக்கிறார் குட்டிச்சலான். தலையில் முண்டாசு. இடுப்பில்லங்கேடு. வெள்ளைப் படர்ந்தாப் போல இருக்கும். உதட்டில் இடுக்கியிருக்கும் சுருட்டை சோத்துக்கை பிடிச்சிருக்கு. பீச்சாங்கையில் இருக்கற தடிக்கம்பு தரையில் ஊன்றி இருக்கு. கையும் காலும் கதண்டு கணக்கா. விரிஞ்ச மார்ல குத்திக்கிட்டு இருக்கும் மயிருகள். தோள்பட்டை அக்குளில் உள்ள மயிர்களும் கறுப்பாய். லங்கோடும் தலைமுண்டாசும் நீலம் கலந்த வெள்ளையாய்....."(129)

"குட்டிச்சலானின் தோற்றப் பொழிவு சிலையில் அப்படியே வடிக்கப்பட்டுள்ளது. நாற்றாங்கால் ஏழாம் கடைசி நடவு நட்டு முடிச்சாங்க. கடைசி முதலை சாத்தி வச்சிருக்கிற 'குட்டிச்சலானுக்கு' முதல் புள்ளைத் தூக்கிறதுக்கன்னு படையல் போடணும்."(130)

"ஏய் வைத்தி! நமக்கு அங்காளம்மன்தான் குல தெய்வம். என்னேட பாட்டனுக்கு பாட்டன் கண்ணுக்கு முன்னால நம்ம குலத்தையும் நம்ம ஊரையும் காத்தவர்தான் இந்த

'குட்டிச்சலான்'..."[131] இவ்வாறு கதைக்குள் கதை கூறும் உத்தியைத் திறம்பட ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

கடித உத்தி

செய்திகளைத் தெரிவிப்பதற்குப் பழங்காலத்திலிருந்து பல்வேறு வகையான பொருட்களைப் பயன்படுத்தியுள்ளனர். மேக விடு தூது, தமிழ் விடு தூது, கிள்ளை விடு தூது, நெஞ்சு விடு தூது போன்ற பல்வேறு வகையான தூதுப் பொருட்களைக் கொண்டு தலைவன் தலைவிக்கும், தலைவி தலைவனுக்கும் தூது அனுப்பிய செய்தியைக் கொண்டு, தூது இலக்கியமெனத் தனி இலக்கியமே உண்டு. அத்தகைய நிலையிலிருந்து வளர்ச்சி பெற்று இன்று பலவித சாதனங்களின் மூலம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர். சோலை சுந்தர பொருமாள் தமது படைப்புக்களில் கடிதம் எழுதியும், தொலைபேசியில் பேசியும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதைக் காணமுடிகிறது.

'ஒரே ஒரு ஊர்ல' என்ற புதினத்தில் இராசாத்தியை மணமுடிக்கவிருக்கும் இராணுவத்திலிருக்கும் வடிவேலு, மூன்று மாதம் விடுப்பில் வருவதாகக் கடிதம் எழுதி அனுப்பியதைக் கண்ட சிங்காரம் குடும்பத்தினர் மகிழ்கின்றனர்.

"அன்புள்ள சம்முவம்! வரும் திங்கள் கிழமை காலையில் உங்கள் வீட்டிலிருப்பேன். ஒங்களைப் பார்த்த பிறகு தான் எங்கள் வீட்டிற்குப் போய் அண்ணனைப் பார்க்கப் போகிறேன்....மூன்று மாதம் விடுப்பில் வருகிறேன்"[132]

இதே போன்று 'நஞ்சை மனிதர்கள்' என்ற புதினத்தில், சோமுப்பிள்ளையின் மச்சினர் ரங்கூனிலிருந்து, சோமுப்பிள்ளையின் மூத்த மகன் கோபாலுவைப் பற்றி கடிதம் எழுதி அனுப்புகிறார். ஆனால் சோமுப்பிள்ளை பதில் எழுதுவதில்லை. கோபாலுவை தன் அண்ணன் தான் அனுப்பிவிட்டார். அவர் தான் அவனிடம் கடிதத் தொடர்பு வைத்திருக்கிறார் என்பதை அறிந்து வருந்திக் கொண்டிருப்பவருக்கு ஒரு நாள் கோபாலிடமிருந்து கடிதம் வருகிறது.

"........ அம்மா அப்பா அநேக நமஸ்காரம். ஷேமம், உங்களைப்பற்றி பெரியப்பா எப்பாவது தபால் எழுதுவார்...... நாங்கள் பர்மாவில் வாழ்ந்தாலும் வெள்ளைக்காரனிடம் இருந்து பிறந்த மண்ணின் மானத்தைக் காப்பாத்த போர் தொடுத்துவிட்டோம். ஏகாதிபத்திய கூலிப்படையை எதிர்த்து போரிட்டு இந்திய கிழக்கு எல்லைவரை கைப்பற்றி விட்டோம். வெகு விரைவில் 'இம்பால்' நகரை மீட்டு விடுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. தினம் தினம் என் கண்முன்னே நூற்றுக்கணக்கான வீரர்கள் வீர மரணம் அடைகிறார்கள். அந்த என் சகோதரர்கள் போல நானும் ஒரு நாள்.... என் ஆயுசில் உங்களையும் என்னையும் வளர்த்த மண்ணையும் பார்த்துவிட எனக்கு பொசுப்பு இல்லாம போனாலும்.... என் பிள்ளைகளாவது...."[(133)] இவ்வாறு கடித உத்தியைப் பயன்படுத்தியுள்ளமை புலனாகிறது.

தொலைபேசி மூலமாகவும செய்தி பரவுகிறது என்பதைப் பெருந்திணை என்ற புதினத்தில் சுட்டிக் கட்டியுள்ளார். சிவசங்கரன் பிள்ளையின மூத்த மகள் மதிவதினி, தங்களுக்கு அவசரமாகப் பணம் தேவைப்படுகிறது என்பதைத் தொலைபேசி மூலம் தெரிவிக்கிறாள். கடிதத்தை விட தொலைபேசியில் நேரடித் தொடர்பும் விரைவாகச் செய்தியைத் தெரிந்து கொள்வதும் ஆன தன்மையை அறியமுடிகிறது.

"நல்லா இருக்கீயாம்மா... மாப்புள்ள ஊர்லத்தானே மவள் பேசுவதைக் கேட்டு ஊம்... ஊம்... என்று உம் போட்டுக் கொண்டிருந்தவள் ... அதுக்கென்ன நமக்கு நல்ல காலம் பொறக்காம போயிடாது........"(134) தொலைபேசியில் பேசும் போது வீட்டிலுள்ள அனைவரிடமும் பேசிவிடலாம் என்பதையும் ஆசிரியர் சுட்டிச் சொல்கிறார். இவ்வாறாக கடித உத்தி முறைகளும் தொலை பேசி உரையாடல் உத்தியும் ஆசிரியரின் படைப்புகளில் காணமுடிகிறது.

கனவு உத்தி

சிலப்பதிகாரத்தில் கனாத்திறம் உரைத்த காதை என்ற தனிக் காதையே உள்ளது. இதில் கண்ணகி தான் கண்ட கனவினை தேவந்தியிடம் கூறுகிறாள்.

"கடுக்கும் என் நெஞ்சம் கனவினால், என்கை
பிடித்தனன் போய் ஓர் பெரும்பதியுட் பட்டேம்"(135)

என்று வரும் வரியிலும் கனவு கூறப்பட்டுள்ளது. கண்ட கனவானது உண்மையாக நனவாகப் போவதை ஆசிரியர் முன் கூட்டியே சுட்டிக்காட்டியுள்ளார்.

நாச்சியார் திருமொழியில் ஆண்டாள்,

"வாரண மாயிரம் சூழ வலம்வந்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக்கனாக் கண்டேன் தோழீ நான்"

என்று மதுசூதனன் நம்பி கைத்தலம் பற்றக் கனாக் கண்டதாகப் பாடியுள்ளார். இந்தக் கனவு குறித்து ஃபிராய்டு என்பவர், கனவுகளின் விளக்கம் (Interpretation of Dreams) என்ற நூலின் மூலம் விளக்கியுள்ளதை தி.சு. நடராசன் தன் நூலில் எழுதியுள்ளார். கனவுகள், யதார்த்தத்தின் திரிபுகள், பிறழ்வுகள், அதன் வெவ்வேறு குறியீட்டு வடிவங்கள் என்று கூறுகிற அவர் கனவு என்பது அடிப்படையில் நிறைவேறாத ஆசைகளின் (முக்கியமாகப் பாலியல் விருப்பங்கள்) சுய திருப்திகளே (Wish fulfilment) என்று விளக்குகின்றார். நடப்பிலே சந்திக்கின்ற அல்லது விரும்புகின்ற ஆசைகள் அல்லது கற்பனைகள், இயலாமை காரணமாகவோ, சமூக உறவுகளின் மறைமுகமான அல்லது மரபார்ந்த தடைகள் (Social taboos) காரணமாகவோ, நிகழ முடிவதில்லை. எனவே அவை, அடிமனத்திலே சென்று படிகின்றன. நேர்நேர் வரிசையில் அல்ல. குழம்பியும் கலந்தும் கிடக்கின்றன. வெளிமனம் அல்லது நனவுடை

மனம் தூங்குகின்றபோது, இந்த நனவிலி மனம் எழுகின்றது. விகாரங்களோடு, விநோதங்களோடு கனவுகளாக அவை வெளிப்படுகின்றன."[136]

சோலை சுந்தரப் பெருமாள் இந்த கனவு காணும் உத்தியையும் தம் படைப்பில் சுட்டிச் செல்கிறார். இதில் இளம் வயதினரும், நடுத்தர வயதினரும், முதியவர்களும் கனவு காண்கின்றனர். அவரவரின் எண்ணங்களின் வெளிப்பாடே கனவு என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

'நஞ்சை மனிதர்களில்' அங்கம்மா கனவு காண்கிறாள். "புருஷனோட பொறப்பட்டுப் பறந்து போறா நாலந்திர தேசமும் சுத்துராங்க. வேத்து மனுச சாதியே இல்லாத யுகம். தோப்பும தொறவும் பெரிய வானந்திரம.... வீட்டுக்கு வந்தா சோமுப்புள்ள வரைக்கும் தாங்கே தாங்குன்னு தாங்குறாங்க. பெத்தப்புள்ளைய பாட்டியா நீலாய தாட்சிக்கிட்டக்க கொடுக்கிறா அங்கம்மா. பூரிச்சி போய் பேரப்புள்ளைய மாரோட அணைச்சிக்கிட்டு பெரும்படுது. சாத்தனூரு தாயும் புள்ளையமா உக்காத்தி வச்சி திட்டி சுத்திப் போடும் போது, இதில காரி துப்புன்னு சொல்ல அங்கம்மா ப்பூ....சட்டுன்னு கனவு கலஞ்சி போயிடுது."[137]

அங்கம்மா கண்ட கனவு போல பின்னாளில் அழகான ஆண்குழந்தையே பிறக்கிறது. பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான் என அனைவரும் தாங்கி மகிழ்கின்றனர்.

‘உறங்க மறந்த கும்பகர்ணர்களில்’ ஒரு தலையாக இராஜாமணி வாத்தியாரை விரும்பும் மருதாயி இருமுறை கனவு காண்கிறாள். இராஜாமணி வாத்தியாரை வலிந்து திருப்பி உதட்டைக் கவ்வுவது போலவும், அதற்கு அவர், “வேண்டாம மருதாயி.... என்னை விடு.... விடு.... அவளை உதறிவிட, ம்கூம் விட மாட்டேன போங்க. உறக்கத்தில் மருதாயி உரக்கக் கத்திவிட்டாள்”(138

வாலிபப் பருவத்தில் கனவு கண்டு கத்தினால் விளக்குமாற்றை எடுத்து கால்மாட்டிலும், தலை மாட்டிலும் தட்டக்கூடிய பழக்கத்தையும் காணமுடிகிறது. மற்றொருமுறை மருதாயி, தன் தந்தை இறந்து போனது மாதிரி கனவு கண்டதை தாயிடம் கூறுகிறாள். அதற்கு அவள் அம்மா, மனதிற்குள் பதறினாலும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு “இப்படி கனாக் கண்டா நல்ல சகுனம் என்பாங்க. நீ தலைய மேற் கால வச்சு கால நீட்டிப் படு... கனவு வராது.”(139)

அன்னை ஆறுதல் கூறினாலும், கண்ட கனவிற்கும் தனது காதலுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று எதை எதையோ நினைத்து மனதைக் குழப்பிக் கொள்கிறாள் மருதாயி.

பெருந்திணையில் ஆறுமுகம் தூங்கும் போது கிளியம்மாவை நினைத்து கனவு காண்கிறான். “ஆறுமுவம் இன்னும் தூக்கம் கலையாமல் கிளியம்மாவை....ம்ம் என்னாது? இன்னுமா? சும்மா.... அதான்....”(140) அவன் தலையில் வைத்துப் படுத்திருந்த சின்னத் துணி

மூட்டையை நெஞ்சோடு அணைத்தபடி முனங்கவும, அவன் ஆத்தா, மூலையில் சாத்தியிருந்த விளக்குமாரை எடுத்து அவன் படுத்திருந்த கட்டிலை மூணு முறை சுத்தி, கெட்ட கன்னி மோகனியே இன்னியோட என் பேரனை விட்டு ஓடிப்போயிடு...என்று சொல்ல அவன் தலைமாட்டில் மூணு முறை தட்டி த்தூ...த்தூ... என்று துப்பி விளக்குமாரைத் தூக்கி எறிந்தாள்.

இவ்வாறு கனவு காணும் முறையை ஆசிரியர் பல புதினங்களில் கையாண்டுள்ளார்.

முருகியல் உத்தி

இயல்பாகத் தான் காணும் ஒன்றினை தனது கண்ணோட்டத்தில் கண்டு அதை எழில் படுத்தி அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் கூறுவது முருகியலாகும். அதாவது முருகியல் என்பதற்கு அழகியல் எனப் பொருள்படும். படைப்புகளில் அழகான வருணனைகள் இடம் பெறுவது என்பது கதையை வெற்றியடையச் செய்யும் சிறந்த உத்திகளுள் ஒன்று.

அழகியல் அல்லது முருகியல் கொள்கை

"அழகைக்கண்டு உணர்வதாலும் அனுபவிப்பதாலும் படைப்பாளன் உள்ளத்திலே அது அகத்து எழுச்சியைத் தோற்றுவிக்கிறது. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என விழுமிய உணர்வோடு பிறருக்கு எடுத்துரைப்பதே பிறரையும் அனுபவித்து இன்புறுமாறு செய்வதே படைப்பாளனின்

நோக்கமாகஅமைகிறது. இத்தகைய அகத்து எழுச்சியால் தோன்றுவதே இலக்கியம் என்னும் கருத்தினை மையமாகக் கொண்டு விளக்கப்படுவதே அழகியல் அல்லது முருகியல் கொள்கையாகும்."(141)

வெறும் உணர்ச்சிப் பெருக்கால் உருவெடுப்பது அழகு அன்று. இசையிலும் ஓவியத்திலும் பிற கலைகளிலும் ஒழுங்குணர்வு இழையோடிச் செல்லுவதைப் போல இலக்கியத்திலும் அது அமைதல் வேண்டும். 'கலை கலைக்காகவே' என்னும் கருத்திலிருந்து மாறி இலக்கியத்தின் வடிவத்திற்கே என்றும் பெரும்பாலும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

"கற்பனை நயமும் எடுத்துரைக்கும் முறையில் கலையழகும் இணைந்து இயங்குகின்ற பொழுது படைப்பிலக்கியம் கவர்ச்சி மிகு கலையழகைப் பெறுகிறது. இதனோடு அழகான பொருள் வற்றாத 'இன்ப ஊற்று' எனும் கருத்திற்கேற்பப், படிப்பவரை மகிழ்விக்கவும் செய்கிறது. இந்த இரு வகை இயல்புகள் படைப்பு இலக்கியத்தில் முதன்மை இடம் பெற்று இருப்பதைச் சுட்டிக் காட்டுவதே முருகியல் நோக்கமாகும்."(142) இயற்கையை வருணிப்பதில் சோலை சுந்தரப் பெருமாள் முன்னோடியாகத் திகழ்கிறார். இயற்கையாக நிகழக் கூடியவற்றைத் தம் படைப்புகளின் ஊடே கதையோடு தொடர்புபடுத்திக் கூறியுள்ளார். 'ஒரே ஒரு ஊர்ல' என்ற புதினத்தில் இயற்கை வருணனைகளைக் காணமுடிகிறது.

“அன்று மாசி மகம், பொழுது சாயும் போதே நிலாவும் எழுந்து கொண்டது. பனி வாடையுடன் நிலவு பொழிய ஆரம்பித்து விட்டது”(143)

“இலுப்பைப் பூவின் மகரந்தங்கள் உதிர, தென்றல் துணை நிற்க, இந்த உலகை மறந்த நிலையில் தங்களுக்கென தனி உலகைச் சிருஷ்டி செய்து கொண்டுள்ள இருவுள்ளங்களின் மொத்த மொழிபெயர்ப்பை விடியலுக்குச் சொல்லிக் கொண்டிருந்தன”(144) என்று வரும் வரிகளில் வருணனைகளின் ஊடே கதையின் போக்கும் செல்கிறது. நிலா, தென்றல், பனி, வாடை, பறவைகள் பற்றிய செய்திகளும் கூறிச் செல்லும் ஆசிரியர், சண்முகம் வள்ளி இவர்களின் செயல்பாடுகளை விடியலுக்குச் சொல்லிக் கொண்டிருந்தன என்று கூறுவதிலிருந்து இயற்கையோடு கதையை முடிவுக்குக் கொண்டுவருகிறார்.

உறங்க மறந்த கும்பகர்ணர்களில் “பசுமையான அடர்ந்த தாழம்பூ புதர்கள் கரையோரங்களில் அவற்றில் பறிப்பாரின்றி பூத்துக் கிடந்த பூக்கள் மணம் பரப்பிக் கொண்டிருந்தன”(145)

“சின்னசாமியின் வீட்டு வாசலில் நின்ற வேப்பமரம் காய்த்துக் குலுங்கி பறவையினங்களுக்கு அடைக்கலம் கொடுத்திருந்தது.”(146)

“நூற்றுக்கும் மேற்பட்ட தென்னைகள் நிறைந்த சூழலில் படர்ந்து நின்ற குட்டை குட்டையான நாலைஞ்சு மாமரங்கள் நிறைபாரமாய்க் காய்களுடன் நின்றன.”(147)

இயற்கைக் காட்சிகளை ஆங்காங்கே குறிப்பிட்டு வாசகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளார் ஆசிரியர். இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை அம்மண்ணிலுள்ள மக்கள் வாழ்கின்றனர் என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.

மரக்கால் என்ற புதினத்தில் நிலவையும், பறவைகளையும் வருணித்துள்ளார். "ஆவணி மாதக் கடைசி நாள் அது. குறைப்பட்டுப் போன நிலா கீழ் வானத்தில் கிடந்தது. அதன் மென்மையான ஒளிக்கதிர்களில் மசமசத்துக் கொண்டு இருக்கும் இருட்டை முழுசாக நீக்கிட முடியவில்லை, என்றாலும், நான் நினைத்தால் முடியாதது இல்லை என்பது போலத் தன் முழு ஆதிக்கத்தையும் பிரயோகப்படுத்திக் கொண்டு இருந்தது. பெரும்பாலான பறவைகள் வடக்கு நோக்கி இருப்புக்கு திரும்பி ஒரு நாழி கடந்த பின்னும்.... பிரமதேயத்தில் உள்ள வயல் வாய்க்கால்களில் உள்ள வேம்பு, கருவேல மரங்களில் உக்காந்து கிடக்கும் காக்காக்கள் மட்டும் கத்திக் கொண்டு கிடந்தன."(148)

"வடவண்டப் பக்கம் ஒண்ணை ஒண்ணு தண்டாம இருக்கிற தினுசுதினுசான மா மரங்க. தென்னண்டப் பக்கம் பலா, கொய்யா, சப்போட்டா, எலுமிச்சை, நார்த்த காடரன், பெம்மளிமாசு இப்புடி வகைவகையா, மேலண்ட அடக்கமான குளம்"(149)

புதினங்களில் ஆங்காங்கே இயற்கையை அழகாக வருணித்துள்ளார் ஆசிரியர்.

இயற்கையோடு இயைந்த வருணனை

வாழ்க்கையின் ஊடே இயற்கையைப் புகுத்திய காட்சியும் புதினங்களில் புகுத்திய காட்சியும் புதினங்களில் காணப்படுகிறன. "கீழண்ட மானத்தில் நிலா அரும்புகட்டியிருந்தது. சாரலின விசும்பல் வாடையோடு கலந்து இருந்தது. ஆரம்பத்தில் மரங்களில் தாவிக் கொண்டு இருந்த குரங்கள் துணிவா அவர்கள எதிரே வந்து உக்காந்து தலையைச் சொறிந்து கொண்டு கொட்ட கொட்ட முழிச்சிப்பார்த்தன. குரங்குக்கு கோவம் வந்துட்டா கோமணத்தைத் தான் முதலில் கவ்வும்ன்னு கேள்விப்பட்டது நந்தனின் கூட்டாளிகளுக்கு நினைவுக்கு வரவும் அவர்கள் இரண்டு கையையும் கோமணத்துக்கு முன்னாலப் பொத்திக்கொண்டு இடுக்கினபடி ஒடுங்கி நின்றார்கள். செண்பகப் பறவைகள் கூட்டமாக தலைக்கு மேல் பறந்தன"(150)

வீடுகளிலும் பல வகையான மரங்களையும், பூக்களையும் வைத்து பராமரித்து வருகின்றனர்.

"கிணத்துப்புழக்கடைய ஒட்டினாப் போல பயிராயிருக்கும் மருதாணி ஏகமாய் பூத்து கும்முன்னு வாசனைய அள்ளி கொணடாந்து கொட்டிச்சி. கொல்லை முழுக்க கொய்யாவும் பெம்பளிமாசும் மாவும் பலாவும் சப்போட்டாவும்.... கெணத்த சுத்தி வாழை அப்புடியே பச்சேபசேன்னு. மதில ஒட்டி ரெண்டு வரிசை தென்னை மரம்.... கெணத்தடிக்குப் பக்கத்தில் உள்ள நந்தியாவட்டைப் பூவையும் செம்பருத்திப் பூவையும்....."(151)

இவ்வாறாக இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் தஞ்சை மக்களென அவ்வட்டாரத்தையே கண்முன் காட்டியுள்ளார் ஆசிரியர்.

உவமை உத்தி

கதையோட்டத்திற்கு ஏற்பப் படைப்பாளிகள் ஆங்காங்கே உவமைகளை சேர்த்துப் படைப்புகளை வலிமையுடையதாகப் படைக்கின்றனர். அவ்வாறு பயன்படுத்தப்படும் உவமைகள் கதைக்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

தெரிந்த பொருளைக் கொண்டு தெரியாதப் பொருளை விளக்குவது உவமையாகும். உவமையின் மூலம் கண்ணால் காணமுடியாதப் பொருள்களின் இன்பத்தினைப் பெறலாம். எல்லாப் படைப்பாளர்களாலும் உவமை எளிதாகக் கையாளக்கூடியதாயினும் அவரவர் தன்மைக்கேற்ப பல இயல்புகளை உள்ளடக்கிக் கூறுவதால் படைப்பு மேலும் சிறப்படைகிறது.

"படைப்பாளனின் படைப்பின் ஆற்றலை உணர்ததக் கருதிய உணர்வின் எல்லையை வெளிப்படுத்தும் இலக்கிய உத்திகளுள் உவமை சிறப்பிடம் பெறவல்லது. உவமைகள் இலக்கியப் புலவனின் படைப்பாற்றலையும் கூர்ந்து நோக்கும் பார்வையையும் சமுதாயச் சூழலின் செல்வாக்கையும் உணர்த்துவனவாகும்"(152) என இயம்புவர்.

இரு வேறுபட்ட பொருட்களிடையே தொடர்பையும் ஒப்புமையையும் காண்பது மட்டுமின்றி ஒரு பொருள் பற்றிய

கவிஞனின் உணர்வை அல்லது மனப்பதிவை மற்றொரு பொருளுக்கும் பொருந்திப் பார்க்கக் கூடியதாக அமைவது உவமை.

"வினைபயன் மெய்உரு என்ற நான்கே வகை பெற வந்த உவமைத் தோற்றம்"(153)

வினை, பயன், மெய், உரு எனத் தொல்காப்பியர் உவமையை வகைப்படுத்துகின்றார்.

"பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணைந்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை"(154)

என்று தண்டியலங்காரம் கூறுவதைப் போல, பண்பு, தொழில், பயன் இவற்றில் ஒரு பொருளோடு ஒரு பொருள், ஒரு பொருளோடு பல பொருள், பல பொருளோடு பல பொருள், மற்றும் பல பொருளோடு ஒரு பொருளையோ உவமையாகக் கூறுவர்.

"காணப்பட்ட பொருள்களை ஒப்பிட்டுப் பார்க்கும் இயல்பு மனிதனிடம் இயற்கையாக அமைந்துள்ள ஓர் இயல்பாகும். மனிதனிடம் என்று எண்ணம் தோன்றிற்றோ அன்றே மொழியுந் தோன்றி இருத்தல் வேண்டும். மொழி தோன்றிய அன்றே உவமை தோன்றி இருக்கும்"(155)

உவமை, உருவகம் முதலிய அணிகள் அணி இலக்கணத்துக்குள்ளேயே காணப்பட்டாலும், அவை ஏனைய அணிகளைப் போலில்லாமல் மிகவும் சிறப்புடையனவாக உள்ளன.

ஆதலின் தொல்காப்பியனார் உவம இயல் மட்டும் கூறிவிட்டு பிறவற்றை கூறாது விட்டுவிட்டார்.

ஆகவே மனிதன் எண்ணத் தொடங்கியதிலிருந்தே உவமை தோன்றியிருக்கும். இவை இல்லாத இலக்கியமே இருக்காது. "உவமும் பொருளும் ஒத்தல் வேண்டும்"(156) என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கிணங்க பொருத்தமான உவமைகளை எளிமையாகப் படைப்பாசிரியர் கையாண்டுள்ளார்.

"அடைமழையில் நனைந்த கோழி போல"(157)

"தத்தாரிப்பய தாண்டவம் ஆடுறது போல"(158)

"சோறு ஆக்கும் போது கஞ்சி வடிக்காம எடை கட்டி தண்ணி வச்சி எறக்கிற சோறு அப்புடியே மல்லிகைப்பூ தணக்காத்தான்"(159)

"ஆடுதொடா இலைக் கொத்துக்களையும் வேப்ப இலைக் கொத்துக்களையும் வண்டி வண்டியா திரைச்சிக் கொண்டாந்து உழவிலிலாவிலேயே போட்டு மிதிச்சி அலை அடிக்கிறாப் போல தண்ணி கட்டி வச்சிடுவாங்க....."(160)

"மகரந்தம் சந்தனபொடி போல அவள் மூஞ்செல்லாம்

ஒட்டிக்கொண்டு பளபளத்தது"(161)

"யானைக்கு கோவணம் கட்டினாப் போல"(162)

“தண்ணியிலேயே தம்பட்டம் போடுறதாலேயே கண்ணு கோவைப்பழம் போல செவந்து எரிச்ச வந்தப்புறம் தான் கரையேறி வீடு போறது”(163)

“இளமஞ்சள் நிற விளைச்சலையும் புகை மூட்டம் முக்காடு போட்டது போல படர்ந்திருந்தது”(164)

“அந்தியில் கருக்கொண்டிருந்த மேகங்கள், கறுத்த இளம் பெண்ணின் காதில் மனதில், உச்சத்தை பெற துடித்துக் கொண்டிருப்பது போல ஏக்கத் தவிப்புடன் கிடந்தன”(165)

“பூவிலேயே உருவாகி மாம்பழத்திற்குள் பதுங்கிக்கிடக்கும் வண்டு போல தவித்தான்”(166)

“அவனுள் இருந்து சிவ நெருப்புப் பிளம்பு ஒன்று இரவை விழுங்கினது போல புது வாசலை திறந்து விட்டிருந்தது”(167)

“அவள் உடம்பு இரை விழுங்கியப் பறவை போல நெகிழ்ந்து கிடந்தது”(168)

“அதுக்கு ஏத்தாப் போல நீலாயுதாட்சியும் நெருப்பக் குளிப்பாட்டினாப்ல....”(169)

“கொட்டுக் கூடையக் கவித்து வச்சது போல தலைமுடி”(170)

“அவரு பூந்த ஆட்டுல தான் சும்மா அப்புடியே வெள்ளேரிப்பழம் போல இருந்த அழகான குட்டியா சாத்தனூரு லலிதாம்பாவப் பாத்திருக்காரு”(171)

இவ்வாறு உவமைகள் சூழலுக்கேற்பவும், நிகழ்ச்சிக்கேற்பவும் அருமையாக சித்திரிக்கப்பட்டுள்ளன.

சோலை சுந்தரபெருமாள் தன்னுடைய புதினங்களில் உவமையினை ஓர் உத்தியாகப் பயன்படுத்தி உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார். பெரும்பாலும் பாத்திரங்களின் நிறங்களையும், மன உணர்வுகளையும் கூறுவதாகச் சுட்டப்பெற்றுள்ளது.

உம்மைத் தொடர்

உம்மைத் தொடரானது இரு பெயர், பலபெயர், அளவுப் பெயர், எண்ணியற் பெயர், நிறைப் பெயர், எண் பெயர் என இவ்வாறு நிலைகளிலும் வரும். இதனைத் தொல்காப்பியர்,

"இரு பெயர் பல பெயர் அளவின் பெயரே
எண்ணியற் பெயரே நிறைப் பெயர்க் கிளவியும்
எண்ணின் பெயரொடு அவ்வாறு கிளவியும்
கண்ணிய நிலத்தே உம்மைத் தொகையே"(172)

எனவரும் நூற்பாவில் சுட்டுவர். சோலை சுந்தரபெருமாளின் படைப்புகளில் பெரும்பாலும் உம்மைத்தொடர் இடம் பெறுகின்றன.

"ரெண்டு பேரையும் சேத்து நிப்பாட்டினா அம்மாவாசையும் பௌர்ணமியும் சேத்து வந்தாப் போல தான் இருக்கும்"(173)

"ஜெயலெட்சுமி படியில வச்சிருந்த தவிட, பூவும் பழமும் இருக்கிற தட்டோட எடுத்து அந்த தட்டுல...."(174)

"தாத்தாவும் பொண்ணுகளும் வயல்ல வேலைப்பாக்கு துங்களா"(175)

"இப்ப ரெண்டு நாளா பட்டினியும் பசியும் தான்"(176)

"வெண்ணை உருண்டு வர்ற நேரத்தில தாழி உடைஞ்ச கதையா ஆயிட்டேங்கிற கவலை தான் பெரியானுக்கும் ஆராயிக்கும்"(177)

"வாட்டசாட்டமான ஆளுக்கு, கையும் காலும் கண்டுகண்டா கதண்டு போலத்தான்"(178)

"பஞ்சமும் பட்டினியும் சனங்களின் குரல் வளையை நெரித்துக் கொண்டிருப்பதைப் பத்தி எந்தக் கவலையும் பட்டதாக ஆட்சியாளர்களிடம் தெரியவில்லை"(179)

இவ்வாறாக உம்மைத் தொடரைப் புதினங்களில் பயன்படுத்தி சிறப்புச் சேர்ந்துள்ளார் ஆசிரியர் என்பது புலனாகிறது.

கூற்றுகளின் தன்மை

பாத்திரங்களின் இயல்பு, பின்னணி, வாழ்க்கைச் சூழல் ஆகியவற்றை வாசகனால் முழுமையாக அறிந்து கொள்வதற்கு அவர்களின் உரையாடல் உதவுகிறது. இதனை, 1. தன்மை கூற்று நோக்குநிலை 2. படர்க்கைக் கூற்று நோக்கு நிலை என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. தன்மை கூற்று நோக்குநிலை

எண்ணங்களை நேரடியாக வெளியிடுவது தன்மை கூற்று நோக்குநிலையாகும். இதன் மூலம் அப்பாத்திரத்தின் செயல்பாடுகளை ஆழமாக அறிந்து கொள்ளமுடிகிறது.

“.... நான் என்னா திருக்கானூர்பட்டி வலைக்காரங்கப் போல காதில பூ வச்சிக்கிட்டா அலையுறேன் தம்பி... கன்னிப் பொங்க கூற மாடுபுடி நடக்கிறப்ப ஒரு சக்கிலியத் தெருக்குட்டி ஒதுங்கினாப்போல நின்னாளேன்னு சீண்டிப் பாத்தேன்னு என்னோட சாதிக்காரப் பசங்களே....”(180)

“நான் யாருன்னு எவனுக்கும் புரியாது. அந்த அளவுக்கு இந்த வலைக்கார பயலுகளுக்கு புத்தியா இருக்குடி. என்னோட வகையறா தலைக்கட்டுகளுக்கு பிள்ளை பட்டம் தான். என்னோட, இந்த ஊர்ல பத்து தலைக்கட்டுக. எல்லாம் அங்காளி பங்காளிங்க....”(181)

“ம்மா....ம்மா... அண்ணனையும் அண்ணியையும் நெனச்சுகிட்டு தானே நீ இப்புடி இருக்கே.... நலன் வேனுண்ணா போயி அண்ணனைக் கூப்பிட்டுப் பார்கட்டுமா”(182)

தன் கூற்று நோக்குநிலையில் ‘நான்’ என்ற தன்மைச்சொல் காணப்படுகிறது. பிறருடைய எண்ணங்கள் வழியும் பிறருடைய கூற்று வழியும் கதையை வளர்த்துச் செல்வது படர்க்கை கூற்று நோக்குநிலையாகும்.

"படர்க்கை நிலையில் நின்று ஆசிரியர் கதையைக் கூறினாலும் புதினங்களில் பெரும் பகுதியை உரையாடல்கள் மூலமே நடத்திச் செல்வது ஒரு சிறந்த முறையாகத் தோற்றமளிக்கின்றது. கதையின் கருவும், கருத்தும், கதை மாந்தர் படைப்பின் பங்கும், பாங்கும் இத்தகு உரையாடல்கள் வழியே நல்விளக்கம் பெறுகின்றன. கதையோட்டம் இதனால் சிறந்து விளங்குகின்றது"(183) பாத்திரங்களின் குணநான்கள், கல்வி, வாழ்க்கையனுபவம், குடும்பச்சூழல், எண்ணவோட்டங்கள் ஆகியவற்றைச் சரியாக வெளிக்காட்டுபவை இவ்வகையான கூற்றுகளே ஆகும்.

"அவனோட பெரியப்பா கோவிந்தசாமிபுள்ள மேல கோவமா கோவம். அப்புடியே சவுக்கு கட்டைய எடுத்துக்கிட்டுப் போயி நாலு சாத்து சாத்திப்புட்டு வந்தா தான் மனசு ஆத்துப் போவும் போல"(184)

"அவரு கூப்பிட நெனைச்ச பேத்தி காயத்திரி மேலத்தான் அவருக்கு உசுரு. அவரோட குடும்பத்துக்கே இதுதான் மொதோ பொம்புள்ளையா பொறந்தது. அது மேல அவருக்கு கொள்ளை ஆசை...."(185)

"அவள் தன்னைச் சுதாரித்தவளாய், கண்ணிமையோரம் துளிர்த்து வளர்ந்த கண்ணீர்த் துளியை ராஜாமணி பார்க்கும் முன் துடைத்துக் கொண்டாள்"(186)

"அவன் உடம்பில் புதுசாய் ஜவ்வாதும், மருக்கொழுந்தும் வாசனையை வெளிப்படுவதை உணர்ந்தான். இரவு தர்மவர்த்தினியிடம் பெற்று இருந்த வாசனை தான் இது என்று உணர்ந்தான்"(187)

இவ்வாறாக எல்லா புதினங்களிலும் படர்க்கைக் கூற்று உத்தி அதிகமாகக் காணப்படுகிறது. அவன், அவள், அவர் என்ற படர்க்கை தன்மையுடைய தொடர்களால் பாத்திரங்களின் செயல்பாடுகளை அறியமுடிகிறது.

நாட்டார் பாடல்களும் திரைப்படப் பாடல்களும்

நாட்டுப்புறங்களில் வேலை செய்யும் போது அலுப்பு தோன்றாமலிருக்க நாத்து நடும் பாடல்களும், ஏற்றம் இறைக்கும் பாடல்களும் பாடும் பழக்கத்தை ஆசிரியர் தம் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். அவ்வாறு பாடும் போது மகிழ்ச்சியடைகின்றனர். சில இடங்களில் நாட்டுப்புறப் பாடலின் ஊடே குறிப்புப் (மறைபொருள்) பொருளையும் வைத்துப் பாடுவதையும் காணமுடிகிறது. பாடல் வரிகளின் தொடக்கத்தில் தெய்வத்தைக் குறித்துப் பாடுவதுமுண்டு. ஒரு சில புதினங்களில் நிகழ்ச்சியின் போக்கிற்கேற்ப திரைப்படப் பாடல்களும் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றில் சில சான்றுகள் வருமாறு.

"சந்திரரே சூரியரே சாமி நல்ல பகவானே
குட்டிச்சலானைக் கும்பிட்டு எடுத்தேன் முடியை

விளைமுடியும் சோம்பாமே மழைமாரி பொழிய

நல்ல மனசை காட்டும் எம் சாமி....''(188)

தெய்வத்தை வணங்கி நாற்று நடும் பெண்கள் குலவை இடுவதும், வெடிகதை போடுவதுமாக சிரிப்பும் பேச்சுமாக மகிழ்கின்றனர். இந்த சமயங்களில் கேலிப் பேச்சும், கிண்டலடித்துப் பேசும் பேச்சும் காணப்படுகிறது.

"திருடப்போனது மூணுபேரு - தெகட்டி

நிக்கிறது ரெண்டு ஆளு

மடைக்கு ஓடினான்புள்ள - திகைச்சி

நின்னுட்டான் சண்டியரு

ஒனப்புல மடங்கிட்டான் - வெக்கி

நின்னுட்டான் மன்னாரு

மனசு ஒடைஞ்சிபோனதாரு - வெவெண்டை

ஒடிங்கினது யாருயாரு''(189)

இப்பாடல் போல சால்பிடிப்பவரின் இனிய குரலோடு ஏற்றச்சால் தண்ணீரில் மூழ்கி எழுகின்ற ஓசையும், மூங்கிலும் மூங்கிலும் சேர்த்து உரசும் ஓசையும் கலந்து வெளிப்படுகின்றன.

"செம்பரத்தைச் சேவல் கூவுது

எம்புட்டுத் தூரந்தான் கேட்குறது

தெம்பங்கு குடிசையச் சுத்திக்கிட்டு

கும்பலாக் காக்கவும் கத்துதடா.......''(190)

வண்ணான் சாதியைச் சேர்ந்தவர் சலவைத் தொழிலுக்குச் செல்லும் போது அவர்களின் தொழில் குறித்தப் பாடலின் ஊடே பேசிய ரகசியத்தைப் பிறர் அறிந்து கொள்ள முடியவில்லை.

"கந்தைப் புழிஞ்சளவு - புழிஞ்சளவு
சொல்லம்மா சொல்லு - அடே ஏலம்மா ஏலே
கரை மேலே போட்டுணர்த்தி - தாயே போட்டுணர்த்தி
வெள்ளைப் புழிஞ்சளவு - புழிஞ்சளவு
சொல்லம்மா சொல்லு - ஏலக்கா! ஏலு
வேலி மேலப் போட்டுணர்த்தி - தாயே போட்டுணர்த்தி!"(191)

நாட்டுப்புறப் பாடல்களின் மூலமாக அம்மக்களின் செயல்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் காணமுடிகிறது. இதே போன்று திரைப்பட பாடல்களையும் ஆசிரியர் கையாண்டுள்ளார்.

"மாங்குயிலே! பூங்குயிலே! சேதி ஒண்ணு கேளு.....
உன்ன மாலையிடத் தேடி வரும்...."(192)

"நிலாக் காயுது...
நேரம் நல்ல நேரம்...
நெஞ்சம் காயுது....
காமன் செய்யும் வேதம்..."(193)

"காதல் வந்திருச்சி...
கூட்ஸ் வண்டியிலே
ஒரு காதல் வந்திருக்கு....."(194)

என்று திரைப்பாடல்கள் பாடும் மண்ணின் மைந்தர்களைப் படைத்துள்ளார். புராணக் கதையான மன்மதன் கதைப் பாடலும் பாடப்பட்டுள்ளன.

"கரும்பு வில்லை மன்மதனும் கைப்பிடித்தான்
அரும்பு கணை எடுத்தான்
பரம்பொருள் மீது விட பஞ்ச பாணம் துணிந்தான்
அங்கஜன் விடுத்த கணை"(195)

இவ்வாறாகப் பல்வேறு இடங்களில் நாட்டுப்புறப் பாடல்களையும், திரைப்படப் பாடல்களையும், புராணப் பாடல்களையும் சோலைசுந்தர பெருமாள் கையாண்டுள்ளார்.

மருத்துவக் குறிப்புகள்

மருத்துவக் குறிப்புகளைப் பயன்படுத்தும் உத்தியைச் சோலை சுந்தர பொருமாள் கையாண்டுள்ளார். பெரும்பாலான புதினங்களில் இயற்கையான இலை, செடி, கொடிகளை மருத்துவப் பொருளாக எடுத்தாண்டுள்ளார்.

"தாழங்குளத்தில் இருந்து ஒரு தாழம்பூவை ஒடித்து வந்து மடல்களைப் பிரித்து அதனுள்ள பஞ்சி போல இருக்கும் மகரந்தப் பொதியை எடுத்து அவள் மூக்குக்கு மேல வச்சி தட்டினான். மகரந்தம், சந்தன பொடிபோல அவள் மூஞ்செல்லாம் ஒட்டிக் கொண்டு பளபளத்தது. அதன் மணத்தை அவள் உணர்ந்த பின் தான் அவள் மூஞ்சியில் சின்ன சின்ன அதிர்வுகள் படிப்படியாய்....."(196)

“...... காயம்பட்ட இடங்களை கழுவிவிட்டு வாசலில் அவள் படுத்திருந்த பாயில் உக்கார வச்சிட்டு கறிமஞ்சளை கொஞ்சம் அரைச்சி நல்லா கொதிக்க வச்சி கொண்டு வர்றேன்ப்பா என்று சொல்லிக்கிட்டு வீட்டுக்குள்ள போனாள் ஆறுமுகத்தின் மகள்”(197)

“வேப்பமரம் கொள்ளாமல் பூத்திருந்துச்சி. கம்முன்னு வாடை. அவனைப் போட்டு அம்முச்சி அந்த வாடை, ரணப்பட்டு வந்தவனுக்கு இதமா.... இந்த வேணிக்காலம் வந்துட்டாப் போதும் வேப்பம்பூ ரசம் செய்திடனும்.”(198)

“.......அவன் அருகில் இருந்த துளசி செடியில் இருந்த இலைகளில் ஒவ்வொன்றாய் கிள்ளி வாயில் போட்டு மென்றான்”(199)

“அப்புனு உடம்பில் பல இடங்களில் மஞ்சள் பற்று போடப்பட்டிருந்தது.”(200)

“எதையோ அனுமானித்துக் கொண்ட அவள் திருக்கக்கருவாடு சேர்த்து மிளகு பூண்டு போட்டு கொழம்பு வச்சு சாப்பிடு.... நானும் நல்ல லேகியம் தாரேன்......”(201)

“வேளைக்கு ஒண்ணா வெத்திலையில வச்சுச் சாப்பிடு....”(202)

இவ்வாறாகப் பல இடங்களில் மருத்துவக் குறிப்புகள் காணப்படுகின்றன. மருத்துவத்திற்கு எடுத்துக்கொள்ளும் பொருட்கள் சாதாரணமாக எளிதாகக் கிடைப்பதாகவே உள்ளன.

புதினத் தொடக்கம்

புதினத்தின் தொடக்கம் படிப்பவரின் ஆர்வத்தையும், கற்பனையையும் தூண்டக் கூடிய வகையில் அமைவதுண்டு. இவ்வகையில் சோலை சுந்தர பெருமாளின் புதினங்களின் தொடக்கத்தில் முதன்மைப் பாத்திரத்தின் பெயரையும், வருணனைகளையும் காணமுடிகிறது.

"அங்கம்மாவுக்கு இன்னிக்கு இருந்தா பதிமூணு வயசத் தாண்டிருக்காது....."(203)

"ஆச்சியம்மா! ஆச்சியம்மா! இன்னுமா தூங்கறே. எழுந்திரிச்சு வேலையப் பாரு...."(204)

"சின்னச்சாமியின் மனதில் அதிர்வுகள்; சின்னச் சின்னதாய் படர்ந்தன"(205)

"ஏழு எட்டு நாளா பேஞ்ச அடை மழை நேத்திக்குத் தான் ஒஞ்சது"(206)

"வானம் பளீர்ன்னு பூத்துக் கிடந்தது. பொட்டுமாசு கூட கண்ணில் படவில்லை"(207)

"ஆனி மாசத்திய அந்த விடிய எப்ப நிகழப் போவுதோங்கிற ஒனப்பு தெரியாமத்தான்...."(208)

"சூரியன் சந்திரர் உள்ள வரை ஆண்டு அனுபவித்துக் கொள்ளும் உரிமையைப் பெற்ற ஆதனூர் பிரமதேயத்தில்...."(209)

இவ்வாறாகப் புதினங்களின் தொடக்க உத்தியைக் கையாண்டுள்ளார் ஆசிரியர்.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் உத்தி

படைப்பாளர் கதையைக் கூறும் போது விரைவாகக் கூற வேண்டுமென்ற நோக்கில் சுருக்கமாகச் சொல்லை மட்டும் பயன்படுத்திச் செல்வர். அவ்வாறானச் சொற்களைச் சோலைசுந்தர பெருமாளின் புதினங்களில் காணமுடிகிறது. தஞ்சை வட்டாரத்தில் புழக்கத்திலுள்ள சொற்களை ஆசிரியர் கையாண்டுள்ளார். அவற்றிற்குச் சில சான்றுகள் வருமாறு:

பெரியதம்பி	-	கோபாலகிருஷ்ணநாயுடு சின்னவனா இருக்கும் போதே அந்த சுத்து வட்டப் பகுதியில் உள்ளவங்க எல்லாருமே 'பெரியதம்பி' ன்னு தான் சொல்லுவாங்க...[210]
களக்குருணி	-	அறுவடை காலத்தில் நெல்களம் பொழங்கும் போது வண்ணானுக்கும் மருத்துவனுக்கும் கொடுக்கும் மானியம்[211]
கன்னிப்பூ மலர்ந்துட்டு	-	பூப்பெயத்திய பின் 18 வயதில் பெண்களுக்கு ஏற்படும் உடல் ரீதியான ஒரு வகை மாற்றம், பூரிப்பிலும் ஏற்படுவது. கல்யாணத்திற்குத் தயாராகி விட்டாள் என்றும் எப்படியும் கல்யாணம் நடந்துவிடும் என்றும், அதனால் அவளே மாப்பிள்ளையத் தேடிக் கொண்டு விடுவாள் என்றும் அதற்குள் மாப்பிள்ளையத் தேடிவிட வேண்டும் என்பது மக்களின் நம்பிக்கை.[212]

இவ்வாறாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் உத்திமுறையைக் காணமுடிகிறது.

பின்னோக்கு உத்தி

நேரடியாகக் கதை சொல்லும் முறையிலிருந்து மாறுபட்டு முடிவிலிருந்தோ, இடையிலிருந்தோ புதினத்தைத் தொடங்கி முன் கதையைக் கால ஒருமையோடு பின்னால் கொண்டு வந்து சேர்ப்பது பின்னோக்கு உத்தியாகும். வாசகனுக்குள் எதிர்பார்ப்பையும் ஆர்வத்தையும் ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பதோடு இடையீட்டு நிற்கும் புதினத்தை முழுமைப்படுத்தவும் இவ்வுத்தி பயன்படுகிறது.

கதை மாந்தரின் பண்புகளை விளக்குவதற்கும், கதை நிகழ்ச்சியின் போக்கைத் தூண்டுவதற்கும் இவ்வுத்தியைச் சிறுகதைகளிலும் புதினங்களிலும் பயன்படுத்துகிறார்கள்.

“கதையில் முன்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தப் பயன்படும் ஓர் உத்தி பின்னோக்கு”(213) என்பது இரா. மோகன் கூற்றாகும். கதை விறுவிறுப்பாகச் செல்லும் போது இடையே பின்னோக்கிப் பார்ப்பது இதன் சிறப்பம்சமாகும்.

“ஒரு கதையைச் சொல்லிக் கொண்டே போகிற போது கடந்த கால நிகழ்ச்சிகளை ஒரு பாத்திரத்தின் நினைவோட்டமாக எழுத்தாளர்கள் எடுத்துக்காட்டுவர். இதனையே பின்னோக்கு உத்தி என்கிறோம்”(214) என்கிறார் மா. இராமலிங்கம்.

'நஞ்சை மனிதர்கள்' என்ற புதினத்தில், சோமுப்பிள்ளை சாத்தனூர் லலிதாம்பாவைக் கூட்டி வந்ததை ஆசிரியர் இடையில் புகுத்தியுள்ளார். நீலாயதாட்சியைத் திருமணம் முடித்த பின்பும் முட்டத்து ராசாவும் ஸ்ரீரங்கத்து லலிதாவும் நடிக்கக் கூடிய நாடகம் எங்கு நடந்தாலும் செல்லும் அவர், தன் கூட்டாளிகளுடன் அன்றும் நாடகம் பார்க்கப் போன இடத்தில்,'முடத்து ராசா மண்ணக் கவ்வப் போறாரு' ன்னு பக்கத்திலிருந்த அந்த ஊருக்காரன் சொல்லி வாய் மூடுவதற்குள், சோமுப்பிள்ளை 'முட்டத்துக்கிட்ட அந்த மேக்கத்தியான் மூக்கறுப்பட்டு ஓடப்போறான் பாருடா' என்று கூறவும், இருவருக்குமிடையே சண்டை வழுத்து, அவனின் முகத்தில் ஒரு குத்து விடவும் பற்கள் நான்கு கொட்டவும் ஊரே திரண்டு சோமுப்பிள்ளை அடிப்பதற்காக ஓடி விரட்டும் போது, அவர் பிராமணக் குடியிருப்புக்குள் புகுந்து லலிதாம்பாவின் வீட்டிற்குள் நுழைந்துவிட்டார்.

லலிதாம்பா கணவனை இழந்தும், வெள்ளரிப்பழம் போன்று இருந்த அவளிடம் சோமுப்பிள்ளை சேர்ந்து, அவளையும் கூட்டிக் கொண்டு அடுத்தநாள் தன்னுடைய வீட்டிற்கு வருகிறார். அவரைக் காட்டிலும் சாத்தனூர் லலிதாம்பா இரண்டு வயது மூத்தவளாவாள். அதன் பின் நீலாயதாட்சியும் ஏற்றுக் கொண்டு ஒரே வீட்டில் வாழ்கின்றனர்.

இவ்வாறாகப் பின்னோக்கு உத்தியை இக்கதையில் காணமுடிகிறது.

‘ஒரே ஒரு ஊர்ல’ என்ற புதினத்தில் ஆச்சியம்மாள் வயதான பிறகு தன் வாழ்க்கையில் நடந்து முடிந்த கதையை யோசிப்பதாக ஆசிரியர் இடையில் கதையைப் புகுத்தியுள்ளார்.

ஆச்சியம்மாள் தன் தம்பியின் வற்புறுத்தலின் பேரில், கணவனிடம் நல்ல விதமாகப் பேசி அவர் சம்மதம் அரை குறையாக வழங்கிய பின் மகள் கங்கையை மணமுடித்து வைக்கிறாள். திருமணத்திற்கு முன்பே பல பெண்களிடம் தொடர்பு கொள்ளும் அவன் திருமணத்திற்குப் பிறகுத் திருந்திவிடுவான் என நினைக்கிறாள். ஆனால் இரண்டு வருடங்களுக்குப் பிறகு கங்கை கைப்பிள்ளையுடன் அழுகையும் கண்ணீருமாக வீட்டிற்கு வந்துவிடுகிறாள்.

தம்பியான வீரபத்திரன் அஞ்சலை என்ற பெண்ணுடன் கொண்ட தொடர்பால் அவளையே மணமுடித்து வைத்துவிட்டனர் என்ற செய்தியை அறிந்து கங்கை கைக்குழந்தையான வள்ளியை விட்டுவிட்டு அரளி விதையை அரைத்துக் குடித்துவிட்டு இறந்துவிடுகிறாள். மகளும், கணவனும் இறந்த பின்பு, வள்ளியை வளர்த்து ஆளாக்கிப் பருவப் பெண்ணாக வந்த பின்பு ஆச்சியம்மாள் முன்னால் நடந்த நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்து எரிச்சலடைகிறாள்.

இவ்வாறாக கதை வளர்ந்து கொண்டு போகும் போது இடையில் முன்னால் நடந்த கதையை இடையில் புகுத்தும் இவ்வுத்தியை ஆசிரியர் தம் படைப்புகளில் திறம்படச்

சுட்டிக்காட்டியுள்ளார். கதையின் வளர்ச்சிக்கு இப்பின்னோக்கு உத்தியும் பயன்படுகிறது.

கோடிடல்

கதையின் விரைவுத் தன்மைக்காக இடையே கோடு இடும் முறையும் காணப்பெறுகின்றது. சான்றாக,

“அந்த ஒளியில் - கிழக்கு முகமாக கட்டிலின் மேல் பக்கச் சுவரில் செல்லரித்தச் சட்டக் கண்ணாடிக்குள் வெள்ளைச்சாமி பிள்ளை முரட்டு மீசையுடன் உட்கார்ந்திருந்தார்”(215)

“தோணித்துறை - தற்போது அவ்விடத்தில் தோணியுமில்லை, கீணியுமில்லை - வெட்டாறு அங்கே நன்றாக அகன்று....”(216)

“கட்டுப்பரணி - நான்கடி உயரத்தில் மூங்கிலால் கட்டப்பட்ட அடித்தளம்”(217)

“சற்று தள்ளி வடக்கேயுள்ள வீட்டில் பெண்களில் பேச்சுப் புழக்கம் - தானுங்கூடப் போயிருக்கலாம் என்று அப்போது நினைத்தாள்....”(218)

“கிளியம்மா - ஆறுமுகம் போன்ற மனுசப் பிறவிகள் பலருக்கும் அதுபோல......”(219)

“துரைசாமி - அன்னக்கால் ஓடைக்கரை வடவண்டப் பக்கம் ஏகமாய் தென்னை மரங்களும்....”(220)

"தேவபுரிஸ்வரர் கோயில்ல கார்த்திய தீப - சோமவார உற்சவத்தைக் கொண்டாடிக்கிட்டு இருக்கிங்க"(221)

கோடு இட்டு கதையின் இணைப்பைக் காட்டி விரைவு படுத்தியுள்ளார் ஆசிரியர். பாத்திரங்களின் செயல்பாடுகளையும் அறிந்துகொள்ளப் பயன்படுகிறது.

கதைமுடிப்பு உத்தி

கதையின் முடிவானது சுபமாகவும் இருக்கலாம், துக்கமாகவும் இருக்கலாம். சோலை சுந்தரபெருமாள் இவ்விருவகையான முடிவுகளையும் தன்னுடைய படைப்புகளில் காட்டியுள்ளார். அந்தந்த முடிவிற்கேற்ப வாசகர்களின் உள்ளமும் சுப, துக்கத்தை அனுபவிக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது கதையின் சிறப்பம்சமாகும்.

ஆசிரியரின் ஏழு புதினங்களில் நான்கின் முடிவுகள் வருத்தத்தைத் தரக்கூடியதாகவும், மூன்றின் முடிவுகள் மகிழ்ச்சியைத் தரக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

'பெருந்திணையில்' சிவசங்கரன் பிள்ளையின் மூத்த மகளின் கணவன் பழனிக்குமார் கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்ட செய்தியை அறிந்தவுடன், சிவசங்கரனின் குடும்பமும் உறவினர்களும் 'வேன்' பிடித்து சித்தாடிக்குச் செல்கின்றனர். ஆறுமுகமும் இத்துக்கச் செய்தியை ஊரினருக்குத் தெரிவித்துவிட்டு

அங்கு செல்ல வேண்டும் என்று புதினம் முடிக்கப்பட்டுள்ளதால் அதைப் படிப்பவர்களுக்கு மனம் கனக்கவே செய்கிறது.

'உறங்க மறந்த கும்பகர்ணர்களில்' எல்லா கிளைக்கதைகளும் நல்ல நிலையில் நிறைவு பெறுகின்றன. மருதாயி மட்டும் காதலில் ஏமாற்றம் அடைந்ததை ஆசிரியர் நாசுக்காக வெளிப்படுத்தியுள்ளார். இராஜாமணி வாத்தியாருக்கு ஏற்கனவே திருமணமாகி இரு குழந்தைகள் உள்ளனர் என்பதைப் பார்த்தவுடன் கண்ணீர் வடிக்கிறாள், செவத்தியின் கண்களும் கலங்கிச் சிவந்தன என்று முடித்துள்ளார்.

'மரக்காலில்' சிவபெருமான் மீது பற்றுக்கொண்ட நந்தன் தில்லைக்குச் சென்று, மருதனின் துணையோடு யாருக்கும், தெரியாமல், தரிசனம் செய்யப் போகும் போது பிடிபட்டு வேள்விக் குண்டத்தில் எரிபடுகிறான். எரிந்து அவனின் இழிபிறவி போய் புனிதத் தன்மை பெற்றுவிட்டதாக பிரமதேயம் அறிவிக்கிறது. கீழ்சாதியினரை ஏமாற்றுவதற்காக இப்படிச் செய்கின்றனர். ஆனால் நந்தன் சாம்பலாகி விடுகிறான்.

'செந்நெல்லில்' இராமையனின் வீட்டிற்குள் பாதுகாப்பிற்காகப் புகுந்த பெண்கள் குழந்தைகள் என 44 பேரை கோபாலகிருஷ்ண நாயுடு பெட்ரோல் ஊற்றி கொழுத்தி எரித்து விடுகிறான். வள்ளி, பிறந்த குழந்தையின் தொப்புள் கொடி அறுபடாம கிடக்கிறாள். பொழுதும் புலரவும் காக்கா குருவிகள் கத்துகின்றன. வர்க்கப் போராட்டத்தின் வன்முறையைக் காணமுடிகிறது.

'ஒரே ஒரு ஊர்ல' என்ற புதினத்தில் நாகதோசத்தால் இணைய முடியாது என்றிருந்த சண்முகமும் வள்ளியும் கடைசியில் இணைகின்றனர். ஆச்சியம்மாள் இதைக் கேட்டவுடன் மகிழ்ச்சியடைகிறாள்.

'நஞ்சை மனிதர்களில்' எல்லா சொத்துக்களையும் மகன் அழித்த பின்னர், இருக்கக்கூடிய சொத்துக்களைத் தனக்குப் பிறகு தன் பேத்திகள் தான் அனுபவிக்க வேண்டுமென சாசனம் எழுதிக் கொடுக்கும் வெள்ளைச் சாமியும், தந்தையே வேண்டாமென கதவை அடைத்துச் செல்லும் குப்புச்சாமியின் பெண்களையும் கதையின் முடிவில் காட்டியுள்ளார்.

'தப்பாட்டத்தில்' சிறையிலிருந்து வரும் சுந்தரமூர்த்தி வாத்தியாரை ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்றாகத் திரண்டு வரவேற்கின்றனர். ஆடிப் பாடி ஆரவாரத்துடனும் அவரைத் தூக்கிக் கொண்டு வந்து தங்களின் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர். அவர்களின் வேட்டுகள் ரெட்டிப் பாளையம் குடியானத் தெருவை மட்டுமில்லாது சுத்துப்பட்ட ஊரையும் அதிரவைத்தது என்று புதினம் நிறைவுபெற்றுள்ளது.

இவ்வாறு சோலை சுந்தரபெருமாள் தன் படைப்புகளில் பல்வேறு விதமான உத்திகளைக் கையாண்டு புதினங்களைச் சிறக்கச் செய்துள்ளார்.

சோலை சுந்தர பெருமாள் தான் வாழக்கூடிய சூழலைத் தாண்டி தன்னுடைய கதைக்கருவைப் படைக்கவில்லை. அவ்வட்டார மக்களின் பேச்சுவழக்கைத் தன்னுடைய படைப்பில் எழுத்து வடிவமாக்கியுள்ளார். அவர்களின் கொச்சைப் பேச்சுக்களையும் அப்படியேப் படம்பிடித்துள்ளார். அவரின் படைப்புகளைப் படிக்கும் நகர வாசகர்களுக்கு அதிர்ச்சியைக் கொடுக்கக்கூடிய அளவில், நாட்டுப்புறங்களில் நடைமுறையிலுள்ள கொச்சைச் சொற்களையும் ஆங்காங்கே சுட்டிக்காட்டியுள்ளார். பெரும்பாலும் திட்டும் போது பேசக்கூடிய கொடுஞ்சொற்களை அம்மண்ணிற்கே உரிய தன்மையுடன் படைத்துள்ளார்.

சேரிவாழ் மக்களின் வாழ்க்கையைச் 'செந்நெல்'லில் கூறும் போது, பெரியான் தூங்கும் போது, போயிலைக் காம்புடன் வெற்றிலையை மென்றுவிட்டு அப்படியே தூங்குவதால் வாணி வடிந்து கோடிட்டுக் காட்டியுள்ளதைப் படிப்பவர்களுக்கு அருவருப்பாகக் கூட இருக்கலாம். ஆனால் அது தான் எதார்த்தம் என்று ஆசிரியர் தன் புதினங்களில் படைத்துள்ளார்.

"ஆன்னு வாயப் பொளந்துகிட்டு கெடக்கிறான். முன்சாமத்தில் போயிலக்காம்போட போட்ட வெத்தலை சாரை எறக்கிக்கிட்டு மீதிச் சக்கையை பீச்சக்கை பக்கக் கன்னத்தில் அடக்கிக்கிட்டு அப்படியே தூங்கிப்போயிருக்கான். அப்புடிப் படுத்தாத்தான் அவனுக்கு தூக்கம் வரும். அவனுக்கு நெகா தெரிஞ்ச

நாள்லருந்து இப்படித்தான் அந்த போயிலைக்காம்போட அடக்கிக்கிட்டு இருக்கிற வெத்தலைப்பாக்கு எறக்கும் சேப்பு வாணீ கோடுவாய்ப் போட்டு எறங்கி கட்டிலுக்குக் கீழ ஊத்திக் கெடக்கு. பொதித மண்ணுல சேப்புக்கறை துண்டாத் தெரியுது...."(222)

இந்தப் பழக்கம் ஆயுள் முடியும் வரைக்கும் இருக்கும் என்பதைக் காட்டியுள்ளார்.

பெரியானின் மனைவி ஆராயி, தூங்கி எழுந்தவுடன் துர்நாற்ற வாடை வீசுவதைச் சுவாசித்தவுடன் திட்ட ஆரம்பிக்கிறாள்,

"... எந்த தட்டுவாணி முண்டையோ அவிச்சி ஒடைச்ச நத்தை ஓட்டை இங்க கொண்டாந்து கொட்டிருக்காளுக. இங்க கொண்டாந்து கொட்டுறத நேராப் பாத்தேன். அவளுவோ கூதிய வளையம் போட்டு அறுத்துப்புடுவேன்..."(223) என்று நாட்டுப்புறச் சொல்லாடலைப் பாத்திரங்களின் வாயிலாகப் பேச வைத்திருக்கிறார்.

'பெருந்திணை'யில் ஆறுமுகமும் கிளியம்மாவும் திருமணத்திற்குமுன் ஒருவரையொருவர் விரும்பும் போது, கிளியம்மா ஆறுமுகத்தின் தாத்தாவிடம், குளிக்கும் போது தண்ணீருக்குள் நீந்தி விளையாட்டுக் காட்டுகிறாள். அப்போது தாத்தா அவளின் தொழிலைச் சொல்லி கேலி செய்யும் போது அது வித்தியாசமாகத் தெரியவில்லை. வயதானவர்கள் இளம் பெண்களிடம் இரட்டை அர்த்தத்தில் பேசுவதும் கிண்டல் செய்வதும் நாட்டுப்புறங்களில் இருக்கக்கூடிய வாடிக்கையான செயல் என்பதை அறியமுடிகிறது.

“பீத்துணி அள்ளுற பயக்குட்டிக்கு ரொம்பதான் கெப்புறு... உளுவ மீனு போல கொட்டம் போட்டு ஜாலக்கு காட்டுறேயாடி.... ஏலே ஆறுமுவம்! இவ பாளை வச்சி அலையிறாடா. நீதான் இவளைக் கிழிச்சிப் போடணும்....”(224)

அதிகாலையிலே வயல் வேலைக்கு வருவது போல கிளியம்மாவும் ஆறுமுகமும் சந்தித்துப் பேசும் போது வயல்வெளியைச் சுற்றிப் பார்வையிட வரும் கார்வாரியின் கண்ணில் பட்டுவிட்டால் பிரச்சினையாகிப் போய்விடும் என நினைத்த உத்தண்டி, தன் பேரனுக்கு அவரின் வரவை தெரியப்படுத்துவதற்காகக் குறிப்பு வைத்துப் பாடலொன்றைப் பாடுகிறார்.

“..... செம்பரத்தைச் சேவல் கூவுறது எம்புட்டுத் தூரம் கேக்கிறது? பந்தடி கோலு பம்பரமா கேவுது முந்தாணை நழுவுறத கழுகு கழுத்து நீட்டிப் பாக்குதேட.....”(225)

பாட்டை நீட்டி முழங்கும் போது ஆறுமுகம் சுதாரிததுக் கொள்கிறான். இதே கதையை ‘உறங்க மறந்த கும்பகர்ணர்கள்’ என்ற நாவலில் செவத்தியும் அம்புனுவும் களத்து மேட்டில் ஒன்று கூடியதை தலையாரி வீரண்ணன் பார்த்துப் பஞ்சாயத்தைக் கூட்டநினைக்கிறார். இந்நிகழ்ச்சியைத் தெரிந்து கொண்ட செவத்தியின் ஊர்க்காரர்களான கொங்காணிக் குளத்தினர் இதற்குச் சரியான முடிவு கிடைக்க வேண்டும் என்று, இளைஞர்கள் ஆவேசப்

பேச்சிலும், வயதானவர்கள் அமைதிப் பேச்சிலும் பேசி முடிக்க நினைக்கின்றனர்.

“நாவலங்குடியில ரெண்டு பேரையும் கையுங் களவுமாய் புடிச்சி வச்சிருக்காங்களாம். அவுங்க பேசி முடிவெடுக்கப் போறோம்னு ஆள் அனுப்பியிருக்காங்க.... இத நாம எப்படி விட்டுட்டு பேசாமயிருக்கிறது? குடியானத் தெரு பையன்னு பூசி மெழுகி ‘கும்ப செலவில’ முடிச்சிட்டாங்கன்னா?”(226)

வட்டாரத்திற்குள் நடக்கக்கூடிய சூழலைக் காட்டியுள்ளார். ஊரின் பெயர்களும், வயல்வெளிகளின் பெயர்களையும் கையாண்டுள்ளார். மனிதர்களின் பெயர்களுக்குப் பின்னால் அவர்களின் சாதியைக் குறிப்பிட்டுள்ளார். அதில் பகடை, சாம்பான், நாயுடு, கோனார், வேளார், மூப்பனார், ஆசாரி, நாடார், பிள்ளை போன்ற சாதிகளில் உள்ளவர்களை அதிகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தொகுப்புரை

ஓர் இலக்கியம் படைப்பாளரின் வெற்றிக்கு அவர் கையாளும் உத்திகள் மிக முக்கியமான காரணிகளாகும். முகத்திற்குத் திலகம் இடுவதுபோல் படைப்பிற்குப் பெருமை சேர்ப்பது உத்தியாகும். எளிமையான உத்திமுறைக்கு வாசகர்களைக் கவர்ந்திழுக்கும் காந்தசக்தி உண்டு.

படைப்பாசிரியர் தன் மொழிப் புலமையை விளக்கும் விதத்தில் அடுக்குத் தொடர்கள், இரட்டைக்கிளவி, ஒலிக்குறிப்புச் சொற்களை எடுத்தாண்டுள்ளார்.

பாத்திரங்களின் இயல்பினையும் தன்மையும் குறிக்கப் பழமொழிகளும், சொலவடைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

காலப்போக்கிற்கேற்ப பிறமொழிச் சொற்களும், திரைப்படப் பாடல்களும் ஆசிரியர் கையாண்டுள்ளார். அதே வேளையில் பழமை போற்றும் முகமாக நாட்டுப்புறப் பாடல்கள், வட்டார வழக்குச் சொற்களையும் பயன்படுத்தியிருக்கிறார் என்பது பெறப்படுகிறது.

கதை சீராகச் சென்று கொண்டிருக்கும் போது, கதையுடன் தொடர்புடைய முன்னால் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஆசிரியர் இடையில் எடுத்துக் காட்டக்கூடிய பின்னோக்கு உத்தியும், ஒரு பாத்திரம் முன்னால் நடந்த நிகழ்பவையோ அல்லது அப்போது நடக்கும் நிகழ்வையோ நினைத்து மனதிற்குள்ளேயே பேசிக் கொள்வதான நனவோடை உத்தியும் இடம்பெற்றுள்ளன.

தொலைதூரத்தில் இருப்பவர்கள் தாங்கள் சொல்ல நினைப்பதைக் கடிதங்கள் மூலம் தெரியப்படுத்துவதும், தொலைபேசி மூலம் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதுமான கடித உத்திமுறையையும் கையாளப்பட்டுள்ளது.

உறங்கும் போது நிறைவேறாத எண்ணங்களைக் காண்பது கனவாகும். கண்ட கனவானது நல்லதாக இருக்குமா என்று

ஆராய்வதும், மனத்தில் எழக்கூடிய எண்ணங்களின் எதிரொலியே கனவாகிறது என்பதையும் கனவு உத்தியில் விளக்கப்பட்டுள்ளது.

கதைக்குள்ளேயே மற்றொரு கதையைச் சொல்லும் முறையான கதைக்குள் கதை கூறும் உத்தியும் எடுத்தாளப்பட்டுள்ளன.

நோக்குநிலையில் ஆசிரியரின் நடை, தன்னோக்கு நிலை, படர்க்கைக் கூற்றுநிலை உத்தியும் இடம்பெற்றுள்ளன.

சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் உத்தி மூலமாகவும், கோடிடல் உத்தி மூலமாகக் கதையை விரைவாகச் சொல்லிச் செல்லும் முறையிலும் உணர்த்தப்பட்டுள்ளன.

முருகியல் கூறுகளையும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையும் வட்டாரப் புனைவும் இவரது தனித்த வெளிப்பாட்டு உத்திகளாகும்.

கதைத் தொடக்க உத்தியும், கதை முடிப்பு உத்தியும் கையாளப்பட்டுள்ளன.

